# அ

1. **அ தை**
(01) குறுநிலத் தலைவன் (வி)
(02) செல்வம் உடையவன்(ள்)

2. **அக்கன்**
(01) அன்புடையவன்
(02) பதிவுள்ளவன்
(03) பற்று கொண்டவன்
(04) வெண்மையானவன்
(05) கூர்மையான அறிவுடையவன்
(06) அழகுடையவன்

3. **அக்காரன்**
(01) வெல்லம், மாம்பழம் போன்று இனிப்பவன்

4. **அக்குரன்**
(01) குறுநிலத் தலைவன்
(02) இடையெழு வள்ளல்களுள் ஒருவன்

5. **அகசன்**
(01) எலுமிச்சை நிறத்தவன்
(02) பயன் தருபவன்

6. **அகடன்**
(01) நடுவு நிலையுடையவன்
(02) உயர்ந்து நிற்பவன்

7. **அகண்**
(01) அனைவரோடும் நெருக்கமாகப் பழகுபவன்
(02) அன்பு பாராட்டுபவன்
(03) நட்பு பாராட்டுபவன்

8. **அகண்டன்**
(01) பகுக்கப்பட முடியாதவன்
(02) தோற்கடிக்க முடியாதவன்
(03) முழுமையானவன்
(04) பேரறிவு கொண்ட மூளையுடையவன்
(05) இறைவன்
(06) சிவன்

9. **அகண்டிதன்**
(01) பகுக்கப்பட முடியாதவன்
(02) தோற்கடிக்க முடியாதவன்
(03) முழுமையானவன்
(04) பேரறிவு கொண்ட மூளையுடையவன்
(05) இறைவன்
(06) சிவன்

10. **அகணி**
(01) நண்பன்
(02) நம்பிக்கைக்குரியவன்

11. **அகணிதன்**

(01) கணிக்கப்பட முடியாதவன்

12. **அகத்தமிழன்**

(01) அன்பு நிறைந்த தமிழன்

13. **அகத்தன்**

(01) தனக்குரிய இடத்தில் இருப்பவன்
(02) பிறர் இடத்திற்கும், பொருளுக்கும் விருப்பப்படாதவன்

14. **அகத்தரையன்**

(01) சிவன்
(02) தனக்குரிய இடத்தில் இருப்பவன்
(03) பிறர் இடத்திற்கும், பொருளுக்கும் விருப்பப்படாதவன்

15. **அகத்தான்**

(01) தாயுள்ளம் கொண்டவன்
(02) இல்வாழ்வான்

16. **அகத்தியன்**

(01) அகத்திக்கீரை போன்று பயன் தருபவன்
(02) முனிவரின் பெயர்
(03) விண்மீன் ஒன்றின் பெயர்
(04) அசைக்க முடியாதவன்
(05) மலை போன்றவன்

17. **அகநாடன்**

(01) உள்நாட்டைச் சேர்ந்தவன்

18. **அகப்பன்**

(01) ஆழ்ந்த அறிவுடையவன்
(02) உயர்ந்தவன்
(03) எழுச்சி கொண்டவன்

19. **அகம்பலாதன்**

(01) அறிவிப்பாளன்
(02) வள்ளுவர் குடியினன்
(03) அசைக்க முடியாதவன்
(04) நல்லுள்ளம் கொண்டவன்
(05) அடியவன்
(06) ஊக்கமுடையவன்

20. **அகம்பன்**

(01) அறிவிப்பாளன்
(02) வள்ளுவர் குடியினன்
(03) அசைக்க முடியாதவன்
(04) நல்லுள்ளம் கொண்டவன்
(05) அடியவன்
(06) ஊக்கமுடையவன்

21. **அகம்பன் மால்**

(01) அறிவிப்பாளன்
(02) வள்ளுவர் குடியினன்
(03) அசைக்க முடியாதவன்
(04) நல்லுள்ளம் கொண்டவன்
(05) அடியவன்
(06) ஊக்கமுடையவன்

22. **அகம்பன் மாலாதன்**
(01) அறிவிப்பாளன்
(02) வள்ளுவர் குடியினன்
(03) அசைக்க முடியாதவன்
(04) நல்லுள்ளம் கொண்டவன்
(05) அடியவன்
(06) ஊக்கமுடையவன்

23. **அகம்பனாதன்**
(01) அறிவிப்பாளன்
(02) வள்ளுவர் குடியினன்
(03) அசைக்க முடியாதவன்
(04) நல்லுள்ளம் கொண்டவன்
(05) அடியவன்
(06) ஊக்கமுடையவன்

24. **அகமகன்**
(01) பிள்ளையார்

25. **அகமலர்**
(01) தாமரை போன்ற இதயம் கொண்ட பெண்

26. **அகர முதலான்**
(01) சிவன்

27. **அகரன்**
(01) முதலானவன்
(02) மருத நிலத்தைச் சேர்ந்தவன்
(03) தேர் போன்று நெடிதுயர்ந்து நிற்பவன்

28. **அகரத்தன்**
(01) அகரமாகிய திருமால்

29. **அகல்**
(01) பரந்து விரிந்தவன்
(02) வளர்ச்சியுடையவன்
(03) ஆக்கமுடையவன்
(04) பெருகி நிற்பவன்
(05) பெருமையுடையவன்
(06) விண்வெளி போன்றவன்

30. **அகலத்தவன்**
(01) பெருமையுடையவன்

31. **அகலந்தோன்**
(01) அகலமான மார்பை உடையவன்

32. **அகலப்பா**
(01) தமிழ்ப்பா வகைகளுள் ஒன்று

33. **அகலன்**
(01) பரந்து விரிந்தவன்
(02) வளர்ச்சியுடையவன்
(03) ஆக்கமுடையவன்
(04) பெருகி நிற்பவன்
(05) பெருமையுடையவன்
(06) விண்வெளி போன்றவன்

34. **அகலியன்**
(01) கிளை பரப்பி அகன்று வளரும் மரம் போன்றவன்

35. **அகலியான்**
(01) கடவுள்

36. **அகவலன்**
(01) பாணன்

37. **அகவன்**
(01) நாடுறைபவன்
(02) பாணன் (பாட்டிசைப்பவன்)
(03) நடனம் கற்றவன்

38. **அகவிதழ்**
(01) பாணன்

39. **அகளங்கன்**
(01) குற்றமில்லாதவன்
(02) புத்தன்

40. **அகன்**
(01) ஆதன் (ஆன்மா)
(02) விண்வெளி போன்று எங்கும் பரந்திருப்பவன்
(03) உளச்சான்று (மனசாட்சி) கொண்டவன்
(04) அன்பு கொண்டவன்
(05) கணவன்
(06) அகன்று நிற்பவன்

41. **அகிலன்**
(01) கூர்மையான அறிவுடையவன்
(02) நுண்ணிய அறிவுடையவன்

42. **அகுதன்**
(01) கொடையாளி

43. **அகுதை**
(01) குறுநிலத் தலைவன்
(02) செல்வம் உடையவன்

44. **அங்கணன்**
(01) அழகிய கண்களை உடையவன்
(02) கண்ணழகன்
(03) அருளாளன்
(04) சிவன்

45. **அங்கண்ணன்**
(01) அழகிய கண்களை உடையவன்
(02) கண்ணழகன்
(03) அருளாளன்
(04) சிவன்

46. **அங்கணாளன்**
(01) அழகிய கண்களை உடையவன்
(02) கண்ணழகன்
(03) அருளாளன்
(04) சிவன்

47. **அங்கத்தன்**
(01) அகன்ற மார்பை உடையவன்

48. **அங்கத்துக்கோ**
(01) கன்னன் (கர்ணன்)

49. **அச்சன்**
(01) தந்தை

50. **அச்சுதன்**
(01) வலிமை வாய்ந்தவன்
(02) அடிப்படை வடிவமாயிருப்பவன்
(03) காலங்காலமாய் வாழ்பவன்
(04) அச்சு போன்று ஆதாரமாயிருப்பவன்.

51. **அசி**
(01) அரச மரம் போன்றவன்

52. **அசோகன்**
(01) வாழை மரம் போன்று வாழ்வாங்கு வாழ்பவன்
(02) கொடையுள்ளம் கொண்டவன்

53. **அஞ்சதன்**
(01) காற்று போன்றவன்.

54. **அஞ்சி**
(01) கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதியமானின் இயற்பெயர்
(02) தலைவன்
(03) தந்தை போன்றவன்
(04) குறுநில மன்னன்

55. **அஞ்சிகன்**
(01) கண் போன்றவன்

56. **அஞ்சில்**
(01) அஞ்சில் (தருமபுரி) ஊரைச் சேர்ந்தவன்

57. **அஞ்சியான்**
(01) அஞ்சில் அஞ்சியார் எனவும் அம்பில் அஞ்சியார் எனவும் வழங்கி வந்த கழகக் காலப் புலவர் பெயர்

58. **அடங்கியான்**
(01) உள்ளம், மொழி, மெய்யால் தீய வழியில் செல்லாதவன்

59. **அடர்வான்**
(01) போர் வீரன்

60. **அடலன்**
(01) தன் நிலை மாறாதவன்
(02) வலிமையானவன்
(03) வெற்றி கொள்பவன்

61. **அண்டன்**
(01) குன்றின் மேல் வாழ்பவன்
(02) ஆடு மாடு மேய்ப்பவன்
(03) மீனவன்
(04) பொன் போல் பொலியும் தேவர் போன்ற உயர்வுமுடையவன்
(05) தேவன்

62. **அண்டிரன்**
(01) திறமைமிக்க ஆண்
(02) புத்திசாலி
(03) தகுதிவாய்ந்தவன்
(04) கடையெழு வள்ளல்களில் ஆய் அண்டிரன் என்று அழைக்கப்பட்ட வள்ளல்
(05) மாந்தன்

63. **அண்ணல்**
(01) மேலானவன்
(02) தலைவன்
(03) அரசன்
(04) கடவுள்
(05) பெருமையானவன்
(06) குரவன்
(07) சிவன்
(08) புத்தன்
(09) அருகன்

64. **அண்ணாமலை**
(01) கதிரவன் உதிக்கும் மலை

65. **அண்ணாவி**
(01) ஆசிரியர்
(02) நாடக ஆசிரியர்
(03) அதிகாரி
(04) புலவன்

66. **அண்ணியன்**
(01) அருகில் இருப்பவன்
(02) நெருங்கிய உறவினன்

67. **அணங்கன்**
(01) இலக்கணம் தெரிந்தவன்
(02) மொழி வல்லுநன்
(03) இலக்கியம் அறிந்தவன்
(04) அழகன்

68. **அணன்**
(01) பொருந்தினவன்
(02) விண்ணோடு இரண்டிர கலந்தவன்

69. **அணவன்**
(01) பொருந்தினவன்
(02) விண்ணோடு இரண்டிர கலந்தவன்

70. **அணிமன்**
(01) அருகில் இருப்பவன்
(02) நுண்மையானவன்
(03) வல்லமை பொருந்தியவன்

71. **அணியன்**
(01) எப்போதும் தயாராக இருப்பவன்
(02) அழகன்
(03) நெருக்கமானவன்
(04) நகையணிந்தவன்

72. **அணிலன்**
(01) அணில் போன்ற அழகும் சுறுசுறுப்பும் உடையவன்.

73. **அணுக்கன்**
(01) நெருங்கியிருப்பவன்
(02) சந்தனம் போல் மணப்பவன்
(03) இறைவனுக்குத் தொண்டு புரிபவன்
(04) தொண்டன்
(05) திருவடியான்

74. **அணுகன்**
(01) சந்தனம் போல் மணம் உள்ளவன்
(02) உயர்ந்தவன்

75. **அணையா அன்பன்**
(01) நிலையான அன்புடையவன்

76. **அத்தகன்**
(01) கணிதத்தில் சிறந்தவன்

77. **அத்தன்**
(01) சிவந்த உடலுடையவன்
(02) தந்தை போன்றவன்
(03) தலைவன்

78. **அத்தி**
(01) குறுநிலத் தலைவன்

79. **அத்திமல்லன்**
(01) ஓர் இயற்பெயர்
(02) அத்தி மல்லன் சம்புவரையர் என்பாரின் பட்டப்பெயர்
(03) அத்தி என்ற பகுதியை ஆண்ட மன்னன்

80. **அத்தியாண்டான்**
(01) ஓர் இயற்பெயர்
(02) அத்தி என்ற பகுதியை ஆண்ட மன்னன்

81. **அத்துவன்**
(01) சிவந்தவன்
(02) செம்மையானவன்

82. **அதர்வன்**
(01) வழி நடத்துபவன்
(02) தலைவன்
(03) நெறிபடுத்துபவன்

83. **அதழன்**
(01) பூவிதழ் போன்றவன்

84. **அதனன்**
(01) அளவுக்கு அதிகமாகத் தருபவன்

85. **அதிக்கன்**
(01) மேன்மைமிக்க தலைவன்

86. **அதிகன்**

(01) அளவுக்கு அதிகமாகத் தருபவன்
(02) பெரியவன்
(03) குறுநில மன்னன்
(04) அதியர் குடிமகன்
(05) கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான்

87. **அதிகமான்**

(01) மேன்மை பொருந்திய ஆண்மகன்
(02) குறுநில மன்னன்
(03) அதியர் குடிமகன்
(04) கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான்

88. **அதிகாந்தன்**

(01) மிகுந்த ஒளி பொருந்தியவன்
(02) செவ்வானம் போன்றவன்
(03) பேரழகன்

89. **அதிகாரன்**

(01) வலிமை, செல்வாக்கு, சொல்வன்மை நிறைந்த தலைவன்
(02) சிவன்

90. **அதிகுணன்**

(01) மேலான நற்குணங்கள் பொருந்தியவன்
(02) கடவுள்
(03) அருகன்

91. **அதிகோலன்**

(01) மிகுந்த அழகுடையவன்

92. **அதிசூரன்**

(01) பெருவீரன்

93. **அதிதானன்**

(01) பெருங்கொடையாளி

94. **அதிமதுரன்**

(01) மிகுந்த, இனிய குணத்தான்

95. **அதியமான்**

(01) குறுநில மன்னன்
(02) அதியர் குடிமகன்
(03) கடையெழு வள்ளல்களுள் ஒருவன்

96. **அதியர்கோ**

(01) அதியர் குல அரசன்
(02) குறுநில மன்னன்
(03) அதியர் குடிமகன்
(04) கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான்

97. **அதியர்கோமான்**

(01) அதியர் குல அரசனின் மகன்
(02) குறுநில மன்னன்
(03) அதியர் குடிமகன்
(04) கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான்

98. **அதியரையன்**
(01) பெருமையானவன்
(02) பெருமிதங்கொள்ளத்தக்கவன்

99. **அதியன்**
(01) மேம்பட்டவன்
(02) குறுநில மன்னன்
(03) அதியர் குடிமகன்
(04) கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான்

100. **அதிவன்**
(01) அளவுக்கு அதிகமாகத் தருபவன்

101. **அதிவீரன்**
(01) மிகுந்த வீரமுடையவன்

102. **அந்தணன்**
(01) அழகிய அருளாளன்
(02) முனிவன்
(03) அறவோன்
(04) பார்ப்பனன்

103. **அந்தணாளன்**
(01) அழகிய அருளாளன்
(02) முனிவன்
(03) அறவோன்
(04) தூயோன்
(05) சிவன்
(06) அருகன்
(07) கடவுள்
(08) வியாழக்கோள்
(09) சனிக்கோள்
(10) பார்ப்பனன்

104. **அந்தன்**
(01) அழகன்

105. **அந்திக்காவலன்**
(01) இரவிற்கரசனான நிலா

106. **அந்திக்கோன்**
(01) இரவிற்கரசனான நிலா

107. **அந்திரன்**
(01) தேவன்
(02) கடவுள்

108. **அந்திவண்ணன்**
(01) மாலை நேர வானம் போன்று சிவந்த நிறமுடைய சிவன்

109. **அந்துவன்**
(01) அண்ணன்
(02) மூத்தவன்
(03) அழகியவன்
(04) நெருங்கியவன்
(05) சேரர் குல அரசன்

110. **அப்பன்**
(01) தந்தை போன்றவன்

111. **அப்பு**
(01) தந்தை போன்று மதிக்கத்தக்கவன்
(02) தந்தை போன்றவன்

112. **அம்பரன்**
(01) வான்வெளியில் வாழும் இறைவன்
(02) கதிரவன்
(03) சிவன்

113. **அம்பலவன்**
(01) சிவன்

114. **அம்பலவாணன்**
(01) அம்பலத்தில் வாழ்பவன்
(02) தில்லையம்பலத்தில் வாழும் சிவன்

115. **அம்மள்ளன்**
(01) அழகிய தோற்றமுள்ள வீரன்
(02) அழகும் வளமும் ஒருங்கே பெற்றவன்
(03) அழகும் வலிமையும் அமையப் பெற்றவன்

116. **அம்மூவன்**
(01) அழகிய தோற்றமும் முத்தெய்வங்களின் தன்மையும் கொண்டவன்
(02) அழகு நிரம்பிய மூத்த குடியினன்

117. **அம்மெய்யன்**
(01) அழகிய உடலுடையவன்

118. **அம்மையப்பன்**
(01) உயிரினங்களுக்கெல்லாம் அம்மாவாகவும், அப்பாவாகவும் விளங்கும் இறைவன் சிவன்

119. **அம்மையன்**
(01) அழகு பொருந்திய தலைவன்
(02) தாய் போன்றவன்

120. **அமத்தன்**
(01) நடுநிலையானவன்
(02) அமைதியானவன்
(03) வெறியற்றவன்
(04) மனவலிமையுடையவன்

121. **அமந்தன்**
(01) சுறுசுறுப்பானவன்
(02) விழிப்பானவன்

122. **அமர்**
(01) அமைதியானவன்
(02) பொலிவானவன்
(03) வளமானவன்
(04) இன்முகமானவன்
(05) பொந்திகை(திருப்தி)யானவன்

**123. அமரகோன்**
(01) போரில் சிறந்த மன்னன்
(02) மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் திருவாய்ப்பாடியில் வாழ்ந்தவர்

**124. அமரன்**
(01) பொன் போல் பொலியும் தேவர் போன்ற உயர்வுமுடையவன்
(02) தேவன்
(03) கட்டுக் கோப்பானவன்
(04) நேசிப்பவன்
(05) அன்பானவன்
(06) போர்வீரன்

**125. அமரியோன்**
(01) போர் மறவன்

**126. அமலன்**
(01) நிறைவானவன்
(02) குற்றமற்றவன்

**127. அமிர்தன்**
(01) இனியவன்
(02) பொன் போன்றவன்
(03) பால்மனம் கொண்டவன்

**128. அமுசன்**
(01) பேரழகுடையவன்

**129. அமுதக்கதிரோன்**
(01) இனிய குளிர்ந்த ஒளிக்கதிர்களை வெளியிடும் நிலா

**130. அமுதகுலன்**
(01) அறிவாளி

**131. அமுதவல்லபன்**
(01) மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் திருவாய்ப்பாடியில் வாழ்ந்தவர்

**132. அமுதன்**
(01) பால் போன்ற வெள்ளை மனங்கொண்டவன்
(02) மழை நீர் போன்ற தூயவன்
(03) இனியவன்
(04) இறைவன்
(05) பெருமையுடையவன்
(06) சிறந்த தன்மைகளை உடையவன்
(07) எல்லோராலும் விரும்பப் படுபவன்
(08) அனைவருக்கும் உணவளிப்பவன்

**133. அமைச்சன்**
(01) அறிவார்ந்தவன்
(02) மாட்சிமை பொருந்தியவன்
(03) அமைதியானவன்
(04) தகுதியானவன்
(05) அழகுடையவன்

**134. அமைத்தன்**

(01) அறிவார்ந்தவன்
(02) மாட்சிமை பொருந்தியவன்
(03) அமைதியானவன்
(04) தகுதியானவன்
(05) அழகுடையவன்

**135. அமையவன்**

(01) அருவன்
(02) ஐம்புலன்களையும் அடக்கியவன்

**136. அமைவன்**

(01) தன்னடக்கமுள்ளோன்
(02) கட்டுப்பாடு உள்ளவன்
(03) அருகன்
(04) கடவுள்

**137. அய்யனார்**

(01) நாட்டுப்புற மரபில் மழைக் கடவுளாகக் கருதப்படும் தெய்வம்
(02) கடவுள்
(03) தலைவன்
(04) பெரியவன்

**138. அயக்கன்**

(01) நோயின்றி வாழ்பவன்

**139. அயன்**

(01) மழைநீர் போன்றவன்
(02) தூயவன்
(03) கொடை வள்ளல்

**140. அயிரவன்**

(01) நுண்மையானவன்
(02) இனிமையானவன்

**141. அயிலவன்**

(01) கூர்மையான வேலைக் கொண்டிருக்கும் முருகன்
(02) வேல் வீரர்களைக் கொண்ட படையை உடைய அரசன்
(03) இறைவன்

**142. அயிலன்**

(01) கூர்மையானவன்
(02) அறிவும், வீரமும், அழகும் உடையவன்
(03) மணமுடையவன்

**143. அயிலான்**

(01) கூர்மையான வேலைக் கொண்டிருக்கும் முருகன்
(02) வேல் வீரர்களைக் கொண்ட படையை உடைய அரசன்
(03) இறைவன்

**144. அயிலுழவன்**

(01) வேற்போர் வீரன்

145. **அரங்கன்**
(01) ஆற்றிடைத் தீவில் வாழ்பவன்
(02) திருமால்
(03) மேடைகளில் ஆடுபவன்
(04) நடிப்பவன்
(05) பேசுபவன்

146. **அரங்கனாதன்**
(01) திருவரங்கத்தில் வழிபடப்படும் தலைவன்
(02) இறைவன்
(03) திருமால்

147. **அரசகன்**
(01) அரசர்களின் உள்ளத்தில் வாழ்பவன்
(02) அரண்மனையில் வாழுமளவு செல்வமுடையவன்

148. **அரசன்**
(01) ஆள்பவன்
(02) வியாழக் கோள்
(03) தலைமையானவன்

149. **அரசிறை**
(01) அரசர்களுக்கெல்லாம் இறைவன் போன்றவன்
(02) அரசர்க்கரசன்

150. **அரசு**
(01) ஆள்பவன்
(02) வியாழக் கோள்
(03) தலைமையானவன்

151. **அரசொளி**
(01) அரசர்களுக்கே ஒளிபோன்று விளங்குபவன்

152. **அரத்தன்**
(01) சிவந்த உடலுடையவன்
(02) தந்தை, கடவுள் போன்றவன்
(03) செவ்வாய்க்கோள்

153. **அரம்பன்**
(01) குறும்பு செய்பவன்
(02) தான் விரும்பியதைச் செய்து முடிக்கும் வல்லான்

154. **அரவன்**
(01) ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவன்
(02) பாம்பை அணிந்துள்ள சிவன்

155. **அரவோன்**
(01) ஆதிசேடனின் தோற்றரவாகக் (மறுபிறவி) கருதப்படும் பதஞ்சலி முனிவன்

156. **அரன்**
(01) சிவன்
(02) அரசன்
(03) அழலோன் (அக்னி தேவன்)

157. **அரன்மகன்**
(01) முருகன்
(02) பிள்ளையார்
(03) வீரபத்திரன்

158. **அரன்வெற்பு**
(01) சிவன் வாழ்ந்ததாகக் கருதப்படும் கைலாயமலை

159. **அரன் தோழன்**
(01) சிவனின் நண்பன் (குபேரன்)

160. **அராகன்**
(01) சிவந்த நிறமுடையவன்
(02) பொன்னிறமுடையவன்

161. **அரி**
(01) சிங்கம்
(02) மடங்கல் (ஆவணி) மாதம்
(03) கூற்றுவன்
(04) ஆண்மயில்
(05) ஆண்குயில்
(06) தீத்தெய்வம்
(07) கதிரவன்
(08) நிலா
(09) அழகு

162. **அரிணன்**
(01) சிவன்
(02) கதிரவன்

163. **அரியணைச்செல்வன்**
(01) அருகன்

164. **அரியவன்**
(01) பெறுவதற்கரியவன்
(02) மனிதருள் அரிதாய்த் தோன்றுபவன்
(03) அருமையானவன்

165. **அரியன்**
(01) சிவன்
(02) அருமையானவன்
(03) முற்றும் அறிதற்கு இயலாதவன், தலைவன்
(04) மேலானவன்
(05) சிறந்தவன்

166. **அரியேறு**
(01) ஆண் அரிமா (சிங்கம்) போன்றவன்

167. **அருக்கன்**
(01) ஞாயிறு

168. **அருகன்**
(01) தோழன்
(02) அருகிலிருப்பவன்
(03) கூட்டாளி

169. **அருங்கேடன்**
(01) கேடில்லாதவன்

170. **அருட்கொடியோன்**
(01) அருகன்

171. **அருட்கொடிவேந்தன்**
(01) அருகன்
(02) பேரரசன்
(03) பெருவேந்தன்
(04) இறைவன்

172. **அருட்செல்வன்**
(01) அருளாகிய செல்வம் கொண்டவன்

173. **அருண்முனி**
(01) அருகன்

174. **அருண்மொழி**
(01) அருளொடு கூடிய சொற்களைப் பேசுபவன்

175. **அருணந்தி**
(01) அருள்தரும் நந்தி போன்றவன்

176. **அருணமணி**
(01) செந்நிற ஒளிதரும் கல் போன்றவன்

177. **அருணன்**
(01) சிவந்த மேனியுடைய கதிரவன்,
(02) விடியற்காலம்,
(03) செவ்வானம்,
(04) யானை போன்றவன்
(05) புதன் (அறிவன்) கோள்

178. **அருந்தவன்**
(01) அருமையான தவம் செய்யும் முனிவன்

179. **அருந்திறல்**
(01) அருமையான திறமுடையவன்

180. **அரும்பன்**
(01) அரும்பு போன்றவன்

181. **அரும்பாவலன்**
(01) சித்திரப்பாக்கள் இயற்றத் தகுந்த புலவன்

182. **அரும்பு**
(01) மொட்டு போன்றவள்

183. **அருமருந்தான்**
(01) ஆருயிர் மருந்து போன்றவன்

184. **அருமன்**
(01) அருமைக்குரியவன்
(02) அன்புக்குரியவன்
(03) அழகன்
(04) சிறந்தவன்
(05) மேலோன்
(06) குறுநிலத் தலைவன்
(07) அருவர் குடித் தோன்றல்

185. **அருமொழி**
(01) அருமையான சொற்களைப் பேசுபவன்

186. **அருவன்**
(01) தமிழன்
(02) அருவா நாட்டைச் (தமிழ்நாட்டைச்) சேர்ந்தவன்
(03) உருவமற்றவன்

187. **அருள்**
(01) கைமாறு கருதாது எல்லாவுயிர்கள் மேலும் அன்பு காட்டுபவன்

188. **அருள்மாரி**
(01) மழை போல் அருளைப்பொழிபவன்

189. **அருள்வடிவன்**
(01) சிவன்

190. **அருளாழி**
(01) அறச்சக்கரம் போன்றவன்

191. **அருளாழி வேந்தன்**
(01) அருட்சக்கரம் உருட்டும் அருகன்

192. **அருளாளன்**
(01) அருள் நிறைந்தவன்
(02) சிவன்

193. **அருளோன்**
(01) கடவுள்
(02) அருளுடையவன்

194. **அரையன்**
(01) அரசன்

195. **அல்லியான்**
(01) தாமரை மலரில் தோன்றியுள்ள நான்முகன்

196. **அல்லோன்**
(01) கதிர் ஒளியில்லா இரவில் குளிரொளி தரும் திங்கள்

197. **அலக்கன்**
(01) ஒளியானவன்
(02) பொன் போன்றவன்

198. **அலரவன்**
(01) தாமரையில் பிறந்த நான்முகன்

199. **அலரி**
(01) கதிரவன்
(02) தீத்தெய்வம்

200. **அலரி வெஞ்சுடர்**
(01) ஞாயிறு

201. **அலவன்**
(01) நிலா ( இரவில் ஒளி தருபவன்)

202. **அலன்**
(01) ஏர் உழவன்

203. **அவணன்**
(01) திண்ணியன்
(02) சொற்செல்வமுள்ளவன்

204. **அவி**
(01) கதிரவன்

205. **அவிநயன்**
(01) கூத்தன்
(02) மெய்ப்பாடுவுளப்படுத்தி கூத்துக்கலை (பரதநாட்டியம்) நூலியற்றிய ஆசிரியர்

206. **அவியன்**
(01) குறுநிலத் தலைவன்
(02) நெய் போன்றவன்
(03) உணவளிப்பவன்

207. **அவினி**
(01) மன்னன்

208. **அழகன்**
(01) அழகுள்ளவன்
(02) முருகன்
(03) அழகனான இராமன்
(04) திருமால்

209. **அழகிய சோழ நங்கை**
(01) குமரி மாவட்டம் தேரூரில் உள்ள அம்மன்

210. **அழகிய நம்பி**
(01) அழகுடைய மற்றும் அனைவராலும் விரும்பப்படுபவன்
(02) ஆண்களில் சிறந்தவன்
(03) நிறைஞன்
(04) நிறைவன் (நிறைந்த உள்ளம் கொண்டவன்)
(05) நம்பத்தகுந்தவன்

211. **அழகிய பாண்டியன்**
(01) பாண்டிய மன்னன்

212. **அழகிய மணவாளன்**
(01) திருமால்
(02) அழகிய மண ஆண் (மாப்பிள்ளை)

213. **அழகியன்**
(01) அழகனான சிவன்

214. **அழகியான்**
(01) அழகனான திருமால்

215. **அழகு**
(01) அழகாயிருக்கும் தன்மையானவன்

216. **அழல்**
(01) தீ
(02) நெருப்பு போன்ற செந்நிறமுடையவன்
(03) செவ்வாய்க்கோள்
(04) ஆரல் (கார்த்திகை) விண்மீன்

217. **அழல் குமரன்**
(01) முருகக் கடவுள்

218. **அழல் வண்ணன்**
(01) தீ போன்ற செந்நிறமுடைய சிவன்

219. **அழலன்**
(01) தீ
(02) நெருப்பு போன்ற செந்நிறமுடையவன்
(03) செவ்வாய்க்கோள்
(04) ஆரல் (கார்த்திகை) விண்மீன்

220. **அழலவன்**
(01) நெருப்புக் கடவுள்
(02) கதிரவன்
(03) செவ்வாய்

221. **அழலாடி**
(01) சிவன்

222. **அழலோன்**
(01) நெருப்புத் தெய்வம்
(02) கதிரவன்

223. **அழற்கண்ணன்**
(01) தீ போன்ற சிவந்த கண்களையுடைய சிவன்

224. **அழற்கம்பன்**
(01) சிவன்

225. **அழற்கதிர்**
(01) தீ போன்ற வெப்பமான கதிர்களையனுப்பும் கதிரவன்

226. **அழற்காத்தோன்**
(01) நெருப்பைக் கையிலேந்திய சிவன்

227. **அழிசி**
(01) பழங்காலப் புலவர் பெயர்
(02) ஆற்றுக் கழிமுகப் பகுதியைச் சேர்ந்தவன்
(03) ஆதன் என்ற கடைக் கழகக்காலப் புலவரின் தந்தை

228. **அள்ளன்**
(01) குறுநிலத் தலைவன்
(02) அழகிய கன்னங்களையுடையவன்
(03) கூர்மையான காதுகளையுடையவன்
(04) நெருக்கமானவன்
(05) செறிவானவன்
(06) அனைவரையும் தாங்கிக் கொள்பவன்
(07) மருத நிலத்தவன்

229. **அளமன்**
(01) பொன் போன்றவன்

230. **அளியன்**
(01) அன்பு மிக்கவன்
(02) காக்கப்படத்தக்கவன்
(03) இரங்கப்படத்தக்கவன்

231. **அற்கன்**
(01) தன்னடக்கம், தன்கட்டுப்பாடு உடையவன்

232. **அறச்செல்வன்**
(01) அறத்தைச் செல்வமாகக் கொண்ட ஆண்மகன்

233. **அறத்துணைவன்**
(01) கற்புடைய கணவன்

234. **அறநண்பன்**
(01) நிலைத்த நட்பு பாராட்டுபவன்

235. **அறவன்**
(01) அறம் பேணுதலை இயல்பாகக் கொண்டவன்
(02) இறைவன் திருமால்

236. **அறவாணன்**
(01) அறவடிவான கடவுள்
(02) அறவழியில் வாழ்பவன்

237. **அறவாழி அந்தணன்**
(01) மனம், மெய், மொழி யாவுங்கடந்து விளங்கும் பரம்பொருள்
(02) வானவன்
(03) முனிவன்
(04) குரவன் (குரு)
(05) நன்மை புரிபவன்
(06) தெய்வத் தன்மை கொண்டவன்
(07) இயக்குபவன்
(08) செலுத்துபவன்

238. **அறவாளன்**
(01) அறவியல்பினன்

239. **அறவியான்**
(01) அறத்தில் நிற்பவன்

240. **அறவோன்**
(01) அறவாளன்
(02) புத்தன்

241. **அறிஞன்**
(01) அறிவுடையோன்
(02) புலவன்
(03) முனிவன்
(04) மதிமகன் (புதன்)

242. **அறிநன்**
(01) அறிந்தவன்
(02) அறிவாளி

243. **அறிவாளி**
(01) அறிவு மிகுந்தவன்

244. **அறிவியன்**
(01) அறிவு மிகுந்தவன்

245. **அறிவு**
(01) அறிவு என்னும் தன்மையுள்ளவன்

246. **அறிவுடை நம்பி**
(01) பாண்டிய மன்னன்
(02) அறிவாற்றலுடைய இளைஞன்

247. **அறுக்கன்**
(01) தலைவன்
(02) உற்ற நண்பன் (அணுக்க நண்பன்)

248. **அறுகுணன்**
(01) அறு குணங்களுடைய இறைவன் (உடைமை, ஆண்மை, புகழ், திரு, அறிவம், பற்றின்மை)

249. **அறுகை**
(01) குறுநில மன்னன்
(02) அறுகு போல் வேரூன்றிய தொல்குடியினன்

250. **அறுமுகன்**
(01) முருகன்

251. **அன்பன்**
(01) அன்புடையவன்
(02) நண்பன்
(03) கணவன்
(04) பத்தன்

252. **அன்பு**
(01) அன்பு என்னும் தன்மையுடையவன்

253. **அன்னன்**
(01) தந்தை
(02) அன்பானவன்

254. **அன்னி**
(01) ஆண்பாற் பெயர்
(02) தந்தை
(03) அன்பானவன்

255. **அன்னிமிஞிலி**
(01) பழங்காலப் பெண்பாற் பெயர்

256. **அனலன்**
(01) நெருப்புத்தெய்வம்

257. **அனலாடி**
(01) சிவன்

258. **அனற்பிறவன்**
(01) முருகக் கடவுள்

# ஆ

**259. ஆக்கதன்**
(01) முதலை போன்று வலிமையானவன்

**260. ஆக்கமகன்**
(01) செல்வத்தின் கடவுள்

**261. ஆக்கலன்**
(01) நற்செயல்களைச் செய்பவன்
(02) நற்குணங்களை விதைப்பவன்
(03) நல்லவற்றை ஆக்குபவன்

**262. ஆக்கன்**
(01) சிறப்புடையவன்
(02) படைக்கப்பட்ட தெய்வம்
(03) செயற்கையாகச் செய்யப்பட்டவன்

**263. ஆக்கியோன்**
(01) தெய்வம்
(02) படைத்தோன்
(03) நூற்களை, கலைகளை, கலைப்பொருட்களைப் படைத்தோன்

**264. ஆகடியன்**
(01) நகையாட்டு (பரிகாசம்) செய்பவன்

**265. ஆகதன்**
(01) அருக சமயத்தைச் சார்ந்தவன்

**266. ஆகரி**
(01) சிறப்பாக பாடக்கூடியவன்

**267. ஆகவன்**
(01) போர் வீரன்

**268. ஆகன்**
(01) பரந்த மார்பையும், வலிமையான உடலையும், நல்ல உள்ளத்தையும் கொண்டவன்

**269. ஆகாப்பான்**
(01) ஆநிறைகளைக் காப்பவன்
(02) ஆயன்

**270. ஆச்சமன்**
(01) பெரியவன்
(02) புரவலன்
(03) தந்தை போன்றவன்

**271. ஆச்சன்**
(01) தந்தை

**272. ஆசலன்**
(01) மதிப்பு மிக்கவன்
(02) குற்றமற்றவன்

273. **ஆசறன்**
(01) குற்றமற்றவன்

274. **ஆசான்**
(01) ஆசிரியன்
(02) குரு
(03) குரவன்
(04) மூத்தவன்
(05) முருகன்
(06) வியாழன் கோள்
(07) அருகன்

275. **ஆசிரியன்**
(01) குற்றங்களை நீக்குபவன்

276. **ஆசிரியப்பா**
(01) நால்வகைப் பாக்களுள் ஒன்றான ஆசிரியப்பா போன்றவள்

277. **ஆசினி**
(01) திண்ணியவன்
(02) ஆகாயம் போன்றவன்

278. **ஆஞன்**
(01) தந்தை போன்றவன்

279. **ஆஞா**
(01) தந்தை போன்றவன்

280. **ஆஞான்**
(01) தந்தை போன்றவன்

281. **ஆஞி**
(01) தந்தை போன்றவன்

282. **ஆட்கொண்டான்**
(01) ஆள் கொண்டவன்

283. **ஆட்டனத்தி**
(01) சேர இளவரசன் ஒருவன்
(02) குறுநில மன்னன்
(03) ஆடற்கலையில் வல்லவன்

284. **ஆட்டாளன்**
(01) ஆற்றல், திறமையுடையவன்

285. **ஆட்டுக்கோன்**
(01) ஆடல் வல்லான் சிவன்

286. **ஆட்பாலவன்**
(01) ஆட்கொள்ளப்பட்டவன்

287. **ஆடகன்**
(01) பொலிவு மிக்க அழகன்
(02) நடனக்கலைஞன்
(03) இரணியன்
(04) பொன்னிறமானவன்

288. **ஆடரி**
(01) முருகன்
(02) வெற்றிச்செல்வன்

289. **ஆடவல்லான்**
(01) கூத்தப்பெருமாள் நடராஜன்

290. **ஆடவலன்**
(01) ஆடவல்லவன் சிவன்

291. **ஆடவன்**
(01) ஆண்மகன்

292. **ஆடி**
(01) ஆடுபவனான சிவன்

293. **ஆடுநன்**
(01) கூத்தன்

294. **ஆடுமகன்**
(01) கூத்தன்

295. **ஆடூர்ந்தோன்**
(01) ஆட்டை ஊர்தியாகக் கொண்ட முருகன்
(02) தீக்கடவுள்

296. **ஆண்டகை**
(01) ஆண் தன்மையுடையவன்
(02) பெருமையிற் சிறந்தோன்
(03) அரசரிற்சிறந்தோன்
(04) வீரன்

297. **ஆண்டலை**
(01) படைத்தலைவன்

298. **ஆண்டவரசு**
(01) ஆண்டவனால் ஆட்கொள்ளப்பட்ட அரசு
(02) திருநாவுக்கரசு

299. **ஆண்டவன்**
(01) இறைவன்
(02) அரசன்
(03) மனம், மெய், மொழி யாவுங்கடந்து விளங்கும் பரம்பொருள்
(04) வானவன்
(05) முனிவன்
(06) குரவன் (குரு)
(07) நன்மை புரிபவன்
(08) தெய்வத் தன்மை கொண்டவன்
(09) இயக்குபவன்
(10) செலுத்துபவன்

300. **ஆண்டான்**
(01) ஆண்டவன்
(02) தலைவன்

301. **ஆண்டி**
(01) சிவனடியார்
(02) துறவி
(03) முருகன்
(04) ஆண்டவன்
(05) சிற்றூர்க் கோயில் பூசகன்

302. **ஆண்டிறன்**
(01) திறமை மிகுந்த ஆண்

303. **ஆண்டை**
(01) தலைவன்

304. **ஆண்டொழில் மைந்தன்**
(01) ஓரி

305. **ஆண்மையன்**
(01) சிவன்

306. **ஆணழகன்**
(01) அழகான ஆண்

307. **ஆணன்**
(01) அன்பானவன்
(02) நட்பானவன்
(03) உயர்வானவன்
(04) பாடல்களில் வல்லவன்
(05) நன்மையானவன்
(06) ஆண்மை நிறைந்தவன்

308. **ஆணு**
(01) அன்பானவன்
(02) இனிமையானவன்
(03) நன்மையானவன்

309. **ஆத்தன்**
(01) நண்பன்
(02) முதல்வன்
(03) பெரியோன்
(04) கடவுள்
(05) அருகன்
(06) நம்பிக்கைக்குரியவன்
(07) தந்தை

310. **ஆத்திசூடி**
(01) ஆத்தி மாலையைச் சூடிய இறைவன் சிவன்

311. **ஆத்தியன்**
(01) சிவன்

312. **ஆதவன்**
(01) ஞாயிறு

313. **ஆதமன்**
(01) உயிரானவன்
(02) அன்பானவன்
(03) காப்பாளன்

314. **ஆதரன்**
(01) அன்பானவன்
(02) நிறைவானவன்
(03) உதவியானவன்

315. **ஆதலன்**
(01) நன்மையானவன்
(02) ஆசையானவன்
(03) நுணுக்கமான அறிவுடையவன்
(04) ஆடலரசன்
(05) தெரிந்து தெளிபவன்

316. **ஆதலி**
(01) துன்பத்தில் உதவுபவன்
(02) ஆபத்திலிருந்து பாதுகாப்பவன்

317. **ஆதன்**
(01) உயிரானவன்
(02) தலைவன்
(03) அருகன்
(04) ஆசிரியன்
(05) மேலோன்
(06) முன்னவன்
(07) உயர்ந்தவன்
(08) சிறப்பு மிக்கவன்
(09) தந்தை போன்றவன்
(10) சேரர் குலத்தினன்

318. **ஆதனவினி**
(01) கடைக் கழகக் காலப் பெருமகன் ஒருவரின் பெயர்
(02) பாடப்பெற்றவன்
(03) தாழ்நிலப்பகுதியின் தலைவன்
(04) தலைவன்
(05) சேரர் குலத்தினன்

319. **ஆதனழிசி**
(01) கடைக் கழகக் காலப் பெருமகன் ஒருவரின் பெயர்
(02) பாடப்பெற்றவன்
(03) தாழ்நிலப்பகுதியின் தலைவன்
(04) காயல் பகுதியின் (ஆறு கடலுடன் கலக்கும் பகுதியின்) தலைவன்
(05) தலைவன்
(06) சேரர் குலத்தினன்

320. **ஆதனுங்கன்**
(01) கடைக் கழகக் கால அரசர்களில் ஒருவன்,
(02) புறநானூறில் பாடப்பெற்றவன்,
(03) உயர்ந்தவன்,
(04) சிறந்தவன்
(05) தலைவன்
(06) சேரர் குலத்தினன்

321. **ஆதனெழினி**
(01) கடைக்கழகக் காலத்தவன்,
(02) அகநானூறில் பாடப்பெற்றவன்
(03) தலைவன்
(04) சேரர் குலத்தினன்

322. **ஆதனோரி**
(01) கடைக்கழகச் சிற்றரசர்களில் ஒருவன்
(02) உயர்ந்தவன்
(03) தலைமையானவன்
(04) சேரர் குலத்தினன்

323. **ஆதாரன்**
(01) ஆதரவாய் இருப்பவன்
(02) மூலமானவன்
(03) அடிப்படையாகுபவன்
(04) முதன்மையானவன்
(05) உதவியாயிருப்பவன்
(06) மழை போன்றவன்

324. **ஆதி**
(01) தலைவன்

325. **ஆதி அருமன்**
(01) தலைவன்

326. **ஆதிக்கேழல்**
(01) பன்றியாகத் தோற்றரவு செய்த திருமால்

327. **ஆதி மந்தி**
(01) தலைவன்

328. **ஆதி மருதி**
(01) தலைவன்

329. **ஆதிரன்**
(01) பெரியோன்

330. **ஆதிரை முதல்வன்**
(01) சிவன்

331. **ஆதிரையான்**
(01) சிவன்

332. **ஆதிவாயிலான்**
(01) பரத சேனாதிபதியம் என்ற இசை நூலின் ஆசிரியர்

333. **ஆபன்**
(01) நீர் போன்று தூய்மையானவன்
(02) பயனானவன்

334. **ஆம்பல்**
(01) ஆம்பல் மலர் போன்ற பெண்

335. **ஆம்பன்**
(01) யானை போன்ற வலிமையானவன்
(02) குழலிசை போன்று இனிமையானவன்

336. **ஆமலன்**
(01) நீர் போன்று தூய்மையானவன்
(02) பயனானவன்
(03) அழகானவன்
(04) தகுதியானவன்

**337. ஆமன்**
(01) நீர் போன்று தூய்மையானவன்
(02) பயனானவன்
(03) அழகானவன்
(04) தகுதியானவன்

**338. ஆமாத்தியன்**
(01) அமைச்சன்
(02) அறிவுரை கூறுபவன்
(03) போர்த்தலைவன்
(04) மருத்துவன்

**339. ஆமுகன்**
(01) தொடக்கமாக இருப்பவன் (நந்தி)

**340. ஆமுத்து**
(01) ஆவின் (பசுவின்) பல்லில் கிடைப்பதாகக் கூறப்படும் முத்து

**341. ஆமூர்மல்லன்**
(01) கடைக் கழகக் காலத்திலிருந்த ஒரு பெருமகன்

**342. ஆய்**
(01) அழகன்
(02) மென்மையானவன்
(03) நுண்மையானவன்
(04) தாய் போன்றவன்
(05) முதன்மையானவன்
(06) பெரியவன்
(07) வலிமையானவன்
(08) முயற்சி மிக்கவன்
(09) வெண்மையான உள்ளம் கொண்டவன்
(10) ஆய்குடியைச் சேர்ந்தவன்

**343. ஆய் அண்டிரன்**
(01) கடையெழு வள்ளல்களுள் ஒருவன்
(02) ஆய்குடியைச் சேர்ந்தவன்

**344. ஆய் எயினன்**
(01) கடைக் கழகக் காலப் புரவலன்
(02) ஆய்குடியைச் சேர்ந்தவன்

**345. ஆய்குடி**
(01) ஆய்குடியைச் சேர்ந்தவன்

**346. ஆய்குடியான்**
(01) ஆய்குடியைச் சேர்ந்தவன்

**347. ஆய்ஞன்**
(01) ஆராய்பவன்

**348. ஆய்நலன்**
(01) அழகும், நற்றன்மையும் கொண்டவன்

**349. ஆய்நன்**
(01) ஆராய்பவன்

350. **ஆய்மதி**
(01) நுண்ணறிவு கொண்டவன்
(02) நிலவு போன்றவன்

351. **ஆய்முதுகுடி**
(01) ஆய்குடியைச் சேர்ந்தவன்

352. **ஆய்த்தன்**
(01) கூர்மையானவன்
(02) சீற்றமானவன்
(03) அடிபட்டவன்
(04) தள்ளப்பட்டவன்

353. **ஆயலன்**
(01) எதையும் ஆய்ந்து முடிவெடுப்பவன்
(02) நுண்ணிய அறிவுடையவன்
(03) தெளிந்து தெரிபவன்
(04) நல்லன ஏற்று தீயன அழிந்து வாழ்பவன்
(05) விழிப்பானவன்

354. **ஆயவன்**
(01) வலிமையானவன்

355. **ஆயன்**
(01) திரண்ட செல்வம் கொண்டவன்
(02) பொன் போன்றவன்
(03) வருவாய் ஈட்டுபவன்
(04) தாய் போன்றவன்
(05) மேகம் போன்றவன்
(06) ஒழுங்கானவன்
(07) கடமை தவறாதவன்
(08) முயற்சி, வலிமை, திறமை, ஆற்றல் உடையவன்
(09) கண்ணன்
(10) ஏழிசையின் பகுப்புகளுள் (musical notes) முதல் வகை போன்றவன்
(11) அனைவருக்கும் பயனாய் விளங்குபவன்

356. **ஆயிரக்கதிரன்**
(01) ஞாயிறு

357. **ஆயிரங்கண்ணன்**
(01) இந்திரன்

358. **ஆயிரங்கண்ணோன்**
(01) இந்திரன்

359. **ஆயிரக்கதிரவன்**
(01) ஞாயிறு

360. **ஆயிரங்கதிரோன்**
(01) ஞாயிறு

361. **ஆயிரப்பெயரன்**
(01) சிவன்
(02) திருமால்

362. **ஆயிரம்பெயரோன்**
(01) சிவன், திருமால்

363. **ஆயிரவாரத்தாழியன்**
(01) புத்தன்

364. **ஆயுள்**
(01) நோய் தீர்ப்பவன்

365. **ஆயுள்வேதன்**
(01) மருத்துவ நூலோன்

366. **ஆயுளன்**
(01) நோய் தீர்ப்பவன்

367. **ஆர்கலி**
(01) நீர் நிறைந்து அலையொலிக்கும் கடல் போன்றவன்

368. **ஆர்ச்சவன்**
(01) உண்மையானவன்
(02) நேர்மையானவன்
(03) பகைவனையும் நண்பனையும் சமமாக எண்ணுபவன்

369. **ஆர்த்தன்**
(01) நிறைவானவன்
(02) பெரியவன்
(03) முனிவன்

370. **ஆர்த்தார்கோன்**
(01) ஆத்திமாலையணிந்த சோழன்

371. **ஆர்த்தியன்**
(01) பட்டறிவு மிக்கவன்
(02) ஆர்வமானவன்

372. **ஆர்மதி**
(01) கடகஓரையில் பிறந்தவன்

373. **ஆர்மன்**
(01) கூர்மையானவன்

374. **ஆர்வலன்**
(01) அன்புடையவன்
(02) கணவன்
(03) நண்பன்

375. **ஆர்வன்**
(01) நிறைவானவன்
(02) ஆய்ந்தறிபவன்

376. **ஆரஞ்சார்த்து சோழன்**
(01) சோழ அரசன் பெயர்

377. **ஆரணத்தான்**
(01) நான்முகன்

378. **ஆரணன்**
(01) மங்கலமானவன்
(02) மருத்துவ நூலில் வல்லவன்
(03) சிவன்
(04) நான்முகன்

379. **ஆரணியன்**
(01) மடங்கல் ஓரை (சிம்மராசி)யில் பிறந்தவன்
(02) அரிமா (சிங்கம்) போன்றவன்

380. **ஆரதன்**
(01) மரக்கறி உண்பவன்,
(02) தூய சிவனியன் (சைவ உணவு)

381. **ஆரந்தாங்கு பாண்டியன்**
(01) பாண்டிய மன்னன் ஒருவன்

382. **ஆரலன்**
(01) கார்த்திகை (ஆரல்) நாண்மீனில் பிறந்தவன்
(02) செவ்வாய் கோள்

383. **ஆரன்**
(01) சந்தனம் போல் மணம் வீசுபவன்
(02) போர் வீரன்
(03) வெண்மையான முத்து மாலையணிந்தவன்
(04) செவ்வாய், காரி கோள்கள்
(05) அருமையானவன்
(06) அழகானவன்
(07) கூர்மையானவன்

384. **ஆராவமுதன்**
(01) இனிய அமுது போன்றவன்

385. **ஆரி**
(01) அழகானவன்
(02) ஆத்திமாலையணிந்த சோழன்
(03) கொற்றவை போன்று வீரமானவன்

386. **ஆரிடன்**
(01) முனிவன்
(02) சமணன்

387. **ஆரிதன்**
(01) முனிவன்
(02) சமணன்

388. **ஆரிய அண்ணல்**
(01) கடைக் கழகக் காலப்பெருமகன்

389. **ஆரியப்பன்**
(01) அருமையான, பெறற்கரிய தலைவன்
(02) புலவர்

390. **ஆரியன்**
(01) புத்தன்
(02) நண்பன்
(03) அறிஞன்
(04) ஆசிரியன்
(05) ஐயனார்
(06) சிவன்
(07) அரியவன்
(08) அருமையானவன்
(09) அழகுடையவன்
(10) நற்குலத்திற்பிறந்தோன்
(11) வழிபடப்படுபவன்
(12) செல்வமுடையவன்
(13) பொருள் தேடுபவன்
(14) பொன் போன்றவன்

391. **ஆரின் கண்ணியன்**
(01) சோழ அரசன்

392. **ஆரின் மாலையன்**
(01) சோழ அரசன்

393. **ஆருகதன்**
(01) மூவகை இறை மறுப்பு மதங்களுள் ஒன்றான அருக சமயத்தினன்

394. **ஆருணியரசன்**
(01) பாஞ்சால தேசத்தரசன்

395. **ஆரூடன்**
(01) மெய்யுணர்வில் தேர்ந்தவன்

396. **ஆரூரன்**
(01) நம்பியாரூரன் என்னும் சுந்தரமூர்த்தி நாயனார்

397. **ஆரூரான்**
(01) திருவாரூரைச் சேர்ந்தவன்

398. **ஆல்கெழு கடவுள்**
(01) சிவன் (திருமுருகு)

399. **ஆலக்கொடி**
(01) கடைக்கழகப் புலவர் ஒருவர்

400. **ஆலங்குடி வங்கன்**
(01) ஆலக்கொடி போன்ற பெண்

401. **ஆலத்தூர்கிழார்**
(01) கடைக்கழகப் புலவர்

402. **ஆலம் பேரிச் சாத்தனார்**
(01) கடைக்கழகப் புலவருள் ஒருவர்

403. **ஆலமர் கடவுள்**
(01) சிவன்

404. **ஆலமர் செல்வன்**
(01) சிவன்

405. **ஆலமுண்டோன்**
(01) சிவன்

406. **ஆலவன்**
(01) திருமால்,
(02) குளிர்ந்த பாற்கடலினின்று எழும் நிலவு
(03) உழவன்
(04) கலப்பை போன்ற ஆய்தம் கொண்டு போர் புரிபவன்

407. **ஆலன்**
(01) நீர் போன்று தெளிந்தவன்
(02) மழை நீர் போல் குளிர்ந்தவன்
(03) ஆலமரம் போன்று பரந்து தழைத்து வளர்பவன்
(04) ஆரல் (கார்த்திகை) நாண்மீனில் பிறந்தவன்
(05) வான்போல் பரந்த மனமுடையவன்
(06) சிவன்

408. **ஆலனந்தலன்**
(01) ஆலிலையில் துயில்கின்ற திருமால்

409. **ஆலாலன்**
(01) சிவன்

410. **ஆலி**
(01) பனிக்கட்டி போன்றவன்(ள்)
(02) புலவர் பெயர்
(03) ஆரவாரமானவன்

411. **ஆலிகன்**
(01) உழவன்
(02) கலப்பை போன்ற ஆய்தம் கொண்டு போர் புரிபவன்

412. **ஆலிநாடன்**
(01) திருமங்கையாழ்வார்

413. **ஆலியன்**
(01) உழவன்
(02) கலப்பை போன்ற ஆய்தம் கொண்டு போர் புரிபவன்

414. **ஆலியார்**
(01) கடைக்கழகப் புலவர்களில் ஒருவர்

415. **ஆலிவன்**
(01) உழவன்
(02) கலப்பை போன்ற ஆய்தம் கொண்டு போர் புரிபவன்

416. **ஆலிலைத் துயின்றோன்**
(01) கண்ணன்

417. **ஆலோன்**
(01) நிலவு
(02) குளிர்ந்த நீர் போன்ற தன்மையுடையவன்

418. **ஆவலன்**
(01) அனைவருக்கும் உற்றவனாய் உறவாக வாழ்பவன்
(02) கணவன்
(03) காதலன்
(04) அன்பு கொண்டவன்

419. **ஆவி**
(01) வேளிர்தலைவருள் ஒருவன்
(02) முதன்மையுற்று விளங்குபவன்
(03) மேம்பட்டவன்

420. **ஆவிக்கோ**
(01) கடைக்கழக வள்ளல்களில் ஒருவன்

421. **ஆவிநன்குடி**
(01) பழநி ஊரைச் சேர்ந்தவன்

422. **ஆவியர்கோ**
(01) ஆவியர் குடியினன்
(02) ஆவியர் குடித் தலைவனான பேகன்

423. **ஆவியர் கோமான்**
(01) வள்ளல் பேகன்

424. **ஆவியர்கோன்**
(01) ஆவியர் குடியினன்
(02) ஆவியர் குடித் தலைவனான பேகன்

425. **ஆவியர்பெருமகன்**
(01) ஆவியர் குடியினன்
(02) ஆவியர் குடித் தலைவனான பேகன்

426. **ஆவியன்**
(01) ஆவியர் குடியினன்
(02) ஆவியர் குடித் தலைவனான பேகன்
(03) வேளாவியின் குடியான வேளிர் மரபினன்
(04) வேளாளன்
(05) வேடன்

427. **ஆவீரன்**
(01) இடையன்

428. **ஆழ்வான்**
(01) சூரியன்

429. **ஆழ்வி**
(01) தலைவன்

430. **ஆழியளித்தோன்**
(01) சிவன்

431. **ஆழியன்**
(01) கடல் தெய்வம் வருணன்

432. **ஆழியான்**
(01) திருமால்
(02) அரசன்
(03) வருணன்

433. **ஆள்வார்**
(01) கடவுள்

434. **ஆளரி**
(01) ஆண் அரிமா
(02) திருமால்

435. **ஆளவந்தார்**
(01) மாலியக்குரவர் ஒருவர் பெயர்

436. **ஆளன்**
(01) ஆளுபவன்
(02) அரசன்
(03) தலைவன்
(04) வலிமையானவன்

437. **ஆளி**
(01) ஆளுபவன்
(02) அரசன்
(03) தலைவன்
(04) வலிமையானவன்

438. **ஆளிமுகன்**
(01) இலங்கையின் சிற்றரசன் ஒருவன்

439. **ஆளுடைய தேவன்**
(01) திருஞானசம்பந்தர்

440. **ஆளுடைய நம்பி**
(01) சுந்தரமூர்த்தி நாயனார்

441. **ஆளுடைய பிள்ளை**
(01) திருஞானசம்பந்தர்

442. **ஆளுடையவரசு**
(01) திருநாவுக்கரசர்

443. **ஆளுடையான்**
(01) தலைவன்
(02) கடவுள்

444. **ஆளுவன்**
(01) ஆள்பவன்
(02) துளு நாட்டு மன்னன்

445. **ஆற்றியன்**
(01) பிறருக்கு ஆறுதலாய் விளங்குபவன்

446. **ஆற்றுநன்**
(01) நல்வழிப்படுத்துவோன்
(02) பிறருக்கு எடுத்துக் காட்டாய் விளங்குபவன்
(03) எடுத்த பணியை முடிக்கவல்லான்

447. **ஆறலன்**
(01) ஆறுதல்படுத்துபவன்
(02) குளிர்ந்த நீர்போல் ஆறுதலளிப்பவன்

448. **ஆறிரு கரத்தோன்**
(01) முருகன்

449. **ஆறுசூடி**
(01) கங்கையாற்றைத் தலையில் கொண்ட சிவன்

450. **ஆறுமுக நாவலன்**
(01) யாழ்ப்பாணத்துத் தமிழ் பேராசான்

451. **ஆறுமுகம்**
(01) முருகன்

452. **ஆறுமுகவன்**
(01) முருகன்

453. **ஆறுமுகன்**
(01) முருகன்

454. **ஆன்றலன்**
(01) மாட்சிமை பொருந்தியவன்

455. **ஆன்றவன்**
(01) அறிஞன்
(02) இறைவன்

456. **ஆன்றான்**
(01) அறிஞன்
(02) இறைவன்

457. **ஆனந்தன்**
(01) பெருமகிழ்வு கொண்டு வாழ்பவன்
(02) பேரின்பத்தின் உறைவிடமான சிவன்

458. **ஆனமானவன்**
(01) சிறந்தவன்
(02) மதிப்பிற்குரியவன்

459. **ஆனவன்**
(01) நண்பன்

460. **ஆனன்**
(01) ஆன் ஏற்றை (காளையை) ஊர்தியாகக் கொண்ட சிவன்

461. **ஆனாய நாயன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்

462. **ஆனாயன்**
(01) ஆடு மேய்க்கும் இனத்தவன்

463. **ஆனி**
(01) ஆடவை (ஆனி ) மாதத்தில் பிறந்தவன்

464. **ஆனியன்**
(01) ஆடவை (ஆனி ) மாதத்தில் பிறந்தவன்

465. **ஆனுலகன்**
(01) கண்ணன் வாழும் கோலோகம் என்று அழைக்கப்படும் இடத்தில் வாழ்பவன்

466. **ஆனேறு**
(01) காளை, எருது என்பன போன்று வலிமை வாய்ந்தவன்

467. **ஆனைமுகன்**
(01) பிள்ளையார்

468. **ஆனையுரித்தோன்**
(01) யானைத்தோலையுடுத்திய சிவன்

# இ

469. **இக்கன்**
(01) காமன்
(02) மன்மதன்
(03) கரும்பு வில்லை வைத்திருப்பவன்
(04) கரும்பு போல் இனிப்பவன்
(05) தேன் போல் இனிமையானவன்
(06) வளைந்து கொடுக்கும் தன்மையுள்ளவன்

470. **இக்குவாகு**
(01) அயோத்தியை ஆண்ட ஞாயிற்றுக்குல முதலரசன்
(02) வலிமையான தோளை உடையவன்

471. **இக்கு வில்லோன்**
(01) கரும்பை வில்லாகக் கொண்டதாகக் கருதப்படும் மன்மதன்

472. **இகதன்**
(01) கரும்பு போல இனிப்பவன்

473. **இகமலரான்**
(01) விரிகின்ற மலர் போன்று அழகும், மென்மையும் கொண்டவன்

474. **இகரன்**
(01) தமிழுக்கு இ போன்று இவ்வுலகுக்கும் உயிராய் விளங்குபவன்

475. **இகல் வேந்தன்**
(01) வலிமை வாய்ந்த அரசன்
(02) பகை வெல்பவன்
(03) படைவீரன்

476. **இகலரசன்**
(01) வலிமை வாய்ந்த அரசன்
(02) பகை வெல்பவன்
(03) படைவீரன்

477. **இகலன்**
(01) வலிமை வாய்ந்த அரசன்
(02) பகை வெல்பவன்
(03) படைவீரன்

478. **இகலான்**
(01) பகைமையை வேரறுத்து நட்பைக் கொள்பவன்

479. **இகலையன்**
(01) நீர் போன்ற தெளிந்த அறிவும், வெண்மையான உள்ளமும் கொண்டவன்

480. **இகலைவன்**
(01) நீர் போன்ற தெளிந்த அறிவும், வெண்மையான உள்ளமும் கொண்டவன்

481. **இகழான்**
(01) தாழ்வில்லாதவன்
(02) யாரையும் இகழாமல் மதிப்புடன் நடத்துபவன்

482. **இகன்**
(01) இவ்வுலகை சந்தனம் போல் மணமும், தூய்மையும் கொண்டதாக்குபவன்

483. **இகன் மகன்**
(01) பகைமை கொன்று அன்பை உயிர்ப்பிக்கும் நன்மகன்

484. **இகனி**
(01) வெண்ணெய் போன்ற வெள்ளிய உள்ளமும், மென்மையான குணமும் கொண்டவன்

485. **இகுப்பன்**
(01) நூல்களை வாசித்து உட்பொருள் கண்டு அதன் வழி வாழ்பவன்

486. **இகுரன்**
(01) விதை முளைப்பது போல தடைகளையுடைத்து வெற்றியுடன் வினை முடிப்பவன்

487. **இகுலன்**
(01) விதை முளைப்பது போல தடைகளையுடைத்து வெற்றியுடன் வினை முடிப்பவன்

488. **இகுவான்**
(01) குடும்பத்தில் முதலாவதாகப் பிறந்தவன்
(02) மற்ற குழந்தைகளுக்கு அண்ணனான விளங்குபவன்

489. **இகுளன்**
(01) உண்மையான நண்பன்

490. **இகைவன்**
(01) பிறருக்கும் கொடுக்கும் வள்ளல், முன் நடந்து வழி செல்பவன்

491. **இங்கன்**
(01) அறிவார்ந்தவன்
(02) புத்தி கூர்மையுள்ளவன்
(03) உட்புதைந்த பொருளாகுபவன்

492. **இங்கிதவாணன்**
(01) குறிப்பறிந்து நடப்பவன்
(02) இன்சொலன்
(03) விருப்பத்தக்க இயல்புடையவன்
(04) நன்னடத்தையும் நற்பண்புகளும் கொண்டவன்
(05) சூழலுக்கேற்பப் பழகுபவன்
(06) நயந்து மனங்கொள்ளத்தக்கவன்

493. **இங்கிதன்**
(01) குறிப்பறிந்து நடப்பவன்
(02) இன்சொலன்
(03) விருப்பத்தக்க இயல்புடையவன்
(04) நன்னடத்தையும் நற்பண்புகளும் கொண்டவன்
(05) சூழலுக்கேற்பப் பழகுபவன்
(06) நயந்து மனங்கொள்ளத்தக்கவன்

494. **இசக்கி**
(01) அனைவரையும் இயக்குபவன்

495. **இசை**
(01) இசையாயிருப்பவன்
(02) இசை போன்று இனியவன்
(03) நிம்மதி தருபவன்
(04) பொன் போன்றவன்
(05) புகழ் வாய்ந்தவன்
(06) கொடைத் தன்மையுள்ளவன்
(07) பண்பாடுபவன்

496. **இசைஞன்**
(01) இசையாயிருப்பவன்
(02) இசை போன்று இனியவன்
(03) நிம்மதி தருபவன்
(04) பொன் போன்றவன்
(05) புகழ் வாய்ந்தவன்
(06) கொடைத் தன்மையுள்ளவன்
(07) பண்பாடுபவன்

497. **இசை ஞானி**
(01) இசையில் மிகுந்த ஞானம் கொண்டவன்

498. **இசைத் தமிழன்**
(01) இசை போன்ற இனிமையான தமிழன்

499. **இசைப் பாணன்**
(01) இசையோடு பாடும் திறனாளி

500. **இசை மகன்**
(01) இசையாயிருப்பவன்
(02) இசை போன்று இனியவன்
(03) நிம்மதி தருபவன்
(04) பொன் போன்றவன்
(05) புகழ் வாய்ந்தவன்
(06) கொடைத் தன்மையுள்ளவன்
(07) பண்பாடுபவன்

501. **இசை மறை**
(01) இசையை வேதமாகக் கொண்டு வாழ்பவன்
(02) சாம வேதமாகிய இசை நூல் போன்ற புகழ் மிக்க இசை வல்லுநன்

502. **இசையோன்**
(01) கருவிகளின் இசைக்கேற்றவண்ணம் பாடுபவன்

503. **இசைவந்தோன்**
(01) புகழ் பெற்றவன்
(02) அனைவராலும் அறியப்படுபவன்
(03) நற்குணத்தான்

504. **இசைவல்லான்**
(01) இசை பாடுவதில் வல்லவன்

505. **இசைவலான்**
(01) இசை பாடுவதில் வல்லவன்

506. **இசைவாணன்**
(01) இசையையே உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்பவன்

507. **இட்டன்**
(01) வணங்கத்தக்க பெரியவன்

508. **இடங்கழி நாயனார்**
(01) 63 நாயன்மார்களில் ஒருவர்

509. **இடன்**
(01) நற்காலமாய் விளங்குபவன்
(02) செல்வம் சேர்ப்பவன்
(03) வளம் சேர்ப்பவன்

510. **இடிக்கொடியன்**
(01) இந்திரன், இடியின் அடையாளமாய் திகழ்பவன்

511. **இடிக்கொடியோன்**
(01) இந்திரன், இடியின் அடையாளமாய் திகழ்பவன்

512. **இடும்பன்**
(01) குமரக் கடவுள்
(02) கணங்களின் தலைவன்

513. **இடைக்காடன்**
(01) கடைக் கழகச் சான்றோருள் ஒருவர்

514. **இடைச்சன்**
(01) இரண்டாம் குழந்தை
(02) நடுவில் பிறந்த மகன்

515. **இடை மகன்**
(01) ஆடுமாடுகளை மேய்ப்பவன்

516. **இடைய நெடுங்கீரன்**
(01) கடைக் கழக மருவிய புலவர் பெயர்

517. **இடையறாவன்பன்**
(01) உடைக்கவோ, பிரிக்கவோ முடியாத அன்பைக் கொள்பவன்

518. **இடையன்**
(01) ஆடுமாடுகளை மேய்ப்பவன்

519. **இடையுவன்**
(01) முழுநிலவு போன்று ஒளி வீசுபவன்

520. **இண்டன்**
(01) அனைவருக்கும் நண்பனாய், உறவாய் விளங்குபவன்

521. **இணங்கன்**
(01) நண்பன்

522. **இணரன்**
(01) கொத்தாக மலர்ந்திருக்கும் பூக்கள் போன்றவன்
(02) பூவிதழ் போலும் மெல்லிய மனம் கொண்டவன்
(03) ஒளிச் சுடராய் திகழ்பவன்
(04) கொத்தாய் பழுத்திருக்கும் கனிகள் போன்றவன்

523. **இணியன்**
(01) ஏணி போன்று அனைவருக்கும் உதவுபவன்

524. **இணை**
(01) ஏழிசைத் தொகுதியில் இரண்டாம் இசை மற்றும் ஏழாம் இசை வகை (ழெவந) போன்றவன்

525. **இணையன்**
(01) நல்லனவற்கு இசைவாய் இருப்பவன்
(02) எல்லோருக்கும் உதவியாய், பயனாய், ஆதரவாய் இருப்பவன்
(03) இணையற்ற நண்பன்

526. **இணையாளன்**
(01) நண்பன்
(02) இணைந்தே வருபவன்

527. **இணைவன்**
(01) நண்பன்
(02) இணைந்தே வருபவன்

528. **இதமன்**
(01) இன்பமளிப்பவன்
(02) நன்மை புரிபவன்
(03) அறிவார்ந்தவன்
(04) நல்லிதயம் கொண்டவன்
(05) இளமையும், மென்மையும் கொண்டவன்
(06) ஆறுதலளிப்பவன்

529. **இதமான்**
(01) இன்பமளிப்பவன்
(02) நன்மை புரிபவன்
(03) அறிவார்ந்தவன்
(04) நல்லிதயம் கொண்டவன்
(05) இளமையும், மென்மையும் கொண்டவன்
(06) ஆறுதலளிப்பவன்

530. **இதவன்**
(01) இன்பமளிப்பவன்
(02) நன்மை புரிபவன்
(03) அறிவார்ந்தவன்
(04) நல்லிதயம் கொண்டவன்
(05) இளமையும், மென்மையும் கொண்டவன்
(06) ஆறுதலளிப்பவன்

531. **இதன்**
(01) இன்பமளிப்பவன்
(02) நன்மை புரிபவன்
(03) அறிவார்ந்தவன்
(04) நல்லிதயம் கொண்டவன்
(05) இளமையும், மென்மையும் கொண்டவன்
(06) ஆறுதலளிப்பவன்

532. **இந்தியன்**
(01) இந்திய நாட்டவன்

533. **இந்திரன்**
(01) தலைவன்
(02) அரசன்
(03) தேவர்களின் தலைவனாக சொல்லப்படுபவன்

534. **இந்து**
(01) நிலவு
(02) மாழ்கு நாண்மீனில் (மிருக சீரிடம்) பிறந்தவன்
(03) இந்து மதத்தவன்

535. **இப்பன்**
(01) வணிக இனத்தைச் சேர்ந்தவன்
(02) வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர்

536. **இம்பரன்**
(01) இவ்வுலகைச் சேர்ந்தவன்

537. **இம்மென்கீரன்**
(01) கடைக் கழகப் புலவர்

538. **இமயம்**
(01) இமய மலை போன்று உயர்ந்தவன்
(02) குளிர்ச்சி மிக்கவன்
(03) பொன் போன்று ஒளிர்பவன்

539. **இமயவரம்பன்**
(01) இமயமலையை வரம்பாகக் கொண்டு (எல்லை) ஆண்ட சேர மன்னன்
(02) நெடுஞ்சேரலாதனின் பட்டப்பெயர்

540. **இமயவில்லி**
(01) மேருமலையை வில்லாக வளைத்து, போர் புரிந்ததாகச் சொல்லப்படும் சிவன்

541. **இமயன்**
(01) இமய மலை போன்று உயர்ந்தவன்
(02) குளிர்ச்சி மிக்கவன்
(03) பொன் போன்று ஒளிர்பவன்

542. **இமன்**
(01) பனிபோன்று குளிர்ந்தவன்
(02) சந்தனம் போன்று மணப்பவன்

543. **இமிழன்**
(01) இனிமையானவன்
(02) இன்னிசை போன்றவன்

544. **இமையம்**
(01) இமய மலை போன்று உயர்ந்தவன்
(02) குளிர்ச்சி மிக்கவன்
(03) பொன் போன்று ஒளிர்பவன்

545. **இமையவன்**
(01) இமைக்காத தேவர்கள் போன்றவன்

546. **இமையன்**
(01) இமய மலை போன்று உயர்ந்தவன்
(02) குளிர்ச்சி மிக்கவன்
(03) பொன் போன்று ஒளிர்பவன்

547. **இமையான்**
(01) இமைக்காத தேவர்கள் போன்றவன்

548. **இமையோன்**
(01) இமைக்காத தேவர்கள் போன்றவன்

549. **இயக்கன்**
(01) தலைமையாக நின்று நடத்துபவன்
(02) குறுநிலத் தலைவன்
(03) இயங்குபவன்
(04) வானவரான தேவன்

550. **இயமன்**
(01) செலுத்துபவன்
(02) எமன் - சாவுக் கடவுளாகச் சொல்லப்படுபவன்

551. **இயமான்**
(01) வேள்வித் தலைவன்
(02) ஆதன்
(03) வழி நடத்துபவன்
(04) கடவுள்

552. **இயமானன்**
(01) வேள்வித் தலைவன்
(02) ஆதன்
(03) வழி நடத்துபவன்
(04) கடவுள்

553. **இயல்**
(01) தகுதி வாய்ந்தவன்
(02) ஒழுக்கமானவன்
(03) பாசமானவன்
(04) ஆற்றல் வாய்ந்தவன்
(05) பெருமையானவன்

554. **இயல்மன்**
(01) ஒழுங்கானவன்
(02) சீரானவன்
(03) சீர்மை பொருந்தியவன்

555. **இயல்வாணன்**
(01) புலவன்

556. **இயலவன்**
(01) விரும்பத்தக்க நல்லியல்புகளுடையவன்

557. **இயலறிவு**
(01) சொல்லறிவு கொண்டவன்

558. **இயலான்**
(01) விரும்பத்தக்க நல்லியல்புகளுடையவன்

559. **இயவன்**
(01) இசைக் கருவிகளை இயக்குவதில் கை தேர்ந்தவன்
(02) கலைஞன்

560. **இயவான்**
(01) வேள்வித் தலைவன்
(02) ஆதன்
(03) வழி நடத்துபவன்
(04) கடவுள்

561. **இயவுள்**
(01) தலைமைப் பண்பு கொண்டவன்
(02) மேலானவன்
(03) எப்பொருளுக்கும் இறைவன்
(04) தெய்வம்
(05) புகழாளன்
(06) வழியாய் விளங்குபவன்
(07) பிள்ளை (குழந்தை)
(08) மனம், மெய், மொழி யாவுங்கடந்து விளங்கும் பரம்பொருள்
(09) வானவன்
(10) முனிவன்
(11) குரவன் (குரு)
(12) நன்மை புரிபவன்
(13) தெய்வத் தன்மை கொண்டவன்
(14) இயக்குபவன்
(15) செலுத்துபவன்

562. **இயற்பகை நாயனார்**
(01) அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்

563. **இயற்றமிழ்**
(01) முத்தமிழுள் ஒன்று

564. **இரங்கு குடி நின்ற நாடன்**
(01) கடைக் கழக மருவிய தமிழ்ப் புலவர்

565. **இரவன்**
(01) இரவின் அரசனான திங்கள் போன்றவன்

566. **இரவோன்**
(01) நிலவன்

567. **இராவோன்**
(01) இரவின் அரசனான திங்கள் போன்றவன்

568. **இருக்கன்**
(01) நான்முகன் (இருக்கு மறையை ஓதுபவன்)

569. **இருக்குவேள்**
(01) கொடும்பாளூரை ஆண்ட வேளிற் சிற்றரசர்

570. **இருங்கோ**
(01) குறுநில மன்னன்
(02) பெரும் அரசன்

571. **இருங்கோவேள்**
(01) வேளிர் தலைவருள் ஒருவன்

572. **இருசுடர்**
(01) ஞாயிறு மற்றும் திங்கள் சேர்ந்து வீசும் ஒளி

573. **இருட்கண்டன்**
(01) சிவன் (இருண்ட தொண்டையைக் கொண்டவன்)

574. **இருட்பகை**
(01) ஞாயிறு (இருளின் பகையாய் விளங்கி ஒளி தருபவன்)

575. **இருடி**
(01) முனிவன் (பெருமை வாய்ந்தவன்)

576. **இருந்த நம்பி**
(01) திருக்குறுங்குடியிற் கோயில் கொண்ட திருமால்

577. **இருநிதிக் கிழவன்**
(01) குபேரன்

578. **இரும்பிடர்த்தலையார்**
(01) கரிகாற் சோழனிடம் அமைச்சராகவும், புலவராகவுமிருந்தவர், கரிகாற்சோழனின் தாய் மாமன்

579. **இரும்பொறை**
(01) சேர குல அரசன்
(02) பெரிய மலைகளையுடைய சேர நாட்டினன்
(03) சேரர் பட்டப் பெயர்களுள் ஒன்று

580. **இருள்வலி**
(01) ஞாயிறு

581. **இருளப்பன்**
(01) பாண்டி நாட்டில் கொண்டாடப்பட்ட ஒரு தெய்வம்

582. **இருளன்**
(01) வேட இனத்தான், ஒரு சிறு தெய்வம்

583. **இல்லகன்**
(01) இல்லத்தில் அறவாழ்வு வாழ்பவன்
(02) ஒழுக்க வாழ்வு வாழ்பவன்
(03) கணவன்

584. **இல்லவன்**
(01) இல்லத்தில் அறவாழ்வு வாழ்பவன்
(02) ஒழுக்க வாழ்வு வாழ்பவன்
(03) கணவன்

585. **இல்லறத்தான்**
(01) இல்லத்தில் அறவாழ்வு வாழ்பவன்
(02) ஒழுக்க வாழ்வு வாழ்பவன்
(03) கணவன்

586. **இல்லாளன்**
(01) இல்லத்தில் அறவாழ்வு வாழ்பவன்
(02) ஒழுக்க வாழ்வு வாழ்பவன்
(03) கணவன்

587. **இல்வாழ்வான்**
(01) இல்லத்தில் அறவாழ்வு வாழ்பவன்
(02) ஒழுக்க வாழ்வு வாழ்பவன்
(03) கணவன்

588. **இலக்கணன்**
(01) சிறப்பியல்புடையவன்
(02) அழகானவன்
(03) தனக்கென ஓர் அடையாளம், சிறப்பு ஏற்படுத்திக் கொள்பவன்
(04) மொழியில் வல்லுநன்

589. **இலக்கியன்**
(01) தனக்கென வகுத்துக் கொண்ட நல்லொழுக்க விதிமுறைகளுடன் வாழ்பவன்,
(02) ஆன்றோர் வழியில் பிறருக்கு எடுத்துக்காட்டாய் வாழ்பவன்

590. **இலம்பன்**
(01) உயர்வானவன்

591. **இலவந்தியன்**
(01) நீர்நிலையைச் சுற்றி அமைந்த பசுஞ்சோலை போன்ற அழகும், மணமும் குளிர்ச்சியும் பெருந்தியவன்

592. **இலவன்**
(01) மென்மையானவன்
(02) மலர் போன்றவன்
(03) இராமனுடைய புதல்வருள் ஒருவன்

593. **இலாவணியன்**
(01) அழகும், கவர்ச்சியும் மிகுந்தவன்

594. **இலையமுதன்**
(01) வெற்றிலை போன்று நறுமணமும், நல வாழ்வும் கொள்பவன்

595. **இவணன்**
(01) இவ்வுலகில் வாழ்பவன்

596. **இழிகட் பெருங்கண்ணனார்**
(01) கடைக் கழகப் புலவர்களுள் ஒருவர்

597. **இளங்கடுங்கோ**
(01) கடைக்கழக மன்னருள் ஒருவன்

598. **இளங்கண்டீரக்கோ**
(01) கண்டீரக்கோவின் தம்பி

599. **இளங்கதிர்**
(01) எழுஞாயிற்றின் கதிர் போன்ற மெல்லொளியுடையோன்

600. **இளங்கால்**
(01) இளமையான காற்றைப் போன்றவன், தென்றல் போன்றவன்

601. **இளங்கீரந்தையார்**
(01) கடைக் கழகப் புலவர்

602. **இளங்கீரன்**
(01) கடைக் கழகப் புலவர்

603. **இளங்கூறு**
(01) இளவரசன்

604. **இளங்கோ**
(01) இளவரசன்

605. **இளங்கோசன்**
(01) கொங்கு மண்டலத்தரசன்

606. **இளங்கோவடிகள்**
(01) சேரன் செங்குட்டுவனின் இளவல் சிலப்பதிகார நூலாசிரியர்

607. **இளங்கோவேள்**
(01) வேள்குலத்து இளவரசன்

608. **இளஞ்சூரியன்**
(01) இடைக்காலப் புலவர் (இரட்டைப் புலவருள் இளையவர்)

609. **இளஞ்சென்னி**
(01) சோழ அரசர்களுள் ஒருவன்

610. **இளஞ்சேரல் இரும்பொறை**
(01) சேர அரசர்களுள் ஒருவன்

611. **இளந்தரன்**
(01) இளைஞன்

612. **இளந்தாரி**
(01) இளைஞன்

613. **இளந்திரையன்**
(01) திரையனின் தம்பி

614. **இளந்தையன்**
(01) இளைஞன்

615. **இளநிலா**
(01) மாலை நிலவு

616. **இளம்பிறை**
(01) சிறுபிறை, வளர்பிறை போன்றவன்

617. **இளம்பெருவழுதி**
(01) கடைக் கழகக் கால அரசனும், புலவனுமானவன்

618. **இளம்போதி**
(01) கடைக்கழகக் காலப் புலவருள் ஒருவர்

619. **இளமங்கை**
(01) இளம் பெண்

620. **இளவரசன்**
(01) அரசனின் மகன்
(02) அரசனின் தம்பி

621. **இளவரசு**
(01) அரசனின் மகன்
(02) அரசனின் தம்பி

622. **இளவல்**
(01) அரசனின் மகன்
(02) அரசனின் தம்பி

623. **இளவிச்சிக்கோ**
(01) கடைக்கழக காலத்து மன்னருள் ஒருவன்

624. **இளவுடையான்**
(01) இளவரசன்

625. **இளவேனில்**
(01) வெப்பம் முதிராக் கோடை போன்றவன்

626. **இளைய நயினார்**
(01) முருகக் கடவுள்

627. **இளைய பிள்ளையார்**
(01) முருகக் கடவுள்

628. **இளைய பெருமாள்**
(01) இராமனின் தம்பி இலக்குவன்

629. **இளையாழ்வார்**
(01) இராமானுசர்

630. **இளையான்குடி மாற நாயனார்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்

631. **இறப்பருங்குன்றன்**
(01) கடத்தற்கரிய மலை போன்றவன்

632. **இறவுளன்**
(01) குறிஞ்சி நிலத்தவன்
(02) மலையில் வாழ்பவன்

633. **இறுக்கன்**
(01) பாலை நிலத்தைச் சேர்ந்தவன்

634. **இறும்பன்**
(01) எறும்பு போலும் வண்டு போலும் சுறுசுறுப்பானவன்

635. **இறைக்காசான்**
(01) இறைவன் சிவனுக்கே ஆசானாய் விளங்கிய முருகக் கடவுள்

636. **இறைமகன்**
(01) அரசன்
(02) பிள்ளையார்

637. **இறைமலை**
(01) மேருமலை போன்று நீடு வாழ்பவன்

638. **இறைமொழி**
(01) இறைவனருளிய மறை

639. **இறையமன்**
(01) காரி (சனி)

640. **இறையவன்**
(01) தலைவன்
(02) கடவுள்
(03) தேவர் தலைவன்

641. **இறையன்**
(01) கடைக் கழகப் புலவருள் ஒருவர்
(02) சிவன்
(03) கடவுள்
(04) இறைத் தன்மை கொண்டவன்

642. **இறையான்**
(01) சிவன்

643. **இறையோன்**
(01) சிவன்

644. **இறைவன்**
(01) மனம், மெய், மொழி யாவுங்கடந்து விளங்கும் பரம்பொருள்
(02) வானவன்
(03) முனிவன்
(04) குரவன் (குரு)
(05) நன்மை புரிபவன்
(06) தெய்வத் தன்மை கொண்டவன்
(07) இயக்குபவன்
(08) செலுத்துபவன்

645. **இன்சாயலன்**
(01) மென்மையான இனிய உளத்தினன்

646. **இன்பன்**
(01) மனைவிபால் மாறாக் காதல் கொள்ளும் கணவன்

647. **இன்பு**
(01) அகமகிழ்வுடன் வாழ்பவன்
(02) இனிமையானவன்
(03) பெரியோர் இயல்புகளுடன் வாழ்பவன்

648. **இன்னிசை**
(01) இன்பந்தரும் இனிய இசை போன்றவன்

649. **இன்னியன்**
(01) இனிய பாடல்களைப் பாடுபவன்

650. **இனவன்**
(01) தம் இனத்தைச் சேர்ந்தவன்

651. **இனன்**
(01) எல்லோருக்கும் உறவாய் வாழ்பவன்
(02) ஒப்பானவன்
(03) ஆசிரியன்
(04) சூரியன்

652. **இனியன்**
(01) இனிமை தருபவன்
(02) பிறறை மகிழ்விப்பவன்
(03) இனிய தன்மையுடையவன்

653. **இனியவன்**

(01) இனிமை தருபவன்
(02) பிறறை மகிழ்விப்பவன்
(03) இனிய தன்மையுடையவன்

## ஈ

654. **ஈக்கணன்**
(01) தேனீக்களைப் போன்ற பார்வை நுட்பம் கொண்டவன்

655. **ஈகன்**
(01) சந்தனம் போல மணம் வீசுபவன்,
(02) எதனையும் சுணங்காது கொடையளிக்கும் மனப்பாங்கு உடையவன்

656. **ஈகையன்**
(01) கொடையாளன்

657. **ஈகையாளன்**
(01) கொடையாளன்

658. **ஈட்டன்**
(01) வலிமை வாய்ந்தவன்

659. **ஈடகன்**
(01) மனங்கவர் கள்வன்
(02) புகழ் விளங்க வாழ்பவன்

660. **ஈடணன்**
(01) விரும்பத்தக்கவன்
(02) புகழ் வாய்ந்தவன்

661. **ஈடன்**
(01) வலியோன்
(02) செல்வாக்கு உடையவன்
(03) செல்வன்
(04) பெருமையுடையவன்
(05) தகுதி வாய்ந்தவன்

662. **ஈடிதன்**
(01) போற்றத்தக்கவன்
(02) தொழத்தக்கவன்

663. **ஈண்டையன்**
(01) உள்ளூரைச் சேர்ந்தவன்

664. **ஈண்டையான்**
(01) உள்ளூரைச் சேர்ந்தவன்

665. **ஈமன்**
(01) சுடுகாட்டில் இருக்கும் சிவன்

666. **ஈயவன்**
(01) இராவணன்

667. **ஈயுவன்**
(01) இராவணன்

668. **ஈர்ந்தையன்**
(01) ஈரோடு நகரை/மாவட்டத்தைச் சேர்ந்தவன்

669. **ஈரரசன்**

(01) பசுமையான சோலை போன்ற குளிர்ச்சியும் இனிமையும் மிக்கவன்
(02) பாசமானவன்
(03) அருளானவன்
(04) பரிவு காட்டுபவன்
(05) அழகானவன்

670. **ஈரரசு**

(01) பசுமையான சோலை போன்ற குளிர்ச்சியும் இனிமையும் மிக்கவன்
(02) பாசமானவன்
(03) அருளானவன்
(04) பரிவு காட்டுபவன்
(05) அழகானவன்

671. **ஈரவன்**

(01) குளிர் நிலா போன்றவன்

672. **ஈரறன்**

(01) இல்லறம், துறவறம் இரண்டும் பற்றி அறிவு கொண்டு நல்லறத்துடன் வாழ்பவன்

673. **ஈரறிவன்**

(01) இம்மை, மறுமை பற்றிய அறிவு கொண்டு நன்னெறியில் வாழ்பவன்
(02) எதிரும் புதிருமான பொருளறிந்து வாழ்பவன்

674. **ஈரறிவு**

(01) இம்மை, மறுமை பற்றிய அறிவு கொண்டு நன்னெறியில் வாழ்பவன்
(02) எதிரும் புதிருமான பொருளறிந்து வாழ்பவன்

675. **ஈரன்**

(01) பசுமையான சோலை போன்ற குளிர்ச்சியும் இனிமையும் மிக்கவன்
(02) பாசமானவன்
(03) அருளானவன்
(04) பரிவு காட்டுபவன்
(05) அழகானவன்

676. **ஈரி**

(01) உள்ளக் கனிவு உள்ளவன்
(02) ஈரமுள்ள நெஞ்சினன்
(03) அன்பும், பாசமும் நிரம்பப் பெற்றவன்

677. **ஈரியன்**

(01) உள்ளக் கனிவு உள்ளவன்
(02) ஈரமுள்ள நெஞ்சினன்
(03) அன்பும், பாசமும் நிரம்பப் பெற்றவன்

678. **ஈவோன்**

(01) கொடையாளி
(02) கற்பிக்கும் குரவன்
(03) ஆசிரியன்

679. **ஈழத்துப் பூதன்றேவன்**

(01) கடைக் கழகப் புலவருள் ஒருவர்

680. **ஈழவன்**

(01) இராவணன்

681. **ஈழன்**
(01) இலங்கைத் தமிழன்
(02) பொன் போன்றவன்
(03) மனங்கவர்ந்தவன்
(04) மனம் மயக்குபவன்
(05) கிழக்கில் உதித்தவன்

682. **ஈறில்லான்**
(01) முடிவில்லாதவன்
(02) கடவுள்

683. **ஈறிலான்**
(01) முடிவில்லாதவன்
(02) கடவுள்

684. **ஈறிலி**
(01) முடிவில்லாதவன்
(02) கடவுள்

685. **ஈனோன்**
(01) இவ்வுலகைச் சேர்ந்தவன்

## உ

**686. உக்கடன்**
(01) குடும்பத்தின் முதல் பிள்ளை
(02) அனைவரையும் முன் நின்று நடத்துபவன்
(03) குடும்பத்தின் காவலனாய் இருப்பவன்

**687. உக்களன்**
(01) அனைவரையும் காத்து அரவணைத்து வழி நடத்துபவன்

**688. உக்கன்**
(01) பொலிகின்ற பொன் போன்றவன்
(02) நெருப்புச் சுடர் போன்று ஒளிர்பவன்
(03) உயர்வானவன்
(04) தலைவன்

**689. உகப்பன்**
(01) உயர்ந்தவன்
(02) தானும் உயர்ந்து பிறரையும் உயர்த்துபவன்
(03) புகழாலும் செயலாலும் உயரப் பறப்பவன்
(04) மகிழ்ந்து மகிழ்வித்து வாழ்பவன்
(05) அனைவரும் விரும்புமாறு வாழ்பவன்
(06) காலங்கடந்தும் வாழ்பவன்
(07) நிலவு போல் தண்மையானவன்
(08) எதிலும் முதலாவதாய் வருபவன்
(09) முதல்வன்

**690. உகமன்**
(01) உயர்ந்தவன்
(02) தானும் உயர்ந்து பிறரையும் உயர்த்துபவன்
(03) புகழாலும் செயலாலும் உயரப் பறப்பவன்
(04) மகிழ்ந்து மகிழ்வித்து வாழ்பவன்
(05) அனைவரும் விரும்புமாறு வாழ்பவன்
(06) காலங்கடந்தும் வாழ்பவன்
(07) நிலவு போல் தண்மையானவன்
(08) எதிலும் முதலாவதாய் வருபவன்
(09) முதல்வன்

**691. உகரன்**
(01) குடும்பத்தில் இரண்டாவதாய்ப் பிறந்து குலத்தைக் காப்பவன்

**692. உகவன்**
(01) மகிழ்ச்சியாக வாழ்பவன்,
(02) உவப்பானவன்,
(03) அனைவருக்கும் உதவியாய் நன்மை புரிந்து வாழ்பவன்

**693. உகளன்**
(01) பழகுவோரை மகிழ்வாய் ஏற்று வாழ்பவன்
(02) உற்சாகமானவன்
(03) இரட்டைப் பிறவிகளுள் ஒருவன்

694. **உகன்**
(01) உயர்ந்தவன்
(02) தானும் உயர்ந்து பிறரையும் உயர்த்துபவன்
(03) புகழாலும் செயலாலும் உயரப் பறப்பவன்
(04) மகிழ்ந்து மகிழ்வித்து வாழ்பவன்
(05) அனைவரும் விரும்புமாறு வாழ்பவன்
(06) காலங்கடந்தும் வாழ்பவன்
(07) நிலவு போல் தண்மையானவன்
(08) எதிலும் முதலாவதாய் வருபவன்
(09) முதல்வன்

695. **உகாய்க்குடிக்கிழார்**
(01) கடைக் கழகப் புலவர்களுள் ஒருவர்

696. **உகிரன்**
(01) அழிக்க முடியாதவன்
(02) சுட்டாலும் வெண்மை மாறா சங்கு போன்றவன்
(03) பகைவரால் வெல்ல முடியாதவன்
(04) வெட்ட வெட்ட வளர்பவன்

697. **உங்கன்**
(01) ஆண்பாற் பெயர்
(02) பெருமிதமானவன்
(03) எழுச்சியுடையவன்

698. **உச்சட்டன்**
(01) நேர்மையானவன்

699. **உச்சதரு**
(01) உயர்ந்தவன்
(02) தென்னை மரம் போல எச்செயலும் நற்செயலாய் விளங்குபவன்
(03) தன்னலங்கருதாது பொது நலனுக்காக வாழ்பவன்
(04) குடும்பத்துக்குக் காவலாய் விளங்குபவன்

700. **உச்சவன்**
(01) வீட்டிலும் நாட்டிலும் இன்றியமையாதவனாய் விளங்குபவன்
(02) எல்லோராலும் வணங்கிப் போற்றப்படுபவன்
(03) செல்வம் மிகுந்தவன்
(04) உயர்ந்த நிலையை அடைந்து வாழ்பவன்
(05) கதிரவன்

701. **உச்சாரன்**
(01) வீட்டிலும் நாட்டிலும் இன்றியமையாதவனாய் விளங்குபவன்
(02) எல்லோராலும் வணங்கிப் போற்றப்படுபவன்
(03) செல்வம் மிகுந்தவன்
(04) உயர்ந்த நிலையை அடைந்து வாழ்பவன்
(05) கதிரவன்

702. **உச்சிக்கிழான்**
(01) கதிரவன்

703. **உச்சிதன்**
(01) உயர்ந்தவன்
(02) அழகன்
(03) அரிதாகவே உருவாகும் மனிதன்
(04) கொடையாக வந்தவன்
(05) கொடையாளியாக வாழ்பவன்

704. **உச்சியான்**
(01) தேவன்

705. **உசனன்**
(01) வெள்ளி
(02) சுக்கிரன்

706. **உடுக்கன்**
(01) விண்மீன் போன்று வெள்ளி போன்று ஒளிர்பவன்
(02) அம்பு போல் பாய்ந்து தீயோரை வெல்பவன்
(03) இடையொடுங்கி நல்வாழ்க்கை வாழ்பவன்

707. **உடுக்கோன்**
(01) திங்கள் போல் தண்ணொளி தருபவன்

708. **உடுபதி**
(01) திங்கள் போல் தண்ணொளி தருபவன்

709. **உடுவிலான்**
(01) திங்கள் போல் தண்ணொளி தருபவன்

710. **உடுவேந்தன்**
(01) திங்கள் போல் தண்ணொளி தருபவன்

711. **உடைய நம்பி**
(01) சுந்தரமூர்த்தி நாயனார்

712. **உடையவன்**
(01) ராமானுசன்
(02) உரிமையானவன்
(03) செல்வமுள்ளவன்
(04) இறைவன்

713. **உடையான்**
(01) ராமானுசன்
(02) உரிமையானவன்
(03) செல்வமுள்ளவன்
(04) இறைவன்

714. **உத்தமன்**
(01) சான்றோன்
(02) எல்லோருள்ளும் சிறந்தவன்
(03) நன்மை செய்பவன்

715. **உத்தரன்**
(01) தாங்கும் திறனுடையவன்
(02) மேலானவன்

716. **உத்தரி**
(01) குதிரை போன்றவன்

717. **உத்திட்டன்**
(01) நோற்று வினை (karma) களைவோன்

718. **உத்திரன்**
(01) சிறந்த பேச்சாளன்,
(02) மேலெழும்பும் அலைகளைக் கொண்ட கடல் போல் பரந்து விரிந்த அறிவுடையவன்

719. **உதகன்**
(01) நீரால் சூழப்பட்ட இந்நிலவுலகை ஆள்பவன்

720. **உதகவன்**
(01) தீ போன்றவன்

721. **உதயஞாயிறு**
(01) இளங்கதிரவன்

722. **உதயகுமரன்**
(01) காவிரிப் பூம்பட்டினத்தரசனாகிய நெடுமுடிக் கிள்ளியின் புதல்வன்

723. **உதயணன்**
(01) பெருங்கதை என்றும் காப்பியத்தின் தலைவன்

724. **உதயன்**
(01) தோன்றுபவன்
(02) ஞாயிறு

725. **உதயாதிபன்**
(01) தோன்றுபவன்
(02) ஞாயிறு

726. **உதயாதியன்**
(01) தோன்றுபவன்
(02) ஞாயிறு

727. **உதரத்தன்**
(01) பெரியோன்
(02) கொடையாளி

728. **உதரன்**
(01) கருப்பையில் உருவாகி வளர்ந்தவன்,
(02) நடுவு நிலை வழுவாதவன்

729. **உதவலன்**
(01) கொடையாளி
(02) துணைவன்

730. **உதவிந்தன்**
(01) நீர்த்துளி போன்றவன்

731. **உதன்**
(01) சிவன்
(02) மேலானவன்
(03) உயர்ந்தவன்
(04) நீரால் சூழப்பட்ட இந்நிலவுலகை ஆள்பவன்

732. **உதிதன்**
(01) தோன்றியவன்
(02) பாண்டிய மன்னன் ஒருவன்

733. **உதியன்**
(01) சேரன்
(02) அறிவாளி
(03) மேன்மையானவன்
(04) மன்னன்
(05) தோன்றுபவன்
(06) ஞாயிறு

734. **உதிரன்**
(01) அரத்தம் போல் செவ்வண்ணமானவன்

735. **உதையன்**
(01) ஞாயிறு

736. **உந்தரன்**
(01) வழிகாட்டுவோன்

737. **உந்திபூத்தோன்**
(01) திருமால்

738. **உந்தியில் வந்தான்**
(01) நான்முகன்

739. **உந்தியிலுதித்தோன்**
(01) நான்முகன்

740. **உம்பர் காட்டு இளங்கண்ணனார்**
(01) கடைச் சங்கமருவிய காலப் புலவர்

741. **உம்பர் கோன்**
(01) கடவுள் தலைவன்
(02) இந்திரன்

742. **உம்பரன்**
(01) உயர்நிலையிலிருப்பவன்

743. **உம்பரான்**
(01) உயர்நிலையிலிருப்பவன்

744. **உம்பல்**
(01) எழுச்சியானவன்
(02) யானை போன்ற வலியவன்
(03) நல்வழிப்பிறந்தோன்

745. **உம்பலன்**
(01) எழுச்சியானவன்
(02) யானை போன்ற வலியவன்
(03) நல்வழிப்பிறந்தோன்

746. **உம்பன்**
(01) உயர்ந்த இடத்தில் உள்ளவன்
(02) வானில் வாழும் தேவன்
(03) பிராமணன்
(04) கடவுள்

747. **உமை**
(01) அம்மா
(02) மலைமகள்

748. **உமைமகன்**
(01) யானைமுகன்
(02) முருகன்
(03) வீரபத்திரன்

749. **உய்யக்கொண்டான்**
(01) மாலியக்குரவன்
(02) வாழச்செய்தவன்

750. **உய்யவந்த தேவநாயனார்**
(01) தமிழ்ப்புலவர்

751. **உயர்நிலத்தவன்**
(01) இறைவன்

752. **உயிர்த்துணைவன்**
(01) இக்கட்டான நேரத்தில் உதவுபவன்
(02) உயிர்த் தோழன்
(03) கணவன்
(04) உற்ற நண்பன்

753. **உயிரவன்**
(01) நீண்ட நெடுங்காலம் நலமாய் வாழ்பவன்

754. **உரகன்**
(01) பாம்பை வணங்குபவன்

755. **உரங்கன்**
(01) பாம்பை வணங்குபவன்

756. **உரத்தன்**
(01) ஆற்றல் நிறைந்தவன்
(02) உரமுள்ளவன்

757. **உரப்பன்**
(01) புகழ் வாய்ந்தவன்
(02) மனத்திண்மையுள்ளவன்
(03) ஆற்றல் வாய்ந்தவன்

758. **உரவன்**
(01) வலிமையானவன்
(02) திடமானவன்
(03) வைரம் போன்று திண்மையானவன்
(04) அறிவார்ந்தவன்
(05) ஊக்கமுள்ளவன்
(06) அருகன்
(07) வெற்றியாளன்
(08) பரந்த நெஞ்சினன்

759. **உரவியன்**
(01) வலிமையானவன்
(02) திடமானவன்
(03) வைரம் போன்று திண்மையானவன்
(04) அறிவார்ந்தவன்
(05) ஊக்கமுள்ளவன்
(06) அருகன்
(07) வெற்றியாளன்
(08) பரந்த நெஞ்சினன்

760. **உரவோன்**
(01) வலிமையானவன்
(02) திடமானவன்
(03) வைரம் போன்று திண்மையானவன்
(04) அறிவார்ந்தவன்
(05) ஊக்கமுள்ளவன்
(06) அருகன்
(07) வெற்றியாளன்
(08) பரந்த நெஞ்சினன்

761. **உரன்**
(01) வலிமையானவன்
(02) திடமானவன்
(03) வைரம் போன்று திண்மையானவன்
(04) அறிவார்ந்தவன்
(05) ஊக்கமுள்ளவன்
(06) அருகன்
(07) வெற்றியாளன்
(08) பரந்த நெஞ்சினன்

762. **உரனன்**
(01) வலிமையானவன்
(02) திடமானவன்
(03) வைரம் போன்று திண்மையானவன்
(04) அறிவார்ந்தவன்
(05) ஊக்கமுள்ளவன்
(06) அருகன்
(07) வெற்றியாளன்
(08) பரந்த நெஞ்சினன்

763. **உரியவன்**
(01) அறிஞன்
(02) நற்குணங்களுக்கு உரிமையானவன்
(03) மதிப்பிற்குரியவன்
(04) உறவினன்

764. **உரியன்**
(01) அறிஞன்
(02) நற்குணங்களுக்கு உரிமையானவன்
(03) மதிப்பிற்குரியவன்
(04) உறவினன்

765. **உருமேனி**
(01) சிவன்

766. **உரைகோளாளன்**
(01) சொல்வதை எளிதில் அறிய வல்லவன்

767. **உரையன்**
(01) புகழுடையவன்
(02) சங்க மருவிய தமிழ்ப் புலவர்

768. **உரைவாணன்**
(01) புலவர்
(02) கல்வியிற் சிறந்தோன்

769. **உலக அன்னை**
(01) உலகின் அன்னை
(02) கலைமகள்
(03) மலைமகள்

770. **உலகநாதன்**
(01) கடவுள்

771. **உலகமளந்தான்**
(01) திருமால்

772. **உலகமன்னன்**
(01) மன்னர் மன்னன்

773. **உலகமுண்டான்**
(01) திருமால்

774. **உலகளந்தோன்**
(01) திருமால்

775. **உலகன்**
(01) உலகத்தைச் சேர்ந்தவன்
(02) பாண்டியன்

776. **உலகாள்வோன்**
(01) இறைவன்
(02) சிவன்

777. **உலகுடையபெருமாள்**
(01) அரசன்

778. **உலகுண்டவன்**
(01) திருமால்

779. **உலகுண்டோன்**
(01) திருமால்

780. **உலவையான்**
(01) காற்றுத் தெய்வம்

781. **உலன்**
(01) வலிமையானவன்

782. **உவணக்கொடியோன்**
(01) திருமால்

783. **உவணன்**
(01) கலுழன் (கருடன்)

784. **உவணவூர்தி**
(01) உவணத்தை (கருடன்) ஊர்தியாகக் கொண்ட திருமால்

785. **உவவுமதி**
(01) முழுத்திங்கள்

786. **உவன்**
(01) முன்நிற்பவன்
(02) நடுவன்
(03) இளையவன்
(04) திங்கள் போன்றவன்
(05) கடல் போன்றவன்

787. **உழவன்**
(01) உழுபவன்,
(02) வேளாண்குலத்தான்,
(03) உடலுழைப்பு மேற்கொள்பவன்

788. **உழுநன்**
(01) உழுபவன்,
(02) வேளாண்குலத்தான்,
(03) உடலுழைப்பு மேற்கொள்பவன்

789. **உழுமகன்**
(01) உழுபவன்,
(02) வேளாண்குலத்தான்,
(03) உடலுழைப்பு மேற்கொள்பவன்

790. **உழைஞன்**
(01) பக்கத்தில் இருப்பவன்
(02) அமைச்சன்

791. **உழைநன்**
(01) பக்கத்தில் இருப்பவன்
(02) அமைச்சன்

792. **உழையன்**
(01) பக்கத்தில் இருப்பவன்
(02) அமைச்சன்

793. **உள்ளந்தன்**
(01) நம்பத்தகுந்தவன்

794. **உள்ளமுதன்**
(01) அறிவினால் வெளிப்படும் பேரின்பத்தை அடைபவன்

795. **உள்ளுறவன்**
(01) ஓரே ஊரில் உறவோடு வாழ்பவன்

796. **உற்றவன்**
(01) சுற்றத்தான்
(02) நண்பன்

797. **உற்றான்**
(01) சுற்றத்தான்
(02) நண்பன்

798. **உறவன்**
(01) உறவுடையவன்

799. **உறவோன்**
(01) உறவுடையவன்

800. **உறன்**
(01) உறவாய் விளங்குபவன்

801. **உறுபெயரன்**
(01) பெரும்புகழ் பெற்றவன்

802. **உறுவன்**
(01) தேவன்
(02) பெரியோன்
(03) முனிவன்
(04) அருகன்

803. **உறைப்பன்**
(01) வலுவுள்ளவன்

804. **உறையன்**
(01) உறையூரைச் சேர்ந்தவன்
(02) புலவர்

805. **உன்னியன்**
(01) உரிமையானவன்
(02) சொந்தக்காரன்

## ஊ

806. **ஊக்கலன்**
(01) முயற்சியுடையவன்

807. **ஊக்கன்**
(01) முயற்சியுடையவன்,
(02) வலிமையுடையவன்,
(03) மேற்கொண்ட செயலை விடாது செய்து முடிப்பவன்,
(04) உயர்ந்தவன்,
(05) உண்மையானவன்,
(06) மனத்தாற்றல் உடையவன்

808. **ஊகதன்**
(01) முருங்கை போன்று இனிமையும் பிறருக்கு பயனும் உடையவன்

809. **ஊகன்**
(01) அறிவுடையவன்,
(02) புலி போன்று வலிமையும் ஆற்றலும் உய்த்துணரும் அறிவும் உடையவன்

810. **ஊகி**
(01) நுண்ணறிவுடையவன்

811. **ஊகையன்**
(01) கல்வியிற் சிறந்தவன்,
(02) அறிவுக் கூர்மை உடையவன்

812. **ஊட்டி**
(01) நிறமூட்டுபவன்
(02) அழகூட்டுபவன்
(03) ஓவியன்
(04) கழகக் காலப் புலவர்

813. **ஊட்டியார்**
(01) கடைச் சங்க காலத்துத் தமிழ்ப் புலவர்

814. **ஊடகன்**
(01) மீன் போன்றவன்

815. **ஊடன்**
(01) மீன் போன்றவன்

816. **ஊடாளன்**
(01) இருவர் அல்லது இரு சாராருக்கிடையே கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட உதவும் நடுவன்

817. **ஊடையன்**
(01) நீரரண் போல் குடும்பத்தையும் குலத்தையும் நாட்டையும் காக்கும் வீரன்

818. **ஊதியன்**
(01) மிகுந்த வருவாய் ஈட்டும் திறமையுள்ளவன்
(02) எல்லாவற்றையும் தனக்குப் பயனாக மாற்றிக் கொள்ளும் வல்லவன்

819. **ஊர்த்தலைவன்**
(01) ஊரின் தலைவன்
(02) நாட்டாமை

820. **ஊர்மி**
(01) ஊர்ந்து வரும் அலை போன்றவன்

821. **ஊரகன்**
(01) ஊருக்கு நடுநாயகமாக வீற்றிருப்பவன்
(02) காஞ்சியிலுள்ள நூற்றெட்டு திருப்பதிகளுள் ஒன்றான ஊரகத்தில் பிறந்தவன்

822. **ஊரவன்**
(01) ஊரைச் சேர்ந்தவன்,
(02) ஊருக்கு உழைப்பவன்

823. **ஊரவியன்**
(01) வணிகன்

824. **ஊரன்**
(01) மருத நிலத் தலைவன்
(02) சுந்தரமூர்த்தி நாயனார்
(03) செல்வக்குடியில் பிறந்தோன்
(04) ஊரில் வாழ்பவன்

825. **ஊராளன்**
(01) ஊரை ஆட்சி செய்பவன்
(02) ஊர்த் தலைவன்

826. **ஊராளி**
(01) ஊரை ஆட்சி செய்பவன்
(02) ஊர்த் தலைவன்

827. **ஊரான்**
(01) ஊரைச் சேர்ந்தவன்

828. **ஊரி**
(01) இளமையானவன்
(02) மேகம் போன்றவன்
(03) சங்கு போன்று இனிமையானவன்
(04) வெண்மையானவன்

829. **ஊழகன்**
(01) விடியற்காலை போன்று குளிர்ச்சியும் இன்பமும் தருபவன்

830. **ஊழன்**
(01) விடியற்காலை போன்று குளிர்ச்சியும் இன்பமும் தருபவன்

831. **ஊழி முதல்வன்**
(01) கடவுள்

832. **ஊழி நாயகன்**
(01) ஊழி முதல்வனாகிய கடவுள்

833. **ஊழியன்**
(01) தொண்டு செய்பவன்

834. **ஊழியான்**
(01) நெடுங்காலம் வாழ்பவன்
(02) அழிவு காலத்திலும் அழியாமல் இருக்கும் கடவுள்

835. **ஊற்றான்**

(01) உறுதியானவன்
(02) வலிமையானவன்
(03) மனவெழுச்சி மிக்கவன்
(04) மேம்பட்ட குணங்களையும் பழக்க வழக்கங்களையும் கொண்டவன்

836. **ஊனவன்**

(01) மனிதத் தன்மை மிக்கவன்

# எ

837. **எக்கன்**
(01) முயற்சியுடையவன்

838. **எகன்**
(01) கூர்மையான மதிநுட்பம் கொண்டவன்
(02) உருக்கு போல் வலிமையானவன்
(03) வேற்படை வீரன்

839. **எகின்**
(01) அன்னம்
(02) கவரிமான்
(03) நான்முகன்

840. **எகினன்**
(01) அன்னம்
(02) கவரிமான்
(03) நான்முகன்

841. **எஞ்சலன்**
(01) புதிதாக இப்பூமியில் பிறந்தவன்

842. **எட்டமன்**
(01) எட்டயபுரத்து நிலக்கிழாரின் பட்டப்பெயர்

843. **எட்டன்**
(01) எட்டயபுரத்து நிலக்கிழாரின் பட்டப்பெயர்

844. **எட்டி**
(01) எண்வகைப் பண்புகளாற் சிறந்தவன்

845. **எடுப்பன்**
(01) உயரமானவன்
(02) ஏற்றம் கொண்டவன்
(03) இறுமாப்புடையவன்
(04) மேன்மையானவன்

846. **எண்குணத்தான்**
(01) கடவுள்
(02) அருகன்
(03) சிவன்

847. **எண்குணன்**
(01) கடவுள்
(02) அருகன்
(03) சிவன்

848. **எண்சிறப்புள்ளோன்**
(01) கடவுள்
(02) அருகன்
(03) சிவன்

849. **எண்டோளன்**
(01) சிவன் (எட்டுதோள்களைக் கொண்டவன்)

850. **எண்ணன்**
(01) கணிதத்தில், வானியலில் சிறந்தவன்
(02) உயர்ந்த எண்ணம் கொண்டவன்
(03) அறிவு மிகுந்தவன்
(04) மதிப்பு மிகுந்தவன்
(05) மதிப்புக்குரியவன்
(06) ஏரணத்துடன் எண்ணிச்செயல்படுபவன்
(07) வலிமையானவன்
(08) உண்மையானவன்
(09) எளிமையானவன்
(10) அமைச்சன்
(11) எல்லோராலும் எண்ண/விரும்பப்படுபவன்

851. **எண்பதன்**
(01) எளிதில் அணுக முடிந்தவன்

852. **எண்பெற்றி**
(01) எட்டு நற்குணங்கள் வாய்த்தவன்

853. **எண்மதி**
(01) எட்டாம் நாள் நிலவு

854. **எண்மன்**
(01) கணக்கியல் வல்லுநன்
(02) மதிக்கப்படுபவன்
(03) எளிமையானவன்

855. **எண்மையன்**
(01) கணக்கியல் வல்லுநன்
(02) மதிக்கப்படுபவன்
(03) எளிமையானவன்

856. **எதிர்முகன்**
(01) எச்சவாலையும் நேருக்கு நேர் எதிர்கொண்டு வெல்பவன்

857. **எதிரன்**
(01) எதனையும் துணிவுடன் எதிர்கொள்பவன்
(02) கைம்மாறு கருதாதவன்
(03) இலக்குடன் வாழ்பவன்
(04) முன் நிற்பவன்

858. **எதிரிலி**
(01) எதிர்ப்போர் இல்லாதவன்

859. **எதிரேறு**
(01) தீமையை எதிர்கொண்டு வெல்லும் வலிமை கொண்ட ஏறு (காளை) போன்றவன்

860. **எந்திரன்**
(01) சோர்வின்றி சுறுசுறுப்பாக இயங்குபவன்
(02) தேர் போன்று கம்பீரமும், பெருமையும் நிதானமும் கொண்டவன்

861. **எம்பிரான்**
(01) தலைவன்
(02) கடவுள்

862. **எம்பெருமான்**
(01) தலைவன்
(02) கடவுள்

863. **எம்மான்**
(01) எம் மகன்,
(02) எம் இறைவன்,
(03) எம் தந்தை

864. **எம்மை**
(01) எம் தலைவன்

865. **எம்மோன்**
(01) எம் தலைவன்

866. **எமரன்**
(01) எம்மவன்,
(02) எமது சுற்றமும், நட்புமாய் விளங்குபவன்

867. **எமன்**
(01) எம்மைச் சேர்ந்தவன்
(02) இறப்புக் கடவுள்

868. **எமி**
(01) கூடியிருப்பவன்,
(02) நண்பர், சுற்றம் சூழ இருப்பவன்

869. **எயிற்றி**
(01) அழகிய பற்களையுடையவன்
(02) புன்னகையரசன்

870. **எயிற்றியன்**
(01) அழகிய பற்களையுடையவன்
(02) புன்னகையரசன்

871. **எயிற்றியாய்**
(01) அழகிய பற்களையுடையவன்
(02) புன்னகையரசன்

872. **எயினன்**
(01) குறுநிலத் தலைவன்
(02) வேடர்குடிப் பிறந்தவன்

873. **எரி**
(01) நெருப்புக் கடவுள் (அக்னி),
(02) ஆரல் (கார்த்திகை) கழை (புனர்பூசம்) தழல் (கேட்டை) நாண்மீனில் பிறந்தவன்,
(03) செந்நிறமுடையவன்

874. **எரிகதிர்**
(01) கதிரவன்,
(02) செங்கதிர்

875. **எரிசுடர்**
(01) மிகுந்த ஒளியுடையோன்

876. **எரிமணி**
(01) ஒளிரும் மணி(க்கல்)

877. **எரியாடி**
(01) அழலையேந்தி ஆடும் சிவன்

878. **எரியோன்**
(01) தீக்கடவுள்

879. **எருத்தன்**
(01) காளை போல் வலியவன்

880. **எருமறன்**
(01) தனியாகினும் அஞ்சாது போரிடும் வீரன்

881. **எல்**
(01) கதிரவன்
(02) கதிரொளி
(03) தீக்கடவுள்
(04) இரவு
(05) இரவில் ஒளிரும் திங்கள்

882. **எல்லப்பன்**
(01) கதிரவன்
(02) கதிரொளி
(03) தீக்கடவுள்
(04) இரவு
(05) இரவில் ஒளிரும் திங்கள்

883. **எல்லவன்**
(01) கதிரவன்
(02) கதிரொளி
(03) தீக்கடவுள்
(04) இரவு
(05) இரவில் ஒளிரும் திங்கள்

884. **எல்லன்**
(01) கதிரவன்
(02) கதிரொளி
(03) தீக்கடவுள்
(04) இரவு

885. **எல்லான்**
(01) தேவன்

886. **எல்லி**
(01) கதிரவன்

887. **எல்லினான்**
(01) கதிரவன்

888. **எல்லை**
(01) கதிரவன்

889. **எல்லைக்கறுப்பன்**
(01) ஓர் ஊர்த் தேவதை

890. **எல்லையன்**
(01) ஞாயிறு

891. **எல்லோன்**

(01) கதிரவன்

892. **எலுவன்**

(01) தோழன்

893. **எவ்வி**

(01) வேளிர் குறுநில மன்னர்களுள் ஒருவனான வேள்எவ்வி,
(02) அம்பு எய்தலில் வல்லவன்
(03) நற்குணங்கள் மிகுந்தவன்

894. **எழில்**

(01) ஒளி மிகுந்தவன்,
(02) வண்ணமயமானவன்,
(03) அழகானவன்,
(04) தோற்றப் பொலிவு மிக்கவன்,
(05) இளமையானவன்,
(06) வலிமையானவன்,
(07) திறமையானவன்,
(08) உயர்ந்த குணங்களுடையவன்,
(09) வெல்லுஞ்சொல் திறன் வாய்ந்தவன்,
(10) மேலெழும்பிச் செல்லும் மேகம் போன்றவன்

895. **எழிலன்**

(01) ஒளி மிகுந்தவன்,
(02) வண்ணமயமானவன்,
(03) அழகானவன்,
(04) தோற்றப் பொலிவு மிக்கவன்,
(05) இளமையானவன்,
(06) வலிமையானவன்,
(07) திறமையானவன்,
(08) உயர்ந்த குணங்களுடையவன்,
(09) வெல்லுஞ்சொல் திறன் வாய்ந்தவன்,
(10) மேலெழும்பிச் செல்லும் மேகம் போன்றவன்

896. **எழினி**

(01) கடை வள்ளல்கள் எழுவருள் ஒருவனான அதியமான்
(02) நெடியவன்,
(03) உயர்ந்தவன்,
(04) மேலோன்
(05) குறுநில மன்னன்
(06) அதியர் குடிமகன்
(07) அரசன் பெயர்
(08) சேரர் குடியினன்

897. **எழுத்தச்சன்**

(01) மலையாள மொழியெழுத்துக்களை உருவாக்கிய புலவன்

898. **எழுத்தன்**

(01) ஓவியன்,
(02) மொழியறிஞன்

899. **எழுநகரன்**

(01) இந்தியாவிலுள்ள ஏழு திருநகர்களில் ஒன்றில் பிறந்த தமிழன் (காசி, காஞ்சி, அயோத்தி, மதுரை, அவந்தி, துவாரகை, மாயை)

900. **எழுநகரான்**
(01) இந்தியாவிலுள்ள ஏழு திருநகர்களில் ஒன்றில் பிறந்த தமிழன் (காசி, காஞ்சி, அயோத்தி, மதுரை, அவந்தி, துவாரகை, மாயை)

901. **எழுப்பன்**
(01) எழுச்சியானவன்,
(02) உயர்வானவன்,
(03) மகிழ்வானவன்

902. **எழுமலை**
(01) கதிரவன் காலையில் தோன்றும் மலை

903. **எழுமுடி**
(01) ஏழு அரசர்களை வென்ற சேரன் அணிந்த மாலை (வென்ற அரசர்களின் மணிமுடியில் செய்யப்பட்ட மாலை)

904. **எழுவான்**
(01) கதிரவன் தோன்றும் கிழக்குத் திசையில் பிறந்தவன்

905. **எறிச்சலூர் மலாடனார்**
(01) கடைக் கழகக் காலப் புலவர்களில் ஒருவர் (மழைச்சாரல் மிகுந்த மலை நாட்டவர்)

906. **எறிபத்த நாயனார்**
(01) அறுபத்து மூன்று நாயர்மார்களுள் ஒருவர்

907. **எறுழன்**
(01) வலிமையானவன்,
(02) தீயோரைத் தாக்கி அழிக்கும் வீரன்

908. **என்றவன்**
(01) கதிரவன்,
(02) வெயில் அடிக்கும் பகலவன்

909. **என்றூழவன்**
(01) கதிரவன்,
(02) வெயில் அடிக்கும் பகலவன்

# ஏ

910. **ஏகியன்**
(01) தோழன்

911. **ஏட்டன்**
(01) மேலோன்

912. **ஏடன்**
(01) தோழன்

913. **ஏணன்**
(01) உயர்ந்தவன்
(02) பெருமையானவன்
(03) திண்ணமானவன்
(04) வலிமையானவன்
(05) அழகானவன்

914. **ஏதன்**
(01) மூலக்காரணமாக விளங்குபவன்

915. **ஏந்தல்**
(01) முதன்மையானவன்
(02) உதவியாயிருப்பவன்
(03) எச்செயலையும் எளிதில் செய்து முடிப்பவன்
(04) இளமையானவன்
(05) அரசன்

916. **ஏந்தி**
(01) தாங்குபவன்
(02) கொண்டிருப்பவன்
(03) நிறைந்திருப்பவன்

917. **ஏந்திலை**
(01) வேல்

918. **ஏந்தெழில்**
(01) மிக்க அழகுடையவன்

919. **ஏமன்**
(01) பாதுகாப்பாய் விளங்குபவன்
(02) இன்பமளிப்பவன்
(03) களிப்பு தருபவன்
(04) திருநீறணிந்தவன்
(05) பொன் போன்றவன்
(06) மலை போன்ற உறுதியும், வலிமையும் கொண்டவன்
(07) இயமன்

920. **ஏயர்கோன் கலிக்காம நாயனார்**
(01) 63 நாயன்மார்களில் ஒருவர்

921. **ஏர்வாணன்**
(01) உழவுத்தொழில் செய்து வாழ்பவன்

922. **ஏரகன்**
(01) முருகன்
(02) சுவாமிமலையில் பிறந்தவன்

923. **ஏரணன்**
(01) உண்மையை காரணத்தோடு உறுதிப்படுத்தும் திறனுடையவன்

924. **ஏரம்பன்**
(01) யானை போன்றவன்
(02) வேளாண்மை செய்பவன்
(03) கணிதத்தில் வல்லுநன்

925. **ஏரன்**
(01) எழுச்சி மிக்கவன்
(02) தோற்றப் பொலிவுடையவன்
(03) அழகானவன்
(04) நல்லவன்
(05) நற்குணமுடையவன்
(06) நன்மை செய்பவன்
(07) உழவன்

926. **ஏராளன்**
(01) உழவன்
(02) வீரன்

927. **ஏருழவன்**
(01) ஏர்கொண்டு உழுதுண்டு வாழ்பவன்

928. **ஏரோன்**
(01) உழவன்

929. **ஏற்றன்**
(01) உயர்ந்தவன்,
(02) புகழ் வாய்ந்தவன்,
(03) மேன்மையானவன்,
(04) துணிவு மிகுந்தவன்

930. **ஏற்றை**
(01) சேரர் படைத் தலைவன்

931. **ஏறாளன்**
(01) படைவீரன்

932. **ஏறுழவன்**
(01) அம்புகளால் போரிடும் போர் வீரன்

933. **ஏறூர்ந்தோன்**
(01) சிவன்

934. **ஏறை**
(01) ஏறு போன்ற வலிமையுடைய தலைவன்

935. **ஏனன்**
(01) வில்வீரன்

936. **ஏனாதி**
(01) விற்படைத் தலைவன்,
(02) படைத்தலைவன்,
(03) வீரன்,
(04) அமைச்சன்
(05) பட்டப்பெயர்

937. **ஏனாதி திருக்கிள்ளி**
(01) கொடையும் வீரமும் கொண்ட சிற்றரசன்

938. **ஏனாதி நாத நாயனார்**
(01) 63 நாயன்மார்களுள் ஒருவர்

# ஐ

939. **ஐங்கரற்கிளையோன்**
(01) முருகன்,
(02) வீரபத்திரன்

940. **ஐதுரன்**
(01) மறை முறைகளை மறுத்து, காரண முறையான் வழக்காடுபவன்

941. **ஐந்தல்**
(01) மென்மையானவன்
(02) இரக்கமுள்ளவன்
(03) அருளானவன்

942. **ஐந்தொழிலன்**
(01) சிவன் (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களையுடையவன்)

943. **ஐநிறப்புறா**
(01) ஐநிறப்புறா போன்ற அழகும் இயல்பும் உடையவள்
(02) **பச்சைப்புறா**
(03) **புள்ளிப்புறா**
(04) **மந்திப்புறா**
(05) **மாடப்புறா**

944. **ஐம்முகன்**
(01) சிவன்

945. **ஐயடிகள் காடவர் கோன் நாயனார்**
(01) 63 நாயன்மார்களுள் ஒருவர்
(02) பல்லவ குலத்து மன்னர்

946. **ஐயன்**
(01) முனிவன்
(02) ஆசான்
(03) அண்ணன்
(04) தந்தை
(05) உயர்ந்தோன்
(06) தலைவன்
(07) அரசன்
(08) கடவுள்

947. **ஐயனாரிதனார்**
(01) புறப்பொருள் வெண்பா மாலையாசிரியர்

948. **ஐயாதிச் சிறு வெண் தேரையார்**
(01) பழந்தமிழ்ப் புலவர் ("இருங்கடலுடுத்து ..." எனப் பெருங்காஞ்சி பாடியவர்)

949. **ஐயாவு**
(01) அன்பாகவும் செல்லமாகவும் அழைக்கப்படுபவன்

950. **ஐயூர் முடவனார்**
(01) பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியைப் பாடிய புலவர்

951. **ஐயூர் மூலங்கிழார்**
(01) கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெரு வழுதியைப் பாடிய புலவர்

952. **ஐயோன்**
(01) நுண்ணியன்,
(02) கடவுள்

953. **ஐயை**
(01) துலைவி

954. **ஐராவணன்**
(01) இராவணனின்  மாமன்,
(02) இந்திரன்

955. **ஐவிரல்**
(01) கைம்மீன் (ஹஸ்தம் நாண்மீன்)

956. **ஐவைன்**
(01) சேரநாட்டு மலைவாழ்நன்

# ஒ

957. **ஒக்கூர் மாசாத்தனார்**
(01) கடைக் கழகக் காலத் தமிழ்ப் புலவர்

958. **ஒட்டக்கூத்தர்**
(01) பிற்காலச் சோழரவையில் விளங்கிய ஒரு பெரும் புலவர்

959. **ஒட்டரன்**
(01) ஒரிசா மாநிலத்தில் பிறந்தவன்

960. **ஒட்டன்**
(01) ஒரிசா மாநிலத்தில் பிறந்தவன்

961. **ஒட்டியன்**
(01) ஒரிசா மாநிலத்தில் பிறந்தவன்

962. **ஒட்பன்**
(01) அறிவாளி
(02) அழகன்
(03) நன்மை செய்பவன்
(04) மேன்மையானவன்

963. **ஒப்புமுத்து**
(01) நல்லுருவமைந்த முத்து

964. **ஒருசுடர்**
(01) ஒப்பற்ற சுடர் விளங்கும் கதிரவன்

965. **ஒரூஉத்தனார்**
(01) கழகக் காலத் தமிழ்ப் புலவர்

966. **ஒல்லன்**
(01) முதன்மையானவன்
(02) முன்னிருப்பவன்
(03) செழுமையானவன்
(04) பொலிவானவன்
(05) அழகானவன்

967. **ஒவ்வான்**
(01) ஒப்பில்லாதவன்

968. **ஒவ்வோன்**
(01) ஒப்பில்லாதவன்

969. **ஒள்ளியன்**
(01) அறிவுடையோன்
(02) நல்லவன்
(03) வெள்ளி
(04) கதிரவன்

970. **ஒள்ளியோன்**
(01) அறிவுடையோன்
(02) நல்லவன்
(03) வெள்ளி
(04) கதிரவன்

971. **ஒளியவன்**
(01) ஒளி தரும் கதிரவன்

972. **ஒளியோன்**
(01) ஒளி தரும் கதிரவன்

973. **ஒற்றியூரன்**
(01) திருவெற்றியூரைச் சேர்ந்தவன்
(02) சிவன்
(03) வீரனொருவனின் பெயர்

974. **ஒன்றுநன்**
(01) இறுதிவரை ஒன்றாகக் காணப்படும் நண்பன்

# ஒ

975. **ஒக்கியன்**
(01) ஏற்றவன்
(02) தகுதி வாய்ந்தவன்

976. **ஒகாரன்**
(01) மயில் போன்ற அழகுடையவன்

977. **ஒங்கலன்**
(01) உயர்ச்சி மிகுந்தவன்
(02) எழுச்சியானவன்
(03) தலைவன்
(04) வலியோன்

978. **ஒச்சன்**
(01) உயர்ந்தவன்
(02) புகழ் வாய்ந்தவன்

979. **ஒசன்**
(01) ஒளி நிறைந்தவன்
(02) புகழ் வாய்ந்தவன்
(03) ஆசிரியன்
(04) தெய்வத்தை ஏத்துபவன்

980. **ஒட்டிரன்**
(01) ஒரிசா மாநிலத்தில் பிறந்தவன்

981. **ஒடதிநாதன்**
(01) மூலிகைகளின் இறைவனான திங்கள்

982. **ஒடதிபதி**
(01) நிலவு

983. **ஒணப்பிரான்**
(01) திருமால்

984. **ஒணன்**
(01) உயர்வானவன்
(02) மேன்மையானவன்
(03) பெருமையானவன்
(04) முக்கோல் (திருவோணம்) நாண்மீனில் பிறந்தவன்
(05) வாணன்
(06) வாணனின் படைத் தலைவன்

985. **ஒதலாந்தையார்**
(01) ஐங்குறு நூற்றிற் பாலைப் பகுதியின் ஆசிரியர்

986. **ஒதாளன்**
(01) கல்வி புகட்டும் ஆசிரியன்

987. **ஓதி**
(01) அறிவானவன்
(02) கல்வியாளன்
(03) நூல் படிப்பவன்
(04) செறிவாளன்

988. **ஓதிமன்**
(01) அன்னம் போன்றவன்,
(02) மலை போன்றவன்,
(03) நான்முகன்

989. **ஓதுவான்**
(01) ஆசிரியன்,
(02) மாணாக்கன்

990. **ஓய்மான் வில்லியாதன்**
(01) நன்னாகனாரால் பாடப்பெற்றவன்

991. **ஓய்மான் நல்லியக் கோடன்**
(01) நன்னாகனாரால் பாடப்பெற்றவன்

992. **ஓய்மான் நல்லியாதன்**
(01) நன்னாகனாரால் பாடப்பெற்றவன்

993. **ஓர்மன்**
(01) உள்ளத் திண்மையானவன்,
(02) சிந்தனையாளன்

994. **ஓரம்போகியார்**
(01) ஐங்குறு நூற்றில் மருதப்பகுதியைப் பாடிய புலவர்

995. **ஓரான்**
(01) முதலில் பிறந்தவன்,
(02) முதலாவதாக வருபவன்

996. **ஓரி**
(01) தமிழகப் பெருவள்ளல்களில் ஒருவன்
(02) ஒப்பற்றவன்
(03) உயர்வானவன்
(04) முதிர்ச்சியுள்ளவன்
(05) சேரர் குடியினன்

997. **ஓரோடத்துக் கந்தரத்தனார்**
(01) கடைச் சங்க மருவிய புலவர்

998. **ஓலை நாயகன்**
(01) சோழருடைய தலைமைச் செயலாளன்
(02) அரசுத் தலைமை அலுவலர்

999. **ஓவியன்**
(01) சித்திரமெழுதுபவன்,
(02) படிமம் செய்பவன்

# ஔ

1000. **ஔவை**
(01) தாய் போன்றவள்
(02) கழகக் காலப் புலவர்

1001. **ஔவையார்**
(01) பழைய பெண்புலவர்

# க

1002. **கக்கர்**
(01) மதுரையில் உள்ள ஒரு சிற்றூர்த் தெய்வம்

1003. **கக்கன்**
(01) பெரியவன்
(02) வலிமை வாய்ந்தவன்
(03) தலைவன்
(04) கரிய நிறமுடையவன்

1004. **கக்கான்**
(01) பெரியவன்
(02) வலிமை வாய்ந்தவன்
(03) தலைவன்
(04) கரிய நிறமுடையவன்

1005. **கக்கி**
(01) கக்கனின் பெண்பாற் பெயர்

1006. **கக்குவன்**
(01) பிஞ்சு போன்று மென்மையானவன்
(02) இளமையானவன்
(03) அன்பானவன்
(04) இரக்கமுடையவன்

1007. **ககரன்**
(01) நான்முகன்
(02) காமன்
(03) கதிரவன்
(04) நிலவு போன்றவன்
(05) ஆதன்
(06) தலைவன்

1008. **ககுத்தன்**
(01) உள்நாட்டைச் சேர்ந்தவன்

1009. **கங்கணன்**
(01) மங்கலமானவன்
(02) செயல் வீரன்
(03) உறுதிப்பாடு உடையவன்
(04) வளமான, கருமையான முடியைக் கொண்டவன்

1010. **கங்கணி**
(01) மேற்பார்வையாளன்
(02) பிற பெயர்:
(03) கங்காணி

1011. **கங்கன்**
(01) தீப்பொறி போன்றவன்
(02) வளைந்த மூக்குடையவன்
(03) பருந்து போன்றவன்
(04) கங்கை ஆற்றுக் கரையோரம் பிறந்தவன்/வாழ்பவன்
(05) பெரிய மரம் போன்று உறுதியும் வலிமையும் கொண்டவன்
(06) கங்கர் மரபைச் சேர்ந்தவன்
(07) வள்ளல்

1012. **கங்கலன்**
(01) வைகறையில் பிறந்தவன்

1013. **கங்கலியான்**
(01) பருந்து போன்ற கம்பீரமும் வலிமையும் கொண்டவன்

1014. **கங்கபுரன்**
(01) கங்கவரம் என்னும் ஊரில் பிறந்தவன்

1015. **கங்காள்**
(01) மெல்லிய உடலுடைய பெண்

1016. **கங்காளன்**
(01) சிவன்

1017. **கங்காளி**
(01) மாகாளி
(02) மலைமகள்

1018. **கங்கான்**
(01) மெலிந்த உடலுடையவன்

1019. **கங்குலி**
(01) இரவில் பிறந்தவன்
(02) பரணி (தாழி) நாண்மீனில் பிறந்தவன்

1020. **கங்குனி**
(01) கரிய நிறத்தவன்

1021. **கங்கை**
(01) ஆற்றங்கரையோர ஊரில் பிறந்த பெண்

1022. **கங்கை கொண்ட சோழன்**
(01) முதலாம் இராசேந்திர சோழன்

1023. **கங்கை கொண்டான்**
(01) முதலாம் இராசேந்திர சோழன்

1024. **கங்கைமகன்**
(01) முருகன்
(02) வீடுமன் (பீஷ்மன்)

1025. **கங்கை மைந்தன்**
(01) முருகன்

1026. **கங்கையம்மன்**
(01) சிற்றூர்ப் பெண் தெய்வம்

1027. **கங்கையான்**
(01) சிவன் (கங்கையாற்றை முடியிற் கொண்டதாகக் கருதப்படும் இறைவன்)

1028. **கங்கைவேணியன்**
(01) சடையில் கங்கையைக் கொண்டவன்

1029. **கச்சன்**
(01) துணிவு மிகுந்தவன்

1030. **கச்சிப்பெருமாள்**
(01) காஞ்சிபுரம் ஊரிலமைந்த பெருமாள்

1031. **கச்சைக் கொடியோன்**
(01) கன்னன் (கர்ணன்) தன் கொடியில் யானையின் கீழ் வயிற்றிற் கட்டும் கயிற்றைக் கொண்டவன்

1032. **கசகன்**
(01) கரிய நிறத்தவன்
(02) வெள்ளரிப் பிஞ்சு போன்ற மென்மையும் இளமையும் கொண்டவன்

1033. **கசடறன்**
(01) குற்றமற்றவன்
(02) உயர்குணத்தவன்
(03) பார்க்க: **கசடறு**
(04) முன்னொட்டுப் பெயர்கள்

1034. **கசப்பி**
(01) மயிலின் தலைக் கொண்டை போன்ற அழகும் வடிவும் கொண்டவள்

1035. **கசன்**
(01) தாமரை போன்ற அழகும் பொலிவும் நிறமும் வடிவும் கொண்டவன்
(02) இரும்பு போன்று உறுதியுடையவன்

1036. **கசலை**
(01) கெண்டைமீன் போன்று சிறியதாயும் அழகாயும் விளங்குபவள்

1037. **கசவன்**
(01) நீலமலை மாவட்டத்தில் வாழும் ஒரு பழங்குடி வகையைச் சார்ந்தவன்

1038. **கசளன்**
(01) இளமையானவன்
(02) மென்மையானவன்
(03) கருமையானவன்

1039. **கசிவன்**
(01) இரக்க குணம் கொண்டவன்
(02) மெல்லிய உள்ளமுடையவன்

1040. **கசைஞன்**
(01) சித்திர வேலைப்பாட்டில் திறமையானவன்

1041. **கஞ்சகன்**
(01) கருமை நிறக் கண்ணன்

1042. **கஞ்சநன்**
(01) காமன்
(02) காதற்கடவுள்
(03) கருமை நிறத்தவன்

1043. **கஞ்சன்**
(01) தாமரையில் பிறந்த நான்முகன்

1044. **கஞ்சாரி**
(01) கருமை நிறக் கண்ணன்

1045. **கஞ்சாறன்**
(01) மானக் கஞ்சாற நாயனார் (63 நாயன்மார்களுள் ஒருவர்)

1046. **கஞ்சிக் குடிலோன்**
(01) காஞ்சிபுரம் நகரில் பிறந்தோன்

1047. **கஞ்சு**
(01) கம்சன்

1048. **கஞ்சுகன்**
(01) சிறப்பான ஆடையணிபவன்
(02) யாவரையும் காத்து நிற்பவன்

1049. **கஞ்சுளியன்**
(01) அங்காளம்மையை வணங்குபவன்
(02) தோள் முதல் பாதம் வரையிலான நீண்ட ஆடையணிபவன்

1050. **கஞலன்**
(01) சிறப்புடன் வாழ்பவன்
(02) சிறப்பான அடையாளத்துடன் வாழ்பவன்

1051. **கட்கிலி**
(01) கண்ணுக்குப் புலப்படாதவன்
(02) இறைவன்

1052. **கட்டங்கன்**
(01) மழுப்படை கொண்ட இறைவன் சிவன்

1053. **கட்டணங்கன்**
(01) உடற்கூற்றுக்குரிய இலக்கணங்கள் பொருந்திய உடலுடைய அழகன்
(02) மிக்க வலிமை கொண்டவன்

1054. **கட்டணியாள்**
(01) மிக அழகான பெண்

1055. **கட்டழகன்**
(01) கட்டான உடலைக் கொண்டவன்
(02) எடுப்பான தோற்றமுடையவன்

1056. **கட்டழகி**
(01) கட்டான உடலைக் கொண்டவள்
(02) எடுப்பான தோற்றமுடையவள்

1057. **கட்டளைச் செல்வன்**
(01) முதன்மையானவன்
(02) சிறப்பானவன்
(03) தலைவன்
(04) ஆளுமை கொண்டவன்
(05) பார்க்க: **கட்டளை**
(06) முன்னொட்டுப் பெயர்கள்

1058. **கட்டாண்மையான்**
(01) பெருவீரன்
(02) பேராண்மையுடையவன்

1059. **கட்டாணியான்**
(01) திறமைசாலி
(02) வலியவன்
(03) அழகுடையவன்
(04) கட்டான உடலுடையவன்
(05) இனிமையானவன்

1060. **கட்டி**
(01) பொன் போன்றவன்
(02) பொலிவான அழகுடையவன்
(03) திறமையானவன்
(04) மனவுறுதியுடையவன்
(05) கடைக்கழகக் காலக் குறுநில மன்னன் ஒருவனின் பெயர்
(06) கட்டான உடலை உடையவன்
(07) இனிமையானவன்

1061. **கட்டிக்காரன்**
(01) வல்லாளன்
(02) திறமைசாலி

1062. **கட்டிப் பொன்னி**
(01) பொன் போன்றவன்
(02) பொலிவான அழகுடையவன்
(03) திறமையானவன்
(04) மனவுறுதியுடையவன்
(05) கடைக்கழகக் காலக் குறுநில மன்னன் ஒருவனின் பெயர்
(06) கட்டான உடலை உடையவன்
(07) இனிமையானவன்

1063. **கட்டிமையான்**
(01) மிகுந்த கட்டுப்பாடும் வலிமையும் உடையவன்

1064. **கட்டிளம் பரிதி**
(01) இளமை நிறைந்த கதிரவன்
(02) பார்க்க: **கட்டிளம்**
(03) முன்னொட்டுப் பெயர்கள்

1065. **கட்டழகன்**
(01) நிறைவான, உறுதியான வடிவம் கொண்டவன்
(02) அழகன்
(03) உடலுடையவன்
(04) இளையவன்

1066. **கட்டிளவல்**
(01) நிறைவான, உறுதியான வடிவம் கொண்டவன்
(02) அழகன்
(03) உடலுடையவன்
(04) இளையவன்

1067. **கட்டுடலன்**
(01) நிறைவான, உறுதியான வடிவம் கொண்டவன்
(02) அழகன்
(03) உடலுடையவன்
(04) இளையவன்

1068. **கட்டுமுடியான்**
(01) அடர்த்தியான முடியுடையவன்

1069. **கட்டுமுடியாள்**
(01) அடர்த்தியான முடியுடையவள்

1070. **கட்டுவன்**
(01) உறுதியும் வலிமையும் உடையவன்

1071. **கட்டெழிலன்**
(01) நிறைவான, உறுதியான வடிவம் கொண்டவன்
(02) அழகன்
(03) உடலுடையவன்
(04) இளையவன்

1072. **கடகநாதன்**
(01) படைத்தலைவன்

1073. **கடகரி**
(01) ஆண்யானை போன்றவன்

1074. **கடகன்**
(01) படைவீரன்
(02) கடக ஓரையில் பிறந்தவன்
(03) ஆடி மாதம் பிறந்தவன்
(04) தன்னைத்தானே ஆளுபவன்
(05) வல்லவன்
(06) சிறந்தவன்
(07) தேர்ந்தவன்
(08) திறமையானவன்

1075. **கடகு**
(01) காப்பவன்

1076. **கடசன்**
(01) வளையணிந்தவன்

1077. **கடத்தி**
(01) புள்ளியில்லா மான் போன்ற பெண்

1078. **கடந்தவன்**
(01) கடவுள்

1079. **கடப்பாட்டாளன்**
(01) கடமையறிந்து ஒன்றைச் செய்பவன்
(02) கொடையாளி

1080. **கடப்பன்**
(01) யாவரினும் மேம்பட்டு நின்று வெற்றி பெறுபவன்

1081. **கடம்பன்**
(01) கடம்பு மரக்காட்டுடைத் தலைவன்
(02) அம்பு விடுவதில் சிறந்தவன்
(03) குடிப் பெயர்
(04) கடம்ப மரத்தைப் போன்ற வலிமையுடையவன்
(05) கடம்பு மரத்தை காவல் மரமாகக் கொண்டவன்
(06) குறும்பர் இனத்தவன்
(07) கடம்பு என்னும் தோலிசைக் கருவியை இசைப்பவன்
(08) கடம்ப மாலையணிந்த முருகன்

1082. **கடம்பன்மாறன்**
(01) கடம்பனின் மகன் மாறன்

1083. **கடம்பின் பெருவாயில் நன்னன்**
(01) அழகுடையவன்
(02) மேன்மையானவன்
(03) நன்னலம் கொண்டவன்
(04) குறுநில மன்னன்

1084. **கடமலை**
(01) யானை போன்ற கம்பீரமும், வலிமையும் வாய்ந்தவன்

1085. **கடமா**
(01) காட்டுப்பசு போன்ற வலிமையுடையவன்
(02) மதம் கொண்ட யானை போன்ற வலிமை கொண்டவன்

1086. **கடமான்**
(01) ஒரு மான் வகை

1087. **கடமுனி**
(01) அகத்தியர்

1088. **கடயல்**
(01) கடற்கரையோர நகரில் (நெய்தல் நிலம்)/ஊரில் பிறந்த பெண்

1089. **கடல் துயின்றோன்**
(01) திருமால்

1090. **கடல் நிற வண்ணன்**
(01) திருமால்
(02) ஐயனார்

1091. **கடல் மகள்**
(01) கடற்கரையோர (நெய்தல் நிலம்) நகரில்/ ஊரில் பிறந்தவள்
(02) பார்க்க: **கடல்**
(03) முன்னொட்டுப் பெயர்கள்

1092. **கடல் மல்லை**
(01) மாமல்லபுரம் ஊரில் பிறந்தவன்

1093. **கடல் முரசோன்**
(01) கடலை முரசாகக் கொண்ட காமன்

1094. **கடல் வண்ணன்**
(01) திருமால்
(02) ஐயனார்

1095. **கடலகன்**
(01) பரந்து விரிந்த நிலத்திற் பிறந்தவன்

1096. **கடலம்மாள்**
(01) கடல் தாய்

1097. **கடலம்மை**
(01) கடல் தாய்

1098. **கடலரிமா**
(01) கடலில் வாழும் விலங்கான கடற்சிங்கம் (ளநய டழைெ) போன்றவன்

1099. **கடலல்லி**
(01) ளநய டடைடல எனப்படும் கடல் உயிரி போன்றவள்

1100. **கடலன்**
(01) குறுநில மன்னன்
(02) கடல் போன்றவன்
(03) கடற்கரையோர (நெய்தல் நிலம்) நகரில்/ஊரில் பிறந்தவன்
(04) கடல் போன்று பரந்து விரிந்த உள்ளம் கொண்டவன்
(05) குன்று விண்மீன் (சதய நட்சத்திரம்) நாளில் பிறந்தவன்
(06) கடற்வணிகன்
(07) கடற்பயணம் செய்பவன்

1101. **கடலாளி**
(01) கடலை ஆளும் மைந்தன்
(02) மீனவன்
(03) கடலிலேயே வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவிடுபவன்

1102. **கடலிறைவன்**
(01) வாரணன்

1103. **கடலோடி**
(01) மீகாமன்
(02) கலம் செலுத்துவோன்
(03) கடலில் செல்பவன்
(04) கடல் வணிகன்
(05) பரதவர் (மீனவன்)

1104. **கடவல்**
(01) கடம்ப மரக் காட்டில் வாழ்பவன்
(02) கடம்ப மரத்தைக் கொண்டாடுபவன்

1105. **கடவன்**
(01) உரிமை கொண்டவன்
(02) கடமைப்பட்டவன்
(03) தலைவன்

1106. **கடவார்**
(01) உரிமை கொண்டவன்
(02) கடமைப்பட்டவன்
(03) தலைவன்

1107. **கடவிழி**
(01) பெரிய விழிகளைக் கொண்ட கலைமான் போன்ற அழகுடையவள்

1108. **கடவுள்**
(01) மனம், மெய், மொழி யாவுங்கடந்து விளங்கும் பரம்பொருள்
(02) வானவன்
(03) முனிவன்
(04) குரவன் (குரு)
(05) நன்மை புரிபவன்
(06) தெய்வத் தன்மை கொண்டவன்
(07) இயக்குபவன்
(08) செலுத்துபவன்

1109. **கடவுள் பொறையாட்டி**
(01) கடவுள் மேல் அதீத அன்பு கொண்ட, தெய்வீக அருள் பெற்ற, அருள்வாக்கு கூறும் பெண்

1110. **கடவுள் மண்டிலன்**
(01) கதிரவக் கடவுள்

1111. **கடவுள் மணி**
(01) தெய்வீகத் தன்மை கொண்ட மணி

1112. **கடவுள் மாமுனி**
(01) திருவாதவூரடிகள் புராணம் நூலின் ஆசிரியர்

1113. **கடவுளாறு**
(01) கடவுள் தன்மை கொண்டதாகக் கருதப்படும் கங்கை ஆறு

1114. **கடவுள் நீலி**
(01) காளி

1115. **கடவுளன்**
(01) கடவுள் தன்மை கொண்டவன்
(02) கடவுள் போன்று விளங்குபவன்

1116. **கடவுளாளன்**
(01) கடவுள் தன்மை கொண்டவன்
(02) கடவுள் போன்று விளங்குபவன்

1117. **கடற்கன்னி**
(01) திருமகள்

1118. **கடற்கோ**
(01) வாரணன் (கடவுள்)

1119. **கடற்கோடி**
(01) கடல் வணிகன்

1120. **கடற்சேர்ப்பன்**
(01) நெய்தல் நிலத் தலைவன்

1121. **கடற்பாய்ச்சி**
(01) கடலில் கப்பல் செலுத்துவோன்

1122. **கடற்புலி**
(01) கடல் வாழ் உயிரினமான சுறா மீன் போன்றவன்

1123. **கடன்**
(01) கடமையுணர்வுள்ளவன்
(02) பணிகளை விரைந்து செய்பவன்
(03) நீதியாளன்
(04) கும்பவோரையில் பிறந்தவன்

1124. **கடனன்**
(01) முயன்று முன்னேறுபவன்

1125. **கடாக் கண்ணன்**
(01) பெரிய கண்களைக் கொண்டவன்

1126. **கடாகன்**
(01) பறவை போன்று கட்டற்றவன்

1127. **கடாரம் கொண்டான்**
(01) முதலாம் இராசேந்திர சோழனின் வெற்றிப் பெயர்

1128. **கடிகாவன்**
(01) பெருங்காவலனாய் விளங்குபவன்

1129. **கடிகன்**
(01) மங்கலப் பாடகன்
(02) மங்கல நேரம் குறிப்பவன்
(03) நிமித்திகன்
(04) தமிழ்ப் பற்றாளன்

1130. **கடிகை**
(01) மங்கலப் பாடகன்
(02) மங்கல நேரம் குறிப்பவன்
(03) நிமித்திகன்
(04) தமிழ்ப் பற்றாளன்

1131. **கடிகையான்**
(01) மங்கலப் பாடகன்
(02) மங்கல நேரம் குறிப்பவன்
(03) நிமித்திகன்
(04) தமிழ்ப் பற்றாளன்

1132. **கடிகை மாராயன்**
(01) தலைமை இசைக்காரன்
(02) கண்காணிப்பாளன்
(03) கல்விச்சாலைத் தலைவன்

1133. **கடிகை முத்து**
(01) தமிழார்வம் கொண்டவருள் முத்தாக விளங்குபவன்
(02) பார்க்க: **கடிகை**
(03) முன்னொட்டுப் பெயர்கள்

1134. **கடித்தகன்**
(01) கேடயம் போன்று காவலாக விளங்குபவன்

1135. **கடிந்தமன்**
(01) குயவன்

1136. **கடிந்தான்**

(01) முனிவன்

(02) காமம், வெகுளி, மயக்கம் மூன்றையும் ஒழித்தவன்

1137. **கடிய நெடுவேட்டுவன்**

(01) பெருந்தலைச் சாத்தனாரால் பாடப்பட்ட ஒரு வேடர் தலைவன்

(02) கோடைமலையை ஆண்ட கொடையாளனாகிய சிற்றரசன்

1138. **கடியவன்**

(01) எப்பக்கமும் சாராதவன்

(02) நடுநிலை வகிப்பவன்

1139. **கடியன்**

(01) புதுமையானவன்

(02) நறுமணமானவன்

(03) கூர்ந்த அறிவுடையவன்

(04) காவலாக விளங்குபவன்

(05) பெருமை கொள்ளத்தக்கவன்

(06) பெரியவன்

1140. **கடிவன்**

(01) யானை போன்ற வலிமையுடையவன்

1141. **கடிறன்**

(01) யானை போன்ற வலிமையுடையவன்

1142. **கடிவாலுவன்**

(01) அமைப்போன்

1143. **கடுக்கன்**

(01) வேகமானவன்

(02) வேலையை விரைந்து முடிப்பவன்

(03) முதிர்ச்சியானவன்

1144. **கடுக்கைக் கண்ணியன்**

(01) சிவன்

1145. **கடுகன்**

(01) ஆண்

(02) ஆண்களுக்கு இடப்பெறும் இயற்பெயர்

1146. **கடுங்கோன்**

(01) தலைக் கழகத்தின் இறுதியிலிருந்த ஒரு பாண்டிய மன்னன்

(02) வீரம் செறிந்த மன்னன்

1147. **கடுங்கோ**

(01) வளமையான அரசன்

(02) தலைக் கழகத்தின் இறுதியிலிருந்த ஒரு பாண்டிய மன்னன்

(03) வீரம் செறிந்த மன்னன்

1148. **கடுந்தோள் காவீரன்**

(01) புலவர்

1149. **கடுந்தோள் வீரன்**

(01) வலிய தோள்களையுடைய வீரன்

1150. **கடுநெறியோன்**
(01) சான்றோன்
(02) கடும் விதிகளுக்குட்பட்டு வாழும் ஒருவன்
(03) சான்றோரால் மட்டுமே வாழ முடிந்த வாழ்க்கையை வாழ்பவன்

1151. **கடுப்பன்**
(01) உறுதியானவன்
(02) வன்திறம் கொண்டவன்
(03) விரைவானவன்
(04) மிக்க வலிமை கொண்டவன்
(05) செருக்குடையவன்
(06) அச்சமறியாதவன்

1152. **கடுப்பரசன்**
(01) உறுதியானவன்
(02) வன்திறம் கொண்டவன்
(03) விரைவானவன்
(04) மிக்க வலிமை கொண்டவன்
(05) செருக்குடையவன்
(06) அச்சமறியாதவன்

1153. **கடும்பன்**
(01) சுற்றம் சூழ வாழ்பவன்

1154. **கடுமறவன்**
(01) பீடார்ந்த நெஞ்சுறம் கொண்டவன்

1155. **கடுமன்**
(01) கடுமையானவன்
(02) உறுதியானவன்
(03) வீழ்த்த முடியாதவன்

1156. **கடுமா**
(01) குதிரை போன்று வலிமையானவன் மற்றும் விரைவானவன்
(02) சிங்கம், கரடி, யானை, புலி போன்று வன்மையானவன்

1157. **கடுமான்**
(01) சேரர் குடிப் பெயர்களுள் ஒன்று
(02) ஆரிமா
(03) விரைந்து செல்லும் குதிரையைப் போன்றவன்

1158. **கடுமான் கிள்ளி**
(01) விரைந்து செல்லும் குதிரையை உடைய சோழ மன்னன்

1159. **கடுமுறவாளன்**
(01) நெருங்கிய, ஆழமான, அன்பும் உறவும் கொள்பவன்

1160. **கடுமொட்டு**
(01) இளம் அரும்பு போன்ற பெண்
(02) பார்க்க: **கடும்**
(03) முன்னொட்டுப் பெயர்கள்

1161. **கடுமொழி**
(01) வீரவுரை நிகழ்த்துபவன்

1162. **கடுவன்**
(01) தலைவன்
(02) மாவீரன்
(03) மற்போரில் வல்லவன்
(04) அறிவாளி
(05) செல்வன்
(06) வலிமை மிக்க ஆண்
(07) ஆண்பால் இயற்பெயர்
(08) உறுதியானவன்
(09) பார்க்க: **கடுவன்**
(10) முன்னொட்டுப் பெயர்கள்

1163. **கடுவை**
(01) தலைவன்
(02) துணிவுள்ளவன்
(03) ஆறிவாளி

1164. **கடைக்கண்ணாள்**
(01) யாவரையும் அன்பு கூர்ந்து நோக்குபவள்

1165. **கடைக்கணியாள்**
(01) யாவரையும் அன்பு கூர்ந்து நோக்குபவள்

1166. **கடைக்கூட்டன்**
(01) செயல்வீரன்
(02) சிறந்த மேலாளன்
(03) அனைவரையும் மேலாண்மை செய்பவன்

1167. **கடைச்சி**
(01) நெய்தல் நிலத்தைச் சேர்ந்தவன்
(02) வயலில் வேலை செய்து வாழும் மருத நிலத்தைச் சேர்ந்தவன்

1168. **கடைச்செல்வன்**
(01) ஒரு வீட்டில் கடைசியாகப் பிறந்த ஆண்
(02) பார்க்க: **கடை**
(03) முன்னொட்டுப் பெயர்கள்

1169. **கடைச்செல்வி**
(01) ஒரு வீட்டில் கடைசியாகப் பிறந்த பெண்
(02) பார்க்க: **கடை**
(03) முன்னொட்டுப் பெயர்கள்

1170. **கடைசன்**
(01) நெய்தல் நிலத்தைச் சேர்ந்தவன்
(02) வயலில் வேலை செய்து வாழும் மருத நிலத்தைச் சேர்ந்தவன்

1171. **கடைஞ்சன்**
(01) நெய்தல் நிலத்தைச் சேர்ந்தவன்
(02) வயலில் வேலை செய்து வாழும் மருத நிலத்தைச் சேர்ந்தவன்

1172. **கடைஞன்**
(01) நெய்தல் நிலத்தைச் சேர்ந்தவன்
(02) வயலில் வேலை செய்து வாழும் மருத நிலத்தைச் சேர்ந்தவன்

1173. **கடைப்புளியன்**
(01) ஒரு செயலைத் திறம்படச் செய்து முடிக்கும் துணிவு கொண்டவன்

1174. **கடைமீனாள்**
(01) தொழுபறி(ரேவதி) நாண்மீனில் பிறந்தவள்

1175. **கடையன்**
(01) நெய்தல் நிலத்தைச் சேர்ந்தவன்
(02) வயலில் வேலை செய்து வாழும் மருத நிலத்தைச் சேர்ந்தவன்

1176. **கடையிலா அறிவன்**
(01) அருகக் கடவுளில் எண் குணங்களுள் ஒன்றான முடிவிலா அறிவுடையவன்
(02) அருகக் கடவுள்

1177. **கடையெழுஞ்சனி**
(01) மானேறு (உத்தரம்) நாண்மீனில் பிறந்தவன்

1178. **கண்டசித்தன்**
(01) நல்ல பட்டறிவு வாய்ந்த சித்தன்

1179. **கண்டன்**
(01) அழகிய கழுத்தை உடையவன்
(02) வெல்லம் போல் இனிப்பவன்
(03) வாள் வீரன்
(04) சோழர் குலத்தவன்
(05) வலிமை வாய்ந்தவன்
(06) தலைவன்
(07) மாந்தன் (மனிதன்)
(08) சிவனடியார்

1180. **கண்டர் தத்தன்**
(01) மதுரையைச் சார்ந்த கண்டர் என்பார் மகன் தத்தன் என்னும் புலவர்

1181. **கண்டன் வாளரையன்**
(01) ஒரு வள்ளலின் பெயர்

1182. **கண்டிகை**
(01) கழுத்தில் நகையணிந்த பெண்
(02) மாணிக்க வளையல் அணிந்த பெண்
(03) பதக்கம் அணிந்த பெண்

1183. **கண்டியன்**
(01) இசை வல்லுநன்

1184. **கண்டீரக்கோ**
(01) கண்டீரம் என்னும் மலையின் தலைவன்

1185. **கண்டீரக்கோப் பெருநள்ளி**
(01) கடையெழு வள்ளல்களில் ஒருவனான நள்ளி

1186. **கண்டீரவன்**
(01) அரிமா போன்றவன்
(02) புலி போன்றவன்

1187. **கண்டீரன்**
(01) ஆண்பால் இயற்பெயர்

1188. **கண்டுழவன்**
(01) மிகச் செப்பமான நிலத்தில் வேளாண்மை செய்பவன்

1189. **கண்டையன்**
(01) வீரக்கழல் அணிந்தவன்

1190. **கண்ணகன்**
(01) ஆண்பால் இயற்பெயர்
(02) கண் போன்றவன்
(03) அகன்ற கண்களையுடையவன்
(04) புலவர்

1191. **கண்ணகி**
(01) பெண்பால் இயற்பெயர்
(02) கண் போன்றவள்
(03) அகன்ற கண்களையுடையவள்
(04) கோவலன் மனைவி

1192. **கண்ணங்கொற்றன்**
(01) கண்ணன் என்பாரின் மகனான கொற்றன் என்னும் புலவர்

1193. **கண்ணப்பன்**
(01) கண் போன்ற உயர்ந்த தலைவன்
(02) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்

1194. **கண்ணத்தன்**
(01) கண் போன்ற உயர்ந்த தலைவன்
(02) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்
(03) அழகிய கண்களையுடைய தலைவன்
(04) சிவன்

1195. **கண்ணம்மாள்**
(01) புலவர்

1196. **கண்ணம்பாளன்**
(01) புலவர்

1197. **கண்ணம்புல்லன்**
(01) கண்ணன் என்பாரின் மகனான புல்லன் என்னும் புலவர்

1198. **கண்ணவன்**
(01) அமைச்சன்
(02) அரசனுக்குக் கண் போல் அமைந்தவன்

1199. **கண்ணவேணி**
(01) கிருட்டிண ஆறு
(02) பெண்ணரசி

1200. **கண்ணழகி**
(01) அழகிய கண்களையுடைய பெண்

1201. **கண்ணறிவன்**
(01) கண்ணால் கண்டதை அறிவால் ஆய்ந்து உணர்பவன்

1202. **கண்ணன்**
(01) எல்லோரினும் முன்னிலை வகிப்பவன்
(02) அருளானவன்
(03) பெருமை நிறைந்தவன்
(04) அறிவானவன்
(05) ஒளி நிறைந்தவன்
(06) வெளிச்சமாக விளங்குபவன்
(07) அழகானவன்
(08) செல்வம் நிறைந்தவன்
(09) கண்போல் போற்றுபவன்
(10) இன்றியமையாதவன்
(11) கருமை நிறத்தவன்
(12) திருமால்
(13) புலவர்

1203. **கண்ணன் எழினி**
(01) வேளர்குல மன்னனான கண்ணன்

1204. **கண்ணன் கூத்தன்**
(01) கார் நாற்பது நூலாசிரியன்
(02) கண்ணனின் மகன் கூத்தன்

1205. **கண்ணன் சேந்தன்**
(01) கடைக் கழகம் மருவிய காலத்துப் புலவர் ஒருவர்

1206. **கண்ணனாகன்**
(01) கண்ணன் என்பாரின் மகன் நாகன் என்னும் புலவர்

1207. **கண்ணாட்டி**
(01) மிகுந்த அன்பு செலுத்தப்படுபவள்

1208. **கண்ணாயிரம்**
(01) கடவுள்
(02) ஆணுக்கிடப்படும் பெயர்

1209. **கண்ணாள்**
(01) அறிவுத் தெய்வமாகிய கலைமகள்
(02) அன்பு செலுத்தப்படும் பெண்

1210. **கண்ணாளன்**
(01) கணவன்
(02) நாயகன்
(03) அன்பு செலுத்தப்படுபவன்
(04) ஓவியன்

1211. **கண்ணி**
(01) அழகிய கண்களைக் கொண்டவள்
(02) மொட்டு போன்றவள்

1212. **கண்ணிகை**
(01) தாமரைப் பொகுட்டு
(02) பூவரும்பு

1213. **கண்ணிமையான்**
(01) கண்ணிமைக்காத கடவுள்

1214. **கண்ணியன்**
(01) சால்புடையவன்
(02) கண்ணியமானவன்

1215. **கண்ணுதலான்**
(01) நெற்றிக்கண் உடைய சிவன்

1216. **கண்ணுதன்மலை**
(01) சிவனின் இருப்பிடமாகிய மலை

1217. **கண்ணுவன்**
(01) நுண்ணிய கலைகளில் வல்லவன்

1218. **கண்ணுள்வினைஞன்**
(01) ஓவியன்

1219. **கண்ணுளன்**
(01) கூத்தன்
(02) ஆடலாளன்

1220. **கண்ணையன்**
(01) உயர்ந்த தலைவன்

1221. **கண்மணி**
(01) கண்ணின் கரு மணி போன்றவள்

1222. **கண்மயன்**
(01) கண்போல் பாதுகாக்கப்படுபவன்
(02) அருளாளன்

1223. **கண்மலர்**
(01) மலர் போன்ற கண்களையுடைய பெண்

1224. **கண்விழி**
(01) கண்ணின் கரு மணி போன்றவள்

1225. **கண்வினைஞன்**
(01) நுட்பமான செயல் திறன் உடையவன்

1226. **கண்வினையாளன்**
(01) நுட்பமான செயல் திறன் உடையவன்

1227. **கணக்கன்**
(01) கணக்கு, அறிவியல், சமயம், கோட்பாடு அனைத்திலும் வல்லவன்
(02) ஆசிரியன்
(03) புலவன்
(04) புதன்கிழமையில் பிறந்தவன்

1228. **கணக்காயன்**
(01) கணக்கு, அறிவியல், சமயம், கோட்பாடு அனைத்திலும் வல்லவன்
(02) குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்
(03) புலவன்
(04) புதன்கிழமையில் பிறந்தவன்

1229. **கணக்காயன் தத்தன்**
(01) குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத் தரும் ஆசிரியராய் விளங்கிய தத்தன் என்னும் கழகக் காலப் புலவர்

1230. **கணகன்**
(01) கணக்கன்
(02) கணியன் (யளவசழடழபநச)

1231. **கணனாதன்**
(01) சிவகணங்களின் தலைவன் பிள்ளையார்

1232. **கணப்பெருமகன்**
(01) ஊரவை மேலாளர்
(02) தலைவன்

1233. **கணபன்**
(01) சிவகணங்களின் தலைவன்

1234. **கணமன்**
(01) சிவகணங்களின் தலைவன்

1235. **கணவாளன்**
(01) ஒற்றுமையாகக் கூடிவாழும் கூட்டத்தின் தலைவன்
(02) கணவன்
(03) நாயகன்
(04) அன்பு செலுத்தப்படுபவன்
(05) ஓவியன்

1236. **கணாதன்**
(01) அறிவார்ந்த கூட்டத்தின் தலைவன்

1237. **கணி**
(01) மருத நிலத்தவன்
(02) கற்றறிந்த வல்லவன்
(03) கணியன்

1238. **கணிகவெற்பன்**
(01) திருத்தணிகையில் வாழும் முருகன்

1239. **கணிகன்**
(01) கணித்துச் சொல்பவன்

1240. **கணிகை**
(01) ஆடல் வல்லாள்

1241. **கணிச்சன்**
(01) கணித்துச் சொல்பவன்

1242. **கணிச்சியோன்**
(01) மழுவேந்திய சிவன்

1243. **கணிசன்**
(01) மதிப்புடையவன்

1244. **கணிதன்**
(01) கணியன்
(02) கணக்கறிவோன்
(03) கணக்கெழுதுபவன்

1245. **கணியன்**
(01) கணித்துச் சொல்பவன்

1246. **கணியன் பூங்குன்றன்**
(01) பூங்குன்றம் என்னும் ஊரினரான கணியனாகிய (சோதிடர்) கடைக் கழகப் புலவர்

1247. **கணியான்**
(01) காலங்கணித்து, தாளத்திற்கேற்ப நாட்டியமாடுபவன்

1248. **கணிவன்**
(01) வானநூல் கணிப்பில் வல்லுநன்

1249. **கணையன்**
(01) அம்பெய்துவதில் வல்ல வில்லாளன்
(02) சேரர் தலைவன்
(03) அம்பெய்வதில் வல்லவனாகவும் சேரர் படைத் தலைவனாகவும் விளங்கிய குறுநிலத் தலைவன்

1250. **கணையாகன்னி**
(01) வாடாமல்லி போன்று புத்துணர்வும் அழகும் கொண்டவள்

1251. **கத்தன்**
(01) உருவாக்குபவன்
(02) கடவுள்

1252. **கத்திகை**
(01) பலவகைப் பூக்களால் தொடுத்த மாலை போன்று அழகும், பொலிவும் கொண்ட பெண்

1253. **கத்தியன்**
(01) உயர் தரமான ஆடைகளை அணிபவன்
(02) போர் வீரன்

1254. **கத்திரியன்**
(01) போர்த் தொழில் புரிபவன்
(02) வீரன்
(03) அரசன்

1255. **கத்திரு**
(01) உருவாக்குபவன்
(02) கடவுள்

1256. **கதக்கண்ணன்**
(01) புலவர்
(02) சினம் மிக்க கண்களையுடையவன்
(03) வீரம் மிக்க கண்களையுடையவன்

1257. **கதப்பிள்ளை**
(01) வீரமுள்ள மகன்
(02) கருவூரைச் சேர்ந்த கருவூர்க் கதப்பிள்ளை என்னும் புலவர்

1258. **கதம்பன்**
(01) திரண்ட முகில் போன்ற கொடையாளி
(02) பல்வேறு நறுமணப் பூக்களைச் சேர்த்துத் தொடுக்கப்பட்ட பூச்சரம் போன்ற நறுமணம் கொண்டவன்

1259. **கதலன்**
(01) வாழை போன்று எல்லா வகையிலும் பிறருக்குப் பயனாய் விளங்குபவன்

1260. **கதலி**
(01) வாழை போன்று எல்லா வகையிலும் பிறருக்குப் பயனாய் விளங்குபவள்

1261. **கதலிகை**
(01) வாழை போன்று எல்லா வகையிலும் பிறருக்குப் பயனாய் விளங்குபவள்

1262. **கதலிகா**
(01) வாழை போன்று எல்லா வகையிலும் பிறருக்குப் பயனாய் விளங்குபவள்

1263. **கதவன்**
(01) நாட்டுக்கும், மக்களுக்கும் காவலாக விளங்குபவன்

1264. **கதழ்வன்**
(01) எச்செயலையும் விரைவாகச் செய்து முடிப்பவன்

1265. **கதழன்**
(01) எச்செயலையும் விரைவாகச் செய்து முடிப்பவன்

1266. **கதன்**
(01) சினம் மிக்கவன்
(02) வீரம் மிக்கவன்

1267. **கதிமன்**
(01) கூர்ந்த அறிவுடையவன்
(02) பெருமை மிகுந்தவன்

1268. **கதியன்**
(01) நேர்மையானவன்
(02) செம்மையானவன்
(03) ஒழுங்கு நிறைந்தவன்

1269. **கதிர்**
(01) ஒளிர்பவன்
(02) கூர்மையானவன்
(03) ஒளிவீசும் ஞாயிறு, திங்கள்

1270. **கதிர்க்குடி**
(01) அரசர் குலங்களுள் ஒன்றான கதிரவ (சூரிய) வம்சத்தினன்

1271. **கதிரவக்குடி**
(01) அரசர் குலங்களுள் ஒன்றான கதிரவ (சூரிய) வம்சத்தினன்

1272. **கதிர்காமன்**
(01) முருகன் கோவில் கொண்ட சிற்றூரைச் சேர்ந்தவன்
(02) கதிர்காமம் என்ற ஊரில் எழுந்தருளும் முருகக் கடவுள்
(03) கதிர்காமம் என்ற ஊரில் பிறந்தவன்

1273. **கதிர்மகன்**
(01) ஞாயிற்றின் மகன்
(02) எமன்
(03) காரி (சனி)
(04) சுக்கிரீவன்
(05) கன்னன் (கர்ணன்)

1274. **கதிர்மணி**
(01) உயர்வு மிகு முத்து

1275. **கதிர்மன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) பொலிவானவன்
(03) கூர்மையான அறிவுடையவன்

1276. **கதிர்முகம்**
(01) பிறைத் திங்கள் போன்ற பொலிவான முகங்கொண்டவன்

1277. **கதிர்முகன்**
(01) பிறைத் திங்கள் போன்ற பொலிவான முகங்கொண்டவன்

1278. **கதிர்முத்து**
(01) உயர்வு மிகு முத்து

1279. **கதிர்வேல்**
(01) ஒளி பொருந்திய வேல் போன்று பொலிவான வீரமும் அழகும் உடையவன்

1280. **கதிரன்**
(01) அம்பெய்தும் வில்லாளன்
(02) வீரன்
(03) அழகன்
(04) மானேறு (உத்தரம்) நாண்மீனில் பிறந்தவன்

1281. **கதிரவன்**
(01) ஞாயிறு

1282. **கதிரோன்**
(01) ஞாயிறு

1283. **கதுமன்**
(01) கூர்ந்த அறிவுடையவன்
(02) பெருமை மிகுந்தவன்

1284. **கதைஞன்**
(01) சிறந்த உரையாளன்
(02) பேச்சாளன்
(03) செய்திகளை சுவைபடச் சொல்வதில் வல்லவன்

1285. **கந்தப்பிள்ளை**
(01) முருகன்

1286. **கந்தம்மாள்**
(01) அழகிய பெண் குழந்தை

1287. **கந்தம்மை**
(01) அழகிய பெண் குழந்தை

1288. **கந்தர்ப்பன்**
(01) காமன்

1289. **கந்தரத்தன்**
(01) கழகப் புலவர்

1290. **கந்தரன்**
(01) முகில் போன்று விளங்குபவன்
(02) அழகு நிறைந்தவன்

1291. **கந்தருப்பன்**
(01) காமன்

1292. **கந்தருவன்**
(01) யாழிசை போன்று இனிய குரலோன்
(02) குயிலோசை போன்ற குரலுடையவன்
(03) குதிரை போன்று வலிமையானவன்

1293. **கந்தலன்**
(01) மூளைத் திறம் கொண்டவன்
(02) மென்மையான உள்ளங்கொண்டவன்
(03) இன்னிசை வேந்தன்
(04) இனிய குரலோன்
(05) கதிர் போல் ஒளி வடிவானவன்

1294. **கந்தவிண்ணன்**
(01) வாணகோவரையர் மருமக்களுள் ஒருவன்

1295. **கந்தவெற்பன்**
(01) முருகன்

1296. **கந்தழி**
(01) பரம்பொருள்

1297. **கந்தளன்**
(01) காவலாய் விளங்குபவன்
(02) பொன் போன்று பொலிபவன்
(03) போர் வீரன்
(04) தளிர் போன்று மென்மையானவன்

1298. **கந்தன்**
(01) நறுமணம் பொருந்திய குழந்தை மஞ்சு போன்று பரந்து விரிந்தவன்
(02) சிவனின் இளைய மகனாகக் கருதப் படும் முருகன்
(03) பாதுகாப்பு அளிப்பவன்
(04) ஐம்பொறிகளை வென்றவன்
(05) அருகன்
(06) நாஞ்சில் நாட்டையாண்ட தலைவன் நாஞ்சில் வள்ளுவன்
(07) முருகன்

1299. **கந்தனத்தன்**
(01) கந்தனின் தந்தையெனப்படும் சிவன்
(02) புலவர்

1300. **கந்தாரன்**
(01) செவிக்கினிமையுடன் உள்ளம் நிறைக்கும் பண்ணிசைப்போன்

1301. **கந்தி**
(01) நறுமணம் தவழும் பெண்
(02) பச்சைக்கல் (நுஅநசயடன) போன்று ஒளிரும் பெண்

1302. **கந்திற்பாவை**
(01) புகார்
(02) காஞ்சி நகரங்களில் கம்பங்களில் சிறப்பு வடிவாயமைந்த பெண் தெய்வம்

1303. **கந்துவன்**
(01) நறுமணம் தவழும் உடலுடையவன்
(02) குதிரைப் பாய்ச்சல் போன்று விரைவாக ஓடுபவன்

1304. **கந்துரு**
(01) யாழினை மீட்டுவதில் வல்லோன்

1305. **கந்துருவன்**
(01) யாழினை மீட்டுவதில் வல்லோன்

1306. **கந்தையன்**
(01) நறுமணம் பொருந்திய குழந்தை மஞ்சு போன்று பரந்து விரிந்தவன்
(02) சிவனின் இளைய மகனாகக் கருதப் படும் முருகன்
(03) பாதுகாப்பு அளிப்பவன்
(04) ஐம்பொறிகளை வென்றவன்
(05) அருகன்

1307. **கபாலி**
(01) சிவன்
(02) உருத்திரன்
(03) வைரவன்
(04) உமையவள்

1308. **கபிலன்**
(01) கடைக் கழகக் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்
(02) புலவன்
(03) கரிய நிறமுடையவன்
(04) திருமால்

1309. **கம்பத்தன்**
(01) இராவணன்
(02) பெரு நிலக்கிழார்
(03) தலைவன்
(04) அரசன்

1310. **கம்பத்திளையோன்**
(01) முருகன்

1311. **கம்ப நாடன்**
(01) புலவர் கம்பர்
(02) வேளாண்மை செய்யும் மருத நிலத்தவன்
(03) காஞ்சிபுரத்துச் சிவன்

1312. **கம்ப நாட்டாழ்வான்**
(01) புலவர் கம்பர்
(02) வேளாண்மை செய்யும் மருத நிலத்தவன்
(03) காஞ்சிபுரத்துச் சிவன்

1313. **கம்பரசன்**
(01) புலவர் கம்பர்
(02) வேளாண்மை செய்யும் மருத நிலத்தவன்
(03) காஞ்சிபுரத்துச் சிவன்

1314. **கம்பளன்**
(01) முதற் தொழிலாகிய பயிர்த் தொழில் செய்பவன்

1315. **கம்பன்**
(01) புலவர் கம்பர்
(02) வேளாண்மை செய்யும் மருத நிலத்தவன்
(03) காஞ்சிபுரத்துச் சிவன்

1316. **கம்மன்**
(01) முதற் தொழிலாகிய பயிர்த் தொழில் செய்பவன்

1317. **கமகன்**
(01) ஆசிரியன்
(02) அறிவு நிறைந்தவன்

1318. **கமடன்**
(01) உணர்வுகளை அடக்கி, கட்டுப்பாடுடன் வாழ்பவன்
(02) ஒழுக்கமானவன்

1319. **கமரி**
(01) மான் போன்ற அழகுடைய பெண்

1320. **கமல்**
(01) நீரில் வளரும் தாமரை போன்றவள்
(02) செந்நிற ஆடை அணிபவள்

1321. **கமலக் கண்ணன்**
(01) திருமால்
(02) தாமரை போன்ற கண்களையுடையவன்

1322. **கமலத் தேவி**
(01) திருமகள்
(02) தாமரை மலரில் வாழ்பவள்

1323. **கமலம்**
(01) நீரில் வளரும் தாமரை போன்றவள்
(02) செந்நிற ஆடை அணிபவள்

1324. **கமலமுனி**
(01) பதினெண் சித்தர்களுள் ஒருவர்

1325. **கமலவூர்தி**
(01) தாமரையை ஊர்தியாகக் கொண்டதாகக் கருதப்படும் அருகக் கடவுள்

1326. **கமலன்**
(01) நான்முகன்

1327. **கமலா**
(01) மான் போன்ற அழகுடையவள்

1328. **கமலாலயன்**
(01) திருவாரூரில் பிறந்தவன்
(02) திருச்சுற்று மதில்களைக் கொண்ட கோவிலில் பிறந்தவன்

1329. **கமலி**
(01) நீரில் வளரும் தாமரை போன்றவள்
(02) செந்நிற ஆடை அணிபவள்

1330. **கமலிகை**
(01) நீரில் வளரும் தாமரை போன்றவள்
(02) செந்நிற ஆடை அணிபவள்

1331. **கமலை**
(01) திருமகள்
(02) தாமரை மலரில் வாழ்பவள்

1332. **கமழ்நன்**
(01) நறுமணம் கமழ்பவன்

1333. **கமன்**
(01) தெளிந்த, தூய நீர் போன்று பயனாபவன்
(02) வெண்மையான உள்ளம் கொண்டவன்
(03) முகில் போன்று பரந்து விரிந்தவன்
(04) நறுமணம் கொணடவன்
(05) அனைவருக்கும் உயிராக விளங்குபவன்
(06) எல்லோருடனும் கலந்து வாழ்பவன்
(07) நிறைந்த உள்ளம் கொண்டவன்
(08) வேளாண் தொழில் செய்பவன்

1334. **கமனி**
(01) காற்று மண்டலத்தில் செல்லும் ஆற்றல் உடையவன்

1335. **கமுனை**
(01) சாறு நிறைந்த முத்துக்களையுடைய மாதுளை போன்று இனிமையானவன்

1336. **கமையான்**
(01) பொறுமையென்னும் அழகு நிறைந்தவன்
(02) கரும்பு போன்ற இனிமையுடையவன்

1337. **கயமா**
(01) யானை போன்றவன்

1338. **கயமாமுகன்**
(01) மிகப் பெரியவன்
(02) பெருமையானவன்
(03) மென்மையானவன்
(04) இளமையானவன்
(05) யானை போன்று வலிமையானவன்

1339. **கயமலர்**
(01) பெரிய மலர்

1340. **கயமன்**
(01) யானை போன்று வலிமையான தோள்களை உடையவன்
(02) யானை போன்று கரிய நிறத்தவன்
(03) புலவர்
(04) பெருமைமிக்க பெரியவன்

1341. **கயமுகன்**
(01) பிள்ளையார் (யானை முகம் கொண்டதாகக் காட்டப்படுபவன்)

1342. **கயமுனி**
(01) யானைக் கன்று போன்று குறும்பும் சுறுசுறுப்பும் விளையாட்டுக் குணமும் கொண்டவன்

1343. **கயல்**
(01) கெண்டை மீன் போன்ற அழகுடையவள்

1344. **கயல்விழி**
(01) மீன் போன்ற அழகிய வடிவான கண்களையுடையவள்

1345. **கயவாகு**
(01) யானை போன்ற வலிமை கொண்டவன்

1346. **கயன்**
(01) மிகப் பெரியவன்
(02) பெருமையானவன்
(03) மென்மையானவன்
(04) இளமையானவன்

1347. **கயிலாயம்**
(01) சிவன் உறைவதாகக் கருதப்படும் மலை முகடு

1348. **கயிலாயன்**
(01) மலை முகட்டில் வாழ்வதாகக் கருதப்படும் இறைவன் சிவன்

1349. **கயிலை**
(01) மலை முகட்டில் வாழ்வதாகக் கருதப்படும் இறைவன் சிவன்

1350. **கயிலைச் சித்தன்**
(01) ஒரு சித்தர்
(02) இதளிய முறைகளை இயற்றியவர்

1351. **கயிலையாளி**
(01) மலை முகட்டில் வாழ்வதாகக் கருதப்படும் இறைவன் சிவன்

1352. **கயினி**
(01) கைம்மீன் (ஹஸ்தம்) நாண்மீனில் பிறந்தவன்

1353. **கரங்கன்**
(01) கரும்பு போல் இனிப்பவன்

1354. **கரணன்**
(01) கணக்கன்

1355. **கரணிக்கன்**
(01) கணக்கன்

1356. **கரந்தை**
(01) குரவன் (குரு)

1357. **கரந்தைசூடி**
(01) சிவன் (கரந்தை மலர் சூடியவன்)

1358. **கரன்**
(01) பிள்ளையார் (தும்பிக்கையான்)
(02) நிலையுள்ளவன்
(03) இராமனால் கொல்லப்பட்ட ஓர் இயக்கக்குடிப் பெருமகன்

1359. **கராளன்**
(01) சிவகணங்களின் தலைவருள் ஒருவன்

1360. **கரிகாத்தாள்**
(01) அங்காளம்மை
(02) வறுமை நேராமல் மழை பெய்யச் செய்து மக்களைக் காக்கும் மாரியம்மன்

1361. **கரிகால்**
(01) சோழ அரசன் கரிகாலன்
(02) களிறு அடக்கும் வலிமை வாய்ந்தவன்

1362. **கரிகால் சோழன்**
(01) சோழ அரசன் கரிகாலன்

1363. **கரிகால் பெருவளத்தான்**
(01) சோழ அரசன் கரிகாலன்
(02) களிறு அடக்கும் வலிமை வாய்ந்தவன்

1364. **கரிகால் வளவன்**
(01) கரிகாற்சோழன்

1365. **கரிகாலன்**
(01) கரிகாற்சோழன்

1366. **கரிகை**
(01) செந்நிறமுள்ள கத்தூரிமான் போன்ற அழகுடைய பெண்

1367. **கரிசன்**
(01) யானைக் கன்று போன்று குறும்பும் சுறுசுறுப்பும் விளையாட்டுக் குணமும் கொண்டவன்

1368. **கரிஞ்சான்**
(01) அன்றில் பறவை போன்று இணையை விட்டு பிரிந்து வாழா இயல்புடையவன்

1369. **கரிணி**
(01) பெண் யானை போன்று பொறுப்பும், துணிவும், வலிமையும் கொண்ட பெண்

1370. **கரிமணி**
(01) கண்மணி
(02) நீலக்கல்

1371. **கரிமா**
(01) ஆண் யானை போன்று வலிமை கொண்டவன்

1372. **கரிமுகன்**
(01) ஆனை முகக்கடவுள்
(02) பிள்ளையார்

1373. **கரியமணி**
(01) கண்மணி
(02) நீலக்கல்

1374. **கரியமால்**
(01) திருமால்

1375. **கரியமான்**
(01) கறுப்பு மான்

1376. **கரியவன்**
(01) திருமால்
(02) கரிய நிறத்தவன்

1377. **கரியன்**
(01) திருமால்
(02) கரிய நிறத்தவன்

1378. **கரிவாகனன்**
(01) ஐயனார் (யானையில் வலம் வரும் இறைவன்)

1379. **கருக்கன்**
(01) கார்முகில் போன்று அருள் மழை பொழிபவன்
(02) ஆணின் இயற்பெயர்
(03) இளம் பிஞ்சானவன்
(04) அறிவுக் கூர்மையுள்ளவன்
(05) நேர்மையாளன்
(06) புதுமையானவன்
(07) தூய்மையானவன்
(08) அழகானவன்

1380. **கருக்கான்**
(01) பெரியவன்
(02) வலிமை வாய்ந்தவன்
(03) தலைவன்
(04) கரிய நிறமுடையவன்

1381. **கருகுமணி**
(01) மகளிர் கழுத்தில் அணியும் அழகிய கருப்பு மணி வகை

1382. **கருங்கடல்வண்ணன்**
(01) திருமால்
(02) ஐயனார்

1383. **கருங்குயில்**
(01) கரும்பச்சை நிறமுள்ள ஆண் குயில்

1384. **கருங்குழலாதன்**
(01) கருமையான முடியுடைய தலைவன்
(02) புலவர்

1385. **கருஞ்செண்பகம்**
(01) கருமை வகை செண்பகப் பூ போன்றவள்

1386. **கருஞ்செந்தாமரை**
(01) கருஞ்சிவப்புத் தாமரைப் பூ போன்றவள்

1387. **கருஞ்செம்பருத்தி**
(01) செம்பருத்தி

1388. **கருத்தன்**
(01) செயல் செய்பவன்
(02) தலைவன்
(03) கடவுள்

1389. **கருத்தாளி**
(01) அறிவாளி
(02) மதிநுட்பமுடையவன்
(03) கருத்துள்ளவன்
(04) உரிமையானவன்
(05) கொள்கைப் பிடிப்புள்ளவன்
(06) நடுநிலை சார்ந்த அறிவுக் கூர்மையுடையவன்

1390. **கருந்தளிர்**
(01) இளந்தளிர் போன்று மென்மையானவள்

1391. **கருந்தேன்**
(01) உயர்ந்த, சிறந்த கொம்புத் தேன் போன்று இனிமையானவள்

1392. **கருநந்தடக்கன்**
(01) ஆய்மரபு அரசன்

1393. **கருப்பி**
(01) காளி

1394. **கருப்புவில்லி**
(01) கரும்பு வில்லை உடையவனாகக் கருதப்படும் காமன்

1395. **கரும்பன்**
(01) கரும்பு வில்லை உடையவனாகக் கருதப்படும் காமன்

1396. **கரும்பிள்ளை**
(01) கருநிறமுடைய மகன்

1397. **கரும்புவில்லி**
(01) கரும்பு வில்லை உடையவனாகக் கருதப்படும் காமன்

1398. **கருமணி**
(01) கண்மணி
(02) நீலக்கல்

1399. **கருமன்**
(01) கரிய நிறத்தவன்
(02) அழகு நிறைந்தவன்
(03) உயரமானவன்
(04) பெருமை வாய்ந்தவன்
(05) பொன்னெனப் பொலிபவன்
(06) மேன்மையானவன்
(07) ஒளி பொருந்தியவன்

1400. **கருமா**
(01) யானை போன்று வலிமை கொண்டவன்

1401. **கருமாணிக்கம்**
(01) திருமால்

1402. **கருமாரி**
(01) தீமையை அழிக்கும் கருமாரியம்மன்

1403. **கருமுகில்**
(01) நீருண்ட கார்மேகம் போன்று அருள் மழை பொழிபவன்

1404. **கருவலி**
(01) மிகுந்த வலிமையுடையவன்

1405. **கருவறிந்தோன்**
(01) எல்லாவற்றின் மூலத்தையும் அறிந்த இறைவன் சிவன்

1406. **கருவாய்ச்சி**
(01) கரிய நிறமுகமுடையவள்
(02) கரிய நிறத்தினள்

1407. **கருவாளி**
(01) அறிவாளி
(02) கூர்ந்த மதியினன்
(03) கடும் உழைப்பாளி

1408. **கருவிழி**
(01) கண்மணி
(02) கருமையான கண்களுடைய அழகிய பெண்

1409. **கருவின்மலர்**
(01) மயிலிறகு போன்ற மென்மையான பெண்

1410. **கருவூரன்**
(01) கருவூர்த்தேவர்

1411. **கரைசைமணி**
(01) பட்டை தீட்டிய பளிங்குமணி போன்ற பொலிவானவன்

1412. **கரையன்**
(01) சிண்டு நடனம் ஆடும் பழங்குடியினன்

1413. **கல்லகன்**
(01) பொன் போல் பொலிபவன்

1414. **கல்லன்**
(01) மஞ்சள் நிறத்தவன்
(02) கற்சிலைகளைச் செதுக்கும் தச்சன்

1415. **கல்லாடன்**
(01) கல்லாடமென்னும் ஊரைச் சேர்ந்த கடைக்கழகப் புலவருள் ஒருவரின் பெயர்

1416. **கல்லி**
(01) பருவத்துக்கும் மேற்பட்ட நுண்ணறிவு கொண்ட குழந்தை

1417. **கல்விமான்**
(01) படிப்பாளி

1418. **கலங்கன்**
(01) கலிங்கைக் காப்பதாகக் கருதப்படும் சிறு தெய்வம்
(02) ஆண்டாள் பெயர்

1419. **கலசமுனி**
(01) குடத்தினின்று பிறந்தவராகக் கருதப்படும் அகத்திய முனிவன்

1420. **கலந்தை**
(01) கல்வியால் சேர்ந்த பெருமை கொண்டவன்

1421. **கலபன்**
(01) மயிற்றோகை போன்ற அழகும் மென்மையான உள்ளமும் கொண்டவன்

1422. **கலமன்**
(01) யாழிசைக்கும் பாணன்

1423. **கலயன்**
(01) இடையர் குலத்தைச் சேர்ந்தவன்
(02) குங்கிலியக்கலய நாயனார்

1424. **கலவன்**
(01) மயிற்றோகை போன்று அழகியவன்
(02) நெய்தல் நிலமகன்
(03) படைவீரன்

1425. **கலவாணியன்**
(01) குயவன்

1426. **கலவினான்**
(01) நண்பன்
(02) உறவினர்

1427. **கலன்**
(01) தொழுபறி நாண்மீனில் பிறந்தவன் (இரேவதி)

1428. **கலாதன்**
(01) பொற்கொல்லன்

1429. **கலாவன்**
(01) மயிற்றோகை போன்று அழகியவன்
(02) நெய்தல் நிலமகன்
(03) படைவீரன்

1430. **கலாவி**
(01) மயிற்றோகை போன்று அழகியவன்
(02) நெய்தல் நிலமகன்
(03) படைவீரன்

1431. **கலி**
(01) காரிக் கடவுள்
(02) காரிக் கோள் (சனி)
(03) புதுமையானவன்
(04) போர் வீரன்
(05) ஆண்மை நிறைந்தவன்

1432. **கலிக்கம்பன்**
(01) வீரன்
(02) அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவரான கலிக்கம்ப நாயனார்

1433. **கலிகன்றி**
(01) திருமங்கையாழ்வார்

1434. **கலிகி**
(01) பேரழகுடைய பெண்
(02) பூவரும்பு

1435. **கலிகை**
(01) மொட்டு போன்றவள்

1436. **கலிங்கத்தரையன்**
(01) பாண்டிய மன்னன் சிரிவல்லபன் ஆட்சியிலிருந்த திணைக்களத்து நாயகன்

1437. **கலிங்கன்**
(01) கலிங்க நாட்டைச் சேர்ந்தவன்
(02) கலிங்க நாட்டரசன்

1438. **கலித்தி**
(01) இரட்டைக் குழந்தைகளுள் ஒன்று பெண்ணும், மற்றொன்று ஆணுமாயிருப்பின் பெண் குழந்தையின் பெயர்

1439. **கலிநீதியான்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான கலிய நாயனார்

1440. **கலிப்பா**
(01) நால்வகைப் பாக்களுள் ஒன்றான கலிப்பா போன்றவள்

1441. **கலிமத்தி**
(01) மருத மரம்
(02) மருத நிலத்தில் பிறந்தவன்

1442. **கலிமதி**
(01) மருத மரம்
(02) மருத நிலத்தில் பிறந்தவன்

1443. **கலிமருது**
(01) மருத மரம்
(02) மருத நிலத்தில் பிறந்தவன்

1444. **கலிமா**
(01) மொட்டு

1445. **கலிமி**
(01) மருத மரம்
(02) மருத நிலத்தில் பிறந்தவன்

1446. **கலியங்கன்**
(01) போர் வீரன்

1447. **கலியன்**
(01) படைவீரன்
(02) திருமங்கையாழ்வார்
(03) ஒரு ஆண், ஒரு பெண் எனப் பிறந்த இரட்டைக்குழந்தைகளுள் ஆண்
(04) காரி (சனி)

1448. **கலியாணவழகன்**
(01) சிவன்

1449. **கலியாணன்**
(01) நற்பண்பு கொண்டவன்
(02) நற்செங்கையுள்ளவன்
(03) கடல் வணிகன் (புதுமையான பொருட்களை விற்பவன்)

1450. **கலியாணி**
(01) உயர் குணங்களை உடையவள்
(02) மலைமகள்
(03) அலைமகள்

1451. **கலியாணவஞ்சி**
(01) வீர வஞ்சி மரம்

1452. **கலியிராகன்**
(01) பழங்கால தமிழ்ப்பெயர்

1453. **கலி வெண்பா**
(01) கலிப்பா இனம்

1454. **கலினன்**
(01) வன்னி மரத்தை உடையவன்
(02) வன்னி மர நிலத்தில் வாழ்பவன்

1455. **கலுவடம்**
(01) மொட்டு போன்றவள்

1456. **கலுழன்**
(01) கருடன்

1457. **கலை**
(01) மகரவோரை
(02) மகரவோரையில் பிறந்தவன்
(03) ஆண் மான் போன்று வலிமை நிறைந்தவன்
(04) அழகானவன்
(05) பொலிவானவன்
(06) கவர்ச்சியானவன்
(07) கவின் கலைகளில் (இயல், இசை, நாடகம்) சிறந்து விளங்குபவன்
(08) ஒளி மிகுந்தவன்
(09) பிறைத் திங்கள்
(10) கல்வியாளன்
(11) நீதி நூல்களைக் கற்று அதன்படி ஒழுகுபவன்
(12) மொழி வல்லுநன்
(13) கலைஞன்
(14) உமையவள்

1458. **கலைக்கோட்டு முனி**
(01) இராமாயணத்தில் இடம் பெற்றுள்ள ஒரு முனிவர்

1459. **கலைக்கணாளன்**
(01) அமைச்சன்
(02) அறிவு மிகுந்தவன்
(03) நீதி வழுவாதவன்

1460. **கலைச் சுவைஞன்**
(01) கலைகளில் ஆர்வம் கொண்டவன்
(02) கலை வல்லுநன்
(03) கலைஞன்

1461. **கலைஞன்**
(01) கல்விமான்
(02) கலை வல்லான்

1462. **கலையன்**
(01) கல்விமான்
(02) கலை வல்லான்

1463. **கலைஞானம்**
(01) பல்வகைத் துறைகளிலும் கலைகளிலும் அறிவுடையவன்

1464. **கலைஞானி**
(01) பல்வகைத் துறைகளிலும் கலைகளிலும் அறிவுடையவன்

1465. **கலைநாதன்**
(01) பல்வகைத் துறைகளிலும் கலைகளிலும் அறிவுடையவன்

1466. **கலைப்பாகி**
(01) கொற்றவை
(02) கலைமகள்
(03) கலைமடந்தை

1467. **கலைமருது**
(01) கருப்பு மருதமரம் நிறைந்த நிலத்தில் பிறந்தவன்

1468. **கலைமாமணி**
(01) கலை வல்லுநன்
(02) கலைகளின், கலைஞர்களின் தலைவன்

1469. **கலைமான்**
(01) ஆண் மான்
(02) ஒரு வகை மான்
(03) கலைவாணி

1470. **கலையறிவாளன்**
(01) பல்வகைத் துறைகளிலும் கலைகளிலும் அறிவுடையவன்

1471. **கலையறிவாளி**
(01) பல்வகைத் துறைகளிலும் கலைகளிலும் அறிவுடையவன்

1472. **கலையார்வலன்**
(01) பல்வகைத் துறைகளிலும் கலைகளிலும் அறிவுடையவன்

1473. **கலைவல்லான்**
(01) பல்வகைத் துறைகளிலும் கலைகளிலும் அறிவுடையவன்

1474. **கலைவாணன்**
(01) பல்வகைத் துறைகளிலும் கலைகளிலும் அறிவுடையவன்

1475. **கலையறிபுலவன்**
(01) முருகன்

1476. **கலையினன்**
(01) திங்கள்

1477. **கலையுருவினன்**
(01) கலைகளே உருவாகவுடையவன்
(02) சிவன்

1478. **கலையூர்தியாள்**
(01) கொற்றவை
(02) ஆண்மானை ஊர்தியாகக் கொண்டவள்

1479. **கலையோன்**
(01) நிலவன்

1480. **களங்கன்**
(01) நிலவன்

1481. **கவ்வை**
(01) ஆயிலியம் நாண்மீனில் பிறந்தவள்

1482. **கவசன்**
(01) பாதுகாப்பளிப்பவன்

1483. **கவந்தன்**
(01) இராமனால் சொல்லப்பட்ட ஓர் அரக்கன்
(02) காட்டில் வாழ்ந்தவன்

1484. **கவயன்**
(01) குரங்கினமாகக் கருதப்பட்ட ஓர் இனத்தின் தலைவன்

1485. **கவரன்**
(01) ஓர் அரச முனிவர்

1486. **கவராமொழி**
(01) மயக்கில்லாத, ஏமாற்றமில்லாத வாய் மொழியுடையவன்

1487. **கவரிமா**
(01) கவரி மான் போன்றவன்

1488. **கவலிகை**
(01) பஞ்சு போன்ற மெல்லிய உள்ளம் கொண்டவள்

1489. **கவளமான்**
(01) யானை போன்ற வலிமையுடையவன்

1490. **கவனன்**
(01) கருத்தானவன்
(02) வேகமாகச் செயல்படுபவன்
(03) நுட்பமாய் ஆய்ந்தறிபவன்

1491. **கவிகை**
(01) ஈக (தியாக) உளப்பாங்குடையவன்
(02) கொடுத்துக் கவிந்த கைகளை உடையவன்

1492. **கவிகையான்**
(01) ஈக (தியாக) உளப்பாங்குடையவன்
(02) கொடுத்துக் கவிந்த கைகளை உடையவன்

1493. **கவிப்பன்**
(01) ஆ (பசு) மறையும் அளவுக்கு பொருள் (செல்வம்) கொண்ட வணிகப் பிரிவினைச் சேர்ந்தவன்

1494. **கவிரன்**
(01) தெய்வீகம் பொருந்தியவன்

1495. **கவிரி**
(01) தேர் போன்று கம்பீரமும், அழகும் உடையவன்

1496. **கவின்**
(01) அழகானவன்

1497. **கவின்கலை**
(01) அழகு ததும்பும் கலைகளில் வல்லவன்

1498. **கவினல்**
(01) அழகுள்ளவன்
(02) பண்புடையவன்

1499. **கவுணி**
(01) கவுணிய குலத்தான்

1500. **கவுணியன்**
(01) கவுணிய குலத்தான்

1501. **கவுணியர்கோன்**
(01) கவுணிய குலத்தான்

1502. **கவுமாரி**
(01) மலைமகள்

1503. **கவுரன்**
(01) வெண்மையான தூய உள்ளத்தவன்
(02) மஞ்சள் நிறமாகப் பொலிபவன்

1504. **கவேரகன்னி**
(01) கவேர முனிவரின் மகளாகக் காட்டப் படும் காவேரியாறு

1505. **கவேரன்**
(01) ஓர் அரச முனிவர்

1506. **கவை**
(01) பிறர் நலனில் அன்பு கலந்த ஈடுபாடு காட்டுபவன்
(02) ஒன்பதாம் நாண்மீனில் பிறந்தவன்

1507. **கவைஞன்**
(01) பிறர் நலனில் அன்பு கலந்த ஈடுபாடு காட்டுபவன்
(02) ஒன்பதாம் நாண்மீனில் பிறந்தவன்

1508. **கவைமகன்**
(01) இரட்டைப் பிள்ளைகளுள் ஒன்று

1509. **கவையன்**
(01) பிறர் நலனில் அன்பு கலந்த ஈடுபாடு காட்டுபவன்
(02) ஒன்பதாம் நாண்மீனில் பிறந்தவன்

1510. **கழகன்**
(01) சிறந்த பேச்சாளன்
(02) விளையாட்டு வீரன்

1511. **கழலன்**
(01) கழல் கொண்ட வீரன்

1512. **கழலி**
(01) சிலம்பணிந்த பெண்

1513. **கழனி**
(01) போரடிக்கும் களமுள்ள வயல் உடையவன்
(02) மருத நிலத்தில் பிறந்தவன்

1514. **கழனியூரன்**
(01) மருத நிலத்தலைவன்

1515. **கழிக்குடி**
(01) கன்னியாக்குமரியில் பிறந்தவன்
(02) கன்னியாக்குமரியின் தொன்மைப் பெயர்

1516. **கழிக்குடியான்**
(01) கன்னியாக்குமரியில் பிறந்தவன்

1517. **கழியவன்**
(01) உப்பளவன்
(02) நெய்தல் நிலத்தவன்

1518. **கழியன்**
(01) உப்பளவன்
(02) நெய்தல் நிலத்தவன்

1519. **கழுகண்டன்**
(01) யாருக்கும் தலை வணங்காத தலையுடையவன்

1520. **கழுவுள்**
(01) காவலாய் விளங்குபவன்
(02) வலியவன்
(03) குறுநிலத் தலைவன்

1521. **கழைநன்**
(01) ஏழாவது நாண்மீனான புனர்பூசத்தில் பிறந்தவன்

1522. **கள்வர் கோமான்**
(01) திருமால்

1523. **கள்ளழகன்**
(01) திருமால்

1524. **களகண்டன்**
(01) குயில் போன்ற இனிய குரலுடையவன்

1525. **களங்கன்**
(01) மறுவுள்ள திங்கள்

1526. **களஞ்சியம்**
(01) தவசம் (தானியம்) சேர்க்குமிடம்
(02) கருவூலம்

1527. **களபன்**
(01) யானைக் கன்று போன்றவன்

1528. **களமன்**
(01) நெல் வயல்கள் சூழ்ந்த மருத நிலத்தவன்
(02) உழவன்
(03) போர் மறவன்

1529. **களரி**
(01) விற்போர், மற்போர், நாடகம் முதலிய கலைகளிற் சிறந்தவன்
(02) மக்களின் சார்பாக அவையில் வீற்றிருப்பவன் (பிரதிநிதி)

1530. **களரியான்**
(01) விற்போர், மற்போர், நாடகம் முதலிய கலைகளிற் சிறந்தவன்
(02) மக்களின் சார்பாக அவையில் வீற்றிருப்பவன் (பிரதிநிதி)

1531. **களவன்**
(01) நறுமணமுள்ளவன்
(02) யானைக் கன்று போன்றவன்
(03) உழவன்
(04) போர் மறவன்
(05) நற்செயல்களுக்குச் சான்றாய் விளங்குபவன்

1532. **களன்**
(01) கரிய நிறத்தவன்
(02) யானை போன்றவன்
(03) முகில் போன்று அன்பு நீர் பொழிபவன்

1533. **களாவன்**
(01) மயிற்றோகை போன்ற மென்மையும் அழகுமுடையவன்

1534. **களிந்தை**
(01) யமுனை ஆறு

1535. **களிப்புறா**
(01) மணிப்புறா

1536. **களியன்**
(01) நெய்தல் நிலத்தவன்

1537. **களிற்றரசன்**
(01) இந்திரனின் ஊர்தியான வெள்ளை யானை (ஐராவதம்)

1538. **களிற்றரசு**
(01) இந்திரனின் ஊர்தியான வெள்ளை யானை (ஐராவதம்)

1539. **களிறன்**
(01) யானை போன்ற வலிமையுடையவன்

1540. **களிறு**
(01) ஆண்யானை போன்று கம்பீரமும் வீரமும் வலிமையும் கொண்டவன்

1541. **களையான்**
(01) பொலிவும் அழகும் மிக்கவன்

1542. **கற்கன்**
(01) கரிய நிறமுடையவன்

1543. **கற்கா நாடன்**
(01) தற்கால கோவை மாவட்டத்தில் அமைந்த பழந்தமிழ் நாடான கற்கா நாட்டைச் சேர்ந்தவன்

1544. **கற்கி**
(01) கோயில் போன்று தூய்மையும், புனிதமும் கொண்டவன்
(02) திருமாலின் பத்தாம் தோற்றரவு (கல்கி அவதாரம்)

1545. **கற்சிற்பன்**
(01) கற்றச்சன்

1546. **கற்பன்**
(01) நீண்ட ஆயுள் உடையவன்
(02) களவியுள்ளவன்
(03) ஒழுக்கமுள்ளவன்

1547. **கற்றச்சன்**
(01) கல் வேலை செய்யும் தச்சன்

1548. **கற்றறிவு**
(01) கற்றதால் பெற்ற அறிவுடையவன்

1549. **கறங்கன்**
(01) கரிய நிறத்தவன்

1550. **கறமன்**
(01) கரிய நிறத்தவன்

1551. **கறன்**
(01) கரிய நிறத்தவன்

1552. **கறியமால்**
(01) துளசி

1553. **கறுப்பண்ணன்**
(01) கரிய நிறமுடையவன்

1554. **கறுப்பன்**
(01) கரிய நிறமுடையவன்

1555. **கறுப்பி**
(01) கரிய நிறமுடையவள்

1556. **கறுவல்**
(01) கரிய நிறமுடையவன்

1557. **கறைக்கண்டன்**
(01) விடமுண்டதால் கண்டம் கருப்பான சிவன்

1558. **கன்னல்**
(01) இனிமையானவன்

1559. **கன்னன்**
(01) கர்ணன்

1560. **கன்னி**
(01) குமரி
(02) இளமையானவள்
(03) புதுமையானவள்
(04) அழிவற்றவள்
(05) கொற்றவை
(06) கன்னிவோரையில் பிறந்தவள்
(07) புரட்டாசி மாதத்தில் பிறந்தவள்
(08) கைம்மீன் (13வது நாண்மீன்)

1561. **கன்னிக்குமரி**
(01) கன்னியாக்குமரித் தெய்வம்

1562. **கன்னிகை**
(01) கொற்றவை
(02) கன்னிப்பெண்
(03) பூவின் மொட்டு போன்றவள்

1563. **கன்னித்தமிழ்**
(01) அழிவில்லாத தமிழ்மொழி

1564. **கன்னிநாடன்**
(01) பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன்

1565. **கன்னிமணி**
(01) ஆடு, மான் முதலியவற்றின் மறி (குட்டி)

1566. **கன்னிமா**
(01) மீனவர்களின் பெண் தெய்வம்

1567. **கனகம்**
(01) பொன் போன்று ஒளிர்பவள்
(02) பொலிவு மிக்கவள்

1568. **கனகவல்லி**
(01) கற்பூரவல்லி

1569. **கனகன்**
(01) இரணியன்

1570. **கனகாம்பரம்**
(01) பூ

1571. **கனகு**
(01) பொன் போன்று ஒளிர்பவள்
(02) பொலிவு மிக்கவள்

1572. **கனம்**
(01) விளங்கி ஒளிரும் பொன் போன்றவள்

1573. **கனல்**
(01) நெருப்பு போன்றவள்
(02) யாராலும் நெருங்க முடியாதவள்
(03) தீமையை எரித்தழிப்பவள்

1574. **கனலி**
(01) நெருப்பு போன்றவள்
(02) யாராலும் நெருங்க முடியாதவள்
(03) தீமையை எரித்தழிப்பவள்
(04) ஞாயிறு

1575. **கனலோன்**
(01) கதிரவன்

1576. **கனவான்**
(01) பெருமான்

1577. **கனவியன்**
(01) பற்று மிக்கவன்

1578. **கனி**
(01) இனிமையானவள்
(02) இளகிய உள்ளம் கொண்டவள்
(03) கனிவானவள்

# கா

1579. **கா**
(01) காவலாக இருப்பவன்
(02) யாருக்கும் தீமை நேராமல் தடுப்பவன்
(03) பூந்தோட்டம் போன்ற அழகும் நறுமணமுமாகத் திகழ்பவன்
(04) விரும்பியதைத் தரும் கற்பக மரம் போன்ற கொடையுள்ளம் கொண்டவன்
(05) ஆல் போல் பரந்து விரியும் உள்ளம் கொண்டவன்
(06) துலாக் கோல் போன்று நீதி தவறாதவன்

1580. **கா**
(01) காவலாக இருப்பவள்
(02) யாருக்கும் தீமை நேராமல் தடுப்பவள்
(03) பூந்தோட்டம் போன்ற அழகும் நறுமணமுமாகத் திகழ்பவள்
(04) விரும்பியதைத் தரும் கற்பக மரம் போன்ற கொடையுள்ளம் கொண்டவள்
(05) ஆல் போல் பரந்து விரியும் உள்ளம் கொண்டவள்
(06) துலாக் கோல் போன்று நீதி தவறாதவள்
(07) துலாம் ராசியில் பிறந்தவள்
(08) கல்விக்குத் தெய்வமான கலைமகள்

1581. **காக்கன்**
(01) கரிய நிறத்தவன்
(02) காப்பவன்
(03) தாய் மாமன்
(04) மதிக்கத் தக்கவன்

1582. **காக்கைபாடினி**
(01) காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்னும் பழங்காலத்துத் தமிழ்ப் புலவர்

1583. **காகந்தி**
(01) காவிரிப் பூம்பட்டினம் நகரில் பிறந்தவன்

1584. **காகவாறு**
(01) காவிரியாறு

1585. **காகல்**
(01) கரிய நிறத்தவன்

1586. **காகவூர்தியான்**
(01) காக்கையை ஊர்தியாகக் கொண்ட சனி (காரி)க் கடவுள்

1587. **காகளன்**
(01) இன்னிசை போன்று இனியவன்

1588. **காகன்**
(01) நான்மணிக் கடிகை இயற்றிய புலவர் காகனார்

1589. **காகோடியன்**
(01) கழைக் கூத்தன்

1590. **காகை நாடன்**
(01) முல்லை நிலத் தலைவன்
(02) குறிஞ்சி நிலத் தலைவன்

1591. **காங்கயன்**

(01) காங்கயம் ஊரில் பிறந்தவன்

1592. **காங்கெயன்**

(01) பொன் போன்றவன்
(02) கங்க நாட்டில் பிறந்தவன்

1593. **காங்கேயன்**

(01) கொங்கு நாட்டைச் சேர்ந்தவன்
(02) முருகன்
(03) வீட்டுமன் (பீஷ்மன்)

1594. **காசன்**

(01) பொன் போன்று பொலிவானவன்
(02) பளிங்கு போன்று தூய்மையானவன்
(03) வானம் போன்று பரந்து விரிந்த உள்ளம் கொண்டவன்
(04) கருமை நிறத்தவன்

1595. **காசி**

(01) துறவிகள் வாழும் ஊரான காசியில் பிறந்தவன்
(02) சிவ நகரங்கள் ஏழனுள் ஒன்று

1596. **காசினி**

(01) பைஞ்சோலைகள் நிறைந்த பூவுலகில் வாழும் பெண்

1597. **காஞ்சனம்**

(01) தாமரைக் கொத்து போன்ற அழகி
(02) மருதோன்றி போன்று மணந்தருபவள்
(03) செஞ்சந்தனம் போன்ற நறுமணம் கொண்டவள்
(04) செண்பக மலர் போன்ற அழகும் மணமும் கொண்டவள்
(05) மஞ்சள் நிறத்தவள்
(06) பொன் போல் பொலிபவள்

1598. **காஞ்சனமாலை**

(01) கன்னன் மனைவி
(02) மலையத்துவச பாண்டியன் மனைவி
(03) பாண்டியன் மகள்

1599. **காஞ்சனா**

(01) தாமரைக் கொத்து போன்ற அழகி
(02) மருதோன்றி போன்று மணந்தருபவள்
(03) செஞ்சந்தனம் போன்ற நறுமணம் கொண்டவள்
(04) செண்பக மலர் போன்ற அழகும் மணமும் கொண்டவள்
(05) மஞ்சள் நிறத்தவள்
(06) பொன் போல் பொலிபவள்

1600. **காஞ்சனாள்**

(01) தாமரைக் கொத்து போன்ற அழகி
(02) மருதோன்றி போன்று மணந்தருபவள்
(03) செஞ்சந்தனம் போன்ற நறுமணம் கொண்டவள்
(04) செண்பக மலர் போன்ற அழகும் மணமும் கொண்டவள்
(05) மஞ்சள் நிறத்தவள்
(06) பொன் போல் பொலிபவள்

1601. **காஞ்சனி**
(01) தாமரைக் கொத்து போன்ற அழகி
(02) மருதோன்றி போன்று மணந்தருபவள்
(03) செஞ்சந்தனம் போன்ற நறுமணம் கொண்டவள்
(04) செண்பக மலர் போன்ற அழகும் மணமும் கொண்டவள்
(05) மஞ்சள் நிறத்தவள்
(06) பொன் போல் பொலிபவள்

1602. **காஞ்சி**
(01) காஞ்சிப் பூமாலையணிந்த வீரன்
(02) நொய்யலாற்றின் கரையில் பிறந்தவன்
(03) காஞ்சி மாநகரில் பிறந்தவன்
(04) பெருமை நிறைந்தவன்
(05) அறிவாளி

1603. **காஞ்சிக்கொற்றன்**
(01) காஞ்சியின் தலைவன்

1604. **காஞ்சிப்புலவன்**
(01) காஞ்சி நகரைச் சேர்ந்த புலவர் மாங்குடி மருதனார்

1605. **காஞ்சினி**
(01) தாமரைக் கொத்து போன்ற அழகி
(02) மருதோன்றி போன்று மணந்தருபவள்
(03) செஞ்சந்தனம் போன்ற நறுமணம் கொண்டவள்
(04) செண்பக மலர் போன்ற அழகும் மணமும் கொண்டவள்
(05) மஞ்சள் நிறத்தவள்
(06) பொன் போல் பொலிபவள்

1606. **காட்சியவன்**
(01) அறிஞன்
(02) தெளிந்த அறிவுடையவன்

1607. **காட்சியன்**
(01) அறிஞன்
(02) தெளிந்த அறிவுடையவன்

1608. **காடகன்**
(01) கருநிற ஆடை அணிபவன்

1609. **காடமர் செல்வி**
(01) கொற்றவை
(02) காட்டில் வாழ்பவள்

1610. **காடவன்**
(01) கடிலம் ஆற்றங்கரையில் அமைந்த சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர் குடியில் பிறந்தவன்
(02) பல்லவ குலத்தைச் சேர்ந்தவன்
(03) கழற்சிங்கன் என்ற மன்னனின் சிறப்புப் பெயர்

1611. **காடவர்கோன்**
(01) காடவர் குல மன்னன்
(02) காஞ்சியை ஆண்ட அரச மரபினன்

1612. **காடன்**
(01) உடல் மற்றும் உள்ள உறுதியுடையவன்
(02) வெல்வதற்குக் கடினமானவன்
(03) காட்டில் வாழ்பவன்
(04) ஆனைமலையில் வாழும் ஒருகுடியிற் பிறந்தவன்

1613. **காடுகிழவோள்**
(01) கொற்றவை

1614. **காடுகிழாள்**
(01) கொற்றவை

1615. **காடுகெழு செல்வி**
(01) கொற்றவை

1616. **காடுவாழ்நன்**
(01) காட்டில் வாழும் பழங்குடியைச் சேர்ந்தவன்

1617. **காடு வெட்டிய சோழன்**
(01) காஞ்சியை ஆண்ட சோழ மன்னன்

1618. **காடையன்**
(01) கொங்கு வேளாளர் குடியான காடைக் குலத்தில் பிறந்தவன்

1619. **காண்கை**
(01) அறிவு நிறைந்த பெண்

1620. **காண்டன்**
(01) அறிவுக் கூர்மை உடையவன்

1621. **காண்டாவனன்**
(01) இந்திரன்

1622. **காண்டீவன்**
(01) காண்டீவம் என்ற வில்லுக்குரிய அருச்சுனன்

1623. **காணலன்**
(01) சிறந்த தோற்றம் கொண்டவன்
(02) பெரியோரைக் கண்டு பேசி அறிவுச் செல்வம் பெறுபவன்

1624. **காணன்**
(01) அழகு நிறைந்தவன்
(02) பொன் போன்றவன்
(03) நிலம் போன்று பொறுமையானவன்
(04) கொடையாளன்

1625. **காணிகன்**
(01) கணக்கன்

1626. **காணியாளன்**
(01) சொந்த நிலமுடையவன்
(02) உழவின் மேல் ஊக்கமுள்ள குடியைச் சேர்ந்தவன்

1627. **காத்தய்யன்**
(01) ஓர் ஊர்த்தெய்வம்

1628. **காத்தவரையன்**
(01) ஊரில் காணப்படும் சிறு தெய்வங்களுள் ஒன்று
(02) காவல் தெய்வம்
(03) துன்பத்தினின்று மக்களைக் காப்பாற்றிய ஒரு மறத்தலைவன்
(04) மலைமகள் அமைத்த பூங்காவைக் காத்தவன்
(05) காத்தவராயன்

1629. **காத்தாயி**
(01) சிற்றூரில் காணப்படும் சிறு பெண் தெய்வங்களுள் ஒன்று

1630. **காத்தான்**
(01) ஊரில் காணப்படும் சிறு தெய்வங்களுள் ஒன்று
(02) காவல் தெய்வம்

1631. **காத்திரன்**
(01) வலியவன்

1632. **காதம்பம்**
(01) அன்னப்பறவை போன்றவள்
(02) கரும்பு போன்று இனிமையானவள்

1633. **காதலன்**
(01) அன்புள்ளவன்
(02) கணவன்
(03) நண்பன்
(04) மகன்

1634. **காதலான்**
(01) அன்புள்ளவன்
(02) கணவன்
(03) நண்பன்
(04) மகன்

1635. **காதலோன்**
(01) அன்புள்ளவன்
(02) கணவன்
(03) நண்பன்
(04) மகன்

1636. **காதற்பாங்கன்**
(01) தலைவனுக்கு உற்ற நண்பன்

1637. **காதன்மன்**
(01) அன்பு கொண்டவன்
(02) அனைவராலும் விரும்பப்படுபவன்

1638. **காதிதன்**
(01) தன் வலிமையைத் தாமே பல மடங்கு பெருக்க முடிந்தவன்

1639. **காந்தமன்**
(01) ஒளியுடையவன்

1640. **காந்தமான்**
(01) ஒளியுடையவன்

1641. **காந்தருவன்**
(01) இசைஞன்
(02) பாடகன்

1642. **காந்தவன்**
(01) இசைஞன்
(02) பாடகன்

1643. **காந்தள்**
(01) செங்கோடல் கார்த்திகைப் பூ

1644. **காந்தன்**
(01) அழகன்
(02) சிறந்தவன்
(03) கணவன்
(04) கவர்ந்திழுப்பவன்

1645. **காந்தாளன்**
(01) அழகன்
(02) சிறந்தவன்
(03) கணவன்
(04) கவர்ந்திழுப்பவன்

1646. **காந்தி**
(01) ஒளி மிகுந்தவன்
(02) அழகன்
(03) வைடூரியம் போன்று விலை மதிப்பற்றவன்

1647. **காந்தை**
(01) மனைவி
(02) பெண்

1648. **காப்பன்**
(01) காவலாய் இருப்பவன்

1649. **காப்பாளன்**
(01) காவலாய் இருப்பவன்

1650. **காப்பியஞ்சேந்தன்**
(01) புலவர்
(02) காப்பியம் செய்த சேந்தன்
(03) காப்பியம் என்னும் ஊரைச் சேர்ந்த சேந்தன்
(04) காப்பியன் என்பவரின் மகனாகிய சேந்தன்

1651. **காப்பியன்**
(01) உழவன்
(02) புலவர்
(03) காப்பியம் எனப்படும் கதை, செய்தி, வரலாறு, இலக்கணம் போன்றவை இயற்றும் ஆற்றலுடையவன்
(04) காப்பியர் குடியினன்
(05) காப்பியாறு என்னும் ஊரைச் சேர்ந்தவன்

1652. **காப்புமறவன்**
(01) காவல் வீரன்

1653. **காபாலி**
(01) சிவன்

1654. **காம்போதி**
(01) ஒரு பண் வகை

1655. **காமரன்**
(01) அனைவராலும் விரும்பப்படுபவன்
(02) மகிழ்வானவன்
(03) நிறைவானவன்
(04) அழகானவன்
(05) காதற்கடவுள்
(06) புத்த சமயத் தெய்வம்

1656. **காமரி**
(01) அனைவராலும் விரும்பப்படுபவன்
(02) மகிழ்வானவன்
(03) நிறைவானவன்
(04) அழகானவன்
(05) காதற்கடவுள்
(06) புத்த சமயத் தெய்வம்

1657. **காமவல்லி**
(01) கற்பக மரத்தில் படரும் கொடி
(02) பெண்

1658. **காமவேள்**
(01) அனைவராலும் விரும்பப்படுபவன்
(02) மகிழ்வானவன்
(03) நிறைவானவன்
(04) அழகானவன்
(05) காதற்கடவுள்
(06) புத்த சமயத் தெய்வம்

1659. **காமற்கடந்தோன்**
(01) புத்தன்

1660. **காமற்காய்ந்தோன்**
(01) அருகன்
(02) சிவன்

1661. **காமன்**
(01) அனைவராலும் விரும்பப்படுபவன்
(02) மகிழ்வானவன்
(03) நிறைவானவன்
(04) அழகானவன்
(05) காதற்கடவுள்
(06) புத்த சமயத் தெய்வம்

1662. **காமாந்தகன்**
(01) காமத்தை அழிக்கும் கடவுன்
(02) சிவன்

1663. **காமாரி**
(01) சிவன்
(02) காளி

1664. **காமிண்டன்**
(01) காவலன்
(02) அரசன்
(03) தலைவன்
(04) காவல் வல்லான்

1665. **காய்சினவழுதி**
(01) தலைச் சங்கத்தின் தொடக்கத்தில் இருந்த பாண்டியன்

1666. **காயக்கன்**
(01) அளவிறந்த காதல் கொள்ளத்தக்கவன்

1667. **காயக்கி**
(01) மெல்லிய உடல் கொண்ட பெண்

1668. **காயகன்**
(01) இசைஞன்
(02) அளவுக்கதிகமான காதல் கொள்ளத்தக்கவன்
(03) பாடுபவன்
(04) மயக்குபவன்

1669. **காயலான்**
(01) ஒரு முகம்மதிய இனத்தைச் சேர்ந்தவன்
(02) பொருநை நதிக்கரையிலுள்ள காயல் என்றும் கழிமுகத்தில் பிறந்தவன்

1670. **காயன்**
(01) விண்வெளி போன்றவன்
(02) கரிய வானம் போன்றவன்
(03) உறுதி மிகுந்தவன்

1671. **காயா**
(01) கரு நீல நிறமுடைய காயாம்பூ போன்ற பெண்

1672. **காயாம்பூவண்ணன்**
(01) திருமால்

1673. **காயாமலர்**
(01) கரு நீல நிறமுடைய காயாம்பூ போன்ற பெண்

1674. **காயாவரசு**
(01) காய்க்காத அரசமரம் போன்றவன்

1675. **கார்க்கன்**
(01) ஒரு முனிவர்

1676. **கார்க்கி**
(01) நெய்தல் திணையைப் பாடுவதில் வல்லவரான ஒரு புலவர்
(02) ஒரு முனிவர்

1677. **கார்க்குழல்**
(01) கருமையான கூந்தல் கொண்டவள்

1678. **கார்க்குழலாள்**
(01) கருமையான கூந்தல் கொண்டவள்

1679. **கார்க்குழலி**
(01) கருமையான கூந்தல் கொண்டவள்

1680. **கார்கோளன்**
(01) கரிய மலை மேகங்களுக்கு நீர்தரும் கடல் போன்றவன்

1681. **கார்த்திகை**
(01) கார்த்திகை மகளிரால் வளர்க்கப்பட்ட முருகக் கடவுள்

1682. **கார்மலி**
(01) கார் நிறம் படர்ந்த கடல் போன்றவன்

1683. **கார்முகம்**
(01) கார் காலத்தில் முகம் காட்டும் வானவில் போன்றவன்

1684. **கார்முகன்**
(01) கார் காலத்தில் முகம் காட்டும் வானவில் போன்றவன்

1685. **கார்முகில்**
(01) கருக்கொண்ட முகில் போன்றவன்

1686. **கார்முகில்வண்ணன்**
(01) திருமால்

1687. **காரகன்**
(01) செயல்வீரன்
(02) படைப்பவன்
(03) முதலை போன்று வலிமையானவன்

1688. **காரசுரா**
(01) காட்டு மல்லிகை போன்ற பெண்

1689. **காரண்ணம்**
(01) கரிய அன்னப்பறவை போன்ற பெண்

1690. **காரணகருத்தன்**
(01) முதற்கடவுள்

1691. **காரணவன்**
(01) மூலமாக விளங்குபவன்
(02) தீர்வுக்கு வழிவகை கூறுபவன்
(03) தலைவன்

1692. **காரணன்**
(01) மூலமாக விளங்குபவன்
(02) தீர்வுக்கு வழிவகை கூறுபவன்
(03) தலைவன்

1693. **காரணி**
(01) மலைமகள்

1694. **காரணிகன்**
(01) அறங்கூறுவோன்
(02) அறவாளன்

1695. **காரணீகன்**
(01) மூல காரணமானவன்

1696. **காரல்லி**
(01) கருப்பு அல்லி

1697. **காரளன்**
(01) சூரனின் படைத் தலைவர்களில் ஒருவன்

1698. **காரன்**
(01) செயல் வீரன்
(02) உறுதி வாய்ந்தவன்
(03) முயற்சியுடையவன்
(04) பொறுப்பானவன்
(05) உரிமையுள்ளவன்

1699. **காராளன்**
(01) உழுதுண்ணும் உழவன்
(02) கடிய உழைப்பாளன்

1700. **காரி**
(01) கருமை நிறமுடையவன்
(02) கண்ணன்
(03) ஐயனார்
(04) வைரவன்
(05) கடையெழு வள்ளல்களுள் ஒருவனான மலையமான் திருமுடிக்காரி என்னும் குறுநில மன்னன்
(06) கரிய நிறமுடையவன்
(07) திருமால்
(08) அழகானவன்
(09) காயல் பகுதியைச் சேர்ந்தவன்

1701. **காரிக்கண்ணன்**
(01) புலவர்
(02) கரிய நிறக் கண்களையுடையவன்

1702. **காரிகை**
(01) அழகிய பெண்

1703. **காரிமாறன்**
(01) காரியின் மகனாகிய நம்மாழ்வார்

1704. **காரியாதி**
(01) குறுநிலத் தலைவன்

1705. **காரியான்**
(01) கருமை நிறமுடையவன்
(02) கண்ணன்
(03) ஐயனார்
(04) வைரவன்
(05) கடையெழு வள்ளல்களுள் ஒருவனான மலையமான் திருமுடிக்காரி என்னும் குறுநில மன்னன்
(06) கரிய நிறமுடையவன்
(07) திருமால்

1706. **காருகன்**
(01) செயல்வீரன்
(02) படைப்பவன்

1707. **காலகாலன்**
(01) சிவன் (காலனுக்குக் காலன்)

1708. **காலகாலசோழன்**
(01) சுந்தரச் சோழன் மகன்

1709. **காலசித்தன்**
(01) சூரனின் அமைச்சன்

1710. **காலதேவன்**
(01) கூற்றுவன்

1711. **காலமேகன்**
(01) கருத்த மழை மேகம் போன்றவன்

1712. **காலவயிரவன்**
(01) சிவன்

1713. **காலவன்**
(01) நெருப்பு போன்று ஒளிர்பவன்
(02) தீமைகளை அழிப்பவன்
(03) விசுவாமித்திரரின் சீடருள் ஒருவன்
(04) ஒரு முனிவர்

1714. **காலவேகன்**
(01) சிவ கூட்டத்தவரில் ஒருவன்

1715. **காலவைரவன்**
(01) சிவன்

1716. **காலன்**
(01) கூற்றுவன்
(02) சிவன்
(03) காரி

1717. **காலா**
(01) கூற்றுவன்
(02) சிவன்
(03) காரி

1718. **காலாந்தகன்**
(01) சிவன்

1719. **காலிகன்**
(01) கரிய நிறத்தவன்

1720. **காலிகை**
(01) மொட்டு போன்றவள்

1721. **காலேகவண்ணன்**
(01) முத்து போன்ற செந்நிறங்கொண்டவன்

1722. **காலேகன்**
(01) முத்து போன்ற செந்நிறங்கொண்டவன்

1723. **காவட்டன்**
(01) புலவர்

1724. **காவந்தன்**
(01) இராமனால் சொல்லப்பட்ட ஓர் அரக்கன்
(02) காட்டில் வாழ்ந்தவன்

1725. **காவலன்**
(01) பாதுகாப்போன்
(02) அரசன்
(03) கணவன்

1726. **காவற்கடவுள்**
(01) திருமால்

1727. **காவன்**
(01) இராமனால் சொல்லப்பட்ட ஓர் அரக்கன்
(02) காட்டில் வாழ்ந்தவன்

1728. **காவாலி**
(01) சிவன்
(02) இளமையானவன்

1729. **காவியா**
(01) நங்கூரம் போன்று நிலை நிறுத்துபவள்

1730. **காவிரி**
(01) பொன்னி நதி போன்ற பெண்

1731. **காவிரிக்கரை கண்ட சோழன்**
(01) சோழ மன்னன்

1732. **காவியன்**
(01) உழவன்

1733. **காவீரன்**
(01) சோலைகள் நிறைந்த ஊரினைச் சேர்ந்த வீரன்

1734. **காழி**
(01) உறுதியான உள்ளங் கொண்டவன்
(02) ஒளி நிறைந்தவன்
(03) முத்து போன்று செந்நிறம் கொண்டு விளங்குபவன்
(04) பளிங்கு போன்று மிளிர்பவன்
(05) கரிய நிறமுடையவன்

1735. **காழியர்கோன்**
(01) உறுதியான உள்ளங் கொண்டவன்
(02) ஒளி நிறைந்தவன்
(03) முத்து போன்று செந்நிறம் கொண்டு விளங்குபவன்
(04) பளிங்கு போன்று மிளிர்பவன்
(05) கரிய நிறமுடையவன்

1736. **காழியன்**
(01) உறுதியான உள்ளங் கொண்டவன்
(02) ஒளி நிறைந்தவன்
(03) முத்து போன்று செந்நிறம் கொண்டு விளங்குபவன்
(04) பளிங்கு போன்று மிளிர்பவன்
(05) கரிய நிறமுடையவன்
(06) வண்ணார்குடியினன்
(07) வணிகன்

1737. **காளக்கடவுள்**
(01) சிவன்

1738. **காளகண்டன்**
(01) சிவன்
(02) மயில் போன்ற அழகுடையவன்
(03) வேங்கை மரம் போன்ற உறுதி உடையவன்
(04) குயில் போன்ற இனியகுரலுடையவன்

1739. **காளகண்டி**
(01) காளி
(02) குயில் போன்ற குரலுடைய பெண்
(03) மயில் போன்ற அழகுடைய பெண்

1740. **காளகன்**
(01) செந்திறமுடையவன்

1741. **காளத்தி**
(01) கருங்குன்று போன்ற உறுதியுடையவன்
(02) காளத்தி என்றும் ஊரைச் சேர்ந்தவன்

1742. **காளபன்**
(01) போர் வீரன்

1743. **காளவன்**
(01) போர் வீரன்

1744. **காளன்**
(01) கருமை நிறத்தான்
(02) மழை போன்ற கொடையாளன்
(03) வீரபத்ரன்
(04) சிவன் அணிந்துள்ள பாம்பு

1745. **காளி**
(01) கரிய பாலை நிலத் தெய்வன்
(02) மலைமகள்

1746. **காளிகை**
(01) கரிய பாலை நிலத் தெய்வன்
(02) மலைமகள்

1747. **காளிதேவன்**
(01) வீர சிவனிய அடியவர்

1748. **காளியண்ணன்**
(01) திருப்பூந்துறை புராணம் பாடிய புலவர்

1749. **காளை**
(01) கட்டிளமைப் பருவத்தினன்
(02) ஆண்மகன்
(03) பாலை நிலத் தலைவன்
(04) மறவன்

1750. **காற்றிளவல்**
(01) இளங்காற்று போன்றவன்

1751. **காற்றினாள்**
(01) காற்றைக் கடவுளாகக் கொண்ட விளக்கு (சுவாதி) மீனில் பிறந்தவள்

1752. **கான்**
(01) மணம் மிகுந்தவன்
(02) பூ போன்றவன்
(03) இசை போன்று இனியவன்

1753. **கானநாடன்**
(01) முல்லை நிலத் தலைவன்
(02) குறிஞ்சி நிலத் தலைவன்

1754. **கானமயில்**
(01) காட்டு மயில்

1755. **கானமல்லி**
(01) சிறு மல்லிகை
(02) காட்டு மல்லிகை

1756. **கானமவ்வல்**
(01) சிறு மல்லிகை
(02) காட்டு மல்லிகை

1757. **கானமுல்லை**
(01) சிறு மல்லிகை
(02) காட்டு மல்லிகை

1758. **கானவன்**
(01) முல்லை நிலத் தலைவன்
(02) குறிஞ்சி நிலத் தலைவன்

# கி

1759. **கிங்கிரன்**
(01) குதிரை மற்றும் யானை போன்று வலிமையானவன்

1760. **கிங்கிலியன்**
(01) குதிரை மற்றும் யானை போன்று வலிமையானவன்

1761. **கிசன்**
(01) தளிர் போன்று மென்மையானவன்

1762. **கிசலன்**
(01) தளிர் போன்று மென்மையானவன்

1763. **கிசலயன்**
(01) தளிர் போன்று மென்மையானவன்

1764. **கிஞ்சிகா**
(01) வேப்பமரம் போன்று பயனாயிருப்பவள்

1765. **கிஞ்சுகம்**
(01) கிளி போன்று இனிமையானவள்

1766. **கிஞன்**
(01) சிறந்த அறிவுடையவன்

1767. **கிட்டினன்**
(01) உறவினன்
(02) நண்பன்
(03) துணைவன்

1768. **கிண்ணன்**
(01) கரிய நிறமுடையவன்

1769. **கிணைமகன்**
(01) இசைக்கலைஞன்

1770. **கிணையன்**
(01) இசைக்கலைஞன்

1771. **கிணைவன்**
(01) இசைக்கலைஞன்

1772. **கிம்பரன்**
(01) இசைக்கலைஞன்

1773. **கிழத்தி**
(01) உரிமையுடையவன்
(02) தலைவி

1774. **கிழமையான்**
(01) உரிமையுடையவன்

1775. **கிழமையோன்**
(01) உரிமையுள்ளவன்
(02) தமையன்

1776. **கிழான்**
(01) வேளாண்மை செய்யும் உழவன்
(02) உரியவன்

1777. **கிள்ளி**
(01) வன்மை செறிந்தவன்
(02) சோழர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர்

1778. **கிள்ளி வளவன்**
(01) வன்மை செறிந்தவன்
(02) சோழ மன்னன்
(03) உழவர் தலைவன்
(04) வளமானவன்
(05) சோழ நாட்டினன்
(06) சோழர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர்

1779. **கிள்ளை**
(01) கிளி போன்று இனிமையாகப் பேசும் பெண்
(02) குதிரை போன்று எழுச்சி கொண்டவன்
(03) விரைந்து செயல்படுபவன்

1780. **கிள்ளையன்**
(01) கிளி போன்று இனிமையாகப் பேசும் பெண்
(02) குதிரை போன்று எழுச்சி கொண்டவன்
(03) விரைந்து செயல்படுபவன்

1781. **கிளத்தி**
(01) நாமகள்
(02) கல்வி மற்றும் கலைக்கான பெண் தெய்வம்

1782. **கிளரி**
(01) சிறப்பு வாய்ந்தவன்
(02) மேன்மையானவன்
(03) ஒளி மிகுந்தவன்

1783. **கிளிப்பிள்ளை**
(01) இளங்கிளி போன்றவள்

1784. **கிளிமொழி**
(01) கிளி போன்று இனிய மொழி பேசுபவள்

1785. **கிளிமொழியாள்**
(01) கிளி போன்று இனிய மொழி பேசுபவள்

1786. **கிளையன்**
(01) தளிர் போன்று மென்மையானவன்
(02) உறவானவன்
(03) நட்பானவன்

1787. **கிளையான்**
(01) தளிர் போன்று மென்மையானவன்
(02) உறவானவன்
(03) நட்பானவன்

1788. **கிளைஞன்**
(01) உறவினன்
(02) நண்பன்
(03) மருத நிலத்தைச் சேர்ந்தவன்

1789. **கிற்பன்**
(01) வலிமையானவன்
(02) ஒழுக்கமும் கட்டுபாடும் நிறைந்தவன்

1790. **கிறுதன்**
(01) மென்மையானவன்
(02) பழக இனியவன்

1791. **கின்னரன்**
(01) யாழிசையில் வல்லவன்

# கீ

1792. **கீச்சான்**
(01) குழந்தை

1793. **கீசகன்**
(01) விராட மன்னனின் படைத்தலைவன்

1794. **கீசரன்**
(01) சரக்கொன்றை மலர் போன்று அழகுடையவன்

1795. **கீதாரி**
(01) இடையன்
(02) இடையர் தலைவன்

1796. **கீர்வாணி**
(01) கலைமகள்
(02) கிளி போன்ற இனிய குரல் கொண்டவள்

1797. **கீரங்கண்ணன்**
(01) கிடங்கில் (கிடங்கால்) எனப்படும் ஊரைச் சேர்ந்த கீரன் என்பாரது மகனான கண்ணன் என்னும் புலவர்

1798. **கீரஞ்சாத்தன்**
(01) கீரன் என்பாரின் மகனான சாத்தன் என்னும் குறுநில மன்னன்

1799. **கீரந்தை**
(01) இடைச் சங்கப் புலவர் ஒருவர் பெயர்
(02) கீரனின் தந்தை
(03) பழமை வாய்ந்த தலைவன்

1800. **கீரன்**
(01) தொன்மை வாய்ந்தவன்
(02) பால் போன்ற வெள்ளையுள்ளம் கொண்டவன்
(03) புலவர்
(04) சங்கை அறுத்து வளையல் செய்யும் தொழிலைச் செய்த குடியைச் சேர்ந்த புலவர் பெயர்
(05) நீர் போல் பயனளிப்பவன்

1801. **கீரா**
(01) கலைமகள்
(02) கிளி போன்ற இனிய குரல் கொண்டவள்

1802. **கீராள்**
(01) கலைமகள்
(02) கிளி போன்ற இனிய குரல் கொண்டவள்

1803. **கீரிகன்**
(01) வேப்பிலை போன்று பயனளிப்பவன்

1804. **கீலகன்**
(01) தந்திரமானவன் (சாமர்த்தியசாலி)

1805. **கீலாரி**
(01) இடையர் தலைவன்

1806. **கீலாலன்**

(01) தேன் போன்ற இனிமை கொண்டவன்

(02) இனிமை நிறைந்த குடிநீர் போன்று பயனாயிருப்பவன்

1807. **கீழ்மன்**

(01) பணிவு நிறைந்தவன்

# கு

1808. **குகரன்**
(01) வேடரினத்தைச் சேர்ந்தவன்
(02) படகோட்டி வாழ்பவன்

1809. **குகன்**
(01) முருகன்
(02) இராமனது நண்பனாகிய வேடன்
(03) ஆசிரியன்

1810. **குகுலா**
(01) தேனீ போன்றவள்

1811. **குங்கிலியக் கலையன்**
(01) 63 நாயன்மாருள் ஒருவர்

1812. **குங்கிலியன்**
(01) கள்ளரினத்தாருக்கு வழங்கப்படும் பட்டப்பெயர்

1813. **குங்குமப் பாண்டியன்**
(01) மதுரையை ஆண்ட வாருவலய பாண்டியனின் மகன்

1814. **குங்குமம்**
(01) குங்குமம் போல் உயர்வானவள்
(02) தூய்மையானவள்
(03) செந்நிறமானவள்

1815. **குசலன்**
(01) மிகவல்லோன்
(02) அறிஞன்
(03) தந்திரசாலி

1816. **குசேலன்**
(01) கண்ணனின் நண்பன்

1817. **குஞ்சரன்**
(01) கருமை நிறத்தவன்
(02) யானை போன்றவன்

1818. **குஞ்சரி**
(01) பெண்யானை
(02) தெய்வானை

1819. **குட்டுவன்**
(01) சேர மன்னன்
(02) குட்ட நாட்டைச் சேர்ந்த மரபினன்

1820. **குட்டுவன் இரும்பொறை**
(01) சேர மன்னன்

1821. **குட்டுவன் கண்ணன்**
(01) சேரர் குடியைச் சேர்ந்த கண்ணன் என்னும் புலவர்
(02) குட்டுவன் மகன் கண்ணன்

1822. **குட்டுவன் கீரன்**
(01) குட்டுவர் குடியிற் பிறந்த கீரன் என்னும் புலவர்
(02) குட்டுவன் மகன் கீரன்

1823. **குட்டுவன் கோதை**
(01) குட்டுவர் குடியிற் பிறந்த கோதை
(02) குட்டுவன் மகள் கோதை
(03) சேர மன்னன்

1824. **குடக்கோ**
(01) சேரன்
(02) கதிரவன் மறையும் மேற்குத் திசையில் உள்ள குட நாட்டின் அரசன்

1825. **குடக்கோச்சேரல்**
(01) சேர மன்னன்

1826. **குடக்கோன்**
(01) சேரன்
(02) கதிரவன் மறையும் மேற்குத் திசையில் உள்ள நாட்டின் அரசன்

1827. **குடகன்**
(01) சேரன்
(02) மேல் நாட்டான் (மேற்கிலுள்ள நாட்டைச் சேர்ந்தவன்)
(03) குடகு நாட்டைச் சேர்ந்தவன்

1828. **குடபுலவியன்**
(01) பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய குடபுலம் எனப்படும் சேர நாட்டைச் சேர்ந்த புலவன்

1829. **குடமலை**
(01) குடகு மலையில் பிறந்தவன்

1830. **குடமுல்லை**
(01) முல்லை மலர் போன்றவள்

1831. **குடமுனி**
(01) மேற்குப் பொதிய மலையில் இருந்த முனிவர் அகத்தியர்

1832. **குடவன்**
(01) மேற்கிலுள்ள குடநாட்டைச் சேர்ந்தவன்
(02) இடையர் குலத்திற் பிறந்தவன்

1833. **குடவாயிற்கீரத்தன்**
(01) குடவாயில் என்னும் ஊரைச் சேர்ந்த கீரத்தன் என்னும் புலவர்

1834. **குடிதாங்கி**
(01) குடியைத் தாங்குபவன்

1835. **குடிமகன்**
(01) நற்குடிப் பிறந்தவன்

1836. **குடியரசு**
(01) குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசாள்பவன்

1837. **குடிவாணன்**
(01) குடிமகன்
(02) தம் குடிமக்களுடன் இணைந்து வாழ்பவன்

1838. **குடைமல்லிகை**
(01) செண்டு மல்லிகை
(02) கூடல் மல்லிகை

1839. **குடில் தத்தன்**
(01) கழகக் காலப் புலவர்

1840. **குணகன்**
(01) கணித அறிஞன்

1841. **குணகி**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1842. **குணசீலன்**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்
(02) நற்செயல் புரிபவன்

1843. **குணமணி**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1844. **குணவதன்**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1845. **குணவதி**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1846. **குணவந்தன்**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1847. **குணவந்தி**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1848. **குணவான்**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1849. **குணன்**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1850. **குணா**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1851. **குணாலயன்**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1852. **குணாளன்**
(01) நற்குணங்கள் நிறைந்தவன்

1853. **குத்தன்**
(01) காப்பவன்

1854. **குதபன்**
(01) கதிரவன்

1855. **குந்தவை**
(01) இராச ராசனின் தமக்கை
(02) நறுமணமிக்க குண்டு மல்லிகை போன்றவள்

1856. **குந்தன்**
(01) திருமால்
(02) தூய தன்மையுடையவன்

1857. **குந்திரன்**
(01) தென்னை மரம் போல் பயனளிப்பவன்

1858. **குப்பன்**
(01) மீனவன்
(02) சிற்றூரில் வாழ்பவன்
(03) தன் கூட்டத்தாருடன் சேர்ந்து வாழ்பவன்

1859. **குபிலன்**
(01) அரசன்

1860. **குபினன்**
(01) மீனவன்
(02) வலைஞன்

1861. **கும்பன்**
(01) கும்பவோரையில் பிறந்தவன்
(02) கும்ப மாதத்தில் பிறந்தவன்
(03) அழகிய நெற்றியை உடையவன்

1862. **கும்ப மாமுனி**
(01) அகத்திய முனிவன்

1863. **குமணன்**
(01) இனிய பண்பு நிறைந்தவனும் முதிர மலையின் தலைவனும் கடையெழு வள்ளல்களுள் ஒருவனுமான அரசன்

1864. **குமரதண்டம்**
(01) தலைவனாக குமரக் கடவுளை ஏற்றுக் கொண்டவன்

1865. **குமரவேள்**
(01) முருகக் கடவுள்

1866. **குமரன்**
(01) இளமையானவன்
(02) புலவர்
(03) புதல்வன்
(04) முருகன்
(05) வைரவன்

1867. **குமரகுரவன்**
(01) ஆசிரியனாக விளங்கும் முருகக் கடவுள்

1868. **குமரகுரவபரன்**
(01) ஆசிரியனாக விளங்கும் முருகக் கடவுள்

1869. **குமரி**
(01) கன்னிப் பெண்
(02) பருவமடைந்த பெண்
(03) புதல்வி
(04) கொற்றவை
(05) அழிவற்றவள்
(06) குமரி மாவட்டத்தில் பிறந்தவள்
(07) மலைமகள்

1870. **குமரிச்சேர்ப்பன்**
(01) குமரி நிலப்பகுதியை ஆண்ட பாண்டியன்

1871. **குமரித்துறையவன்**
(01) குமரி நிலப்பகுதியை ஆண்ட பாண்டியன்

1872. **குமலி**
(01) துளசி போன்று தூய்மையும், நறுமணமும் பயனுமாய் விளங்குபவள்

1873. **குமளன்**
(01) மென்மையானவன்
(02) இளமையானவன்
(03) இனிமையானவன்
(04) நறுமணமானவன்

1874. **குமிதன்**
(01) தேக்குமரம் போல் பயனும், உறுதியும் உடையவன்

1875. **குமிலன்**
(01) ஆரவாரமானவன்

1876. **குமிலி**
(01) துளசி போன்று தூய்மையும், நறுமணமும் பயனுமாய் விளங்குபவள்

1877. **குமிழகன்**
(01) இமயம், நீலமலை, கேரளா போன்ற இடங்களில் வளர்கிற, உடலுக்கு நன்மையைத் தரும் நிழல் கொண்ட குமிழ் மரம் போன்று அனைவரையும் காத்து வாழ்பவன்

1878. **குமிழன்**
(01) இமயம், நீலமலை, கேரளா போன்ற இடங்களில் வளர்கிற, உடலுக்கு நன்மையைத் தரும் நிழல் கொண்ட குமிழ் மரம் போன்று அனைவரையும் காத்து வாழ்பவன்

1879. **குமுதகன்**
(01) கருப்பூரம் போன்ற நறுமணம் கொண்டவன்
(02) ஆம்பல் மலர் போன்றவன்
(03) தருப்பைப் புல் போன்ற உயர்வுடையவன்
(04) வளர்ச்சியுடையவன்
(05) சிறப்பான தோற்றம் கொண்டவன்

1880. **குமுதன்**
(01) கருப்பூரம் போன்ற நறுமணம் கொண்டவன்
(02) ஆம்பல் மலர் போன்றவன்
(03) தருப்பைப் புல் போன்ற உயர்வுடையவன்
(04) வளர்ச்சியுடையவன்
(05) சிறப்பான தோற்றம் கொண்டவன்

1881. **குமுத நண்பன்**
(01) அல்லிப் பூவின் நண்பனாகக் கருதப்படும் நிலவு

1882. **குமுதவல்லி**
(01) திருமங்கையாழ்வாரின் மனைவி

1883. **குமுதனாதன்**
(01) அல்லிப் பூவின் தலைவனாகக் கருதப்படும் நிலவு

1884. **குமுலி**
(01) துளசி போன்று தூய்மையும், நறுமணமும் பயனுமாய் விளங்குபவள்

1885. **குய்யன்**
(01) குயவர் குலத்தவன்

1886. **குயலன்**
(01) தேர்ந்தவன்
(02) திறமையானவன்

1887. **குயவன்**
(01) மட்பாண்டம் வனைபவன்
(02) மறை பொருளான இறைவன்
(03) தேர் போன்று நெடிதுயர்ந்தவன்

1888. **குயிலன்**
(01) இசைக் கலைஞன்
(02) குயில் போன்ற பாடகன்
(03) திரண்ட மேகம் போன்றவன்
(04) இன்மொழி பேசுபவன்

1889. **குயினன்**
(01) இசைக் கலைஞன்
(02) குயில் போன்ற பாடகன்
(03) திரண்ட மேகம் போன்றவன்
(04) இன்மொழி பேசுபவன்

1890. **குரகன்**
(01) மைனாப் புள் போன்றவன்

1891. **குரடன்**
(01) தோல் தொழில் செய்பவன்

1892. **குரணன்**
(01) விடா முயற்சியுடையவன்

1893. **குரலன்**
(01) இனிய குரல் உடையவன்

1894. **குரவசித்தன்**
(01) சித்தர்களில் சிறந்த அகத்தியன்

1895. **குரவபரன்**
(01) ஆசிரியனாக விளங்கும் முருகக் கடவுள்

1896. **குரவமகன்**
(01) குருவின் மகன்
(02) குருவாக விளங்குபவன்

1897. **குரவமணி**
(01) குருவிற் சிறந்த குருவாய் விளங்குபவன்

1898. **குரவன்**
(01) ஆசிரியன்
(02) அரசன்
(03) அமைச்சன்
(04) தாய்
(05) தந்தை
(06) தமையன்
(07) அயன் (பிரம்மா)
(08) நறுமணமுடையவன்

1899. **குரவனாதன்**
(01) பேராசான்
(02) தம் தந்தைக்கே குருவாக விளங்கிய முருகக் கடவுள்

1900. **குராதன்**
(01) குண தத்துவ அதிபர் எண்மரில் ஒருவர் பெயர்

1901. **குரிசில்**
(01) பெருமையிற் சிறந்தவன்
(02) வள்ளல்
(03) தலைவன்
(04) புரவலன்
(05) அரசன்

1902. **குரு**
(01) ஒளி மிகுந்தவன்
(02) அறிவாசிரியன்
(03) ஆசிரியன்
(04) தந்தை
(05) வியாழக்கிழமை பிறந்தவன்
(06) பூச நாளில் பிறந்தவன்

1903. **குருகன்**
(01) இளங்கன்று
(02) குருத்து போன்று மென்மையானவன்
(03) வெண்மையானவன்
(04) மூல நாளில் பிறந்தவன்

1904. **குருகா**
(01) இளங்கன்று
(02) குருத்து போன்று மென்மையானவன்
(03) வெண்மையானவன்
(04) மூல நாளில் பிறந்தவன்

1905. **குருகு**
(01) இளங்கன்று
(02) குருத்து போன்று மென்மையானவன்
(03) வெண்மையானவன்
(04) மூல நாளில் பிறந்தவன்

1906. **குருகூர் நம்பி**
(01) ஆழ்வார்த் திருநகரியில் பிறந்தவன் (சடகோபன்)

1907. **குருகைக்கோன்**
(01) ஆழ்வார்த் திருநகரியில் பிறந்தவன் (சடகோபன்)

1908. **குருசில்**
(01) பெருமையிற் சிறந்தவன்
(02) வள்ளல்
(03) தலைவன்

1909. **குருந்தகன்**
(01) மயில் போன்ற அழகுடையவன்

1910. **குருமன்**
(01) இளங்கன்று
(02) குருத்து போன்று மென்மையானவன்
(03) வெண்மையானவன்
(04) மூல நாளில் பிறந்தவன்

1911. **குருமான்**
(01) இளங்கன்று
(02) குருத்து போன்று மென்மையானவன்
(03) வெண்மையானவன்
(04) மூல நாளில் பிறந்தவன்

1912. **குருமுனி**
(01) அகத்தியன்

1913. **குருபரன்**
(01) குருவாக விளங்கும் இறைவன்

1914. **குருவரன்**
(01) குருவாக விளங்கும் இறைவன்

1915. **குருவன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) அறிவாசிரியன்
(03) ஆசிரியன்
(04) தந்தை
(05) வியாழக்கிழமை பிறந்தவன்
(06) பூச நாளில் பிறந்தவன்

1916. **குலக்கொடி**
(01) நற்குலத்துப் பெண்

1917. **குலக்கொழுந்து**
(01) குலத்தை விளங்கச் செய்பவன்

1918. **குலகுரவன்**
(01) குலத்திற்கு ஆசிரியனாக விளங்குபவன்

1919. **குலசன்**
(01) நற்குலத்தோன்

1920. **குலதிலகன்**
(01) குலத்திற் சிறந்து விளங்குபவன்

1921. **குலப்பன்**
(01) குயவர் இனத்தில் பிறந்தவன்

1922. **குலமகன்**
(01) நற்குடியில் பிறந்தவன்

1923. **குலமணி**
(01) குலத்திற்கு மணி போல திகழ்ந்து விளங்குபவன்

1924. **குலமுதல்வன்**
(01) குலத்திற்கே முதல்வனாய், தலைவனாய் விளங்குபவன்

1925. **குலவன்**
(01) நற்குடியில் பிறந்தவன்

1926. **குலவிளக்கு**
(01) குலத்தை ஒளிரச் செய்பவன்

1927. **குலாலன்**
(01) குயவர் குலத்தில் பிறந்தவன்

1928. **குலிசன்**
(01) இந்திரன் (வைரத்தாலான ஆயுதம் கொண்டவன்)

1929. **குலிஞ்சன்**
(01) உயர்குலத்தோன்

1930. **குலிஞன்**
(01) உயர்குலத்தோன்

1931. **குலோத்துங்கன்**
(01) குலத்திற் சிறந்தவன்
(02) சோழ மன்னன் பெயர்

1932. **குவலயன்**
(01) வெள்ளாம்பல் போன்றவன்
(02) குவளை போன்றவன்

1933. **குவளன்**
(01) வில்வமரம் போன்றவன்

1934. **குழகன்**
(01) இளையோன்
(02) அழகன்
(03) முருகக் கடவுள்
(04) இணக்கமாக நடந்து கொள்பவன்

1935. **குழமகன்**
(01) இளம் பருவமுள்ள தலைவன்

1936. **குழல் தத்தன்**
(01) கடைக்கழகக் காலப் புலவர் குழல் தத்தனார்
(02) இளமையானவன்
(03) கரிய அழகிய முடியையுடைய தலைவன்
(04) குழல் போன்ற இனிய குரலையுடையவன்

1937. **குழலன்**
(01) சுருள் முடி கொண்டவன்
(02) அழகிய முடியுடையவன்
(03) குழல் போன்ற இனிய குரலுடையவன்

1938. **குழலோன்**
(01) குழல் இசைக் கருவி ஊதுபவன்

1939. **குழவன்**
(01) முருகக் கடவுள்

1940. **குழவி ஞாயிறு**
(01) எழுஞாயிறு

1941. **குழவித் திங்கள்**
(01) இளைய நிலா

1942. **குளக்கோடன்**
(01) ஈழம் தனித் தீவாகுமுன் வாழ்ந்தவனும் திருக்கோணமலையில் கோயில் கட்டியவனுமாகிய தமிழ் மன்னன்

1943. **குளகன்**
(01) இளமையானவன்

1944. **குளங்கோட்டன்**
(01) ஒரு மன்னன்

1945. **குளம்பன்**
(01) குளம்பு என்னும் ஊரைச் சேர்ந்தவன்
(02) குளம்பு என்னும் ஊரைச் சேர்ந்த கழகக் காலப் புலவர்

1946. **குளவன்**
(01) முருகக் கடவுள்

1947. **குளிர்காந்தி**
(01) நிலவை நோக்கி முகம் திருப்பும் மலர்

1948. **குளிர்மன்**
(01) குளிர்ச்சியானவன்
(02) அன்பானவன்

1949. **குளிரன்**
(01) குளிர்ச்சியானவன்
(02) கடகவோரையில் பிறந்தவன்
(03) கடகத் திங்களில் (ஆடி மாதம்) பிறந்தவன்

1950. **குற்றாலம்**
(01) குளிர்ந்த மலையருவி பாயும் குற்றாலம் ஊரில் பிறந்தவன்

1951. **குறட்பா**
(01) குறள் வெண்பா போன்று குறுகப் பேசி நிறைந்த பொருள் தருபவள்

1952. **குறவஞ்சி**
(01) குறப் பெண்
(02) குறத்திப் பாட்டு போன்று இனிமையானவள்

1953. **குறவன்**
(01) குறிஞ்சி நிலப் பெண்
(02) குறவர் குலத்தில் பிறந்தவள்
(03) பாலை நிலத்தில் பிறந்தவன்

1954. **குறவாணன்**
(01) மலையில் வாழ்பவன்

1955. **குறள்**
(01) திருக்குறள் போன்று புகழ் விளங்க வாழ்பவன்
(02) குறைவாகப் பேசி நிறைந்த பொருள் தருபவன்

1956. **குறள்வெண்பா**
(01) குறள் வெண்பா போன்று குறுகப் பேசி நிறைந்த பொருள் தருபவள்

1957. **குறளன்**
(01) வாமனனாக உருவெடுத்ததாகச் சொல்லப்படும் திருமால்

1958. **குறிஞ்சி**
(01) மலையும் மலைசார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி நிலத்தில் பிறந்தவன்
(02) குறிஞ்சி மலர் போன்று அரிதானவன்

1959. **குறிஞ்சிமன்**
(01) முருகன் (குறிஞ்சி நிலக்கடவுள்)

1960. **குறிஞ்சிவேந்தன்**
(01) முருகன் (குறிஞ்சி நிலக்கடவுள்)

1961. **குறியன்**
(01) நாரை கொக்கு போன்று தன்வினையே குறியாகக் கொண்டு செய்து முடிப்பவன்

1962. **குறியெயினி**
(01) குறி கூறும் குறவர் குலப்பெண்
(02) குறமகள் குறியெயினி என்னும் புலவர்

1963. **குறியோன்**
(01) அகத்தியன்

1964. **குறுங்கீரன்**
(01) கடைக்கழகப் புலவர்

1965. **குறுங்குடி மருதன்**
(01) குறுங்குடி என்னும் ஊரைச் சேர்ந்த மருதன் என்னும் புலவர்

1966. **குறுநகை**
(01) புன்சிரிப்பால் அனைவரையும் கவர்பவன்

1967. **குறும்பன்**
(01) குறும்பு நிறைந்தவன்
(02) குறுநில மன்னன்
(03) வேடர் இனத்தவன்
(04) பள்ளருள் ஒரு பிரிவைச் சேர்ந்தவன்
(05) வலிமையானவன்

1968. **குறும்பியன்**
(01) குறுநிலத் தலைவன்
(02) அரண் உடையவன்

1969. **குறும்பொறை**
(01) முல்லை நிலத் தலைவன்
(02) குறிஞ்சி நிலத் தலைவன்

1970. **குறுமகள்**
(01) இளமையான பெண்

1971. **குறுமுனி**
(01) அகத்தியன்

1972. **குறுவழுதி**
(01) பாண்டிய குலப் புலவர்

1973. **குன்றவன்**
(01) குறிஞ்சி நிலத்தவன்
(02) குன்றிருக்கும் ஊரில் பிறந்தவன்

1974. **குன்றவாணன்**
(01) குறிஞ்சி நிலத்தவன்
(02) குன்றிருக்கும் ஊரில் பிறந்தவன்

1975. **குன்றவில்லி**
(01) மேருமலையை வில்லாகக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் சிவன்

1976. **குன்றன்**
(01) குறிஞ்சி நிலத்தவன்
(02) குன்றிருக்கும் ஊரில் பிறந்தவன்

1977. **குன்றியன்**
(01) கழகக் காலப் புலவர்
(02) குன்றிமணி போன்றவன்

1978. **குன்றுவன்**
(01) குறிஞ்சி நிலத்தவன்
(02) குன்றிருக்கும் ஊரில் பிறந்தவன்

1979. **குன்றெறிந்தோன்**
(01) தனது வேலால் குன்றத்தை எறிந்த முருகன்

1980. **கூசலன்**
(01) நாணம் மிகுந்தவன்
(02) கூச்சம் கொண்டவன்

1981. **கூட்டன்**
(01) தோழன்
(02) தன் இனத்தோடு வாழ்பவன்

1982. **கூட்டலன்**
(01) மிகவல்லோன்
(02) அறிஞன்
(03) தந்திரசாலி

1983. **கூட்டாளன்**
(01) நண்பன்
(02) இன்ப துன்பங்களில் உடனிருப்பவன்
(03) இணைந்திருப்பவன்

1984. **கூட்டாளி**
(01) நண்பன்
(02) இன்ப துன்பங்களில் உடனிருப்பவன்
(03) இணைந்திருப்பவன்

1985. **கூடல்**
(01) மதுரை மாநகரில் பிறந்தவன்
(02) பார்க்க: **கூடல்**
(03) முன்னொட்டுப் பெயர்கள்

1986. **கூடலன்**
(01) மதுரை மாநகரில் பிறந்தவன்

1987. **கூடற்கோ**
(01) பாண்டிய நாட்டரசன்

1988. **கூடற்கோமான்**
(01) பாண்டிய நாட்டரசன்

1989. **கூடற்பொருகோன்**
(01) பாண்டிய நாட்டரசன்

1990. **கூத்தன்**
(01) ஆடல் வல்லான்
(02) நடிகன்
(03) ஆதன்
(04) தலைவன்
(05) சிவன்

1991. **கூத்தாண்டவன்**
(01) சிற்றூர்ச் சிறு தெய்வம்

1992. **கூதல்**
(01) குளிர்ச்சியானவள்

1993. **கூதிரன்**
(01) பனிக்காற்று போன்றவன்
(02) துலை (ஐப்பசி), நளி (கார்த்திகை) மாதங்களில் பிறந்தவன்
(03) குளிர்ச்சியானவன்

1994. **கூந்தலழகி**
(01) அழகிய தலைமுடியுடையவள்

1995. **கூர்ப்பன்**
(01) சிறந்தவன்
(02) கூர்ந்த அறிவுடையவன்

1996. **கூர்மிகை**
(01) வீணை போன்று இனிய குரல் கொண்டவள்

1997. **கூரத்தாண்டாள்**
(01) கூரத்தாழ்வார் மனைவி

1998. **கூரத்தாழ்வார்**
(01) ஆழ்வார்களுள் ஒருவர்

1999. **கூரன்**
(01) கூர்ந்த அறிவுடையவன்

2000. **கூரியன்**
(01) கூர்மையானவன்
(02) அறிவன் (புதன்) கிழமை பிறந்தவன்

2001. **கூரியவான்**
(01) கூர்மையானவன்
(02) அறிவன் (புதன்) கிழமை பிறந்தவன்

2002. **கூரைக்கணக்காயன்**
(01) கடைக்கழகம் மருவிய புலவர்

2003. **கூலன்**
(01) கூர்மையானவன்
(02) பசு போன்று மென்மையானவன்
(03) மான் போன்ற அழகுடையவன்

2004. **கூவலன்**
(01) ஆம்பல் போன்றவன்

2005. **கூவளன்**
(01) கருங்குவளை போன்றவன்

2006. **கூவன்**
(01) கூவல் என்னும் ஊரைச் சேர்ந்தவன்
(02) கூவல் எனப்படும் நீர் நிலைக் கரையிலமைந்த ஊரினன்

2007. **கூவன் மைந்தன்**
(01) கூவல் என்னும் ஊரினன்
(02) நீர் நிலைகள் நிறைந்த ஊரில் பிறந்த வலிமையான ஆண்மகன்
(03) கடைக்கழகம் மருவிய புலவர்

2008. **கூவிரன்**
(01) தேர் போன்று உயர்வானவன்

2009. **கூவிளன்**
(01) வில்வ மரம் போன்ற சிறப்புடையவன்

2010. **கூழிக் கொற்றன்**
(01) கூற்றன் என்பவரின் மகனான குமரன் என்னும் புலவர்

2011. **கூற்றங்குமரன்**
(01) கடைக்கழகம் மருவிய புலவர்

2012. **கூற்றன்**
(01) எமன்
(02) நற்செயல் புரிபவன்

2013. **கூற்றுவன்**
(01) எமன்
(02) நற்செயல் புரிபவன்

2014. **கூறன்**
(01) ஆமை போன்றவன்

2015. **கூறலன்**
(01) ஆமை போன்றவன்

2016. **கூனலன்**
(01) நத்தை போன்றவன்
(02) நாரை போன்றவன்

# கெ

2017. **கெக்கலன்**
(01) இனிமையானவன்
(02) வாய் விட்டுச் சிரிப்பவன்

2018. **கெக்கை**
(01) சிவந்த அழகிய கன்னங்கள் கொண்டவள்

2019. **கெங்கை**
(01) கங்கையாறு போன்ற உயர்வும் சிறப்பும் கொண்டவள்

2020. **கெச்சம்**
(01) முல்லை மலர் போன்ற அழகும் மென்மையும் கொண்டவள்
(02) நாணம் மிகுந்தவள்

2021. **கெச்சனா**
(01) முல்லை மலர் போன்ற அழகும் மென்மையும் கொண்டவள்
(02) நாணம் மிகுந்தவள்

2022. **கெச்சி**
(01) முல்லை மலர் போன்ற அழகும் மென்மையும் கொண்டவள்
(02) நாணம் மிகுந்தவள்

2023. **கெச்சிதன்**
(01) பெருமிதம் கொண்டவன்
(02) பெருமிதம் தருபவன்

2024. **கெச்சை**
(01) சலங்கையொலி போன்று கள்ளங்கபடமற்று புன்னகைப்பவள்

2025. **கெட்டிதன்**
(01) உறுதியானவன்
(02) திறமையானவன்
(03) திண்மையானவன்
(04) சிறப்பானவன்

2026. **கெடியன்**
(01) வல்லமை கொண்டவன்
(02) அதிகாரம் செலுத்துபவன்
(03) தீயோருக்கு அச்சம் தருபவன்

2027. **கெடிலன்**
(01) விரைந்தோடும் சிற்றாறு போன்றவன்

2028. **கெண்டைவிழி**
(01) அழகிய கண்களைக் கொண்டவள்

2029. **கெணிதன்**
(01) வெற்றிலை போன்று நறுமணமும், பயனும் உடையவன்

2030. **கெந்தகற்பன்**
(01) வில்வ மரம் போன்றவன்

2031. **கெந்தன்**

(01) மணம் மிகுந்தவன்
(02) சந்தனம் போன்ற மணமும் உயர்வும் கொண்டவன்

2032. **கெருவிதன்**

(01) செருக்குடையவன்

2033. **கெவுரன்**

(01) துளசி போன்றவன்

2034. **கெழியன்**

(01) அனைவரோடும் நட்பு பாராட்டுபவன்

2035. **கெழுமன்**

(01) கற்றல் திறமை கொண்டவன்
(02) நிறைந்த உள்ளங் கொண்டவன்
(03) ஒளி மிகுந்தவன்

2036. **கெழுவான்**

(01) அனைவரோடும் நட்பு பாராட்டுபவன்

2037. **கெற்பன்**

(01) வலிமையானவன்
(02) திறன் மிக்கவன்
(03) மெய்ப்பொருளாளன்

# கே

2038. **கேகயன்**
(01) மயில் போன்றவன்

2039. **கேசரன்**
(01) மகிழ மரம் போன்றவன்
(02) குங்குமப் பூ வண்ணம் கொண்டவன்

2040. **கேசரி**
(01) வானில் பறக்கும் வகை தெரிந்தவன்

2041. **கேசவன்**
(01) நறுமணங்கொண்டவன்

2042. **கேடகன்**
(01) தீமையினின்று காப்பவன்
(02) மலைகள் அடுத்துள்ள ஊரைச் சேர்ந்தவன்

2043. **கேடன்**
(01) மலைகள் சூழ்ந்த ஊரில் பிறந்தவன்
(02) கிளி போன்ற இனிய தோற்றமும், குரலும் உடையவன்
(03) ஆறு போன்று பயனோடு வாழ்பவன்

2044. **கேடிலி**
(01) அழிவில்லாதவன்

2045. **கேடிலியப்பன்**
(01) தாயுமானவரின் தந்தை

2046. **கேணன்**
(01) செழிப்பானவன்

2047. **கேணிகா**
(01) முல்லை மலர் போன்றவள்

2048. **கேத்திரிகன்**
(01) ஆதன்

2049. **கேதகன்**
(01) தாழை போன்றவன்

2050. **கேதகை**
(01) கதிர் நுனிப் பூந்துகள் போன்றவள்

2051. **கேதரன்**
(01) மயில் போன்ற அழகுடையவன்
(02) மலை போன்ற உயர்வுடையவன்
(03) இமயம் போன்று நெடிதுயர்ந்தவன்

2052. **கேதன்**
(01) காமன்
(02) காதற் கடவுள்

2053. **கேயன்**
(01) பாடகன்
(02) இசைப் பாடகன்

2054. **கேரளன்**
(01) சேரன்
(02) சாரல் நாட்டைச் (மலை நாட்டை, மலையடிவார நிலத்தை) சேர்ந்தவன்

2055. **கேலகன்**
(01) தென்னை மரம் போன்றவன்
(02) அசோக மரம் போன்றவன்

2056. **கேவலக்கிழவன்**
(01) அருகக் கடவுள்

2057. **கேவலன்**
(01) உயர்வானவன்
(02) மேன்மையானவன்
(03) வீடுபேறடைபவன்
(04) தவ வலிமை பெற்ற முனிவன் போன்றவன் (முற்றறிவன்)
(05) எளியவன்

2058. **கேவேடன்**
(01) மீன் வலைஞன்
(02) மீனவன்

2059. **கேழன்**
(01) ஒளி பொருந்தியவன்

2060. **கேள்வன்**
(01) கணவன்
(02) தலைவன்
(03) நண்பன்
(04) தோழன்

2061. **கேள்விச் செல்வன்**
(01) செவி வழி எய்திய பெருகிய அறிவு கொண்டவன்

2062. **கேள்வி ஞானி**
(01) கேள்வி ஞானம் எய்துபவன்

2063. **கேள்வியுள்ளோன்**
(01) கல்வி கேள்வியுள்ளவன்
(02) அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகியவற்றின் கேள்விகளில் தெரிவு பெற்றவன்

2064. **கேளன்**
(01) நண்பன்

2065. **கேளிகன்**
(01) தென்னை மரம் போன்று பயனளிப்பவன்
(02) செவ்விள நீர் போன்ற இனிமையுடையவன்

2066. **கேளிர்**
(01) நண்பன்
(02) சுற்றத்தான்
(03) கணவன்

# கை

2067. **கைக்காரன்**
(01) பிறருக்கு உதவும் குணமுடையவன்
(02) பணக்காரன்
(03) வல்லவன்
(04) செல்வன்

2068. **கைச்சுடர்**
(01) சிறு விளக்கு போன்ற மெல்லிய ஒளி தருபவள்

2069. **கைசகன்**
(01) வன்னியர் குலத்தைச் சேர்ந்தவன்
(02) உழவுத் தொழில் செய்பவன்

2070. **கைசிகன்**
(01) இறைவனை நோக்கிப் பாடல் இசைப்பவன்

2071. **கைத்தாராளன்**
(01) பெருந்தன்மையானவன்
(02) வள்ளன்மை மிக்கவன்

2072. **கைதகன்**
(01) தாழம்பூ போன்ற இனிய மணம் கொண்டவன்

2073. **கைதவன்**
(01) பாண்டிய மன்னன்
(02) மிகுந்த புகழுடையவன்

2074. **கைதவை**
(01) கொற்றவை

2075. **கைதொடன்**
(01) உதவி செய்பவன்
(02) அறிவாற்றலுடன் செயல் புரிபவன்

2076. **கைநலன்**
(01) கைராசி உடையவன்

2077. **கையங்கண்ணன்**
(01) கடைக்கழகம் மருவிய புலவர்

2078. **கையன்**
(01) யாப்பிலக்கண ஆசிரியர்களில் ஒருவர்

2079. **கையம்பன்**
(01) உறுதியானவன்
(02) நம்பிக்கையானவன்

2080. **கைரவன்**
(01) அல்லி மலர் போன்றவன்

2081. **கைரவி**
(01) சந்திரகாந்திப் பூ

2082. **கைரிகன்**
(01) பொன் போன்றவன்

2083. **கைலாயன்**
(01) உயர்ந்த உச்சிகளைக் கொண்ட மலை போன்ற மனஉறுதியுடையவன்

2084. **கைவல்லன்**
(01) திறமையானவன்

2085. **கைவல்லியன்**
(01) திறமையானவன்

2086. **கைவலச் செல்வன்**
(01) அருகன்

2087. **கைனி**
(01) பதின்மூன்றாம் நாண்மீன்
(02) கைம்மீன் என்றும் அத்த (ஹஸ்த) நாண்மீனில் பிறந்தவன்

# கொ

2088. **கொங்கர்கோமான்**
(01) கொங்கு நாட்டு மன்னன்

2089. **கொங்கரையன்**
(01) கள்ளர் குடியிற் பிறந்தவன்

2090. **கொங்கன்**
(01) கொங்கு நாட்டான்

2091. **கொங்குவேள்**
(01) பெருங்கதை என்னும் தமிழ்ப் பாவியம் (காவியம்) இயற்றிய தமிழ்ப் புலவர்

2092. **கொச்சன்**
(01) சிறுபையன்

2093. **கொச்சை வேந்தன்**
(01) சீர்காழியின் அரசன்

2094. **கொச்சை முனி**
(01) சீர்காழியில் பிறந்த திருஞான சம்பந்தர்

2095. **கொச்சையன்**
(01) இடையர் இனத்தைச் சேர்ந்தவன்
(02) இளையவன்

2096. **கொட்டம்பலவன்**
(01) கழகக் காலப் புலவர்

2097. **கொடிச்சி**
(01) கைராசி உடையவன்

2098. **கொடிப்பாவை**
(01) கொடி போன்ற (மெல்லிய இடை கொண்ட) உடலுடைய பெண்
பார்க்க: **கொடி**
முன்னொட்டுப் பெயர்கள்

2099. **கொடிப்புலி**
(01) நீண்ட வேங்கைப் புலி போன்று நெடிதுயர்ந்த வீரன்

2100. **கொடியரசு**
(01) அரசமரம் போன்ற உயர்வுடையன்

2101. **கொடியராகு**
(01) கோமேதகக் கல் போன்ற ஒளியும், வண்ணமும், அழகும் கொண்டவள்

2102. **கொடியன்**
(01) செங்கோளான கேது

2103. **கொடிவேர்**
(01) தலைச்சன் பிள்ளை

2104. **கொடிவேல்**
(01) சேவற்கொடியுடைய வேலன்

2105. **கொடுக்கன்**
(01) மகன்

2106. **கொடுப்புலி**
(01) கள்ளர் குடியைச் சேர்ந்தவன்

2107. **கொடும்புராயன்**
(01) கள்ளர் குடித் தலைவன்

2108. **கொடும்புலி**
(01) அரிமா (சிங்கம்) போன்றவன்
(02) மடங்கல் (சிம்ம) ராசியில் பிறந்தவன்

2109. **கொடுமுடி**
(01) மலையின் உச்சி போன்று உயர்ந்து நிற்பவன்
(02) குறுநில மன்னன்
(03) கொடுமுடி என்னும் ஊரினன்

2110. **கொடைநம்பி**
(01) தமிழ்ப்புலவர் பெயர்

2111. **கொடையாளன்**
(01) ஈகைப் பண்புள்ளவன்

2112. **கொடையாளி**
(01) ஈகைப் பண்புள்ளவன்

2113. **கொடையோன்**
(01) ஈகைப் பண்புள்ளவன்

2114. **கொடைவஞ்சி**
(01) கொடையளிக்கும் வெற்றி வீரனாய் விளங்கும் அரசன்

2115. **கொண்கன்**
(01) கணவன்
(02) தலைவன்
(03) நெய்தல் நிலத் தலைவன்

2116. **கொண்கான நன்னன்**
(01) அழகுடையவன்
(02) மேன்மையானவன்
(03) நன்னலம் கொண்டவன்
(04) குறுநில மன்னன்

2117. **கொண்டல்**
(01) மேகம் போன்றவள்
(02) மழை போன்றவள்
(03) மேழவோரையிற் (மேஷம்) பிறந்தவள்
(04) நெருப்பு போன்று ஒளிரும் கற்புடையவள்
(05) காற்று போன்றவள்,
(06) நீர் போன்றவள்

2118. **கொண்டல்மேனியன்**
(01) மேக நிறமுடைய திருமால்

2119. **கொண்டல்மேனியான்**
(01) மேக நிறமுடைய திருமால்

2120. **கொண்டல்வண்ணன்**
(01) மேக நிறமுடைய திருமால்

2121. **கொந்தகன்**
(01) படைத்தலைவன்

2122. **கொந்தவன்**
(01) கட்டுக்கோப்பான படைவீரன்/ போராளி

2123. **கொம்பன்**
(01) வல்லாளன்
(02) ஆண் யானை போன்ற வலிமை உடையவன்
(03) மகன்

2124. **கொம்பாயுதம்**
(01) தெய்வம் தங்குவதாகக் கொண்டு பூசிக்கப்படும் மரக்கிளை போல உயர்வானவன்

2125. **கொம்பாயுதன்**
(01) தெய்வம் தங்குவதாகக் கொண்டு பூசிக்கப்படும் மரக்கிளை போல உயர்வானவன்

2126. **கொம்பாயுதா**
(01) தெய்வம் தங்குவதாகக் கொண்டு பூசிக்கப்படும் மரக்கிளை போல உயர்வானவன்

2127. **கொம்பாலயன்**
(01) தெய்வம் தங்குவதாகக் கொண்டு பூசிக்கப்படும் மரக்கிளை போல உயர்வானவன்

2128. **கொம்பி**
(01) காரி (சனி)
(02) காரிக்கிழமையன்று பிறந்தவள்
(03) வல்லாண்மை மிக்கவள்

2129. **கொம்புத் தேன்**
(01) மரக்கொம்பிலுள்ள தேன் கூட்டில் இருந்து எடுக்கப்பட்ட தூய தேன் போன்றவள்

2130. **கொம்மையாள்**
(01) வட்டமுகம் கொண்டவள்
(02) பெருமையானவள்
(03) இளமையானவள்
(04) அழகானவள்
(05) வலிமையானவள்

2131. **கொல்லங்கொண்ட பாண்டியன்**
(01) குலசேகர பாண்டியன்

2132. **கொல்லன் அழிசி**
(01) கொல்லர் தொழில் செய்த அழிசி என்னும் புலவர்

2133. **கொல்லன் புல்லன்**
(01) கொல்லன் என்பார் மகனான புல்லன் என்னும் புலவர்
(02) கொல்லத் தொழில் புரியும் எளிய மாந்தன்

2134. **கொல்லிக் கண்ணன்**
(01) கொல்லி மலைத் தலைவனாகிய சேரன்

2135. **கொல்லிச் சிலம்பன்**
(01) கொல்லிமலையைச் சார்ந்ததோர் ஊரைச் சேர்ந்த கண்ணன் என்னும் புலவர்

2136. **கொல்லிப் பொருநன்**
(01) கொல்லிமலையை ஆண்ட மன்னன்
(02) வல்வில் ஓரி

2137. **கொல்லி மழவன்**
(01) கொல்லி மலையை ஆண்ட அரசன்

2138. **கொல்லி வெற்பன்**
(01) கொல்லி மலையை ஆண்ட அரசன்

2139. **கொலைமகள்**
(01) பகைவரைக் கொல்லும் கொற்றவை

2140. **கொலைவன்**
(01) வேடர் குலத்தில் பிறந்தவன்
(02) அழிப்புக் கடவுளாகச் சொல்லப்படும் சிவன்

2141. **கொவ்வை**
(01) கொவ்வைக் கொடி போன்ற மெல்லிய இடையையுடையவள்
(02) கொவ்வைப்பழம் போன்றவள்

2142. **கொழஞ்சியப்பன்**
(01) ஒரு சிறு தெய்வம்

2143. **கொழுங்கண்ணன்**
(01) அருள் நோக்கு (பார்வை) கொண்டவன்

2144. **கொழுந்தன்பன்**
(01) இளகிய அன்பு கூர் உள்ளங் கொண்டவன்

2145. **கொழுந்திலை**
(01) இளந்தளிர் போன்று மெல்லிய உடல்/உள்ளங் கொண்டவள்

2146. **கொழுந்து**
(01) இளந்தளிர் போன்று மெல்லிய உடல்/உள்ளங் கொண்டவள்

2147. **கொழுநன்**
(01) கணவன்
(02) இறைவன்

2148. **கொழுநிழல்**
(01) அனைவருக்கும் குளிர்ந்த நிழல் போல் விளங்குபவன்

2149. **கொழுமுகை**
(01) இளம் அரும்பு போன்றவள்

2150. **கொள்புச் செல்வன்**
(01) கொள்கைப் பிடிப்புடைய வீரன்

2151. **கொள்புத் தலைவன்**
(01) கொள்கைப் பிடிப்புடைய வீரன்

2152. **கொள்பரசன்**
(01) கொள்கைப் பிடிப்புடைய வீரன்

2153. **கொள்புக்கோ**
(01) கொள்கைப் பிடிப்புடைய வீரன்

2154. **கொள்பு மறவன்**
(01) கொள்கைப் பிடிப்புடைய வீரன்

2155. **கொள்ளம் பாக்கன்**
(01) கழகக் காலப் புலவர்

2156. **கொற்கை**
(01) தாமிரபரணி புகுமுகத்தமைந்த பழைய துறைமுகப் பட்டினம்
(02) பாண்டியர்களின் கடல் துறைத் தலைநகரம்
(03) கொற்கையிற் பிறந்தவன்

2157. **கொற்கைக் கோமான்**
(01) கொற்கைத் துறைமுகத்தை உடையவனாகிய பாண்டிய மன்னன்

2158. **கொற்கை கிழான்**
(01) தாமிரபரணி புகுமுகத்தமைந்த பழைய துறைமுகப் பட்டினம்
(02) கொற்கையிற் பிறந்தவன்

2159. **கொற்கை வேந்தன்**
(01) பாண்டிய மன்னன்

2160. **கொற்கைதவன்**
(01) பாண்டிய நாட்டரசன்

2161. **கொற்றக் குடை**
(01) அரசனின் குடை
(02) ஆட்சியின் அடையாளம்

2162. **கொற்றச் செழியன்**
(01) பாண்டிய மன்னன்

2163. **கொற்றத் தேவி**
(01) பட்டத்து அரசி

2164. **கொற்றவன்**
(01) அரசன்
(02) வெற்றி கொள்பவன்
(03) வீரமுடையவன்
(04) வலிமையானவன்

2165. **கொற்ற முரசு**
(01) அரசுக்குரிய வெற்றியின் அடையாளமாக அறையப்படும் முரசு

2166. **கொற்றவை**
(01) வெற்றிக் கடவுளாகக் கருதப்படும் தெய்வம் காளி

2167. **கொற்றன்**
(01) வெற்றிக் கடவுளாகக் கருதப்படும் தெய்வம் காளி
(02) புலவன்
(03) தலைவன்
(04) அரசன்

2168. **கொற்றி**
(01) வெற்றிக் கடவுளாகக் கருதப்படும் தெய்வம் காளி
(02) தலைவி
(03) அரசி

2169. **கொன்றை**
(01) கொன்றை மலர் போன்ற அழகுடைவள்

2170. **கொன்றை சூடி**
(01) கொன்றை மலர் சூடி அழகுறுபவள்

2171. **கொன்றை வேந்தன்**
(01) கொன்றை மாலை சூடிய சிவன்

# கோ

2172. **கோ**
(01) பேரரசன்
(02) மன்னர் மன்னன்
(03) பாண்டியன்
(04) பெருமையிற் சிறந்தோன்
(05) தகப்பன்
(06) தலைவன்
(07) மேன்மையானவன்
(08) தாய் போன்று அன்பும், அரவணைப்பும் காட்டுபவன்
(09) கல்விக் கடவுள்
(10) விண் போல் பரந்து விரிந்தவன்
(11) ஒளிக்கதிர் போல் வெளிச்சம் தருபவன்
(12) அழகிய கண்களை உடையவன்
(13) சிறந்த சொல்லாளன்
(14) கதிரவன் போன்று ஒளி வீசுபவன்
(15) மலை போல் உயர்ந்து நிற்பவன்
(16) நிலம் போல் அள்ளி வழங்குபவன்
(17) வீடு பேருடையவன்
(18) இந்திரனின் இடிபடைக்கலன் (வச்சிராயுதம்) போன்று வலிமை நிறைந்தவன்
(19) நீர்போல் பயனளிப்பவன்
(20) உயிர்களுக்கு மூலமாய் விளங்குபவன்

2173. **கோக்கிழான்**
(01) அரசர்க்குரியவன்
(02) பெருமைக்குரியவன்
(03) மேன்மைக்குரியவன்
(04) தலைமைக்குரியவன்
(05) சொல்லுக்குரியவன்
(06) உயர்வுக்குரியவன்

2174. **கோக்குளமுற்றன்**
(01) கடைக்கழகப் புலவர் பெயர்

2175. **கோக்கோதை மார்பன்**
(01) சேர அரசனான சேரமான் கோக்கோதை மார்பன் பெயர்
(02) சிறந்த கொடையாளி

2176. **கோகதேவன்**
(01) புறா போன்ற அழகுடையவன்

2177. **கோகயன்**
(01) தாமரை போன்ற மலர்ந்த முகமுடையவன்

2178. **கோகழி**
(01) திருவாவடுதுறை ஊரில் பிறந்தவன்

2179. **கோகழியான்**
(01) திருவாவடுதுறை ஊரில் பிறந்தவன்

2180. **கோகனகம்**
(01) செந்தாமரை மலர் போன்றவள்
(02) செவ்வாம்பல் நிறத்தவள்
(03) செந்தும்மை மலர் போன்ற தூயவள்

2181. **கோகனகை**
(01) செந்தாமரை மலர் போன்றவள்
(02) செவ்வாம்பல் நிறத்தவள்
(03) செந்தும்மை மலர் போன்ற தூயவள்

2182. **கோகனதம்**
(01) செந்தாமரை மலர் போன்றவள்
(02) செவ்வாம்பல் நிறத்தவள்
(03) செந்தும்மை மலர் போன்ற தூயவள்

2183. **கோகனதன்**
(01) தாமரையிற் பிறந்த நான்முகன்

2184. **கோகனதை**
(01) தாமரையில் அமர்ந்துள்ள தெய்வம் இலக்குமி

2185. **கோகி**
(01) தும்பைப் பூ போன்ற வெண்ணிறமும் தூய்மையும் உடையவள்

2186. **கோகிலம்**
(01) குயில் போன்றவள்

2187. **கோகிலா**
(01) குயில் போன்றவள்

2188. **கோகு**
(01) வளைந்த மற்றும் அகன்ற வெற்றித் தோள் கொண்டவன்

2189. **கோகுந்தம்**
(01) மல்லிகை மலர் போன்றவள்

2190. **கோகுந்தை**
(01) மல்லிகை மலர் போன்றவள்

2191. **கோகுத்தம்**
(01) மல்லிகை மலர் போன்றவள்

2192. **கோகுலம்**
(01) குயில் போன்றவள்
(02) கண்ணன் வளர்ந்த ஆயர்பாடி
(03) கோயில் போன்று உயர்வானவள்

2193. **கோச்சடையன்**
(01) முற்காலப் பாண்டிய மன்னன்
(02) கோச்சடையன் இரணதீரன்

2194. **கோச்செங்கண்ணன்**
(01) செம்மையான கண்களையுடைய அரசன் / தலைவன்

2195. **கோச்செங்கணார்**
(01) செம்மையான கண்களையுடைய அரசன் / தலைவன்

2196. **கோச்செங்கட்சோழன்**
(01) செம்மையான கண்களையுடைய அரசன் / தலைவன்

2197. **கோசன்**
(01) கண்ணகிக்கு விழா எடுத்த கொங்கு நாட்டு பழைய வீரக்குடியான கோசர குடியில் பிறந்தவன்

2198. **கோசரன்**
(01) துறவி போன்று எதன் மீதும் மிகுந்த ஆசை வைக்காதவன்

2199. **கோசலை**
(01) இராமனின் தாய்
(02) கோசலம் நாட்டைச் சேர்ந்தவள்

2200. **கோசிகம்**
(01) பட்டாடை உடுத்தியவன்
(02) ஒரு பண்

2201. **கோசிகன்**
(01) பட்டாடை உடுத்தியவன்
(02) ஒரு பண்

2202. **கோட்டகன்**
(01) கோட்டை போன்ற வீட்டில் பிறந்தவன்/வாழ்பவன்
(02) கோட்டயம் ஊரினன்

2203. **கோட்டம்பலவன்**
(01) கோட்டம்பலம் என்னும் ஊரினன்
(02) சங்கப் புலவர் பெயர்

2204. **கோட்டயன்**
(01) கோட்டை போன்ற வீட்டில் பிறந்தவன்/வாழ்பவன்
(02) கோட்டயம் ஊரினன்

2205. **கோட்டுமலை**
(01) கொம்புள்ள மலை போன்று நெடிதுயர்ந்த யானை போன்றவன்

2206. **கோட்டுமா**
(01) கொம்புள்ள மலை போன்று நெடிதுயர்ந்த யானை போன்றவன்

2207. **கோட்டூரான்**
(01) ஏரியை அடுத்துள்ள ஊரினன்

2208. **கோட்டையம்மன்**
(01) கன்னியாக்குமரிக் கோயிலில் அமைந்துள்ள ஒரு தெய்வம்

2209. **கோட்டையாண்டான்**
(01) கள்ளர்குடியினன்

2210. **கோட்டை வேளாளன்**
(01) திருவைகுண்டத்தில் கோட்டைக்குள் வாழ்ந்து வரும் வேளாளர் குடியினன்

2211. **கோட்புலி**
(01) அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவர் பெயர்

2212. **கோடகன்**
(01) குதிரை போன்றவன்
(02) புதுமையானவன்

2213. **கோடங்கொற்றன்**
(01) புலவர்

2214. **கோடவதி**
(01) வீணை போன்ற இனிய குரலுடையவள்

2215. **கோடரன்**
(01) குதிரை போன்றவன்
(02) புதுமையானவன்

2216. **கோடரி**
(01) கொற்றவை
(02) காளி

2217. **கோடல்**
(01) வெண் காந்தள் மலர் போன்ற அழகுடையவள்

2218. **கோடலன்**
(01) பிறை போல் வளைந்த மாலை போன்ற அழகுடையவன்

2219. **கோடவி**
(01) காளி

2220. **கோடன்**
(01) மலை உச்சி போன்று உயர்ந்தவன்

2221. **கோடானி**
(01) நறுமணமிக்கவன்

2222. **கோடி**
(01) புத்தாடை அணிபவன்
(02) இளமையானவன்

2223. **கோடிகன்**
(01) நெசவுத் தொழில் புரிபவன்
(02) நெசவாளர் குடியில் பிறந்தவன்

2224. **கோடிச் செல்வன்**
(01) மிகப்பெரும் செல்வன்

2225. **கோடிதன்**
(01) நீல வானில் வலம் வரும் முகில் போன்றவன்

2226. **கோடியன்**
(01) தேர்ந்த ஆடல் கலைஞன்
(02) சிறந்த நடிகன்

2227. **கோடிலன்**
(01) நறுமணமிக்கவன்

2228. **கோடீரன்**
(01) வானவில் போன்ற அழகுடையவன்

2229. **கோடுமுத்து**
(01) சங்கிற் பிறந்த வெண்ணிற முத்து

2230. **கோடை**
(01) வெண்காந்தள் மலர் போன்றவள்
(02) செங்காந்தள் மலர் போன்றவள்
(03) இளமையானவள்

2231. **கோடைக்காந்தள்**
(01) வெண்காந்தள் மலர் போன்றவள்
(02) செங்காந்தள் மலர் போன்றவள்
(03) இளமையானவள்

2232. **கோண்மா**
(01) அரிமா, புலி போன்று வலிமை மிகுந்தவன்

2233. **கோண்மா நெடுங்கோட்டன்**
(01) கடைக் கழகப் புலவருள் ஒருவர் பெயர்

2234. **கோணைப் பெருமான்**
(01) ஒற்றைத் திருவடிச் சிவன்

2235. **கோத்தன்**
(01) நீலமலையில் வாழும் கோத்தர் குடியினன்

2236. **கோதண்டப்புலி**
(01) கள்ளர் குடியினன்

2237. **கோதண்டபாணி**
(01) வில்லைக் கையில் கொண்ட இராமன்

2238. **கோதண்டம்**
(01) இராமனின் வில் போன்றவன்

2239. **கோதண்டன்**
(01) இராமனின் வில் போன்றவன்

2240. **கோதமன்**
(01) புத்தன்
(02) கடைச்சங்கப் புலவர் பெயர்

2241. **கோதை**
(01) ஆண்டாள்
(02) பூமாலை போன்றவள்
(03) முத்தாரம்
(04) பெண்
(05) சேரர் பட்டப்பெயர்
(06) காற்று

2242. **கோநகரான்**
(01) தலைநகரில் பிறந்தவன்
(02) தலைநகரில் வாழ்பவன்
(03) கோயில் உள்ள ஊரில் பிறந்தவன் / வாழ்பவன்

2243. **கோநாதன்**
(01) இடையர் குடியினன்
(02) அரசர் தலைவன்

2244. **கோப்பன்**
(01) கெட்டிக்காரன்
(02) உயர்ந்தவன்
(03) வணக்கத்துக்குரியவன்
(04) வலிமையானவன்

2245. **கோப்பாண்டியன்**
(01) மன்னருள் மன்னனாக விளங்கிய பாண்டியன்

2246. **கோப்பெருஞ்சேரல்**
(01) மாமன்னனாக விளங்கும் சேரன்

2247. **கோப்பெருஞ்சோழன்**
(01) சோழ மன்னன்

2248. **கோப்பெருந்தேவி**
(01) பட்டத்தரசி

2249. **கோப்பெருநற்கிள்ளி**
(01) பெருமையும் நற்குணமும் ஒருங்கமைந்த சோழ மன்னன்
(02) போரவைக் கோப் பெருநற்கிள்ளி என்றழைக்கப்பட்ட சோழ மன்னன்
(03) முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி என்றழைக்கப்பட்ட மற்றொரு சோழ மன்னன்

2250. **கோப்பெரும்பேகன்**
(01) வையாவிக் கோப்பெரும் பேகன் என வழங்கப்பெறும் வள்ளல் பேகன்

2251. **கோப்பெருவேந்தன்**
(01) அரசர்க்கரசன்

2252. **கோபதி**
(01) தேவர்களின் தலைவனான இந்திரன்
(02) கதிரவன்

2253. **கோபன்**
(01) இடையன்
(02) காவலாக விளங்குபவன்
(03) சிவன்

2254. **கோபுரச் சித்தன்**
(01) பொன்னாக்கும் ஆற்றல் முறைகளை இயற்றிய ஒரு சித்தன் பெயர்

2255. **கோமகள்**
(01) அரசி
(02) தலைவி
(03) மதிப்பிற்குரியவள்

2256. **கோமடந்தை**
(01) ஆரசி

2257. **கோமதி**
(01) ஒரு தெய்வம்

2258. **கோமதை**
(01) ஒரு தெய்வம்

2259. **கோமலதை**
(01) மென்மையானவள்

2260. **கோமலம்**
(01) அழகானவள்
(02) மிருதுவானவள்
(03) இளவேனில்

2261. **கோமளம்**
(01) மென்மையானவள்
(02) இளமையானவள்
(03) அழகானவள்
(04) மாணிக்கம் போன்றவள்

2262. **கோமளாங்கம்**
(01) மென்மையான உடலுடையவள்

2263. **கோமாட்டி**
(01) தலைவி

2264. **கோமாள்**
(01) தலைவி

2265. **கோமான்**
(01) அரசன்
(02) பெருமையிற் சிறந்தோன்
(03) மூத்தோன்

2266. **கோமான் நங்கை**
(01) அரசன் மாதேவி

2267. **கோமுற்றன்**
(01) அரசன்

2268. **கோமுனி**
(01) அரசனுக்கு ஆசிரியனாய் விளங்குபவன்

2269. **கோயன்**
(01) அரச மரபில் வந்தவன்
(02) ஆயர்குடியினன்

2270. **கோரக்கனாதன்**
(01) ஒன்பது சித்தருள் ஒருவன்

2271. **கோரகன்**
(01) அரும்பு போன்றவன்

2272. **கோரகா**
(01) இளம் பூவரும்பு போன்றவள்
(02) குயில் போன்றவள்

2273. **கோரன்**
(01) சிவன்

2274. **கோரி**
(01) பார்வதியாகிய மலைமகள்

2275. **கோல் வெற்பன்**

(01) அரசாட்சி செய்பவன்
(02) செங்கோல் ஏந்திய அரசன்
(03) நீதி தவறாதவன்
(04) அம்பு எய்துவதிலும், ஈட்டி எறிவதிலும் திறமையான போர் வீரன்
(05) ஓவியன்
(06) துலை ஓரை (துலாம் ராசி)யில் பிறந்தவன்
(07) துலை (ஐப்பசி) மாதம் பிறந்தவன்
(08) கையில் கோலேந்திய முருகன் கையில் முக்கோல் (திரிசூலம்) ஏந்திய சிவன்
(09) அழகானவன்
(10) முயற்சியுடையவன்
பார்க்க: **கோல்**
முன்னொட்டுப் பெயர்கள்

2276. **கோல் வேந்தன்**

(01) அரசாட்சி செய்பவன்
(02) செங்கோல் ஏந்திய அரசன்
(03) நீதி தவறாதவன்
(04) அம்பு எய்துவதிலும், ஈட்டி எறிவதிலும் திறமையான போர் வீரன்
(05) ஓவியன்
(06) துலை ஓரை (துலாம் ராசி)யில் பிறந்தவன்
(07) துலை (ஐப்பசி) மாதம் பிறந்தவன்
(08) கையில் கோலேந்திய முருகன் கையில் முக்கோல் (திரிசூலம்) ஏந்திய சிவன்
(09) அழகானவன்
(10) முயற்சியுடையவன்

2277. **கோலப்பன்**

(01) அரசாட்சி செய்பவன்
(02) செங்கோல் ஏந்திய அரசன்
(03) நீதி தவறாதவன்
(04) அம்பு எய்துவதிலும், ஈட்டி எறிவதிலும் திறமையான போர் வீரன்
(05) ஓவியன்
(06) துலை ஓரை (துலாம் ராசி)யில் பிறந்தவன்
(07) துலை (ஐப்பசி) மாதம் பிறந்தவன்
(08) கையில் கோலேந்திய முருகன் கையில் முக்கோல் (திரிசூலம்) ஏந்திய சிவன்
(09) அழகானவன்
(10) முயற்சியுடையவன்

2278. **கோலரன்**

(01) விதையினின்று வெளிவரும் தளிர் போன்று மென்மையும், தூய்மையும் உடையவன்

2279. **கோலரசன்**

(01) அரசாட்சி செய்பவன்
(02) செங்கோல் ஏந்திய அரசன்
(03) நீதி தவறாதவன்
(04) அம்பு எய்துவதிலும், ஈட்டி எறிவதிலும் திறமையான போர் வீரன்
(05) ஓவியன்
(06) துலை ஓரை (துலாம் ராசி)யில் பிறந்தவன்
(07) துலை (ஐப்பசி) மாதம் பிறந்தவன்
(08) கையில் கோலேந்திய முருகன் கையில் முக்கோல் (திரிசூலம்) ஏந்திய சிவன்
(09) அழகானவன்
(10) முயற்சியுடையவன்

**2280. கோலன்**

(01) அரசாட்சி செய்பவன்
(02) செங்கோல் ஏந்திய அரசன்
(03) நீதி தவறாதவன்
(04) அம்பு எய்துவதிலும், ஈட்டி எறிவதிலும் திறமையான போர் வீரன்
(05) ஓவியன்
(06) துலை ஓரை (துலாம் ராசி)யில் பிறந்தவன்
(07) துலை (ஐப்பசி) மாதம் பிறந்தவன்
(08) கையில் கோலேந்திய முருகன் கையில் முக்கோல் (திரிசூலம்) ஏந்திய சிவன்
(09) அழகானவன்
(10) முயற்சியுடையவன்

**2281. கோலனாதன்**

(01) அரசாட்சி செய்பவன்
(02) செங்கோல் ஏந்திய அரசன்
(03) நீதி தவறாதவன்
(04) அம்பு எய்துவதிலும், ஈட்டி எறிவதிலும் திறமையான போர் வீரன்
(05) ஓவியன்
(06) துலை ஓரை (துலாம் ராசி)யில் பிறந்தவன்
(07) துலை (ஐப்பசி) மாதம் பிறந்தவன்
(08) கையில் கோலேந்திய முருகன் கையில் முக்கோல் (திரிசூலம்) ஏந்திய சிவன்
(09) அழகானவன்
(10) முயற்சியுடையவன்

**2282. கோலிகன்**

(01) நெசவுத் தொழில் செய்பவன்

**2283. கோலிறைவன்**

(01) அரசாட்சி செய்பவன்
(02) செங்கோல் ஏந்திய அரசன்
(03) நீதி தவறாதவன்
(04) அம்பு எய்துவதிலும், ஈட்டி எறிவதிலும் திறமையான போர் வீரன்
(05) ஓவியன்
(06) துலை ஓரை (துலாம் ராசி)யில் பிறந்தவன்
(07) துலை (ஐப்பசி) மாதம் பிறந்தவன்
(08) கையில் கோலேந்திய முருகன் கையில் முக்கோல் (திரிசூலம்) ஏந்திய சிவன்
(09) அழகானவன்
(10) முயற்சியுடையவன்

**2284. கோலையன்**

(01) அரசாட்சி செய்பவன்
(02) செங்கோல் ஏந்திய அரசன்
(03) நீதி தவறாதவன்
(04) அம்பு எய்துவதிலும், ஈட்டி எறிவதிலும் திறமையான போர் வீரன்
(05) ஓவியன்
(06) துலை ஓரை (துலாம் ராசி)யில் பிறந்தவன்
(07) துலை (ஐப்பசி) மாதம் பிறந்தவன்
(08) கையில் கோலேந்திய முருகன் கையில் முக்கோல் (திரிசூலம்) ஏந்திய சிவன்
(09) அழகானவன்
(10) முயற்சியுடையவன்

**2285. கோவணன்**

(01) சிவன்
(02) வசிட்ட முனிவன் (காமதேனு எனப்படும் கோவை (பசுவை) வைத்திருந்ததாக சொல்லப்படும் முனிவன்)

**2286. கோவலன்**

(01) செல்வமாகிய மாடுகளைக் கொண்டவன்

2287. **கோவன்**
(01) அரசன்
(02) தலைவன்
(03) இடையர் குடியினன்
(04) வசிட்டன்
(05) சிவன்
(06) கடைக் கழகப் புலவர்
(07) மலை வாழ்நன்
(08) அரச குடும்பத்தினன்
(09) ஓர் இயற்பெயர்
(10) மாடாகிய செல்வங் கொண்டவன்

2288. **கோவி**
(01) முல்லை நிலத்தினள்

2289. **கோவிதன்**
(01) ஒரு குறிப்பிட்ட துறையில் மிகுந்த அறிவும், புரிதலும் உடையவன்
(02) நன்குணர்ந்தவன்

2290. **கோவிந்தன்**
(01) திருமால்
(02) முல்லை நிலத்தவன்
(03) இடையர் குடியினன்

2291. **கோவு**
(01) தலைவன்
(02) தலைமைப் பண்புடையவன்
(03) அரசன்
(04) இறைவன்

2292. **கோவேள்**
(01) குயவர் குடியினன்
(02) சிறந்த அரசன்

2293. **கோழயன்**
(01) கள்ளர் குடியினன்

2294. **கோழிக்கொடியோன்**
(01) கொடியில் சேவலைக் கொண்டிருக்கும் முருகன்
(02) ஐயனார்

2295. **கோழிமன்**
(01) உறையூர் அரசன்

2296. **கோழி வேந்தன்**
(01) உறையூரை தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழ மன்னன்

2297. **கோளரி**
(01) ஆரிமா

2298. **கோளாளன்**
(01) ஞாபகத் தன்மை நிரம்பியவன்

2299. **கோளை**
(01) சிறந்த தோழியாக விளங்கும் பெண்

2300. **கோறன்**
(01) கள்ளர் குடியினன்

2301. **கோன்**
(01) அரசன்
(02) தலைவன்
(03) ஞாயிறு
(04) திங்கள்
(05) வியாழன்

2302. **கோனேரி**
(01) திருப்பதியிலுள்ளதொரு பொய்கை

2303. **கோனேரியப்பன்**
(01) பன்னிரண்டாம் நூற்றாண்டுப் புலவருள் ஒருவர்

# கௌ

2304. **கௌசலை**
(01) இராமனின் தாய்
(02) மாட்டுப்பட்டி உள்ள ஊரில் பிறந்தவள்

2305. **கௌசிகன்**
(01) விசுவாமித்திரன்

2306. **கௌதமன்**
(01) புத்தன்
(02) ஒரு முனிவன்
(03) தலைக் கழகப் புலவருள் ஒருவர்

2307. **கௌதமி**
(01) பெருமை மிக்கவள்

2308. **கௌமாரி**
(01) மலைமகள்

2309. **கௌரன்**
(01) பொன்னிறமானவன்
(02) தூய்மையானவன்
(03) வெண்மையானவன்
(04) தாமரை மலர் போன்றவன்

2310. **கௌரி**
(01) மலைமகள்
(02) பார்வதி
(03) காளி
(04) பொன்னிறமானவள்
(05) தூய்மையானவள்
(06) வெண்மையானவள்
(07) தாமரை மலர் போன்றவள்

2311. **கௌரி மைந்தன்**
(01) மலைமகளின் மகனாகக் கூறப்படும் முருகன்

2312. **கௌரியன்**
(01) பாண்டியன்

2313. **கௌவை**
(01) கௌவை (ஆயில்யம்) நாண்மீனில் பிறந்தவள்

# ச

**2314. சக்கதேவி**
(01) சக்கம்மாள் (இசக்கியம்மாள்)

**2315. சக்கந்தன்**
(01) மகிழ்ச்சியானவன்

**2316. சக்கம்மாள்**
(01) இசக்கியம்மன்
(02) பெண் தெய்வம் (இசக்கியம்மன்)
(03) பெண்பாற்பெயர்

**2317. சக்கரக்கையன்**
(01) திருமால்

**2318. சக்கரச் செல்வன்**
(01) பெருஞ்செல்வன்

**2319. சக்கரத்தாழ்வான்**
(01) திருமாலின் சக்கரமாக கூறப்படும் ஆழ்வார் பெயர்

**2320. சக்கரதானன்**
(01) சிவன்

**2321. சக்கரதேவன்**
(01) ஓர் இளவரசன் பெயர்

**2322. சக்கரபாணி**
(01) சக்கரப் படையைக் கையிற் கொண்ட திருமால்
(02) காளி

**2323. சக்கரவாளன்**
(01) வளைந்துயர்ந்த மலை போன்று உயர்வானவன்

**2324. சக்கரவாளி நம்பி**
(01) திருவரங்கத் திருக்கோயிலுக்கு நிலம் கொடுத்தவன்

**2325. சக்கரன்**
(01) திருமால் (சக்கரப் படைக் கருவி உடையவன்)
(02) கதிரவன்
(03) தமிழாய்வு செய்த பெரும் புலவர் பெயர்

**2326. சக்கராயுதம்**
(01) ஆயுதமாக விளங்கும் சக்கரம் போன்றவன்

**2327. சக்கராயுதன்**
(01) சக்கரத்தை ஆயுதமாகக் கொண்ட திருமால்

**2328. சக்கராயுதி**
(01) காளி

**2329. சக்காரன்**
(01) இனிப்புச் சுவையுடைய மாம்பழம் போன்று இனிமையானவன்

2330. **சக்கியன்**
(01) ஏற்புடைய தலைவன்
(02) ஒத்தவுணர்வுள்ளவன்
(03) நண்பன்

2331. **சக்கிரன்**
(01) இந்திரன் (ஆணைச் சக்கரத்தை உடையவன்)

2332. **சக்கிரி**
(01) அரசன்
(02) திருமால்

2333. **சகசன்**
(01) இயற்கையோடியைந்து வாழ்பவன்

2334. **சகடன்**
(01) தேர் போன்ற உயர்வுடையவன்
(02) முழுமையானவன்

2335. **சகரகன்**
(01) வேம்பு போன்று குளிர்ச்சியானவன்
(02) பிறருக்கு பயனாய் விளங்குபவன்

2336. **சகரன்**
(01) முதலேழு வள்ளல்களில் ஒருவன்
(02) பெருமைக்குரியவன்

2337. **சகருவன்**
(01) பெருமை கொள்ளத்தக்கவன்

2338. **சகலமங்கலை**
(01) மலைமகள் பார்வதி

2339. **சகலாத்தன்**
(01) அருகன்

2340. **சகளவல்லகி**
(01) வீணை போன்று இனியவள்

2341. **சகளன்**
(01) சிவன்

2342. **சகன்**
(01) முயல் போன்ற வெண்மையும், தூய்மையும், உற்சாகமும் உடையவன்
(02) தலைவன்

2343. **சகனன்**
(01) பொறுமையானவன்
(02) உள்ளத்துள் வைத்துக் காப்பவன்

2344. **சகாதன்**
(01) வேம்பு போன்று பயனளிப்பவன்

2345. **சகாமியன்**
(01) ஆலமரம் போன்று பரந்து விரிந்த உள்ளம் கொண்டவன்

2346. **சகாரன்**
(01) மாமரம் தரும் இனிப்புச் சுவை கொண்ட மாம்பழம் போன்று இனிமையானவன்

2347. **சகுந்தன்**
(01) கழுகு போன்ற பார்வையும், தீரமும் கொண்டவன்

2348. **சங்கக்குழையன்**
(01) சங்கினாலியன்ற காதணியுடைய சிவன்

2349. **சங்கக்கையன்**
(01) சங்கைக் கையில் கொண்ட திருமால்

2350. **சங்கசன்**
(01) சங்கில் பிறந்த முத்து போன்று ஒளிர்வும், தூய்மையும் கொண்டவன்

2351. **சங்கத்தமிழ்**
(01) கழகக் காலத்துத் தமிழ் போன்று தூய்மையும், உயர்வும் கொண்டவன்

2352. **சங்கத்தமிழன்**
(01) கழகக் காலத்துத் தமிழ் போன்று தூய்மையும், உயர்வும் கொண்ட தமிழன்

2353. **சங்கதன்**
(01) முல்லைப் பூ போன்ற வெண்மையும் தூய்மையும், மணமும் கொண்டவன்

2354. **சங்கப்புலவன்**
(01) முற்காலத்தே மதுரையில் இருந்த தமிழ்ச்சங்கத்தில் பங்கேற்ற தமிழ்ப் புலவர் போன்று புலமை பெற்றவன்

2355. **சங்கபாணி**
(01) சங்கைக் கையில் வைத்துள்ள திருமால்

2356. **சங்க மன்னன்**
(01) அனைவருடனும் நட்போடு விளங்கும் வேந்தன்

2357. **சங்கமேந்தி**
(01) திருமால்
(02) பார்க்க: **ஏந்தி**
(03) பின்னொட்டுப் பெயர்கள்

2358. **சங்கவருணன்**
(01) கடைக் கழகத் தமிழ்ப் புலவர்

2359. **சங்கவை**
(01) பாரியின் மகளிரில் ஒருவர்

2360. **சங்கிலிக்கறுப்பன்**
(01) ஒரு சிற்றூர்த் தெய்வம்

2361. **சங்குமுத்து**
(01) சங்குமுத்து

2362. **சங்கை**
(01) தூயவள்
(02) மேன்மையானவள்

2363. **சங்கைமான்**
(01) மதிப்புள்ளவன்

2364. **சசன்**
(01) முயல் போன்ற இயல்பினன்

2365. **சசி**
(01) முயல் வடிவ நிழல் படிந்துள்ள திங்கள்
(02) மழை போன்ற வள்ளல் தன்மை கொண்டவன்

2366. **சசிகலை**
(01) தேய்ந்து வளரும் இயல்புடைய திங்கள்

2367. **சசியுடையான்**
(01) திங்களைத் தலையிலணிந்த சிவன்

2368. **சஞ்சீவன்**
(01) மாமரம் போன்றவன்

2369. **சஞ்சை**
(01) சடசடவென்ற பேரொலியுடன் வரும் பெருமழை போன்றவன்

2370. **சட்டநம்பி**
(01) மாணவர்களின் தலைவர் போல் விளங்கும் ஆசிரியர்
(02) மாணவர்களின் தலைவனாக விளங்குபவன்

2371. **சட்டன்**
(01) மாணாக்கன்
(02) வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருப்பவன்

2372. **சட்டனாதன்**
(01) மாணவர்களின் தலைவர் போல் விளங்கும் ஆசிரியர்
(02) மாணவர்களின் தலைவனாக விளங்குபவன்

2373. **சட்டைமுனி**
(01) அகத்தியரின் மாணவரான அறிவர் (சித்தர்)

2374. **சட்டையன்**
(01) திருவரங்கத் திருக்கோயிலுக்கு நிலம் கொடையளித்தவன்

2375. **சடாநாதன்**
(01) சிவன்

2376. **சடாமகுடன்**
(01) சிவன்

2377. **சடிலன்**
(01) நெருங்கிய பிடரி மயிரினையுடைய அரிமா

2378. **சடையப்பன்**
(01) சிவன்

2379. **சடையன்**
(01) சிவன்
(02) கம்பனுக்கு உதவியளித்த பெருமகன்
(03) பாண்டிய மன்னனொருவன்
(04) அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவரான சடையநாயனார்
(05) சுந்தரமூர்த்தி நாயனாரின் தந்தை

2380. **சடையோன்**
(01) சிவன்
(02) சிவனின் தானைத் தலைவன்

2381. **சண்டநாயகன்**
(01) சிவத்தொண்டர் ஒருவரது பெயர்

2382. **சண்டன்**
(01) வலிமையானவன்
(02) விரைவாகச் செயல்படுபவன்
(03) பெருமையானவன்
(04) கூற்றுவன் (எமன்)
(05) காலன்
(06) கதிரவன்
(07) சிவன்

2383. **சண்டி**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்
(02) காளி

2384. **சண்டிகை**
(01) காளி

2385. **சண்டிலன்**
(01) சிவன்

2386. **சண்டினி**
(01) விளக்கு போன்ற ஒளி வீசும் பெண்

2387. **சண்பகம்**
(01) திருமால் கோயில்களில் வளர்க்கப்படும் மரவகை
(02) தேனீக்கள் மொய்க்காத சண்பக மலர்
(03) மிகுந்த மணமுள்ள சண்பக மலர்

2388. **சண்பையர்கோன்**
(01) சிவனியரான திருஞானசம்பந்தர்

2389. **சத்தன்**
(01) ஆற்றலுள்ளவன்
(02) உருவிலியான சிவன்

2390. **சத்தி**
(01) ஆற்றலுடையவள்
(02) சிவனருள் கொண்டவள்
(03) உமையவள்
(04) மலைமகள்
(05) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான சத்திநாயனார்

2391. **சத்திநாதன்**
(01) பொன்னிறமுடையவன்
(02) கழகக் காலப் புலவர் ஒருவர்

2392. **சத்திமான்**
(01) வலிவுள்ளவன்

2393. **சத்தியான்**
(01) முருகன்

2394. **சத்திரி**
(01) யானை போன்ற வலிமையுடையவன்

2395. **சத்திரியன்**
(01) யானை போன்ற வலிமையுடையவன்

2396. **சத்துகன்**
(01) வன்னிமரம் போன்று வலிமையானவன்

2397. **சத்துவன்**
(01) வலிமையானவன்

2398. **சதன்**
(01) சந்தனம் போல் மணமுள்ளவன்

2399. **சதானன்**
(01) பருத்தி போன்ற வெண்மையும், மென்மையும் கொண்டவன்

2400. **சதிமகள்**
(01) இந்திரன் மனைவி

2401. **சதிர்**
(01) திறமை வாய்ந்தவன்
(02) பெருமையானவன்
(03) அழகானவன்
(04) நாட்டியம் தெரிந்தவன்

2402. **சதிரன்**
(01) திறமை வாய்ந்தவன்
(02) பெருமையானவன்
(03) அழகானவன்
(04) நாட்டியம் தெரிந்தவன்

2403. **சதிரி**
(01) திறமை வாய்ந்தவன்
(02) பெருமையானவன்
(03) அழகானவன்
(04) நாட்டியம் தெரிந்தவன்

2404. **சதுமுகன்**
(01) அருகன்

2405. **சதுர்குணன்**
(01) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நாற்குணங்களையும் கொண்டவன்

2406. **சதுர்குணா**
(01) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நாற்குணங்களையும் கொண்டவன்

2407. **சதுர்குணாளன்**
(01) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நாற்குணங்களையும் கொண்டவன்

2408. **சதுர்ப்புயன்**
(01) நான்கு தோள்களையுடைய திருமால்
(02) சிவன்

2409. **சதுர்முகன்**
(01) அருகன்

2410. **சதுரப்பாடன்**
(01) திறமையுடையவன்
(02) பகுத்தறிவுடையவன்
(03) உடலுழைப்புடையவன்

2411. **சதுரன்**
(01) திறமை வாய்ந்தவன்
(02) பகுத்தறிவாளன்
(03) அறிவுடையவன்

2412. **சதுரானனன்**
(01) அருகன்

2413. **சந்தகன்**
(01) மகிழ்வானவன்
(02) சந்தனம் போல் மணப்பவன்

2414. **சந்தன்**
(01) அழகானவன்
(02) வடிவானவன்
(03) மகிழ்வானவன்
(04) மணமுள்ளவன்
(05) இசைஞன்
(06) இடையெழு வள்ளல்களுள் ஒருவன்

2415. **சந்தனம்**
(01) மணமுள்ளவன்
(02) தேர் போன்றவன்

2416. **சந்தனவத்தன்**
(01) சந்தனக் கட்டையிலிருந்து இறக்கிய நறுமண நீர் போன்றவன்

2417. **சந்தனவெற்பன்**
(01) சந்தன மரங்கள் வளரும் பொதியமலை போன்றவன்

2418. **சந்தான குரவன்**
(01) சிவனியக்கொண்முடியைப் பரவச் செய்த குரவர் நால்வரைக் குறிக்கும் பெயர்

2419. **சந்தானவஞ்சி**
(01) செவ்வாழை போன்ற இனிமை கொண்டவன்

2420. **சந்திக்கறுப்பன்**
(01) ஒரு சிறு தெய்வம்

2421. **சந்திமான்**
(01) மேன்மை பொருந்தியவன்
(02) இடையெழு வள்ளல்களுள் ஒருவன்

2422. **சந்திரகன்**
(01) மயிற்றோகைக் கண் போன்ற அழகன்

2423. **சந்திரன்**
(01) கருப்பூரம் போன்ற நறுமணமுள்ளவன்
(02) பொன் போன்று ஒளிர்பவன்

2424. **சந்தில்**
(01) காரி (சனி)
(02) காரிக்கிழமையன்று பிறந்தவன்

2425. **சந்திவீரப்பன்**
(01) ஒரு சிறு தெய்வம்

2426. **சந்துகி**
(01) துளசி

2427. **சம்பகம்**
(01) சண்பகம்

2428. **சம்பங்கி**
(01) சண்பகம்

2429. **சம்பந்தன்**
(01) தேவாரம் பாடிய மூவருள் ஒருவர்

2430. **சம்பவை**
(01) கொற்றவை

2431. **சம்பன்**
(01) எலுமிச்சை போன்றவன்

2432. **சம்பன்னன்**
(01) செல்வமுள்ளவன்
(02) நிறை குணத்தான்

2433. **சம்பாதி**
(01) அருணனின் மூத்த புதல்வன்
(02) சடாயுவின் தமையன்

2434. **சம்பாபதி**
(01) சம்புத் தீவைக் காவல் செய்யும் பெண் தெய்வம்
(02) காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவள்

2435. **சம்பாரி**
(01) சம்பன் என்ற அசுரனைக் கொன்ற இந்திரன்
(02) நெருப்புக்கடவுள்

2436. **சம்புவரையன்**
(01) வன்னியர்
(02) கள்ளர் பட்டப்பெயர்

2437. **சம்பை**
(01) மின்னல் போன்ற ஒளியுடையவள்
(02) செழிப்பானவள்

2438. **சமகன்**
(01) சிவனைப் போற்றிப் பாடும் மந்திரம் போன்றவன்

2439. **சமணன்**
(01) அருக மதத்தினன்

2440. **சமத்தன்**
(01) வல்லவன்
(02) நிறைவானவன்
(03) பக்குவம் நிறைந்தவன்

2441. **சமத்துவன்**
(01) அனைவரும் சமம் என்ற எண்ணம் கொண்டவன்

2442. **சமந்தன்**
(01) அமைச்சன்
(02) படைத்தலைவன்
(03) சிற்றரசன்

2443. **சமயமுதல்வி**
(01) சத்தி மதத்தின் தலைவியாகிய மலைமகள்

2444. **சமர்த்தன்**
(01) வல்லவன்
(02) நிறைவானவன்
(03) பக்குவம் நிறைந்தவன்

2445. **சமரசன்**
(01) நண்பன்
(02) நடுநிலையாளன்

2446. **சமரன்**
(01) போராளி
(02) போர்வீரன்
(03) கவரிமான் போன்றவன்

2447. **சமரி**
(01) போர்த் தெய்வமான கொற்றவை

2448. **சமன்**
(01) நடுவு நிலைமை தவறாதவன்
(02) கூற்றுவன்

2449. **சமனன்**
(01) தணிவானவன்
(02) பிறரை அமைதிப்படுத்துபவன்

2450. **சமனியன்**
(01) ஏற்றத் தாழ்வு பாராதவன்
(02) உயர்வு தாழ்வற்றவன்
(03) அனைவருக்கும் பொதுவானவன்

2451. **சமனை**
(01) சிவசத்தி

2452. **சமாலன்**
(01) மயிற்றோகை போன்ற அழகுடையவன்

2453. **சமிதன்**
(01) அமைதியானவன்

2454. **சமுனன்**
(01) தேக்கு போன்று உறுதியானவன்

2455. **சமைவன்**
(01) பொறுமை காப்பவன்
(02) படைப்பாளி
(03) நற்செயலாற்றுபவன்
(04) அனைவரையும் சமமாகப் பார்ப்பவன்

2456. **சமையணன்**
(01) ஒரு ஊர்த் தெய்வம்

2457. **சமையன்**
(01) பொறுமை காப்பவன்
(02) படைப்பாளி
(03) நற்செயலாற்றுபவன்
(04) அனைவரையும் சமமாகப் பார்ப்பவன்

2458. **சயகன்**
(01) பூவரும்பு போன்ற மெல்லிய உடலும் உள்ளமும் கொண்டவன

2459. **சயந்திகன்**
(01) இருவாட்சி மலர் போன்றவன்

2460. **சயன்**
(01) பெருமை வாய்நதவர்களுடன் கூடி வாழ்பவன்
(02) சருக்கரை போன்று இனிமையானவன்
(03) ஆம்பல் மலர் போன்று அழகுறத் திகழ்பவன்

2461. **சயிக்கன்**
(01) மென்மையானவன்
(02) அரச மரம் போன்று உயர்வானவன்

2462. **சயிந்தவன்**
(01) குதிரை போன்ற வலிமையும் வேகமும் உடையவன்
(02) தலைமைப் பொறுப்பேற்பவன்

2463. **சர்க்கன்**
(01) படைப்பாளி

2464. **சர்ப்பன்**
(01) வேகமாக நடப்பவன்
(02) விரைந்து செயல்படுபவன்

2465. **சரக்கன்**
(01) பரந்து பட்ட அறிவுடையவன்
(02) அனைத்தைப் பற்றியும் அறிந்து வைத்திருப்பவன்

2466. **சரகதி**
(01) அம்பு போற் செல்வதான குதிரை போன்று வேகமான செயல்பாடு உடையவன்

2467. **சரகன்**
(01) தேனீ போலும், வண்டு போலும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு வாழ்பவன்

2468. **சரண்**

(01) அடைக்கலமாக விளங்குபவன்
(02) மருதநில நகரைச் சேர்ந்தவன்
(03) அரசமரம் போன்று வலிமையானவன்
(04) எளியோரின் காவலாக விளங்குபவன்
(05) மயிற்றோகை போன்ற அழகுடையவன்
(06) வீரச் சிவனிய (சைவ) சமயத்தைச் சேர்ந்தவன்

2469. **சரணன்**

(01) அடைக்கலமாக விளங்குபவன்
(02) மருதநில நகரைச் சேர்ந்தவன்
(03) அரசமரம் போன்று வலிமையானவன்
(04) எளியோரின் காவலாக விளங்குபவன்
(05) மயிற்றோகை போன்ற அழகுடையவன்
(06) வீரச் சிவனிய (சைவ) சமயத்தைச் சேர்ந்தவன்

2470. **சரணா**

(01) அடைக்கலமாக விளங்குபவன்
(02) மருதநில நகரைச் சேர்ந்தவன்
(03) அரசமரம் போன்று வலிமையானவன்
(04) எளியோரின் காவலாக விளங்குபவன்
(05) மயிற்றோகை போன்ற அழகுடையவன்
(06) வீரச் சிவனிய (சைவ) சமயத்தைச் சேர்ந்தவன்

2471. **சரணியன்**

(01) அடைக்கலமாக விளங்குபவன்
(02) மருதநில நகரைச் சேர்ந்தவன்
(03) அரசமரம் போன்று வலிமையானவன்
(04) எளியோரின் காவலாக விளங்குபவன்
(05) மயிற்றோகை போன்ற அழகுடையவன்
(06) வீரச் சிவனிய (சைவ) சமயத்தைச் சேர்ந்தவன்

2472. **சரபன்**

(01) வரையாடு போன்று ஆபத்திலிருந்து தம்மை இயல்பாகக் காத்துக் கொள்பவன்
(02) அரிமாவையும் கொல்லத்தக்க கூரிய உகிர் கொண்டதாகக் கருதப்படும் பறவை போன்று வலிமையானவன்
(03) ஒட்டகம் போன்று நீரற்ற பாலைவனத்திலும் வாழத் தெரிந்தவன்
(04) கடினமான சூழலிலும், ஆபத்துகளை வென்று வெற்றிகரமாக வாழ்பவன்

2473. **சரலிங்கன்**

(01) ஒவ்வொரு சிவன் கோயிலுக்கும் சென்று சிவனை வழிபடும் சிவத் தொண்டன்

2474. **சரவண்**

(01) அம்பெய்வதில் வல்லவன்

2475. **சரவணன்**

(01) நாணல் போன்ற உறுதியும், தேவைப் படும் போது வளைந்து கொடுக்கும் தன்மையும் கொண்டு வெற்றிகரமாக வாழ்பவன்

2476. **சரவுருவன்**

(01) சிவனடியான்

2477. **சரளன்**

(01) எளிமையானவன்
(02) ஒழுங்குடையவன்

2478. **சரன்**
(01) வில்லினின்று வேகமாக வெளிப்பட்டு அம்பு போல வெற்றி கொள்ளும் தன்மையுள்ளவன்
(02) நீரூற்று போன்ற தீராக் கொடையுள்ளம் கொண்டவன்
(03) போர் மறவன்
(04) வில்லாளன்
(05) தனிமையை விரும்புபவன்
(06) பலவிடங்களுக்கும் சென்று செய்தி திரட்டுபவன்
(07) செய்தியாளன்

2479. **சராகன்**
(01) வண்டு போல சுறுசுறுப்பான செயல்பாடுடையவன்
(02) நேர் வழியில் செல்பவன்

2480. **சராங்கன்**
(01) நிறைந்த உள்ளமுடையவன்
(02) தடையற்ற சொல் வன்மையுள்ளவன்
(03) தடையற்ற எண்ணவோட்டம் கொண்டவன்
(04) நேர்மையாளன்

2481. **சராசரன்**
(01) பேரண்டம் போன்று பரந்து விரிந்த எண்ணங்கொண்டவன்

2482. **சராவன்**
(01) மெல்லிய நீண்ட உடலுடையவன்
(02) அகல் போன்றவன்

2483. **சரிகன்**
(01) மலைச்சாரலில் வாழ்பவன்(ள்)
(02) ஒழுங்கு நிறைந்தவன்
(03) வளையணிந்தவள்(ன்)
(04) நன்னடத்தை கொண்டவன்
(05) தகுதியானவன்
(06) சீரான எண்ணமும், செயல்பாடும் உடையவன்
(07) பிழைபாடற்ற நிலையும் சரி நேரத் தன்மையுங்கொண்டவன்

2484. **சரிசன்**
(01) அசோக மரம் போன்று நெடிதுயர்ந்தவன்

2485. **சரிபன்**
(01) அசோக மரம் போன்று நெடிதுயர்ந்தவன்

2486. **சரிதன்**
(01) செயலிற் சிறந்தவன்

2487. **சரிநிகரன்**
(01) தன்மை, நிலை மற்றும் முறை போன்றவற்றில் சமத்தன்மை பூண்டு ஒழுகுபவன்

2488. **சரிநிகரவன்**
(01) தன்மை, நிலை மற்றும் முறை போன்றவற்றில் சமத்தன்மை பூண்டு ஒழுகுபவன்

2489. **சரிமணி**
(01) மகளிர் இடையில் அணியும் ஓரணிகலன் போன்று பொலிவானவள்

2490. **சருக்கன்**
(01) படைப்பாளி

2491. **சல்லகண்டன்**
(01) புறா போன்றவன்

2492. **சல்லியன்**
(01) அம்பெய்துவதில் வல்லவன்
(02) மாயக்கலையில் வல்லவன்
(03) வெள்ளிக்கிழமை பிறந்தவன்

2493. **சல்லியாதேவி**
(01) ஒரு சிறு தேவதை

2494. **சலசன்**
(01) நீரில் மலரும் தாமரை போன்றவன்
(02) நீருக்குள் குளித்தெடுக்கப்படும் முத்து போன்றவன்

2495. **சலசை**
(01) திருமகள்

2496. **சலசா**
(01) திருமகள்

2497. **சலம்புரி**
(01) சங்கு போன்ற வெண்மையும், தூய்மையும் கொண்டவன்

2498. **சலவன்**
(01) நெய்தல் நிலத்தில் பிறந்தவன்

2499. **சலன்**
(01) இயங்குவதற்கு ஏற்றதாகவிருக்கும் வலிமையான கால்களையுடையவன்

2500. **சலனன்**
(01) அசைந்தாடும் காற்று போன்றவன்

2501. **சலா**
(01) பழங்காலத்தில் நீர்க் கடவுளாகக் கருதப்பட்ட நாட்டுப்புறத் தெய்வம்

2502. **சலாபன்**
(01) முத்துக் குளிப்பவன்

2503. **சவரன்**
(01) காடு மலைகளில் வாழ்பவன்
(02) பாலை நிலத்தினன்
(03) பாலை நிலைத்தலைவன்
(04) குறவன்
(05) மாகுலவன்
(06) குன்றவன்
(07) மறவன்
(08) கானவன்
(09) கொலைஞன்
(10) குருடன்
(11) பொறையிலான்
(12) எயினன்
(13) வேடன்

2504. **சவரி**
(01) கவரிமான் போன்ற பெண்
(02) வேடரினப்பெண்

2505. **சவரிமான்**
(01) கவரிமான் போன்ற பெண்
(02) வேடரினப்பெண்

2506. **சவலைமதி**
(01) இளம்பிறை போன்றவள்

2507. **சவலைவெண்பா**
(01) தனிச்சொல் இன்றி இரண்டு குறட்பாக்களை இணைத்துச் செய்யப்படும் வெண்பா போன்று இனிமையானவள்

2508. **சவனன்**
(01) வேகமான செயல்பாடுடையவன்

2509. **சவிதன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) அழகு வாய்ந்தவன்
(03) நேர்மையாளன்
(04) வல்லமை நிறைந்தவன்
(05) செவ்வியன்

2510. **சவியன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) அழகு வாய்ந்தவன்
(03) நேர்மையாளன்
(04) வல்லமை நிறைந்தவன்
(05) செவ்வியன்

2511. **சவுரி**
(01) திருமால்

2512. **சவைமகன்**
(01) ஆடவை ஓரை (மிதுன ராசி)யிற் பிறந்த மகன்

2513. **சன்னன்**
(01) வெள்ளை நிறத்தவன்
(02) நுண்மையானவன்
(03) நேர்மையானவன்

2514. **சனனி**
(01) மல்லிகை மலர் போன்றவள்

2515. **சனிகா**
(01) பெண்

2516. **சனிகை**
(01) பெண்

# சா

2517. **சாக்கையன்**
(01) கோயிலிலும் அரண்மனையிலும் ஆடல் மற்றும் பாடல் கலை நிகழ்த்துபவன்
(02) கணியன்

2518. **சாகசன்**
(01) துணிவுள்ளவன்

2519. **சாகமன்**
(01) அசோக மரம் போன்று நெடிதுயர்ந்தவன்
(02) அரச மரம் போன்று வலியவன்
(03) தேனீ போன்று சுறுசுறுப்பானவன்
(04) தேக்கு போன்று உறுதியானவன்

2520. **சாகாடச் சிற்றன்**
(01) ஆநிரை மீட்ட கரந்தைப் போர் வீரன்

2521. **சாகுலிகன்**
(01) மீனவன்

2522. **சாங்கன்**
(01) ஒழுங்கு நிறைந்தவன்

2523. **சாங்கிமன்**
(01) மருதயாழ்
(02) இசை வல்லுநன்

2524. **சாசன்**
(01) அசோகமரம் போன்று நெடிதுயர்ந்தவன்

2525. **சாணங்கன்**
(01) துளசி போன்று தூய்மையானவன்

2526. **சாத்தந்தையான்**
(01) கடைக் கழகப் புலவர்

2527. **சாத்தன்**
(01) வணிகர் குலத்தைச் சேர்ந்த புலவர்
(02) நாஞ்சில் நாட்டையாண்ட தலைவன் நாஞ்சில் வள்ளுவன்
(03) குதிரை வீரன்
(04) சாத்தன் என்னும் தெய்வம்
(05) அருகன்
(06) புத்தன்
(07) வணிகஞ் செய்யும் குடியினன்

**2528. சாத்துவன்**

(01) வணிகர் குலத்தைச் சேர்ந்த புலவர்
(02) நாஞ்சில் நாட்டையாண்ட தலைவன் நாஞ்சில் வள்ளுவன்
(03) குதிரை வீரன்
(04) சாத்தன் என்னும் தெய்வம்
(05) அருகன்
(06) புத்தன்
(07) வணிகஞ் செய்யும் குடியினன்

**2529. சாத்துவான்**

(01) வணிகர் குலத்தைச் சேர்ந்த புலவர்
(02) நாஞ்சில் நாட்டையாண்ட தலைவன் நாஞ்சில் வள்ளுவன்
(03) குதிரை வீரன்
(04) சாத்தன் என்னும் தெய்வம்
(05) அருகன்
(06) புத்தன்
(07) வணிகஞ் செய்யும் குடியினன்

**2530. சாதகப்புள்**

(01) வானத்தினின்று விழும் மழைத்துளியைப் பருகி வாழ்வதாகக் கருதப்படும் பறவை
(02) வானம்பாடி

**2531. சாதகும்பன்**

(01) பொன் போன்று பொலிபவன்

**2532. சாதகை**

(01) பொன் போன்று பொலிபவன்

**2533. சாதிகன்**

(01) முருங்கை மரம் போன்று எல்லோருக்கும் பயனாயிருப்பவன்

**2534. சாதுவன்**

(01) வணிகர் குலத்தைச் சேர்ந்த புலவர்
(02) நாஞ்சில் நாட்டையாண்ட தலைவன் நாஞ்சில் வள்ளுவன்
(03) குதிரை வீரன்
(04) சாத்தன் என்னும் தெய்வம்
(05) அருகன்
(06) புத்தன்
(07) வணிகஞ் செய்யும் குடியினன்
(08) நல்லவன்
(09) ஐம்புலன்களையும் கட்டுப் படுத்துபவன்

**2535. சாந்தன்**

(01) அமைதியானவன்
(02) அருகன்
(03) புத்தன்
(04) சந்தனம் போன்ற நறுமணமுள்ளவன்

**2536. சாந்தை**

(01) மலைமகள்

**2537. சாபன்**

(01) வில்லாளன்
(02) வானவில் போன்ற அழகுடையவன்
(03) சிலை ஓரை (தனுசு ராசி) யில் பிறந்தவன்

2538. **சாம்பசிவன்**
(01) அருகம்புல் போன்று தூயவன்
(02) அம்பிகையுடன் உறைகிற சிவன்

2539. **சாம்பன்**
(01) சிவன்

2540. **சாம்பு**
(01) பொன் போன்றவன்

2541. **சாமசன்**
(01) யானை போன்ற கரு நிறத்தான்
(02) வலியவன்

2542. **சாமந்தன்**
(01) அமைச்சன்
(02) படைத்தலைவன்
(03) சிற்றரசன்

2543. **சாமந்தி**
(01) சாமந்திப் பூ போன்றவள்
(02) செவ்வந்திப் பூ

2544. **சாமன்**
(01) கருநிறத்தான்
(02) அறிவன் (புதன்) நாளன்று பிறந்தவன்
(03) சிவன்
(04) காமனின் தம்பி

2545. **சாமுண்டி**
(01) கொற்றவை

2546. **சாய்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) அழகு நிறைந்தவன்
(03) புகழ் வாய்ந்தவன்

2547. **சாயகன்**
(01) அம்பு போல் பாய்ந்து தீயவரை வீழ்த்துபவன்

2548. **சாயலன்**
(01) அழகு வாய்ந்தவன்
(02) மஞ்சள் நிற மேனியன்
(03) மேம்பாடுடையவன்
(04) அருள் நிறைந்தவன்
(05) மென்மையுடையவன்
(06) காவிரிப் பூம்பட்டினத்து வாழ்ந்த ஒரு வணிகன் பெயர்
(07) நல்ல தலைமுடி உடையவன்

2549. **சார்த்தவகன்**
(01) வாணிகன்

2550. **சார்பாதன்**
(01) படிகம் போல் சார்ந்ததன் வண்ணமாகிய ஆதன்

2551. **சார்போதன்**
(01) படிகம் போல் சார்ந்ததன் வண்ணமாகிய ஆதன்

2552. **சாரகன்**
(01) தேன் போல் இனியவன்

2553. **சாரல் நாடன்**
(01) சேரன்
(02) மலையடிவார நாடன்
(03) மலைச் சரிவிலுள்ள நாட்டரசன்
(04) பார்க்க: **நாடன்**
(05) பின்னொட்டுப் பெயர்கள்

2554. **சாரவன்**
(01) சேரன்
(02) மலையடிவார நாடன்
(03) மலைச் சரிவிலுள்ள நாட்டரசன்

2555. **சாரன்**
(01) இனிமையானவன்
(02) சிறந்தவன்
(03) பயனாய் வாழ்பவன்
(04) ஆற்றல் வல்லான்
(05) நண்பன்

2556. **சாரிகன்**
(01) கவசம் போல் பாதுகாப்பளிப்பவன்

2557. **சாரியன்**
(01) ஒழுக்கமுடையவன்

2558. **சாரு**
(01) அழகு வாய்ந்தவள்
(02) கிளி போன்றவள்

2559. **சால்பன்**
(01) மேன்மையானவன்
(02) நற்குணத்தான்
(03) சான்றாண்மையாளன்
(04) கற்றவன்

2560. **சாலன்**
(01) நெய்தல் நிலமகன்

2561. **சாலா**
(01) பழங்காலத்தில் நீர்க் கடவுளாகக் கருதப்பட்ட நாட்டுப்புறத் தெய்வம்

2562. **சாலிகன்**
(01) நெய்வோன்

2563. **சாலியன்**
(01) நெய்வோன்

2564. **சாலூரன்**
(01) மேன்மை பொருந்தியவன்

2565. **சாலேகன்**
(01) சந்தனம் போலும், சிந்தூரம் போலும் நறுமணம் மிக்கவன்
(02) அரும்பு போன்று மென்மையானவன்

2566. **சாவகன்**

(01) காரிக் (சனிக்) கிழமையிற் பிறந்தவன்

2567. **சான்றாளன்**

(01) எல்லாவற்றிற்கும் சான்றாய் விளங்கும் இறைவன்

2568. **சான்றோன்**

(01) அறிவொழுக்கங்களாற் சிறந்தவன்
(02) மாழ்கு விண்மீனில் (மிருகசீரிடம் நட்சத்திரத்தில்) பிறந்தவன்
(03) கதிரவன்

# சி

2569. **சிக்கன்**
(01) மெலிந்த உடலுடையவன்
(02) வெள்ளி போன்ற ஒளிர் வண்ணமுடையவன்

2570. **சிக்கனவன்**
(01) திண்மையானவன்
(02) வலிமையானவன்
(03) உளவன்மையுடையவன்
(04) உளவுறுதி கொண்டவன்
(05) சிக்கனமானவன்

2571. **சிக்குரன்**
(01) முருங்கை மரம் போன்று பயனளிப்பவன்

2572. **சிகலன்**
(01) தொழில் நுணுக்கம் அறிந்தவன்
(02) செயல்வீரன்

2573. **சிங்களாந்தகன்**
(01) ஈழத்தை வென்ற சோழ மன்னன்

2574. **சிங்கன்**
(01) குறவர் குடியினன்

2575. **சிங்காரன்**
(01) செந்நிறமுடையவன்

2576. **சிங்கினி**
(01) வில்லாளி

2577. **சிங்கையாரியன்**
(01) யாழ்ப்பாணத்தையாண்ட தமிழரசர் பெயர்

2578. **சிசுகன்**
(01) முதலை, திமிங்கலம் போன்று வலிமையானவன்

2579. **சிட்டன்**
(01) பெருமை வாய்ந்தவன்
(02) மதிப்பானவன்
(03) மரியாதைக்குரியவன்

2580. **சித்தன்**
(01) உளவலிமையுடையவன்
(02) உறுதிப்பாடுடையவன்
(03) திடமானவன்
(04) ஓகத்தின் மூலம் உலகையுணரும் நுண்ணறிவு பெற்றவன்
(05) முழு அருளையடைந்தவன்
(06) எண் பெரும் பேறடைந்தோன்
(07) முருகன்
(08) வைரவன்
(09) அருகன்
(10) சிவன்
(11) பிள்ளையார்
(12) வியாழனன்று பிறந்தவன்
(13) நேர்மையானவன்

2581. **சித்தாந்தன்**
(01) சிவன்

2582. **சித்தாந்தி**
(01) தன் கொள்கையை நாட்டுபவன்
(02) வான நூல் கற்றவன்
(03) கணக்கியலாளன்
(04) சிவன்
(05) கொண்முடி மரபைச் சார்ந்தவன்

2583. **சித்திக்கண்ணன்**
(01) அறிவுக்கண் கொண்டவன்

2584. **சித்திரக்கவி**
(01) நால்வகைப் பாக்களுள் ஒன்றான சித்திரப்பா பாடுவோன்

2585. **சித்திரப்புறா**
(01) புள்ளிப் புறா போன்ற அழகுடையவள்

2586. **சித்திரமேகலை**
(01) மயில் போன்ற அழகுடையவள்

2587. **சித்திரன்**
(01) ஓவியம் போன்ற அழகுடையவன்
(02) சிறப்புடையவன்
(03) அணியழகுடையவன்
(04) வியப்புக்குரியவன்
(05) புலி போன்ற வலிமை கொண்டவன்

2588. **சித்திரிகன்**
(01) ஓவியன்

2589. **சித்திரையன்**
(01) பதினான்காம் விண்மீனாகிய நெய்ம்மீனில் பிறந்தவன்
(02) மேழ மாதத்தில் பிறந்தவன்

2590. **சித்திலன்**
(01) அறிவாளி

2591. **சித்து**
(01) அறிவுடையவன்
(02) ஆதன்
(03) வெற்றியாளன்

2592. **சித்துரு**
(01) அறிவு வடிவான கடவுள்

2593. **சித்தை**
(01) மலைமகள்

2594. **சிதம்பரம்**
(01) சிவனுறை தில்லை மரங்கள் நிறைந்த சிற்றம்பலம்
(02) சிவன்

2595. **சிதம்பரன்**
(01) சிவன்

2596. **சிதரன்**
(01) மழைத்துளி போன்ற மென்மையும், குளிர்ச்சியும், தூய்மையும் கொண்டவன்
(02) வண்டு போன்று சுறுசுறுப்பானவன்

2597. **சிதன்**
(01) வெண்மையானவன்
(02) வெள்ளி போன்று பொலிபவன்
(03) வெள்ளிக்கிழமை பிறந்தவன்
(04) விண்மீன் போன்று ஒளிர்பவன்
(05) அறிவுடையவன்
(06) நறுமணமுடையவன்

2598. **சிந்தடி**
(01) முச்சீரடியில் அமைந்த தமிழ்ப்பா

2599. **சிந்தன்**
(01) குட்டையும் இன்றி, நெட்டையும் இன்றி சரியான உயரமுடையவன்
(02) அறிவுடையவன்
(03) சிறந்த எண்ணவோட்டம் உடையவன்
(04) எண்ணியதை அடையும் திறம் வாய்ந்தவன்

2600. **சிந்தாதேவி**
(01) மதுரையில் பழங்காலத்தில் வணங்கப்பட்டு வந்த கலைமகள்

2601. **சிந்தாமணி**
(01) ஒளி குன்றாத மணி போன்றவள்
(02) விரும்பியவனைத்தும் கொடுக்க வல்லதாகக் கருதப்படும் தெய்வமணி

2602. **சிந்திதன்**
(01) அனைவராலும் அன்புடன் நினைக்கப்படுபவன்

2603. **சிந்தியன்**
(01) அனைவராலும் அன்புடன் நினைக்கப்படுபவன்

2604. **சிந்து**
(01) முச்சீரடியில் அமைந்த தமிழ்ப்பா போன்ற பெண்
(02) கடல் போல் பரந்து விரிந்தவள்
(03) ஆறுபோல் கரை புரண்டோடுபவள்
(04) பெரும்பண்களுள் ஒன்று
(05) விலை மதிப்பற்ற வைடூரியம் எனப்படும் மணி போன்றவள்
(06) இருவாட்சி மலர் போன்றவள்

2605. **சிந்துரன்**
(01) செந்நிறமுடையவன்
(02) வெட்சிப் பூ போன்றவன்
(03) யானை போன்ற வலிமையுடையவன்
(04) நெற்றியில் வைக்கப்படும் பொட்டு போன்று உயர்வுடையவன்
(05) பவளம் போன்று பொலிபவன்

2606. **சிந்துரை**
(01) இந்திரனின் வெள்ளையானையால் வளர்க்கப்பட்டதாகக் கூறப்படும் தெய்வயானை
(02) முருகனின் மனைவியான தெய்வயானை

2607. **சிந்துவாரி**
(01) பெருங்கடல் போன்று பரந்து விரிந்தவள்

2608. **சிந்தூரன்**
(01) செந்நிறமுடையவன்
(02) வெட்சிப் பூ போன்றவன்
(03) யானை போன்ற வலிமையுடையவன்
(04) நெற்றியில் வைக்கப்படும் பொட்டு போன்று உயர்வுடையவன்
(05) பவளம் போன்று பொலிபவன்

2609. **சிந்தை கூரியன்**
(01) அறிவுக் கூர்மையுள்ளவன்
(02) அறிவன் (புதன்) கிழமை பிறந்தவன்

2610. **சிப்பன்**
(01) சிற்பம் போன்ற அழகுடையவன்

2611. **சிப்பியன்**
(01) சிற்பம் போன்ற அழகுடையவன்

2612. **சிபி**
(01) வள்ளன்மையிற் பேர் பெற்ற கதிரவ குல மன்னன்

2613. **சிமயன்**
(01) பனிமலையான இமயம் போன்ற உயர்வும் குளிர்ச்சியும் கொண்டவன்
(02) பொதிய மலை போன்ற அழகும் சிறப்பும் உடையவன்

2614. **சிமன்**
(01) எல்லாமாக விளங்குபவன்

2615. **சிமிகன்**
(01) கிளி போன்ற மொழியும், அழகும் உடையவன்

2616. **சிமிலன்**
(01) மலை போன்ற உயர்வுடையவன்
(02) குன்றிருக்கும் ஊரில் பிறந்து வாழ்பவன்

2617. **சிமையன்**
(01) பனிமலையான இமயம் போன்ற உயர்வும் குளிர்ச்சியும் கொண்டவன்
(02) பொதிய மலை போன்ற அழகும் சிறப்பும் உடையவன்

2618. **சிரகன்**
(01) மழைத் துளி போன்றவன்
(02) தூய்மையான சருக்கரை போன்று இனிமையும் தூய்மையும் கொண்டவன்

2619. **சிரபுரன்**
(01) சீர்காழி ஊரைச் சேர்ந்தவன்

2620. **சிரலன்**
(01) சிச்சிலிப் பறவை (kingfisher) போன்ற அழகுடையவன்

2621. **சிருகன்**
(01) அம்பு போல் வேகமாகச் செயல்படுபவன்
(02) காற்றாக வீசுபவன்
(03) தாமரை மலர் போன்ற அழகுடையவன்

2622. **சிருங்கன்**
(01) பொன் போல் பொலிபவன்

2623. **சில்மொழி**
(01) மென்மையாகப் பேசுபவள்
(02) இனிமையாகப் பேசுபவள்

2624. **சில்லன்**
(01) குளிர்ச்சியானவன்
(02) தென்றல் போன்றவன்
(03) வேடர் குடியினன்

2625. **சில்லான்**
(01) தெருக் கூத்தில் இசைக்கப்படும் இசைக்கருவி

2626. **சிலதன்**
(01) மருத நிலத்தில் வாழ்பவன்
(02) தோழன்

2627. **சிலப்பதிகாரன்**
(01) சிலப்பதிகாரம் இலக்கியம் போன்று பெருமை வாய்ந்தவன்

2628. **சிலம்பன்**
(01) குறிஞ்சி நிலத்தலைவன்
(02) முருகன்
(03) காவேரியாற்றில் பொங்கிப் பெருகும் புது வெள்ளம் போன்று ஆர்ப்பரிப்பவன்
(04) முல்லை நிலத் தலைவன்

2629. **சிலவன்**
(01) பாலை நிலத்தவன்
(02) வேடர் குடியினன்

2630. **சிலவிரிஞ்சன்**
(01) தாமரை மலர் போன்றவன்

2631. **சிலாஞ்சனன்**
(01) நீலமணி போல் பொலிபவன்

2632. **சிலாதன்**
(01) நந்தி தேவரின் தந்தையாகக் கூறப்படுபவர் பெயர்

2633. **சிலாபன்**
(01) முத்துக் குளிப்பவன்

2634. **சிலாவி**
(01) சிற்பக்கலை வல்லுநன்

2635. **சிலை**
(01) சிலையோரையிற் (தனுசு ராசி) பிறந்தவன்
(02) குருகு விண்மீனில் (மூல நட்சத்திரம்) பிறந்தவன்
(03) வானவில் போல அழகுற ஒளிர்பவன்
(04) ஒளி மிகுந்தவன்

2636. **சிலையரசன்**
(01) மணிகளுள் அரசனாக விளங்கும் வைரம்

2637. **சிவக்குறி**
(01) சிவனியர் வழிபடும் சிவனுருவம்

2638. **சிவகணம்**
(01) சிவபெருமானின் திருவருட் கூட்டத்தினருள் ஒருவன்

2639. **சிவகண முதல்வன்**
(01) சிவகணங்களின் தலைவரான நந்தி தேவன்

2640. **சிவகதி**
(01) வீடு பேறு அடைபவன்

2641. **சிவகதிக்கிறைவன்**
(01) சிவ கதிக்குத் தலைவனாகக் கருதப்படும் அருகன்

2642. **சிவகாமி**
(01) சிதம்பரத்தில் வழிபடப்பெறும் அம்மனாகிய பார்வதி

2643. **சிவங்கரன்**
(01) ஆதனுக்குப் பேரின்பப் பெருவாழ்வை வழங்குவதாகக் கூறப்படும் சிவன்

2644. **சிவங்கரி**
(01) மங்கலந் தருபவளாகக் கருதப்படும் மலைமகள் பார்வதி

2645. **சிவசன்**
(01) சிவனிடம் பிறந்ததாகக் கூறப்படும் சுக்கிரன்

2646. **சிவசித்தன்**
(01) சிவனிய சமயத்திற் கூறியவாறு கட்டுகளினின்று நீங்கி, பரமுத்தியை அடைபவன்

3331. **தாபரன்**
(01) எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் உள்ளவன்

3332. **தாபனன்**
(01) கதிரவன்

3333. **தாம்பிரவருணி**
(01) தாமிரபருணியாறு பாயும் நெல்லையில் பிறந்த பெண்

3334. **தாம்பிரவன்னி**
(01) தாமிரபருணியாறு பாயும் நெல்லையில் பிறந்த பெண்

3335. **தாம்பிரை**
(01) தாமரை போன்ற அழகிய நறுமணமுள்ள பெண்

3336. **தாமத்தர்**
(01) திருக்குறள் உரையாசிரியர்களுள் ஒருவர்

3337. **தாமன்**
(01) யானை போன்றவன்
(02) மருத நிலத்தூரில் பிறந்தவன்
(03) மலை போன்றவன்
(04) ஒளி மிகுந்தவன்
(05) கதிரவன்
(06) புகழ் நிறைந்தவன்
(07) சந்தனம் போல் மணப்பவன்

3338. **தாமரசன்**
(01) செந்தாமரை போன்றவன்
(02) பொன் போல் ஒளிர்பவன்

3339. **தாமரன்**
(01) நீர் போல் பயனளிப்பவன்
(02) நெய் போன்றவன்

3340. **தாமரை**
(01) தாமரை மலர் போன்றவள்

3341. **தாமரைக் கண்ணன்**
(01) தாமரை போன்ற கண்களையுடையவன்
(02) திருமால்

3342. **தாமரைக் கண்ணான்**
(01) தாமரை போன்ற கண்களையுடையவன்
(02) திருமால்

3343. **தாமரைக் கண்ணாள்**
(01) தாமரை போன்ற கண்களையுடையவள்

3344. **தாமரையான்**
(01) தாமரை போன்ற கண்களையுடையவன்
(02) திருமால்

3345. **தாமரைச் செல்வி**
(01) தாமரையில் உறைபவளாகக் கருதப்படும் திருமகள்

3346. **தாமரைச் சேயவள்**
(01) தாமரையில் உறைபவளாகக் கருதப்படும் திருமகள்

3347. **தாமரையாள்**
(01) தாமரையில் உறைபவளாகக் கருதப்படும் திருமகள்

3348. **தாமரை நண்பன்**
(01) கதிரவன்

3349. **தாமரை நாதன்**
(01) கதிரவன்

3350. **தாமரை நாயகன்**
(01) கதிரவன்

3351. **தாமரைப் பூந்தேன்**
(01) தாமரைப் பூவில் காணப்படும் இனிப்பும், மருத்துவ குணமும் கொண்ட தேன் போன்றவள்

3352. **தாமரை முகை**
(01) இன்னும் மலராத தாமரை மொட்டு போன்ற பெண்

3353. **தாமரை மொட்டு**
(01) இன்னும் மலராத தாமரை மொட்டு போன்ற பெண்

3354. **தாமான்**
(01) தாவிச் செல்லும் மான், குதிரை போன்ற வேகமும் சுறுசுறுப்பும் உடையவன்

3355. **தாமிரகன்**
(01) செஞ்சந்தனம் போன்று மணப்பவன்

3356. **தாமிரன்**
(01) மந்தாரை மலர் போன்றவன்
(02) வேங்கை மரம் போன்ற உறுதி கொண்டவன்

3357. **தாயன்**
(01) சிவத்தொண்டர் ஒருவர் பெயர் (அரிவாட்டாய நாயனார்)
(02) தாய் போன்றவன்

3358. **தாயுமானவன்**
(01) சிவன்
(02) ஒரு சைவப் பெரியார் பெயர்

3359. **தார்க்கியன்**
(01) கருடன்

3360. **தாரைக்கியன்**
(01) கருடன்

3361. **தாரகசித்து**
(01) அருள்தரும் முருகன்

3362. **தாரகற்செற்றோன்**
(01) அருள்தரும் முருகன்

3363. **தாருகசித்து**
(01) அருள்தரும் முருகன்

3364. **தாரகன்**
(01) துன்பங்களினின்று விடுபட உதவுபவன்
(02) விண்மீன் போன்றவன்
(03) ஆதாரமாக விளங்குபவன் (இறைவன்)

3365. **தாரகாபதி**
(01) விண்மீன் மண்டலத் தலைவனாகக் கருதப்படும் நிலவன்

3366. **தாரகாரி**
(01) காளி

3367. **தாரகை**
(01) கண்மணி
(02) நிலமகள்

3368. **தாரணன்**
(01) குருகு (மூலம்) கவ்வை (ஆயில்யம்), தழல் (கேட்டை), யாழ் (திருவாதிரை) விண்மீன் நாளில் பிறந்தவன்

3369. **தாரணி**
(01) அனைத்து வளங்களையும் வாரி வழங்கும் மலை போன்றவள்

3370. **தாரணை**
(01) உள்ளத்தில் உறுதியுடைய பெண்

3371. **தாரதன்**
(01) கடல் போன்றவன்
(02) சிந்தூரம் போன்றவன்

3372. **தாரன்**
(01) கிடைத்தற்கரியவன்
(02) இசை போன்று இனிமையானவன்
(03) வெள்ளி போல் ஒளிர்பவன்
(04) விண்மீன் போன்றவன்
(05) முத்து போன்ற பளபளப்புடையவன்
(06) நாவன்மை மிக்கவன்
(07) ஆடவை ஓரை (மிதுன ராசி)யிற் பிறந்தவன்
(08) நீர் போன்ற குளிர்ச்சியும், பயனும் நிறைந்தவன்
(09) ஒன்றை வைத்திருப்பவன்
பார்க்க: **தாரன்**
(10) பின்னொட்டுப் பெயர்கள்

3373. **தாராங்கன்**
(01) அரசனிடமிருந்து பாராட்டும், பரிசும் பெறுபவன்
(02) மழைத்துளி போன்றவன்

3374. **தாராசரகன்**
(01) பெருமழை போன்றவன்

3375. **தாராசரன்**
(01) பெருமழை போன்றவன்

3376. **தாராதரன்**
(01) முகில் போன்றவன்

3377. **தாராதிபதி**
(01) நிலவன்

3378. **தாராயணன்**
(01) அரசமரம் போன்றவன்

3379. **தாராவணி**
(01) காற்று போன்றவள்

3380. **தாராளன்**
(01) மிகுந்த ஈகைத் தன்மையுடையவன்
(02) விரிவானவன்
(03) நிறைவானவன்
(04) வெளிப்படையானவன்
(05) திறமையாளன்
(06) உறுதியுடையவன்

3381. **தாராளிகன்**
(01) கொடையாளன்

3382. **தாரிணி**
(01) நிலமகள்

3383. **தாரிபாரி**
(01) நல்வழி அறிந்தவன்
(02) முழுமையான அறிவுடையவன்
(03) நல்லியல்புடையவன்
(04) தரம் நிறைந்தவன்

3384. **தாரின்வாழ்நன்**
(01) தார்நூலால் வாழ்க்கை நடத்தும் நெசவாளி

3385. **தாருகற்செற்றாள்**
(01) தாரகனைக் கொன்றதாகக் கூறப்படும் காளி

3386. **தாருகன்**
(01) கண்ணனின் தேரோட்டி
(02) காளியாற் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் ஓர் அசுரன்

3387. **தாருண்ணியன்**
(01) இளமையானவன்

3388. **தாரை**

(01) கண்மணி
(02) வியாழனின் மனைவியாகக் கூறப்படுபவள்
(03) வாலியின் மனைவி
(04) விண்மீன்
(05) ஒழுங்கு நிறைந்தவள்
(06) வழிகாட்டுபவள்
(07) பெருமழை போன்றவள்
(08) நாநயம் மிக்கவள்
(09) கூர்ந்த அறிவுடையவள்

3389. **தாயங்கண்ணன்**

(01) எருக்காட்டூர் தாயங்கண்ணனார் என்னும் புலவர்
(02) தாயன் என்பாரின் மகன் கண்ணன்

3390. **தாயங்கண்ணி**

(01) புலவர்
(02) தாயன் என்பாரின் மகள் கண்ணி

3391. **தாலன்**

(01) நா வன்மையுடையவன்
(02) நிலமகள்
(03) நிலவுலகம்
(04) தாலாட்டு போன்று இனிமையானவன்
(05) தேன் போன்று இனிமையானவன்

3392. **தாலங்கன்**

(01) பனை எழுதிய கொடியுடையோன்
(02) கண்ணனின் உடன்பிறப்பாகக் காட்டப்படும் பலராமன்

3393. **தாவசி**

(01) தவசி

3394. **தாவதன்**

(01) முனிவன்

3395. **தாவளன்**

(01) மருதநிலத்தூரில் பிறந்தவன்
(02) பற்றுக் கோடாக (ஆதரவாக) விளங்குபவன்

3396. **தாவேந்தன்**

(01) மன்னர் மன்னன்
(02) பெரும்வேந்தன்

3397. **தாழம்பூ**

(01) தாழையின் மலர்

3398. **தாழை மலர்**

(01) தாழையின் மலர்

3399. **தாழிகை**

(01) ஒருவகைப் பா

3400. **தாழிசை**

(01) ஒருவகைப் பா

3401. **தாழிகா**
(01) ஒருவகைப் பா

3402. **தாழை**
(01) தழைத்துப் படரும் செடி போன்றவள்
(02) தென்னை மரம் போன்று பயனானவள்
(03) தாழைமலர் போன்ற நறுமணமிக்கவள்

3403. **தாழைமடல்**
(01) தாழைப் பூவின் இதழ்

3404. **தாளகன்**
(01) அரிதாரம் பூசிய கலைஞன்

3405. **தாளாளன்**
(01) ஊக்கமுள்ளவன்
(02) வணிகன்

3406. **தானவன்**
(01) கொடையாளன்
(02) தனு என்பவனின் வழிமுறையினன்

3407. **தானைத்தலைவன்**
(01) படைத்தலைவன்

# தி

3408. **திக்கரன்**
(01) இளைஞன்

3409. **திக்கரி**
(01) குமரிப்பெண்

3410. **திக்கன்**
(01) மழகளிறு (இளம் யானை) போன்றவன்

3411. **திகழ்வன்**
(01) பேரொளி நிறைந்தவன்
(02) பொலிவுடன் இருப்பவன்

3412. **திங்கட்குடையோன்**
(01) நிலவைக் குடையாகக் கொண்ட காமவேள் (மன்மதன்)

3413. **திங்கட்குலன்**
(01) திங்கட்குலத்தவனாகிய பாண்டவன்

3414. **திங்கட்குழவி**
(01) பிறை நிலா

3415. **திங்கள்**
(01) நிலவு
(02) திங்கட்கிழமை பிறந்தவள்
(03) பன்னிரண்டாம் நாள் (தேதி) பிறந்தவள்

3416. **திசமிதன்**
(01) உள்ளத்தை அடக்கி வாழ்பவன்

3417. **திசிலன்**
(01) திங்கள்

3418. **திசைமுகன்**
(01) நான்முகன்

3419. **திசையன்**
(01) நாட்டுப் பற்றாளன்

3420. **திட்டாந்தன்**
(01) உறுதியுடையவன்

3421. **திட்பன்**
(01) சொல்லில் உறுதியுடையவன்
(02) வலிமையானவன்
(03) உள்ளவுறுதி கொண்டவன்

3422. **திடன்**
(01) வலிமையானவன்
(02) உறுதியானவன்
(03) கலங்கா நிலை கொண்டவன்
(04) உள்ளவுறுதியுடையவன்
(05) உண்மையானவன்
(06) நிலை தவறாதவன்

3423. **திடாரி**
(01) வலுவுள்ளவன்

3424. **திண்ணன்**
(01) வலியன்
(02) கண்ணப்ப நாயனாரின் இயற்பெயர்

3425. **திண்ணிமன்**
(01) உள்ளவுறுதியுடையவன்

3426. **திண்தேர்ச் செழியன்**
(01) பாண்டிய மன்னன்

3427. **திண்மன்**
(01) வலிமையானவன்
(02) உறுதியானவன்
(03) மெய்ம்மையுடையவன்
(04) கலங்கா நிலையுடையவன்

3428. **திண்மா**
(01) வலிமையானவன்
(02) உறுதியானவன்
(03) மெய்ம்மையுடையவன்
(04) கலங்கா நிலையுடையவன்

3429. **திணன்**
(01) வலிமையானவன்
(02) உறுதியானவன்
(03) மெய்ம்மையுடையவன்
(04) கலங்கா நிலையுடையவன்

3430. **திணா**
(01) வலிமையானவன்
(02) உறுதியானவன்
(03) மெய்ம்மையுடையவன்
(04) கலங்கா நிலையுடையவன்

3431. **திணிகன்**
(01) போர் வீரன்

3432. **தித்தன்**
(01) ஒளி வீசுபவன்
(02) பழங்கால சோழ அரசன் ஒருவன்

3433. **தித்தன் வெளியன்**
(01) மன்னன்
(02) தித்தன் என்பாரின் மகனான வெளியன்

3434. **திதியன்**
(01) குறுநில மன்னன்

3435. **திப்பன்**
(01) வலிமையானவன்

3436. **திப்பியன்**
(01) இறைத்தன்மையுடையவன்
(02) வியக்கத்தக்கவன்
(03) சிறந்தவன்

3437. **திப்புத் தோளான்**
(01) வலிமை மிகுந்த தோளினையுடையவன்

3438. **திமிதன்**
(01) ஈரவுள்ளம் உடையவன்
(02) உறுதியானவன்

3439. **திமிராரி**
(01) இருளின் பகைவனான கதிரவன்

3440. **திமிலன்**
(01) நெய்தனில மகன்

3441. **திரங்கன்**
(01) நகரத்தில் பிறந்தவன்

3442. **திரு**
(01) திருமகள்
(02) மேன்மையானவன்
(03) மதிப்புடையவன்
(04) உயர்வுடையவன்
(05) செல்வன்
(06) சிறந்தவன்
(07) அழகன்
(08) பொலிவானவன்
(09) ஆகூழுடையவன் (அதிர்ஷ்டசாலி)
(10) இறைத்தன்மை கொண்டவன்
(11) நற்செயல்புரிபவன்
(12) கணியன்

3443. **திருக்கிள்ளி**
(01) சோழர் குடியினன்

3444. **திருக்குட்டுவன்**
(01) குட்ட நாட்டவன்

3445. **திருக்குறிப்புத் தொண்டன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவர் பெயர்

3446. **திருச்சிற்றம்பலம்**
(01) தில்லையின் உள்ள பொன்னம்பலம்

3447. **திருச்செந்தில்**
(01) திருச்செந்தூர்
(02) திருச்செந்தூரில் பிறந்தவன்

3448. **திருஞானம்**
(01) சிவனறிவு பெற்றவன்
(02) மெய்யறிவுடையவன்

3449. **திருத்தணிகன்**
(01) திருத்தணி ஊரில் பிறந்தவன்

3450. **திருத்தணிகை**
(01) முருகன் திருக்கோவில் அமைந்துள்ள திருத்தணிகையிற் பிறந்தவன்

3451. **திருத்தன்**
(01) தூய்மையானவன்
(02) இறைவன்

3452. **திருத்தாமன்**
(01) புலவர்

3453. **திருத்தொண்டன்**
(01) இறையடியவன்

3454. **திருந்தினன்**
(01) ஒழுக்கமுடையவன்

3455. **திருநாவுக்கரசு**
(01) அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவர்

3456. **திருநாளைப் போவான்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவர்

3457. **திருநீலகண்டன்**
(01) சிவன்

3458. **திருநீலநக்கன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவர்

3459. **திருநெறித்தமிழன்**
(01) தேவாரம் கற்றுத் தேர்ந்தவன்

3460. **திருப்பதி**
(01) திருவேங்கடத்தான் மேல் அன்பு கொண்டவன்

3461. **திருப்பரங்குன்றன்**
(01) முருகன்
(02) திருப்பரங்குன்றத்தில் பிறந்தவன்

3462. **திருப்பாணன்**
(01) ஆழ்வார் பதின்மருள் ஒருவர் பெயர்

3463. **திருப்பாற்கடல்**
(01) திருமால் பள்ளி கொண்டருளுவதாகக் கூறப்படும் பாற்கடல்

3464. **திருப்புகழ்**
(01) இறைவனைப் புகழ்பவன்
(02) முருகனைப் புகழ்ந்து பாடப்பட்ட நூல்

3465. **திருப்பொற்பூ**
(01) பொன்னாலும் மணிகளாலும் தாமரை அல்லது செவ்வந்தி மலர் போன்று செய்யப்பெறும் பொற் பூ போன்ற அழகுடையவள்

3466. **திருமகண்மைந்தன்**
(01) திருமகளின் மகனாகக் கருதப்படும் காமவேள் (மன்மதன்)

3467. **திருமகள்**
(01) செல்வத்திற்கான கடவுள்

3468. **திருமகள் கொழுநன்**
(01) திருமகளின் கணவனாகிய திருமால்

3469. **திருமகன்**
(01) செல்வமகன்
(02) காமவேள்
(03) திருமால்

3470. **திருமகுடன்**
(01) திருமேனிகளின் தலையில் அணியப்படும் திருமுடி போன்றவன்

3471. **திருமங்கை**
(01) செல்வமகள்

3472. **திருமங்கை மன்னன்**
(01) திருமங்கையாழ்வார்

3473. **திருமடந்தை**
(01) திருமகள்

3474. **திருமணி**
(01) கோமேதகம்

3475. **திருமரம்**
(01) அரச மரம் போன்றவன்

3476. **திருமரன்**
(01) அரச மரம் போன்றவன்

3477. **திருமருங்கன்**
(01) பழம்பெரும் சிற்பக் கலைஞர் ஒருவர் பெயர்

3478. **திருமலர்**
(01) தாமரை மலர் போன்றவள்

3479. **திருமலை**
(01) இறைத் தன்மையுடைய மலை
(02) திருவேங்கடம்

3480. **திருமலையாழ்வார்**
(01) திருவேங்கடத்தான்

3481. **திருமழிசையாழ்வார்**
(01) ஆழ்வார் பதின்மருள் ஒருவர்

3482. **திருமறுமார்பன்**
(01) மார்பில் அழகிய மறுவையுடையவனாகிய திருமால்

3483. **திருமாமகள்**
(01) செல்வத்திற்கான கடவுள்

3484. **திருமால்**
(01) மாலவன்
(02) வேந்தன்

3485. **திருமால்குன்றன்**
(01) அழகர்மலை இறைவன்

3486. **திருமால்புதல்வன்**
(01) மாலவனின் மகனாகக் கருதப்படும் காமன்
(02) நான்முகன்

3487. **திருமாலாய்தம்**
(01) மாலவனின் ஐம்படைகள் (சங்கு, சக்கரம், தண்டு, வில், வாள்) போன்று வலியவன்

3488. **திருமாலை**
(01) இறைவனுக்குத் தொடுக்கப்பட்ட பூமாலை
(02) தொண்டரடிப் பொடியாழ்வார் செய்ததோர் சிற்றிலக்கிய மணிகள் வைத்திழைக்கப் பெற்ற நெடிய மணிமாலை

3489. **திருமாவுண்ணி**
(01) பெண் பெயர்

3490. **திருமுடி**
(01) வேந்தன் அணியும் முடி

3491. **திருமுடியோன்**
(01) திருமுடியணிந்த வேந்தன்

3492. **திருமுறை கண்ட சோழன்**
(01) திருமுறைகளைக் கண்டு வெளிக் கொணர்ந்த சோழன்

3493. **திருமூலன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவரான திருமூல நாயனார்

3494. **திருமேனி**
(01) இறையுரு கொண்டவன்

3495. **திருமேனி கண்டன்**
(01) இறையுரு கொண்டவன்

3496. **திருமேனியழகி**
(01) இறையுருவழகைக் கொண்டவள்
(02) காதணியணிந்த அழகி

3497. **திருமொழி**
(01) சான்றோர் சொல்
(02) அறநெறியில் வாழ்பவன்

3498. **திருவடி**
(01) இறைவன் தாள்
(02) இறையுரு
(03) மாலவன் திருவடியாயுள்ள அனுமன்
(04) மாலவன் திருவடியான கலுழன் (கருடன்)
(05) திருவிதாங்கூர் அரசன்

3499. **திருவண்ணாமலை**
(01) திருவண்ணாமலை இறைவன்

3500. **திருவம்பலம்**
(01) சிற்றம்பலமாகிய சிதம்பரம்

3501. **திருவமால்**
(01) மாயோன்
(02) திருமால்

3502. **திருவரங்கன்**
(01) திருமால்

3503. **திருவருள்**
(01) இறையருள் நிறைந்தவன்

3504. **திருவலன்**
(01) சேலம் மாவட்டத்து வேடர் பிரிவினன்

3505. **திருவள்ளுவன்**
(01) திருக்குறளாசிரியர்

3506. **திருவளர்செல்வி**
(01) செல்வமும் வளமும் கொண்ட பெண்

3507. **திருவன்**
(01) வளம் நிறைந்தவன்
(02) திருமால்

3508. **திருவாட்டி**
(01) செல்வ நங்கை

3509. **திருவாதிரை**
(01) யாழ்விண்மீன் (திருவாதிரை) நாளில் பிறந்தவள்

3510. **திருவாதிரை நாச்சியார்**
(01) மலைமகள்

3511. **திருவாய்மொழி**
(01) ஆன்றோர் சொல்
(02) நம்மாழ்வார் செய்த தொகை நூல்

3512. **திருவாலியமுதன்**
(01) திருவிசைப்பாவில் அடங்கிய சிற்றிலக்கியம் ஒன்றின் ஆசிரியர்

3513. **திருவாழி**
(01) திருமாலின் படைக்கலம்
(02) கணையாழி

3514. **திருவாழி மார்பன்**
(01) திருமால்

3515. **திருவாளன்**
(01) வளம் நிறைந்தவன்
(02) திருமால்

3516. **திருவி**
(01) செல்வம் உடையவள்

3517. **திருவிசை**
(01) இறையிசை

3518. **திருவிண்ணகன்**
(01) திருமால்

3519. **திருவில்**
(01) வானவில் போன்ற அழகுடையவள்

3520. **திருவிளக்கு நாச்சியார்**
(01) விளக்குத் தேவதை

3521. **திருவினாள்**
(01) திருமகள்

3522. **திருவீதி நாயகன்**
(01) திருவிழாவின் போது வீதி வழியே உலா வரும் திருமேனி

3523. **திருவுரு**
(01) திருமேனி கொண்டவன்

3524. **திருவுளம்**
(01) திரு உள்ளம் கொண்டவன்

3525. **திருவுறை**
(01) இறைவன் வாழும் உடலுடையவன்

3526. **திருவெண்காடன்**
(01) திருவெண்காடு என்ற ஊரில் பிறந்தவன்
(02) பட்டினத்தார்

3527. **திருவெம்பாவை**
(01) சிலை (மார்கழி)த் திங்களில் ஓதப்படும் திருவாசகப் பகுதி

3528. **திருவேங்கடநாதன்**
(01) திருமால்

3529. **திருவேங்கடம்**
(01) திருப்பதியென வழங்கும் தலம்

3530. **திருவேரகம்**
(01) முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்றான சாமி மலை

3531. **திருவேரகன்**
(01) முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்றான சாமி மலையில் பிறந்தவன்

3532. **திரையல்**
(01) நெய்தனிலத் தலைவன்
(02) கடலலை போன்றவன்
(03) தொண்டையர் குடி அரசன்

3533. **திரையன்**
(01) நெய்தனிலத் தலைவன்
(02) கடலலை போன்றவன்
(03) தொண்டையர் குடி அரசன்

3534. **தில்லை**
(01) சிற்றம்பலம்

3535. **தில்லை நாயகம்**
(01) சிதம்பரத்திலுள்ள சிவன்

3536. **தில்லை நாயகன்**
(01) சிதம்பரத்திலுள்ள சிவன்

3537. **தில்லையம்பலம்**
(01) சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலம்

3538. **திறத்தவன்**
(01) செல்வ நிலையிலுள்ளவன்
(02) திறனறிவன்

3539. **திறமறவன்**
(01) கொண்ட குறிக்கோள் மாறா பெருவீரன்

3540. **திறவன்**
(01) செல்வ நிலையிலுள்ளவன்
(02) திறனறிவன்

3541. **திறவான்**
(01) திறமுடையயோன்

3542. **திறவோன்**
(01) மெய்யறிவு உள்ளவன்
(02) வலிமையுடையவன்

# தீ

3543. **தீக்கதிர்**
(01) தீச்சுடர்
(02) கதிரவன்

3544. **தீக்கையோன்**
(01) சிவன்

3545. **தீங்கனி**
(01) இனிய சுவையுடைய பழம் போன்றவள்

3546. **தீச்சுடர்**
(01) தீயினால் உண்டான குற்றமற்ற சுடரொளி போன்றவள்

3547. **தீத்தி**
(01) அழகி

3548. **தீதை**
(01) இளைஞை
(02) அறிவு நிரம்பிய பெண்

3549. **தீந்தமிழ்**
(01) இனிய தமிழ் பேசுபவன்

3550. **தீமன்**
(01) இனிமையானவன்

3551. **தீமேனியான்**
(01) சிவன்

3552. **தீயாடி**
(01) ஈமத்தீயிலாடும் சிவன்

3553. **தீவண்ணன்**
(01) சிவன்

3554. **தீன்மதி நாகன்**
(01) புலவர்

# து

3555. **துகிர்**
(01) பவளம் போன்றவள்

3556. **துகிலி**
(01) நல்லாடையுடுத்துபவள்

3557. **துகிலிகை**
(01) ஓவியம் போன்ற அழகுடையவள்

3558. **துங்கன்**
(01) உயர்ந்தோன்
(02) பெருமை வாய்ந்தவன்
(03) தூய்மையானவன்
(04) வெற்றியாளன்

3559. **துச்சிமன்**
(01) பட்டறிவு உடையவன்

3560. **துசன்**
(01) அந்தணர் குடிப் பிறந்தோன்

3561. **துண்டமதி**
(01) பிறைத் திங்கள் போன்றவள்

3562. **துண்டீரன்**
(01) காஞ்சியில் ஆட்சி புரிந்த அரசன்

3563. **துணரி**
(01) குடகு மலையில் பிறந்தவன்

3564. **துணி நிலா**
(01) பிறைத் திங்கள்

3565. **துணைவன்**
(01) தோழன்
(02) கணவன்
(03) அமைச்சன்
(04) உதவி செய்வோன்
(05) உடன் பிறந்தான்

3566. **துணைவன்விழியாள்**
(01) மாலையில் மலரும் மல்லிகை

3567. **துணைவி**
(01) துணையாயிருப்பவள்
(02) மனைவி
(03) உடன்பிறந்தாள்

3568. **துப்பன்**
(01) ஆற்றலுள்ளவன்
(02) தூயவன்

3569. **தும்பிமுகன்**
(01) பிள்ளையார்

3570. **தும்பை**
(01) தும்பைப் பூ போன்ற அழகுடையவள்

3571. **துமிரன்**
(01) கருநிறத்தவன்

3572. **துய்யன்**
(01) தூய்மையானவன்

3573. **துய்யாள்**
(01) தூய்மையானவள்
(02) நாமகள்

3574. **துய்யோன்**
(01) தூய்மையானவன்

3575. **துருணன்**
(01) சிவன்

3576. **துரை**
(01) தலைவன்

3577. **துரைமகன்**
(01) தலைவனாகப் பிறந்தவன்
(02) தலைவன் மகன்

3578. **துல்லிமன்**
(01) துல்லிமன்

3579. **துலக்கன்**
(01) பொலிவானவன்
(02) மெருகுடையவன்
(03) தெளிவானவன்

3580. **துலங்கன்**
(01) பொலிவானவன்
(02) மெருகுடையவன்
(03) தெளிவானவன்

3581. **துவரன்**
(01) பவளம் போன்றவன்
(02) செந்நிறத்தவன்

3582. **துவரைக்கோமான்**
(01) இடைச்சங்கப் புலவருள் ஒருவர்

3583. **துவலன்**
(01) பவளம் போன்றவன்
(02) செந்நிறத்தவன்

3584. **துளக்கன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) விளக்கு (சுவாதி) நான்மீனில் பிறந்தவன்

3585. **துளசி**
(01) திருத்துழாய் (துளசி) போன்று மணம் மிகுந்தவள்

3586. **துளவன்**
(01) இனிய பண்பு நிறைந்த வள்ளல் மற்றும் அரசன்

3587. **துளிர்**
(01) தளிர் போன்றவள்

3588. **துறைவன்**
(01) நெய்தனிலத் தலைவன்

3589. **துன்றுநன்**
(01) நண்பன்

3590. **துன்னியன்**
(01) நண்பன்

# தூ

3591. **தூங்கலான்**
(01) தூங்கலார் என்னும் கடைக்கழகப் புலவர் பெயர்

3592. **தூங்கலோரி**
(01) தூங்கல் ஓரியார் என்னும் கடைக்கழகப் புலவர் பெயர்

3593. **தூங்கெயிலன்**
(01) உயர்ந்த கோட்டை போன்று பாதுகாப்பாய் இருப்பவன்

3594. **தூயவன்**
(01) தூய்மையானவன்

3595. **தூயன்**
(01) தூய்மையானவன்

3596. **தூயாள்**
(01) தூய்மையானவள்
(02) கலைமகள்

3597. **தூரிகன்**
(01) ஓவிய வரைகோல் போன்ற முடியுடையவன்

3598. **தூரியன்**
(01) ஓர் இசைக்கருவியான தூரியம் போன்றவன்

# தெ

3599. **தெக்கணன்**
(01) தென்னிந்தியாவில் பிறந்தவன்

3600. **தெகுளன்**
(01) நிறைவானவன்

3601. **தெட்டவன்**
(01) தெளிவான வகையில் உணரத் தெரிந்தவன்

3602. **தெட்பன்**
(01) தெளிவு நிறைந்தவன்
(02) மூதறிவு கொண்டவன்
(03) முதிர்ச்சியானவன்
(04) மனத்தேற்றமுடையவன்

3603. **தெண்டிரையன்**
(01) தெளிந்த அலை பாயும் கடல் போன்றவன்

3604. **தெண்ணவன்**
(01) தெளிவானவன்

3605. **தெய்வக் கண்ணோன்**
(01) மெய்யறிவுடையோன்

3606. **தெய்வக் களை**
(01) தெய்வீக ஒளி வீசும் அழகுடையவள்

3607. **தெய்வச்சிலையான்**
(01) தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு உரை எழுதியவர்களுள் ஒருவர்
(02) திருமால்

3608. **தெய்வஞானம்**
(01) தெய்வத்தைப் பற்றிய அறிவுடையவன்

3609. **தெய்வப்பிறவி**
(01) இறைக்கூறு கொண்ட பிறப்பு

3610. **தெய்வப்புலவன்**
(01) இறைத்தன்மை வாய்ந்த புலவன்
(02) திருவள்ளுவரின் பட்டப்பெயர்களில் ஒன்று

3611. **தெய்வம்**
(01) மனம், மெய், மொழி யாவுங்கடந்து விளங்கும் பரம்பொருள்
(02) வானவன்
(03) முனிவன்
(04) குரவன் (குரு)
(05) நன்மை புரிபவன்
(06) தெய்வத் தன்மை கொண்டவன்
(07) இயக்குபவன்
(08) செலுத்துபவன்

3612. **தெய்வயானை**
(01) குமரக்கடவுளின் தேவியருள் ஒருத்தி
(02) இந்திரனின் யானை

3613. **தெய்வயானை காந்தன்**
(01) முருகக்கடவுள்

3614. **தெய்வானை**
(01) குமரக்கடவுளின் தேவியருள் ஒருத்தி
(02) இந்திரனின் யானை

3615. **தெய்வீகன்**
(01) தெய்வீகத்தன்மை கொண்டவன்

3616. **தெரிபொருளான்**
(01) அறிபவனாகிய ஆதன்

3617. **தெரிவை**
(01) பெண்
(02) 25 முதல் 31 மற்றும் 32 முதல் 40 வரையிலான அகவைக்குட்பட்ட பெண்
(03) கன்னி ஓரையில் பிறந்த பெண்

3618. **தெள்ளி**
(01) யானை போன்ற வலிமையுடையவன்

3619. **தெள்ளியன்**
(01) தெளிந்த அறிவினன்

3620. **தெள்ளுதமிழ்**
(01) செந்தமிழ் போன்று இனியவன்
(02) செந்தமிழன்

3621. **தெள்ளுதமிழன்**
(01) செந்தமிழ் போன்று இனியவன்
(02) செந்தமிழன்

3622. **தெளிஞன்**
(01) அறிஞன்

3623. **தெளிதேன்**
(01) தூய தேன் போன்று இனியவன்

3624. **தெளிமணி**
(01) தூய்மையான ஒளி தரும் மணி

3625. **தெற்றல்**
(01) அறிவில் தெள்ளியவன் (தெளிந்த அறிவுடையவன்)

3626. **தென்கலை**
(01) தெய்வீக ஒளி வீசும் அழகுடையவள்

3627. **தென்பாண்டி**
(01) நாஞ்சில் நாட்டில் பிறந்தவன்

3628. **தென்புலக்கோன்**
(01) கூற்றுவன்

3629. **தென்மதுரை**
(01) தலைச் சங்கம் இருந்து கடல் கொள்ளப்பட்ட நகரம்

3630. **தென்மலை**
(01) பொதிய மலை

3631. **தென்முக நம்பி**
(01) தக்கணத்தில் (தென்னிந்தியாவில்) பிறந்தவனான சிவன்
(02) தென்முகமாக அமர்ந்து நால்வர்க்கும் அருளிய சிவன் திருவுருவமான தட்சிணாமூர்த்தி

3632. **தென்முனி**
(01) அகத்திய முனி

3633. **தென்மொழி**
(01) தமிழ்

3634. **தென்றமிழ்**
(01) தென்னாட்டு மொழியான தமிழ்

3635. **தென்றல்**
(01) தென்காற்று
(02) தென்மேற்குப் பருவக் காற்று

3636. **தென்றற்கோன்**
(01) பாண்டியவரசன்

3637. **தென்றல் தேரோன்**
(01) காமன்

3638. **தென்றிசைக்கிழவன்**
(01) கூற்றுவன்

3639. **தென்றிசைக்கோன்**
(01) கூற்றுவன்

3640. **தென்றிசை முதல்வன்**
(01) கூற்றுவன்

3641. **தென்னல்**
(01) தென்காற்று
(02) தென்மேற்குப் பருவக் காற்று

3642. **தென்னவன்**
(01) தென்புலத்தையாண்ட பாண்டியன்
(02) இராவணன்
(03) கூற்றுவன்

3643. **தென்னன்**
(01) தென்னாட்டவன்

3644. **தென்னி**
(01) வாழை மரம் போன்று பயனளிப்பவன்

# தே

3645. **தேக்கன்**
(01) எதையும் அதிகமாகத் தேக்கி வைத்துக் கொள்பவன்

3646. **தேங்கனி**
(01) தேங்காய் போன்று இனியவன்
(02) சுவைமிகு பழம் போன்று இனியவன்

3647. **தேசுவன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) பொன் போல் பொலிபவன்
(03) புகழ் மிகுந்தவன்
(04) அறிவுடையவன்
(05) பெருமை கொண்டவன்
(06) வீரியமானவன்

3648. **தேப்பெருமாள்**
(01) காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டுள்ள திருமால்

3649. **தேம்பாவணி**
(01) வீரமாமுனிவர் இயற்றிய பாவியம்
(02) இனிமையான பாக்களின் அணி

3650. **தேமணி**
(01) தெய்வமணி (சிந்தாமணி)

3651. **தேமன்**
(01) இனிமையானவன்
(02) மணமுள்ளவன்

3652. **தேயனன்**
(01) ஒளி மிகுந்தவன்

3653. **தேயாமணி**
(01) முழுநிலவு

3654. **தேயாமதி**
(01) முழுநிலவு

3655. **தேர்வண்கிள்ளி**
(01) சோழன் நலங்கிள்ளி

3656. **தேர்வண்மலையன்**
(01) சிறந்த வீரன்

3657. **தேரகன்**
(01) செவ்வந்திப்பூ போன்ற அழகுடையவன்

3658. **தேரன்**
(01) தமிழில் மருத்துவ நூல்கள் பல இயற்றிய சித்தர்

3659. **தேரியன்**
(01) பாலைவனம் போன்ற பகுதியில் உள்ளவன்

3660. **தேரையன்**
(01) தமிழில் மருத்துவ நூல்கள் பல இயற்றிய சித்தர்

3661. **தேரோன்**
(01) ஞாயிறு

3662. **தேவகங்கை**
(01) வானவெளியிலிருந்து வருவதாகக் கருதப்படும் கங்கையாறு

3663. **தேவகன்**
(01) தெய்வீகமானவன்
(02) கண்ணனின் பாட்டன்

3664. **தேவகி**
(01) தெய்வீகமானவள்
(02) கண்ணனின் தாய்

3665. **தேவகுரு**
(01) வியாழன் கோள்
(02) வியாழனன்று பிறந்தவன்

3666. **தேவசித்தன்**
(01) தெய்வத்தன்மையுள்ள சித்தர் ஒருவர் பெயர்

3667. **தேவதச்சன்**
(01) தெய்வீகத் தன்மையுள்ள தச்சன்

3668. **தேவதாமரை**
(01) தாமரைச் செல்வம்

3669. **தேவதேவன்**
(01) தேவருக்கெல்லாம் தேவன்

3670. **தேவதை**
(01) தெய்வப் பெண்

3671. **தேவந்தி**
(01) கண்ணகியின் தோழி

3672. **தேவநாயகன்**
(01) தேவர்களின் தலைவன்

3673. **தேவநேயன்**
(01) இறைவன் மேல் அன்பு கொண்டோன்
(02) தனித்தமிழ் பேரறிஞர் தேவநேயப் பாவாணர்

3674. **தேவமணி**
(01) கண்ணனின் அணிகலன்களுள் ஒன்றான அகன்மணி
(02) சிவன்

3675. **தேவயானை**
(01) குமரக்கடவுளின் தேவியருள் ஒருத்தி
(02) இந்திரனின் யானை

3676. **தேவர்கோ**
(01) தேவர்கோன் இந்திரன்

3677. **தேவரகண்டன்**
(01) திருவாரூரில் கோயில் கொண்டுள்ள சிவன்

3678. **தேவராளன்**
(01) தெய்வமருள் கொண்டு குறி சொல்பவன்
(02) குரவைக் கூத்தாடுபவன்

3679. **தேவவரசி**
(01) இந்திராணி

3680. **தேவன்**
(01) கடவுள்
(02) அருகன்
(03) அரசன்
(04) தெய்வீகமானவன்
(05) கண்ணனின் பாட்டன்

3681. **தேவனன்**
(01) தாமரை மலர் போன்றவன்

3682. **தேவாதி தேவன்**
(01) முதற்கடவுள்

3683. **தேவாமுதம்**
(01) தேவர் உணவாகிய அமுதம்

3684. **தேவாய்தம்**
(01) வானவில்

3685. **தேவாரம்**
(01) வீட்டில் வைத்து வணங்கப்படும் கடவுள்
(02) சிவநெறித் திருமுறை

3686. **தேவி**
(01) தெய்வமகள்
(02) உமையம்மை
(03) காளிதேவி
(04) தலைவி
(05) கற்புடைய பெண்

3687. **தேவிகை**
(01) ஓர் ஆறு

3688. **தேவேந்திரன்**
(01) தேவர்களின் அரசன்

3689. **தேற்றன்**
(01) உறுதியானவன்
(02) தெளிவானவன்
(03) உள்ளங்கலங்காதவன்
(04) செழிப்பானவன்
(05) உண்மையறிவுள்ளவன்

3690. **தேறகன்**
(01) செவ்வந்திப்பூ போன்ற அழகுடையவன்

3691. **தேன்சிட்டு**
(01) தேன் நிறமுள்ள சிட்டுக்குருவி

3692. **தேன்பலா**
(01) தேனொழுகும் பலாப் பழம்

3693. **தேன்மொழி**
(01) தேன் போன்ற இனிமையான மொழி பேசுபவள்

3694. **தேனருவி**
(01) தேன் போன்ற இனிய நீர் பாயும் அருவி குற்றால மலையின் மேலருவி

3695. **தேனா**
(01) கடல் போன்றவன்

3696. **தேனிகா**
(01) தேனீ போன்று சுறுசுறுப்புடையவள்

3697. **தேனீக்குடிக்கீரன்**
(01) கடைக்கழகப் புலவர்களுள் ஒருவர்

3698. **தேனுகன்**
(01) கண்ணனால் கொல்லப்பட்ட ஓர் அசுரன்

3699. **தேனுகா**
(01) பெண்யானை போன்றவள்

3700. **தேனுகாரி**
(01) தேனுகனைக் கொன்ற கண்ணன்

# தை

3701. **தையல்**
(01) கட்டழகுடையவள்
(02) பெண்
(03) முகில் போன்றவள்

3702. **தையல்பாகன்**
(01) சிவன்

# தொ

3703. **தொக்கான்**
(01) நண்பன்

3704. **தொட்டப்பன்**
(01) கொங்கு நாட்டான்

3705. **தொட்பன்**
(01) திறன் மிகுந்தவன்

3706. **தொடிதோள்செம்பியன்**
(01) சோழ அரசன்

3707. **தொடியோள்**
(01) பெண்

3708. **தொண்டகன்**
(01) பறையிசைக் கலைஞன்

3709. **தொண்டர் சீர் பரவுவான்**
(01) பெரிய புராணமியற்றிய சேக்கிழார் தம்பட்டப் பெயர்

3710. **தொண்டியாமூர்ச் சாத்தன்**
(01) தொண்டியை அடுத்த ஆமூர் என்னும் ஊரைச் சார்ந்த சாத்தனார் என்னும் புலவர்

3711. **தொண்டீரன்**
(01) தொண்டைமான் (தொண்டை மண்டல அரசன்)
(02) புதுக்கோட்டையரசர் பட்டப்பெயர் கள்ளர், மறவர் முதலிய சில குலத்தாரின் பட்டப்பெயர்

3712. **தொண்டைமான்**
(01) தொண்டை நாட்டு மன்னன்

3713. **தொண்டைமான் இளந்திரையன்**
(01) தொண்டை நாட்டரசன் ஒருவன் பெயர்

3714. **தொண்மணி**
(01) முத்து, மாணிக்கம் போன்ற ஒன்பது வகையான மணிக்கற்கள்

3715. **தொல்கணியாதன்**
(01) சுழியத்தை (zero) கண்டுபிடித்த பழந்தமிழ்க் கணித வல்லுநன்

3716. **தொல்கபிலன்**
(01) கபிலருக்கும் முன்பு வாழ்ந்த புலவர்

3717. **தொல்காப்பியன்**
(01) தொல்காப்பியம் இயற்றிய தொல்காப்பியர் பெயர்

3718. **தொல்லெழில்**
(01) இயற்கையழகு மிகுந்தவள்
(02) பிற பெயர்:
(03) தொல்லெழிலி

3719. **தொழுந்தகை**
(01) தொழத்தக்கவன்

3720. **தொறுவன்**
(01) இடையர்குடிப் பிறந்தவன்

# தோ

3721. **தோகைப்பாகன்**
(01) சிவன்

3722. **தோடகன்**
(01) தாமரை மலர் போன்றவன்

3723. **தோணியப்பன்**
(01) சிவன்

3724. **தோயன்**
(01) ஈர்ந்தூர்க் கிழான் தோயன்மாறன் என்ற வள்ளலின் தந்தை
(02) நெய்தல் நிலத்தவன்

3725. **தோர்த்தண்டன்**
(01) வலிய தோள்களையுடையவன்

3726. **தோரி**
(01) ஆட்டிடையர்த் தலைவன்

3727. **தோலன்**
(01) எளியவன்

3728. **தோன்றிக்கோன்**
(01) தோன்றி மலையின் அரசன்

# ந

3729. **நக்க சாரணன்**
(01) நாகர் இனத்தவன்

3730. **நக்கண்ணன்**
(01) கிடங்கில் (கிடங்கால்) ஊரைச் சேர்ந்த நக்கண்ணனார் என்ற புலவர்
(02) நல்ல கண்களை உடையவன்

3731. **நக்கண்ணை**
(01) சங்கப் புலவர் பெயர்

3732. **நக்கப்பறையன்**
(01) பறையர் தலைவன்

3733. **நக்கன்**
(01) சிவன்
(02) விரியூர் என்னும் ஊரைச் சேர்ந்த நக்கன் என்னும் புலவர்

3734. **நக்கீரன்**
(01) திருமுருகாற்றுப்படை இயற்றிய கடைச்சங்கப் புலவர்
(02) இறையனார் களவியல் நூலின் உரையாசிரியர்
(03) பத்தாம் நூற்றாண்டு இலக்கண நூலாசிரியர்

3735. **நகநந்தினி**
(01) மலைமகள்

3736. **நகன்**
(01) மலை போன்றவன்
(02) நிலம் போன்றவன்

3737. **நகாயுதன்**
(01) நகத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி வேட்டையாடும் புலி போன்றவன்
(02) வலிமையுடையவன்

3738. **நகுடன்**
(01) அறிஞன்
(02) புதல்வன்

3739. **நகுலன்**
(01) அறிஞன்
(02) புதல்வன்

3740. **நகை**
(01) மொட்டு போன்றவள்

3741. **நகைப்புலவாணன்**
(01) நட்புக்குரியவன்
(02) அறிவுத்திறத்தால் அனைவரையும் அகமகிழ்விக்கும் ஆற்றலுடையவன்

3742. **நகைமுகன்**
(01) சிரித்த முகமுடையவன்

3743. **நகைவன்**
(01) நட்பினன்

3744. **நங்கை**
(01) பெண்ணிற் சிறந்தாள்

3745. **நங்கைநாச்சி**
(01) தலைவி

3746. **நச்சன்**
(01) திருக்குறள் உரையாசிரியருள் ஒருவர்

3747. **நச்சாத்தன்**
(01) புலவர்
(02) நல்ல சாத்தன் குடிப் பிறந்தவன்

3748. **நச்சினார்க்கினியன்**
(01) விரும்பினோர்க்கு இனியவனாய் விளங்குபவன்
(02) தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி போன்ற நூல்களின் உரையாசிரியர் பெயர்

3749. **நச்சுமன்**
(01) கடைச்சங்கப் புலவர் ஒருவர் பெயர்

3750. **நச்செள்ளை**
(01) நல்ல பெண்
(02) காக்கைப் பாடினியார் என்னும் புலவரின் இயற்பெயர்

3751. **நசைநன்**
(01) அன்பு செய்பவன்
(02) அனைவரையும் விரும்புவன்

3752. **நசையுநன்**
(01) அன்பு செய்பவன்
(02) அனைவரையும் விரும்புவன்

3753. **நசைவினைஞன்**
(01) நற்செயல் புரிபவன்

3754. **நஞ்சணிகண்டன்**
(01) சிவன்

3755. **நஞ்சுண்டான்**
(01) சிவன்

3756. **நஞ்சுண்டோன்**
(01) சிவன்

3757. **நட்டன்**
(01) நடனத்தில் சிறந்தவன்

3758. **நட்டமாடி**
(01) நடனமாடுபவன்
(02) நடவரசன் சிவன்

3759. **நட்டவன்**
(01) நண்பன்
(02) உற்றவன்

3760. **நட்டான்**
(01) நண்பன்
(02) உற்றவன்

3761. **நட்டோன்**
(01) நண்பன்
(02) உற்றவன்

3762. **நட்பன்**
(01) தோழமையுடையவன்
(02) நண்பன்
(03) உறவானவன்
(04) சுற்றத்தான்
(05) காதலன்

3763. **நட்பாளன்**
(01) நண்பன்
(02) உற்றவன்

3764. **நடநாயகன்**
(01) சிவன்

3765. **நடன்**
(01) நடனமாடுபவன்

3766. **நடனன்**
(01) நடனமாடுபவன்

3767. **நடுநாயகன்**
(01) சிறந்தவன்
(02) அனைவருள்ளும் சிறப்பானவனாகத் திகழ்பவன்

3768. **நடுவன்**
(01) கூற்றுவன்
(02) அறமுதல்வன்

3769. **நண்ணியன்**
(01) நன்றியுள்ளவன்

3770. **நண்ணிலன்**
(01) நிலநடுக்கோட்டுப் பகுதியில் பிறந்தவன்

3771. **நண்ணுநன்**
(01) நட்பானவன்

3772. **நண்பன்**
(01) தோழன்
(02) காதலன்
(03) குறிஞ்சி நிலத் தலைவன்
(04) அன்பு கொண்டவன்

3773. **நணியன்**
(01) எப்போதும் அருகிலிருப்பவன்

3774. **நணியான்**
(01) எப்போதும் அருகிலிருப்பவன்

3775. **நத்தத்தன்**
(01) நல்ல தத்தன்
(02) திருவள்ளுவ மாலையில் ஒரு பாடலைப் பாடிய புலவர் பெயர்
(03) நத்தத்தம் என்ற இலக்கண நூலின் ஆசிரியர்
(04) புறநானூற்றில் பாடல் பாடியுள்ள புலவர்
(05) சிறுபாணாற்றுப் படை நூலை எழுதிய புலவர்
(06) நல்லூர் என்னும் ஊரைச் சேர்ந்த புலவர்

3776. **நந்தகன்**
(01) திருமாலின் வாள் போன்றவன்
(02) நந்தகோபன்

3777. **நந்தன்**
(01) நந்தகோபன்
(02) இடையரினத்தவன்
(03) திருமால்
(04) நாயன்மாருள் ஒருவரான நந்தனார்
(05) மகன்

3778. **நந்தனன்**
(01) பூந்தோட்டம் போன்றவன்

3779. **நந்தனை**
(01) மகள்

3780. **நந்தி**
(01) விடையோரையில் பிறந்தவன்
(02) சிவன்
(03) பல்லவ அரசர் பெயர்
(04) விளங்கித் தோன்றும் அறிவினன்

3781. **நந்தி தேவன்**
(01) நந்தியாகிய தேவன்

3782. **நந்தினி**
(01) காமதேனுவின் கன்று
(02) மகள்

3783. **நந்து**
(01) வளர்ச்சியுறுபவன்
(02) தழைத்தோங்குபவன்
(03) விளங்கி வாழ்பவன்
(04) ஆக்கமுடையவன்
(05) பறவை போன்று வாழ்பவன்
(06) சங்கு போன்று தூயவன்

3784. **நப்பசலை**
(01) கழகக் காலப் புலவருள் ஒருவர்

3785. **நப்பண்ணன்**
(01) கழகக் காலப் புலவர்
(02) சிறந்த பாக்களை இயற்றுவதில் வல்லவர்

3786. **நப்பாலத்தன்**
(01) கழகக் காலப் புலவர்
(02) திருவள்ளுவமாலையில் பாடல் இயற்றியுள்ள புலவர்

3787. **நப்பின்னை**
(01) கண்ணனுக்கு உகந்த தேவியருள் ஒருத்தி

3788. **நப்பூதன்**
(01) முல்லைப் பாட்டு நூலை இயற்றிய புலவர்

3789. **நம்பகன்**
(01) நம்பத் தகுந்தவன்

3790. **நம்பளவன்**
(01) நம்முடையவன்

3791. **நம்பன்**
(01) அனைவராலும் விரும்பப்படுபவன்
(02) கடவுள்
(03) சிவன்

3792. **நம்பாடுவான்**
(01) இசைப்பாணர் குலத்துதித்த திருமால் அன்பர் ஒருவர் பெயர்

3793. **நம்பி**
(01) அனைவராலும் விரும்பப்படுபவன்
(02) நிறைவானவன்
(03) கடவுள்
(04) செல்வன்
(05) ஆடவருள் சிறந்தவன்
(06) இளைஞன்

3794. **நம்பிகாளி**
(01) குலோத்துங்க சோழன் காலத்தவரான தமிழ்ப்புலவர்

3795. **நம்பிகுட்டுவன்**
(01) வீரன்
(02) இளைஞன்
(03) அமைச்சன்
(04) குட்டுவன் குடியினன்
(05) சேரர் குடியைச் சேர்ந்த புலவர்

3796. **நம்பிகோன்**
(01) மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சி காலத்தவன்

3797. **நம்பி நெடுஞ்செழியன்**
(01) குறுநில மன்னன்

3798. **நம்பியாண்டார் நம்பி**
(01) சிவனியப் புலவர் பெயர்

3799. **நம்பியாரூரான்**
(01) சிவனியர் ஒருவர் பெயர்

3800. **நம்பிள்ளை**
(01) திருவாய்மொழியின் உரையாசிரியர்

3801. **நம்பெருமாள்**
(01) திருவரங்கத்துத் திருமால்

3802. **நம்மாழ்வார்**
(01) ஆழ்வார்களுள் தலைமையானவரும் திருவாய்மொழி ஆசிரியருமான
(02) திருமாலடியார்

3803. **நமசன்**
(01) இணக்கமானவன்

3804. **நமதன்**
(01) இறைவன்

3805. **நமரன்**
(01) நம்முடைய சுற்றத்தவன்
(02) நம்மவன்

3806. **நமன்**
(01) கூற்றுவன்

3807. **நமிநந்தி**
(01) நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர்

3808. **நயகுணன்**
(01) நற்குணத்தான்

3809. **நயமொழி**
(01) இன்மொழி பேசுபவள்
(02) நலம் பயக்கும் வண்ணம் பேசுபவள்

3810. **நயவன்**
(01) நேர்மையான முறையில் நடப்பவன்
(02) அன்பு செலுத்துபவன்
(03) நண்பன்
(04) கலை, இலக்கியத்தைப் பேணி வளர்ப்பவன்

3811. **நயன்**
(01) நல்லெண்ணம் உடையவன்
(02) அருளாளன்
(03) கொடையாளன்
(04) மகிழ்வானவன்
(05) பண்பானவன்
(06) உறவானவன்
(07) அன்பு நிறைந்தவன்
(08) மேம்பாடானவன்
(09) இனிமையானவன்
(10) அறநெறிப்படி வாழ்பவன்
(11) அறிவுடையவன்
(12) திட்டமிட்டுச் செயல்படுபவன்

3812. **நயிந்தன்**
(01) மேம்பட்ட தகுதியுடையவன்
(02) தலைவன்

3813. **நயினார்**
(01) தலைவன்
(02) இறைவன்
(03) மேலோன்
(04) ஐயனார்
(05) சித்திரகுத்தன்

3814. **நரதுங்கன்**
(01) மக்களிற் சிறந்தோன்

3815. **நரதேவன்**
(01) மக்களின் தலைவனான அரசன்

3816. **நரந்தன்**
(01) கத்தூரி மான் போன்றவன்
(02) நறுமணம் மிகுந்தவன்

3817. **நரவம்பூ**
(01) அனிச்ச மலர் போன்றவள்

3818. **நரவரி**
(01) திருமாலின் தோற்றரவான நரசிம்மம்

3819. **நரவன்**
(01) அனிச்சமரம் போன்றவன்

3820. **நரவுலகன்**
(01) நிலவுலகில் (புவியில்) வாழ்பவன்

3821. **நரன்**
(01) மாந்தன்

3822. **நராந்தன்**
(01) அழகிய கத்தூரி மான் போன்வன்

3823. **நரேந்திரன்**
(01) அரசன்

3824. **நல்லச்சுதன்**
(01) புலவர்
(02) நல்ல துளசி போன்றவள்
(03) பார்க்க: **நல்**
(04) முன்னொட்டுப் பெயர்கள்

3825. **நல் துளசி**
(01) நல்ல துளசி போன்றவள்

3826. **நல் தோழி**
(01) நல்ல தோழியாக விளங்குபவள்

3827. **நல்லடி**
(01) குறுநிலத் தலைவன்
(02) சிறந்த திருவடிகளை உடையவன்

3828. **நல்லந்துவன்**
(01) கழகக் காலப் புலவர்

3829. **நல்லந்தை**
(01) நற்குணங்கள் பொருந்திய பெண்
(02) திருக்கோட்டியூர் என்னும் ஊரைச் சேர்ந்த நல்லந்தையார் என்னும் பெண்பாற் புலவர்

3830. **நல்ல முத்து**
(01) சிறந்த முத்து போன்றவன்

3831. **நல்லழிசி**
(01) கழகக் காலப் புலவர்

3832. **நல்லன்**
(01) நல்ல ஆண்

3833. **நல்சாத்தன்**
(01) நச்சாத்தன் என்றழைக்கப்பட்ட புலவர்
(02) நல்ல சாத்தன் குடிப் பிறந்தவன்

3834. **நல்லாதன்**
(01) கழகக் காலப் புலவர்

3835. **நல்லாப்பிள்ளை**
(01) பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்

3836. **நல்லாப்பிள்ளை**
(01) பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்

3837. **நல்லாம்பல்**
(01) நல்லியல்புகள் கொண்ட ஆம்பல் போன்ற பெண்

3838. **நல்லாறன்**
(01) பழந்தமிழ் நூலாசிரியர்

3839. **நல்லாறுடையான்**
(01) நல்வழிச் செல்வோன்

3840. **நல்லி**
(01) நல்லபெண்

3841. **நல்லி**
(01) உடல் நலமுள்ளவன்
(02) செல்வன்
(03) கருநிறத்தவன்

3842. **நல்லியக் கோடன்**
(01) குறுநில மன்னன்

3843. **நல்லிளம்படியாள்**
(01) அழகிய இளமாது

3844. **நல்லிறையன்**
(01) கழகக் காலப் புலவர்

3845. **நல்லினி**
(01) சேரன் மாதேவி

3846. **நல்லெழினி**
(01) கழகக் காலப் புலவர்

3847. **நல்லேறு**
(01) சிறந்த காளை போன்றவன்

3848. **நல்வழுதி**
(01) பாண்டியர்குடியில் பிறந்த கழகக் காலப் புலவர்

3849. **நல்விளக்கன்**
(01) கழகக் காலப் புலவர்
(02) நல்விளக்கு என்னும் ஊரினர்
(03) பிறருக்கு நல்ல விளக்கு போல் வழிகாட்டுபவர்

3850. **நல்வெள்ளியாள்**
(01) கழகக் காலப் புலவர்

3851. **நல்வேட்டன்**
(01) கழகக் காலப் புலவர்
(02) வேடுவத் தொழிலில் சிறந்தவன்

3852. **நலங்கிள்ளி**
(01) சோழ மன்னன்

3853. **நலப்பன்**
(01) நன்மை செய்பவன்
(02) வெற்றியாளன்
(03) நற்பயனுடையவன்
(04) செயல்திறனுடையவன்

3854. **நலம்பெறு சித்தன்**
(01) காந்தம் போன்ற ஈர்ப்புடையவன்

3855. **நலவன்**
(01) நல்லவன்
(02) நன்மையானவன்

3856. **நலன்**
(01) நன்மை செய்பவன்
(02) ஒழுக்கமானவன்
(03) அழகானவன்
(04) அன்பானவன்
(05) இரக்கமுடையவன்
(06) பயனாயிருப்பவன்
(07) நற்குணமும் நல்லியல்பும் உடையவன்
(08) மேன்மையானவன்
(09) உயர்வானவன்
(10) வளவாழ்வு கொள்பவன்
(11) செந்நிறத்தான்

3857. **நலிதன்**
(01) தாமரை போன்றவன்

3858. **நவ்வி**
(01) பெண் மான் போன்றவள்
(02) இளமையானவள்
(03) அழகானவள்

3859. **நள்ளி**
(01) குறுநில மன்னன்
(02) நளிமலை நாடன்
(03) கடையெழு வள்ளலுள் ஒருவன்
(04) உறவாய் விளங்குபவன்

3860. **நள்ளுநன்**
(01) நண்பன்

3861. **நளகி**
(01) தாமரை மலர் போன்றவள்

3862. **நளன்**
(01) தாமரை போன்றவன்
(02) முதல் ஏழு வள்ளல்களுள் ஒருவன்

3863. **நளியன்**
(01) செறிவானவன்
(02) பெருமை வாய்ந்தவன்
(03) தன்மையானவன்

3864. **நளிவன்**
(01) செறிவானவன்
(02) பெருமை வாய்ந்தவன்
(03) தன்மையானவன்

3865. **நளினன்**
(01) தாமரை மலர் போன்றவன்
(02) நயமான சொல்லாட்சியுடையவன்
(03) திருமகள்

3866. **நளினை**
(01) திருமகள்

3867. **நற்கிள்ளி**
(01) நற்குணங்கொண்ட சோழன்

3868. **நற்கீரன்**
(01) நக்கீரன்

3869. **நற்சேந்தன்**
(01) கழகக் காலப் புலவர்

3870. **நற்சாத்தன்**
(01) நச்சாத்தன் என்றழைக்கப்பட்ட புலவர்
(02) நல்ல சாத்தன் குடிப் பிறந்தவன்

3871. **நற்பவளம்**
(01) நல்ல பவளம் போன்றவள்

3872. **நற்பன்**
(01) நன்மை செய்பவன்

3873. **நற்றங்கொற்றன்**
(01) கழகக் காலப் புலவர்

3874. **நற்றத்தன்**
(01) அகத்தியரின் மாணாக்கர்
(02) யாப்பிலக்கணமியற்றியவர்

3875. **நற்றமன்**
(01) மதுரைப் பாலாசிரியர் நல்தமன் என்னும் புலவர்

3876. **நற்றன்**
(01) நல்ல தன்மையுடையவன்

3877. **நற்றாமன்**
(01) நல்ல மாலையணிந்தவன்
(02) கழகக் காலப் புலவர்

3878. **நறவன்**
(01) தேன் போன்றவன்
(02) பால் போன்றவன்
(03) நன்மணம் உடையவன்

3879. **நறுநுதல்**
(01) அழகிய நெற்றியையுடைய பெண்

3880. **நன்கணி**
(01) சோதிடம் அல்லது கணிதத் துறையில் வல்லமை பெற்ற புலவர்
(02) பக்குடுக்கை நன்கணியார் என்னும் கடைக்கழகப் புலவர்

3881. **நன்கணியாள்**
(01) சோதிடம் அல்லது கணிதத் துறையில் வல்லமை பெற்ற புலவர்

3882. **நன்கணியான்**
(01) சோதிடம் அல்லது கணிதத் துறையில் வல்லமை பெற்ற புலவர்

3883. **நன்பன்**
(01) நன்மை செய்பவன்
(02) சிறப்பானவன்
(03) மேன்மையானவன்
(04) மேம்பாடுடையவன்
(05) செம்மையானவன்

3884. **நன்மாறன்**
(01) பாண்டிய மன்னன்
(02) பாண்டிய மன்னன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்

3885. **நன்மார்பன்**
(01) நல்ல மார்பினையுடையவன்
(02) நல்ல தோற்றத்தினையுடையவன்
(03) கருவூர் என்னும் ஊரைச் சேர்ந்த நன்மார்பன் என்னும் புலவர்

3886. **நன்முகன்**
(01) அழகிய முகமுடையவன்
(02) இன்முகம் கொண்டவன்

3887. **நன்முத்து**
(01) நல்ல முத்து போன்றவன்

3888. **நன்முல்லை**

(01) நல்ல முல்லை போன்ற பெண்

3889. **நன்மொழி**

(01) இன்மொழி பேசுபவள்

3890. **நன்னன்**

(01) அழகுடையவன்
(02) மேன்மையானவன்
(03) நன்னலம் கொண்டவன்
(04) நன்னன் சேய் நன்னன் என்றும் கொண்கான நன்னன் என்றும் அழைக்கப்பட்ட குறுநில மன்னன்
(05) நன்மை செய்பவன்
(06) சேரர் குடியைச் சார்ந்த அரசன்
(07) மலைபடுகடாம் நூல் பாட்டுடைத் தலைவன்

3891. **நன்னன் உதியன்**

(01) நன்னன் ஆஅய் என்றும் ஏழில் நெடுவரைக்குரிய கொண்கான நன்னன் என்றும் அழைக்கப்பட்ட குறுநில மன்னன்

3892. **நன்னன் சேய் நன்னன்**

(01) அழகுடையவன்
(02) மேன்மையானவன்
(03) நன்னலம் கொண்டவன்
(04) குறுநில மன்னன்
(05) நன்மை செய்பவன்
(06) சேரர் குடியைச் சார்ந்த அரசன்
(07) மலைபடுகடாம் நூல் பாட்டுடைத் தலைவன்

3893. **நன்னன் வேண்மான்**

(01) வேளிர் குடியினரான வியலூர் நன்னன் என்று அழைக்கப்பட்ட கடம்பின் பெருவாயில் நன்னன் என்றும் கருதப்பட்ட குறுநில மன்னன்

3894. **நன்னன்வேண்மான்**

(01) கழகக்காலச் சிற்றரசன்

3895. **நன்னாகன்**

(01) கழகக் காலப் புலவர்

3896. **நன்னாகையாள்**

(01) கழகக் காலப் புலவர்

3897. **நன்னி**

(01) உண்மையானவன்
(02) அன்பு மிக்கவன்

3898. **நன்னு**

(01) பெண்

3899. **நனை**

(01) மொட்டு போன்றவள்

# நா

3900. **நாக்கோடான்**
(01) நடுவு நிலை திறம்பாதவன்

3901. **நாகசுரன்**
(01) நாகசுரம் (நாதஸ்வரம்) போன்று இனிமையும், உயர்வும், மங்கலத்தன்மையும் உடையவன்

3902. **நாகசெண்பகம்**
(01) நாக செண்பகப்பூ போன்ற அழகுடையவள்

3903. **நாகணன்**
(01) நாகாணம் என்ற மூலிகை போன்று சிறந்த மருத்துவ குணமும், பயனும் கொண்டவன்

3904. **நாகணையான்**
(01) பாம்மைப் படுக்கையாகக் கொண்டுள்ள திருமால்

3905. **நாகத்தம்பிரான்**
(01) தெய்வமாக வணங்கப்படும் பாம்பு போன்றவன்

3906. **நாகத்தல்லி**
(01) நறுமணமிக்க பெண்

3907. **நாகதண்டிகை**
(01) யானைத் தந்தம் போன்ற வெண்மையும், உறுதியும் உடைய பெண்

3908. **நாகதேவன்**
(01) திருமாலின் இருக்கையாக விளங்கும் பாம்பு

3909. **நாகதேவி**
(01) பாம்புத் தேவதை

3910. **நாகந்தகன்**
(01) கழுலன் (கருடன்) போன்றவன்

3911. **நாகநாதன்**
(01) துறக்கவுலகத்திற்கிறைவன் இந்திரன்
(02) ஆதிசேடன்
(03) சிவன்

3912. **நாகம்போத்தன்**
(01) நாகன் என்பவனது மகனான போத்தன் என்னும் புலவர்

3913. **நாகபலன்**
(01) யானையொத்த வலிமை கொண்ட வீமன்

3914. **நாகபலா**
(01) யானையின் ஆற்றலையும், வலிமையையும் ஊட்டும் மூலிகை போன்றவள்

3915. **நாகம்மா**
(01) பாம்புத் தேவதை

3916. **நாகமதி**
(01) துளசி போன்ற பெண்

3917. **நாகமல்லி**
(01) காட்டு மல்லிகை

3918. **நாகமல்லிகை**
(01) காட்டு மல்லிகை

3919. **நாகமன்**
(01) நகரத்தைச் சேர்ந்தவன்
(02) சிறந்தவன்

3920. **நாக மாணிக்கம்**
(01) நாகத்தின் தலையிலுள்ளதாக சொல்லப்படும் மணி

3921. **நாகமுகன்**
(01) யானை முகத்தோன்

3922. **நாகமுல்லை**
(01) காட்டு மல்லிகை

3923. **நாகரன்**
(01) பேரின்பம் அடையும் ஆதன்
(02) நகரத்தான்
(03) சிறந்தவன்

3924. **நாகரிகன்**
(01) நகரத்தான்
(02) இரக்கவுணர்வுள்ளவன்
(03) பல்கலைவல்லான்
(04) திறமையாளன்
(05) கலை, இலக்கிய வல்லுநன்

3925. **நாகவரசன்**
(01) திருமாலின் படுக்கையாகக் கருதப்படும் ஆதிசேடன்

3926. **நாகவரையன்**
(01) நாகங்களின் அரசன்

3927. **நாகவல்லரி**
(01) வெற்றிலை போன்றவள்

3928. **நாகவல்லி**
(01) வெற்றிலை போன்றவள்

3929. **நாகவள்ளி**
(01) வெற்றிலை போன்றவள்

3930. **நாகன்**
(01) விண் போல் பரந்து விரிந்தவன்
(02) தேவன்
(03) மேகம் போல் பயன் தருபவன்
(04) மலைபோல் உயர்ந்தவன்
(05) புலவர்

3931. **நாகன் வேட்டன்**
(01) நாகன் என்பவர் மகன் வேட்டன் என்னும் புலவர்

3932. **நாகனவல்லி**
(01) வெற்றிலை போன்றவள்

3933. **நாகாயுதன்**
(01) நாகத்தை ஆயுதமாகக் (அம்பு) கொண்டவன்

3934. **நாகி**
(01) மிகுந்த அழகுடன் விளங்கித் தோன்றும் தெய்வநலஞ்சான்ற பெண்

3935. **நாகினி**
(01) மிகுந்த அழகுடன் விளங்கித் தோன்றும் தெய்வநலஞ்சான்ற பெண்

3936. **நாகு**
(01) இளமையானவள்
(02) பெண்மை நிறைந்தவள்

3937. **நாகூராண்டவன்**
(01) ஒரு முகமதியப் பெரியவர்

3938. **நாகேந்திரன்**
(01) அரவரசனான ஆதிசேடன்

3939. **நாச்சி**
(01) தலைவி
(02) அரசி
(03) பெண் தெய்வம்
(04) ஆண்டாள்

3940. **நாச்சியார்**
(01) தலைவி
(02) அரசி
(03) பெண் தெய்வம்
(04) ஆண்டாள்

3941. **நாஞ்சில்**
(01) கலப்பையால் உழுது வேளாண்மை செய்பவன்
(02) மருத நிலத்தவன்

3942. **நாஞ்சில் நாடன்**
(01) நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவன்
(02) வீரநாராயண மங்கலம் என்ற நாஞ்சில் நாட்டூரில் பிறந்த தமிழ் எழுத்தாளர்

3943. **நாஞ்சில் வள்ளுவன்**
(01) நாஞ்சில் மலைத் தலைவனாய் விளங்கிய நாஞ்சில் பொருநன் என்றும் அழைக்கப்பட்ட அரசன்

3944. **நாஞ்சில் பொருநன்**
(01) நாஞ்சில் மலைத் தலைவனாய் விளங்கிய நாஞ்சில் வள்ளுவன்

3945. **நாஞ்சிலான்**
(01) நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவன்
(02) கலப்பை கொண்டு உழவு செய்யும் உழவன்

3946. **நாஞ்சிற்படையான்**

(01) நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவன்
(02) கலப்பை கொண்டு உழவு செய்யும் உழவன்

3947. **நாட்கதிர்**

(01) அறுவடைக்கு முன் நன்னாளிற் கொளற்ளும் முதல் நெற்கதிர்
(02) புலர் காலையில் தோன்றும் புத்தொளிக் கதிர்

3948. **நாட்டம்பலம்**

(01) ஊர்த்தலைவன்

3949. **நாட்டன்**

(01) நாட்டில் வாழ்பவன்
(02) நாட்டகப் பகுதியின் ஆள்குடித் தலைவன்

3950. **நாட்டியன்**

(01) நாட்டியம், நடிப்பு முதலியவற்றில் சிறந்தவன்

3951. **நாட்டுச் சண்பகம்**

(01) பொன்னிறமுள்ள சண்பகமலர் போன்ற அழகுள்ளவள்

3952. **நாட்டு நாயகன்**

(01) நாட்டின் தலைவன்

3953. **நாட்டு மல்லிகை**

(01) நாட்டு மல்லிகை போன்ற பெண்

3954. **நாட்டுவன்**

(01) புதுக் கொள்கையை நிலை நிறுத்துபவன்
(02) பெரிய குடித்தனக்காரன்

3955. **நாட்பன்**

(01) ஆற்றல் மிக்கவன்
(02) வண்மையாளன்

3956. **நாடகத் தமிழ்**

(01) முத்தமிழுள் ஒன்று

3957. **நாடகன்**

(01) நடனமாடுவோன்
(02) நடிப்பையும், நடனத்தையும் உயிராகக் கொள்பவன்

3958. **நாடவன்**

(01) சொந்த நாட்டவன்

3959. **நாடறிவான்**

(01) நாடுதோறும் சுற்றி நன்கறிந்த நிலவன்

3960. **நாடன்**

(01) சொந்த நாட்டைச் சேர்ந்தவன்
(02) நாடாளும் தலைவன்
(03) குறிஞ்சி நிலத்தலைவன்
(04) கார்த்திகை விண்மீனில் பிறந்தவன்

3961. **நாண்ஞாயிறு**

(01) புதிதாகப் புலர் பொழுதில் தோன்றும் ஞாயிறு

3962. **நாண்மதி**
(01) முழு நிலவு போன்றவள்

3963. **நாண்மலர்**
(01) அன்றலர்ந்த மலர் போன்றவள்

3964. **நாணகன்**
(01) நேர்மையானவன்
(02) கட்டுப்பாடானவன்
(03) நேர்த்தியானவன்
(04) ஒழுங்கானவன்
(05) உறுதிமொழியைக் காப்பாற்றுபவன்
(06) நம்பிக்கை பெற்றவன்
(07) நன்மதிப்பு கொண்டவன்
(08) மனச்சான்று உள்ளவன்

3965. **நாணயவான்**
(01) நேர்மையானவன்
(02) கட்டுப்பாடானவன்
(03) நேர்த்தியானவன்
(04) ஒழுங்கானவன்
(05) உறுதிமொழியைக் காப்பாற்றுபவன்
(06) நம்பிக்கை பெற்றவன்
(07) நன்மதிப்பு கொண்டவன்
(08) மனச்சான்று உள்ளவன்

3966. **நாணயன்**
(01) நேர்மையானவன்
(02) கட்டுப்பாடானவன்
(03) நேர்த்தியானவன்
(04) ஒழுங்கானவன்
(05) உறுதிமொழியைக் காப்பாற்றுபவன்
(06) நம்பிக்கை பெற்றவன்
(07) நன்மதிப்பு கொண்டவன்
(08) மனச்சான்று உள்ளவன்

3967. **நாணல்**
(01) நாணம் கொண்ட பெண்

3968. **நாணற்பூ**
(01) பழுத்த வெண்ணிறமுள்ள நாணற் போன்றவள்

3969. **நாணி**
(01) நாணமுடையாள்(ன்)

3970. **நாணிழல்**
(01) காலை ஞாயிற்று வெயிலில் தோன்றும் குளிர் நிழல்

3971. **நாணையன்**
(01) நேர்மையானவன்
(02) கட்டுப்பாடானவன்
(03) நேர்த்தியானவன்
(04) ஒழுங்கானவன்
(05) உறுதிமொழியைக் காப்பாற்றுபவன்
(06) நம்பிக்கை பெற்றவன்
(07) நன்மதிப்பு கொண்டவன்
(08) மனச்சான்று உள்ளவன்

3972. **நாத்திரன்**
(01) புகழ் மிக்கவன்
(02) சிறந்த சொல்லாளன்
(03) பேச்சாளன்
(04) சொல்வன்மையுடையவன்

3973. **நாதமுனி**
(01) திருவாய்மொழி முதலான நூல்களை முதன் முதற் கண்டு வெளிக் கொணர்ந்த திருமாலியத் தலைவர்

3974. **நாதவொளி**
(01) பொன் போல் பொலிபவன்(ள்)

3975. **நாந்தகன்**
(01) திருமாலின் வாள் போன்று தீமைகளை அழிப்பவன்

3976. **நாநலன்**
(01) சொல்வன்மை மிக்கவன்

3977. **நாம்பன்**
(01) கட்டிளங்காளை

3978. **நாமகள்**
(01) கல்விக்கு இறைவியான கலைமகள்

3979. **நாமகன்**
(01) தும்பை போன்றவன்

3980. **நாமடந்தை**
(01) கல்விக்கு இறைவியான கலைமகள்

3981. **நாமன்**
(01) தும்பை மலர் போன்றவன்
(02) நிறைவானவன்
(03) புகழ் மிக்கவன்

3982. **நாய்க்கவரசன்**
(01) வடுக மன்னர்

3983. **நாய்கன்**
(01) வணிகத் தலைவன்

3984. **நாய்ச்சியார்**
(01) தலைவி
(02) ஆண்டாள்
(03) மலைமகள்

3985. **நாயக்கச்சி**
(01) வடுகர், வன்னியர், வேடர், இருளர் முதலிய இன மகள்

3986. **நாயக்கன்**
(01) வடுகருள் ஒரு சாரார் பெயர்
(02) வன்னியர், வேடர், இருளர் குலத்தவன்
(03) தலைமையாளன்

3987. **நாயகம்**
(01) தலைமையாளன்
(02) மேம்பட்டவன்
(03) சிறப்பு மிக்கவன்
(04) இறைவனால் அனுப்பப்பட்ட இறைத் தூதன்

3988. **நாயகன்**
(01) தலைவன்
(02) கணவன்
(03) அரசன்
(04) கடவுள்
(05) அனைத்தையும் நடத்திச்செல்பவன்

3989. **நாயன்**
(01) கடவுள்
(02) அரசன்
(03) தலைவன்

3990. **நாயிகை**
(01) தலைவி

3991. **நாயிறு**
(01) கதிரவன்
(02) ஞாயிற்றுக் கிழமை பிறந்தவன்

3992. **நார்முடிச் சேரல்**
(01) களங்காய்க் கண்ணி நற்முடிச் சேரல் என்னும் சேர மன்னன்
(02) நெடுஞ்சேரலாதனின் மகன்

3993. **நாரணன்**
(01) திருமால்

3994. **நாரணி**
(01) கொற்றவை

3995. **நாரணியவன்**
(01) சிவன்

3996. **நாரதன்**
(01) பிரம்மனின் மகனாகக் குறிப்பிடப்படும் முனிவன்
(02) புத்தர்களுள் ஒருவர்

3997. **நாரன்**
(01) அன்பானவன்
(02) காமவேள் (மன்மதன்)

3998. **நாரி**
(01) அன்பான பெண்
(02) மலைமகள்
(03) நறுமணம் மிக்கவள்

3999. **நாரிபாகன்**
(01) சிவன்

4000. **நாரையா**
(01) வெண்ணிறப் பசு போன்ற பெண்

4001. **நால்வாயன்**
(01) யானை முகக் கடவுள்
(02) ஐராவத யானையையுடைய இந்திரன்

4002. **நாலம்பலம்**
(01) நாற்திசை வாயில் கொண்ட கோயிலின் நடுத்திறப்புப் பகுதி

4003. **நாலாமன்**
(01) நான்காவதாகப் பிறந்தவன்

4004. **நாலாவான்**
(01) நான்காவதாகப் பிறந்தவன்

4005. **நாலிகை**
(01) மூங்கில் போன்றவள்

4006. **நாவரசு**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான திருநாவுக்கரசர்

4007. **நாவரையன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான திருநாவுக்கரசர்

4008. **நாவலந்தண்பொழிலன்**
(01) நாவலந்தீவான இந்திய நாட்டைச் சேர்ந்தவன்

4009. **நாவலந்தேயன்**
(01) இந்தியன்

4010. **நாவலர்கோன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான சுந்தரர்

4011. **நாவலன்**
(01) புலவன்
(02) அமைச்சன்
(03) நாவன்மையுடையவன்

4012. **நாவலூராளி**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான சுந்தரர்

4013. **நாவற்பொழிலன்**
(01) நாவலந்தீவான இந்தியாவிற் பிறந்தவன்

4014. **நாவாள்**
(01) நாமகளான கலைமகள்

4015. **நாவிறன்**
(01) சொல்லாடும் திறமையாளன்
(02) பேச்சுவல்லான்

4016. **நாவினான்**
(01) புலவன்
(02) அமைச்சன்
(03) நாவன்மையுடையவன்

4017. **நாவுக்கரசு**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான திருநாவுக்கரசர்

4018. **நாழிகை வெண்பா**
(01) நாழிகை வெண்பா எனப்படும் தமிழ்ச் சிற்றிலக்கிய வகை போன்றவள்

4019. **நாளான்**
(01) கூற்றுவன்

4020. **நாளிகன்**
(01) தாமரை மலர் போன்றவன்

4021. **நான்மலர்**
(01) கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ மற்றும் நிலப்பூ என்னும் நால்வகையான மலரினும் அழகானவள்

4022. **நான்மறை**
(01) ஆதனைப் பக்குவப்படுத்தும் நான்கு மறைகளான அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு

4023. **நான்முகத்தோன்**
(01) நாலுமுகமுடையவனாகக் கருதப்படும் பிரமன்
(02) அருகன்

4024. **நான்முகன்**
(01) நாலுமுகமுடையவனாகக் கருதப்படும் பிரமன்
(02) அருகன்

4025. **நான்முகன்கிழத்தி**
(01) நான்முகன் மனைவியான கலைமகள்

4026. **நான்முகன்தேவி**
(01) நான்முகன் மனைவியான கலைமகள்

4027. **நானமா**
(01) கத்தூரி மான் போன்றவள்

# நி

4028. **நிகமன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) சரியான முடிவுகளை எடுப்பவன்

4029. **நிகர்மலர்**
(01) புத்தம் புது மலர் போன்ற பெண்
(02) ஒளியுடைய பூவை போன்றவள்

4030. **நிகரன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) செல்வம் மிகுந்தவன்
(03) கொடையுள்ளம் கொண்டவன்

4031. **நிகரிலி**
(01) ஒப்புமையிட  முடியாதவன்
(02) ஈடு இணையில்லாதவன்

4032. **நிகரிலி சோழன்**
(01) முதலாம் இராசராசன்

4033. **நிகாநயா**
(01) நிலவு மலர் (சந்திரகாந்தி) போன்ற பெண்

4034. **நிச்சன்**
(01) நிலைத்திருப்பவன்

4035. **நிச்சயன்**
(01) உறுதியானவன்
(02) மெய்யானவன்
(03) துணிவானவன்

4036. **நிச்சலன்**
(01) நிலைத்திருப்பவன்

4037. **நிச்சிதன்**
(01) உறுதியானவன்

4038. **நிண்ணயன்**
(01) உறுதியானவன்

4039. **நித்தலன்**
(01) முத்து போன்றவன்

4040. **நித்திலன்**
(01) முத்து போன்றவன்

4041. **நித்தன்**
(01) என்றும் நிலைத்திருக்கும் கடவுள்
(02) சிவன்
(03) அருகன்

4042. **நித்தாரன்**
(01) உறுதிப்பாடுடையவன்
(02) நிலைப்பேறுடையவன்

4043. **நித்திய மல்லிகை**
(01) நித்திய மல்லிப் பூ போன்ற பெண்

4044. **நித்திய முத்தன்**
(01) கடவுள்

4045. **நித்தியன்**
(01) நிலையானவன்
(02) கடவுள்

4046. **நித்தை**
(01) உமையவள்
(02) அழிவற்றவள்

4047. **நிம்பத்தார்ப்பாண்டியன்**
(01) பாண்டிய நாட்டரசன்

4048. **நிம்பத்தாரோன்**
(01) பாண்டிய குல அரசன்

4049. **நிம்பன்**
(01) வேப்ப மாலையுடைய பாண்டியன்

4050. **நிம்பியன்**
(01) வாழைமரம் போன்று வாழையடி வாழையாக வாழ்வாங்கு வாழ்பவன்

4051. **நிம்புகன்**
(01) எலுமிச்சை போன்றவன்

4052. **நிமி**
(01) கதிரவன் குலத்து வேந்தனொருவன்

4053. **நிமிடன்**
(01) மிகத் திறமையானவன்

4054. **நிமிடி**
(01) மிகுந்த திறமையுள்ளவன்
(02) சுறுசுறுப்பானவன்

4055. **நிமிர்சுடர்**
(01) நிமிர்ந்தெரியும் சுடர் போன்ற பெண்

4056. **நிமிளன்**
(01) திறமையாளன்
(02) சுறுசுறுப்பானவன்

4057. **நியா**
(01) சிவதுளசி

4058. **நிரம்பியன்**
(01) வாழைமரம் போன்று வாழையடி வாழையாக வாழ்வாங்கு வாழ்பவன்

4059. **நிரைவன்**
(01) ஒழுங்கு நிறைந்தவன்
(02) கோபுரம் போன்று உயர்ந்தோங்கியவன்
(03) வலிமையானவன்

4060. **நிலக்கொடி**
(01) நிலமகள்

4061. **நிலத்தரசு**
(01) நிலத்தின் அரசன்
(02) நிலவுடைமையாளன்

4062. **நிலத்திலன்**
(01) முத்து போல் ஒளிர்பவன்

4063. **நிலந்தரு திரு**
(01) தொல்காப்பியம் அரங்கேறிய அவைக்குரிய பாண்டியன்
(02) பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியின் பட்டப்பெயர்

4064. **நிலந்தரு திருவின்நெடியோன்**
(01) தொல்காப்பியம் அரங்கேறிய அவைக்குரிய பாண்டியன்
(02) பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியின் பட்டப்பெயர்

4065. **நிலமகள்**
(01) நிலமாகிய பெண்

4066. **நிலமகன்**
(01) புவியின் மகனாகக் கூறப்படும் செவ்வாய்

4067. **நிலமங்கை**
(01) நிலமாகிய பெண்

4068. **நிலமங்கை நாச்சியார்**
(01) நிலமாகிய பெண்

4069. **நிலமடந்தை**
(01) நிலமாகிய பெண்

4070. **நிலமளந்தோன்**
(01) திருமால்

4071. **நிலவன்**
(01) நிலமிசை வாழ்பவன்

4072. **நிலன்**
(01) ஞால மகன்
(02) உலகில் பிறந்து வாழ்பவன்

4073. **நிலா**
(01) திங்கள் போன்றவள்
(02) நிலவு போல் ஒளி வீசுபவள்
(03) ஒளி மிகுந்தவள்

4074. **நிலைகுலையான்**
(01) நிலைகுலையாத ஆண்

4075. **நிவந்தன்**
(01) உயர்ந்தவன்

4076. **நிவப்பன்**
(01) புகழ் பெற்றவன்

4077. **நிழலி**
(01) நிழலுக்குக் கரணியமாக விளங்கும் ஒலி
(02) நயன்மை நிறைந்தவள்
(03) காற்று போன்றவள்
(04) குளிர்ச்சியானவள்
(05) அருள் நிறைந்தவள்
(06) புகலிடமாய் விளங்குபவள்

4078. **நிற்றன்**
(01) நிலைத்திருப்பவன்

4079. **நிறை செல்வன்**
(01) நிறைந்த செல்வமுடையவன்

4080. **நிறை நிலவன்**
(01) முழு நிலா

4081. **நிறைமதி**
(01) முழுநிலா

4082. **நிறைமொழி**
(01) பயன்தவறா வாக்குடையவன்
(02) மறைமொழி
(03) முனிவன்
(04) புலவன்

4083. **நிறைமொழி மாந்தன்**
(01) பயன்தவறா வாக்குடையவன்
(02) மறைமொழி
(03) முனிவன்
(04) புலவன்

4084. **நிறையுவா**
(01) முழுமதி

4085. **நின்றசீர் நெடுமாறன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான பாண்டியவரசன்

4086. **நின்ற சொல்லன்**
(01) சொன்னசொல் மாறா மாண்பினன்

# நீ

4087. **நீகாமன்**
(01) கப்பல் தலைவன்

4088. **நீகான்**
(01) கப்பல் தலைவன்

4089. **நீசகன்**
(01) நீர் போன்று குளிர்ச்சியும், பயனும் தருபவன்

4090. **நீட்சன்**
(01) குருவி போன்றவன்

4091. **நீடசேந்திரன்**
(01) பருந்து போன்றவன்

4092. **நீண்டவன்**
(01) திருமால்

4093. **நீண்டோன்**
(01) திருமால்

4094. **நீண்முடி**
(01) அரசன்

4095. **நீண்மொழி**
(01) சூளுரைத்து வினை முடிப்பவன்

4096. **நீணிலம் கடந்த நெடுமுடியண்ணல்**
(01) திருமால்

4097. **நீணிலம் அளந்தோன்**
(01) திருமால்

4098. **நீமன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) பளபளப்பு நிறைந்தவன்

4099. **நீயான்**
(01) கப்பல் தலைவன்

4100. **நீர்க்கடவுள்**
(01) மழைக்கடவுளான வருணன்

4101. **நீர்க்கோன்**
(01) மழைக்கடவுளான வருணன்

4102. **நீர்க்கமல்லி**
(01) நீரில் இரவில் மலரும் அல்லிமலர்

4103. **நீர்கரந்த செஞ்சடைக்கடவுள்**
(01) சிவன்

4104. **நீர்ப்பூ**
(01) நீரில் உண்டாகும் பூ

4105. **நீர்மலர்**
(01) குவளைப்பூ

4106. **நீர்மன்**
(01) சிறந்த குணமுடையவன்
(02) எளிமையானவன்
(03) அழகு வாய்ந்தவன்
(04) ஒளி மிகுந்தவன்
(05) ஒப்புரவு ஒழுகுவோன்
(06) பண்பாளன்

4107. **நீர்மேல்செவ்வந்தி**
(01) செந்தாமரை

4108. **நீர்வல்லி**
(01) வெற்றிலை போன்ற பெண்

4109. **நீரகன்**
(01) கடல் சூழ்ந்த நிலத்தில் பிறந்தவன்
(02) கச்சி (காஞ்சி) யிலுள்ள ஒரு திருமால் கோவில்

4110. **நீரசன்**
(01) மாதுளை போன்றவன்
(02) நீரிலுண்டாகும் தாமரை போன்றவன்

4111. **நீரணங்கு**
(01) நீரில் வாழும் தெய்வப் பெண்

4112. **நீரதன்**
(01) நீரைக் கொடுப்பதாகிய முகில்

4113. **நீரதி**
(01) கடல் போன்ற பெண்

4114. **நீரலரி**
(01) ஆற்று நீரில் மலர்ந்து அழகாய் விளங்கும் பூ

4115. **நீரவன்**
(01) அறிவுடையவன்

4116. **நீரன்**
(01) நீர் போன்றவன்

4117. **நீராசனா**
(01) கண்ணேறு கழிக்கப் பயன்படும் மஞ்சள் நீர் தட்டு போன்று மங்கலமானவள்

4118. **நீராஞ்சனா**
(01) கண்ணேறு கழிக்கப் பயன்படும் மஞ்சள் நீர் தட்டு போன்று மங்கலமானவள்

4119. **நீராஞ்சனை**
(01) கண்ணேறு கழிக்கப் பயன்படும் மஞ்சள் நீர் தட்டு போன்று மங்கலமானவள்

4120. **நீராம்பல்**
(01) நீரில் வளரும் ஆம்பல் போன்ற பெண்

4121. **நீராமகள்**
(01) நீரில் வாழும் தெய்வப் பெண்

4122. **நீராரத்தி**
(01) கண்ணேறு கழிக்கப் பயன்படும் மஞ்சள் நீர் தட்டு போன்று மங்கலமானவள்

4123. **நீராலத்தி**
(01) கண்ணேறு கழிக்கப் பயன்படும் மஞ்சள் நீர் தட்டு போன்று மங்கலமானவள்

4124. **நீரிறைவன்**
(01) நீர்க்கடவுள்

4125. **நீருறைதெய்வம்**
(01) நீரில் வாழும் தெய்வம்

4126. **நீருறைமகன்றில்**
(01) நீரில் வாழும் மகன்றில் பறவை

4127. **நீரோருகன்**
(01) தாமரை

4128. **நீல்**
(01) கருமை நிறத்தவன்
(02) அவரி
(03) கருங்குவளை

4129. **நீலக்கோலன்**
(01) காமன்

4130. **நீலகண்டன்**
(01) சிவன்

4131. **நீலகண்டி**
(01) கொற்றவை

4132. **நீலகந்தி**
(01) நீலமலர்
(02) குவளை
(03) மாணிக்க வகையிலொன்று

4133. **நீலகாந்தி**
(01) ஒரு வகை நீலப்பூ
(02) நீலவொளி

4134. **நீலகேசி**
(01) ஐஞ்சிறு காப்பியங்களுன் ஒன்றின் கதைத் தலைவியின் பெயர்

4135. **நீலத்தாமரை**
(01) கருங்குவளை

4136. **நீலத்திருவாத்தி**
(01) மந்தாரை

4137. **நீலந்தன்**
(01) பாணன்

4138. **நீலப்பறவை**
(01) மயில் போன்ற அழகுடைய பெண்

4139. **நீலப்புறா**
(01) கோயிற்புறா

4140. **நீலப்பைம்போது**
(01) நீலமாகிய பசிய மலராம் கருங்குவளை

4141. **நீலப்போது**
(01) நீலமாகிய பசிய மலராம் கருங்குவளை

4142. **நீலம்**
(01) நீல மலர்
(02) தொன்மணிகளுளொன்று
(03) மாணிக்க வகையிலொன்று
(04) கருங்குவளை

4143. **நீலமணிவண்ணன்**
(01) திருமால்

4144. **நீலமணிவோன்**
(01) முருகக் கடவுள்

4145. **நீலமல்லிகை**
(01) நீலநிற மல்லிகை

4146. **நீலமலை**
(01) கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள அழகிய நீண்ட மலைத்தொடர்

4147. **நீலமலைச்சண்பகம்**
(01) நீலமலையிலுண்டாகும் பெரிய மரம்

4148. **நீலமேகம்**
(01) கார்முகில்

4149. **நீலமேகன்**
(01) திருமால்

4150. **நீலமேனி நெடியோன்**
(01) திருமால்

4151. **நீலமேனியன்**
(01) திருமால்

4152. **நீலல்லி**
(01) நீல அல்லி மலர்

4153. **நீலவண்ணன்**
(01) திருமால்

4154. **நீலவல்லி**
(01) நீல அல்லி மலர்

4155. **நீலன்**
(01) காரி (சனி)
(02) மாங்கனி வகை

4156. **நீலாஞ்சனை**
(01) மின்னல்

4157. **நீலாஞ்சனா**
(01) மின்னல்

4158. **நீலாம்பரன்**
(01) பரபத்திரன்

4159. **நீலாம்பரி**
(01) திங்கள்
(02) பண்வகைகளுளொன்று

4160. **நீலாம்புரி**
(01) திங்கள்
(02) பண்வகைகளுளொன்று

4161. **நீலி**
(01) கொற்றவை
(02) கருநிறமுடையவள்
(03) மலைமகள்

4162. **நீலிஞ்சிகா**
(01) பசு போன்ற அழகும், அமைதியும் கொண்டவள்

4163. **நீலிஞ்சிகை**
(01) பசு போன்ற அழகும், அமைதியும் கொண்டவள்

4164. **நீலிதா**
(01) கருநிறத்தவள்
(02) மருதோன்றி போன்று மணங்கொண்டவள்

4165. **நீழலவன்**
(01) ஈகையாளன்
(02) ஈர நெஞ்சங்கொண்ட உழவன்

4166. **நீழலன்**
(01) ஈகையாளன்
(02) ஈர நெஞ்சங்கொண்ட உழவன்

4167. **நீழை**
(01) ஒளி பொருந்தியவள்

4168. **நீள்சடையோன்**
(01) சிவன்

4169. **நீள்புகழ்**
(01) பொன்றாத புகழுடையவன்

4170. **நீளமல்லிகை**
(01) மல்லிகை மலர்

4171. **நீளாதேவி**
(01) திருமால் தேவியருள் ஒருவர்

4172. **நீளியன்**
(01) நெடியவன்

4173. **நீளை**
(01) திருமால் தேவியருள் ஒருவர்

4174. **நீற்கண்டன்**
(01) சிவன்

4175. **நீறணி கடவுள்**
(01) சிவன்

4176. **நீறணிந்தோன்**
(01) சிவன்

4177. **நீறாடி**
(01) சிவன்

4178. **நீறு**
(01) திருநீறு

4179. **நீறுபூசி**
(01) சிவன்

4180. **நீனிறவண்ணன்**
(01) திருமால்

# நு

4181. **நுகன்**
(01) வலிமையானவன்
(02) விளக்கு (சுவாதி) விண்மீனில் பிறந்தவன்

4182. **நுங்கன்**
(01) ஆதனுங்கன் என்னும் குறுநில மன்னன்

4183. **நுட்பன்**
(01) நுணுக்கமானவன்
(02) அறிவுக் கூர்மையுடையவன்

4184. **நுண்ணியன்**
(01) அறிவுடையவன்
(02) நுட்பமானவன்
(03) பெரியவன்
(04) அமைச்சன்

4185. **நுண்பன்**
(01) அறிவுடையவன்
(02) நுட்பமானவன்
(03) பெரியவன்
(04) அமைச்சன்

4186. **நுண்மதி**
(01) நுண்ணறிவுடையோன்

4187. **நுண்மன்**
(01) அறிவுடையவன்
(02) நுட்பமானவன்
(03) பெரியவன்
(04) அமைச்சன்

4188. **நுண்புலன்**
(01) நுண்ணறிவுடையோன்

4189. **நுணகன்**
(01) பொன் போல் ஒளிர்பவன்

4190. **நுணுக்கன்**
(01) நுண்மையானவன்
(02) கூர்மையானவன்
(03) கூரறிவுடையவன்
(04) வேலைத்திறம் கொண்டவன்

4191. **நுதலன்**
(01) அழகிய நெற்றியுடையவன்
(02) அழகிய புருவமுடையவன்

4192. **நுதற்கண்ணன்**
(01) சிவன்

4193. **நுதனாட்டி**
(01) கொற்றவை

4194. **நுதியன்**
(01) அறிவுக் கூர்மையுடையவன்
(02) புகழ் அடைபவன்
(03) கூர்மையானவன்

4195. **நுவலன்**
(01) சொல் வல்லான்
(02) நுண்மையானவன்

4196. **நுழாய்**
(01) இளமையானவள்

4197. **நுழைபுலன்**
(01) நுண்ணிய அறிவுடையவன்

4198. **நுளையன்**
(01) நுண்ணிய அறிவுடையவன்

4199. **நுண்கலைச் செல்வன்**
(01) இசைச் சான்றோன்

# நூ

4200. **நூக்கன்**
(01) உயரமானவன்

4201. **நூங்கன்**
(01) பெருமை மிகுந்தவன்
(02) உயர்வுடையவன்

4202. **நூல்வல்லோன்**
(01) கல்வியாளன்
(02) அமைச்சன்
(03) நூலாசிரியன்

4203. **நூலழகன்**
(01) பத்துவகை நூல் நயங்களிற் சிறந்தவன்

4204. **நூலறிவன்**
(01) கல்வியறிவு பெற்றவன்

4205. **நூலறிவாளன்**
(01) கல்வியறிவு பெற்றவன்

4206. **நூலறிவு**
(01) கல்வியறிவு பெற்றவன்

4207. **நூலான்**
(01) நூல் பல கற்பவன்

4208. **நூலோன்**
(01) கல்வியாளன்
(02) அமைச்சன்
(03) நூலாசிரியன்

4209. **நூற்படுபுலவன்**
(01) குளிர்ச்சியானவள்

4210. **நூற்றிதழ்த்தாமரை**
(01) நூறு இதழ்களைக் கொண்ட தாமரை போன்ற அழகுடையவள்

4211. **நூன்மடந்தை**
(01) கலைமகள்

# நெ

4212. **நெகலன்**
(01) நன்கு கனிந்து பக்குவப்படுபவன்

4213. **நெகிழன்**
(01) பூ மலர்வது போன்ற அழகுடையவன்
(02) குழைவாகப் பேசுபவன்
(03) உள்ளத்தில் இரக்கங்கொண்டவன்
(04) பிறர் துன்பங்கண்டு உள்ளம் நெகிழ்ந்து உதவுபவன்

4214. **நெகிழி**
(01) காற் சிலம்பணிந்தவள்
(02) தீயைப் போல் தூய்மையும், வெப்பமும் ஆனவள்

4215. **நெகிழிசை**
(01) தமிழ்ச் செய்யுள் வகையிலொன்று

4216. **நெகிளன்**
(01) இரும்பு போல் உடலும் உள்ளமும் உறுதியானவன்(ள்)

4217. **நெகுலன்**
(01) உள்ளம் இரங்குபவன்
(02) அன்பு கொள்பவன்

4218. **நெஞ்சகன்**
(01) நெஞ்சில் ஈரம் உள்ளவன்
(02) துணிந்த நெஞ்சம் கொண்டவன்
(03) உள்ள வலிமையுடையவன்
(04) அன்புள்ளம் கொண்டவன்

4219. **நெஞ்சன்**
(01) நெஞ்சில் ஈரம் உள்ளவன்
(02) துணிந்த நெஞ்சம் கொண்டவன்
(03) உள்ள வலிமையுடையவன்
(04) அன்புள்ளம் கொண்டவன்

4220. **நெஞ்சோர்மன்**
(01) நெஞ்சில் துணிவுடையவன்

4221. **நெட்டன்**
(01) உயரமானவன்
(02) நீண்ட கை, கால்களுடையவன்

4222. **நெட்டிசை**
(01) மண்டிலப்பா வகையின் நெடிய ஓசை

4223. **நெட்டிமை**
(01) நீண்ட அழகிய இமைகளை உடையவள்

4224. **நெட்டிமையாள்**
(01) கழகக் காலப் புலவர்

4225. **நெட்டிமையான்**
(01) கழகக் காலப் புலவர்

4226. **நெடியன்**
(01) உயரமானவன்
(02) நீண்ட கை, கால்களுடையவன்

4227. **நெடியான்**
(01) உயரமானவன்
(02) நீண்ட கை, கால்களுடையவன்

4228. **நெடியோன்**
(01) உயரமானவன்
(02) நீண்ட கை, கால்களுடையவன்
(03) திருமால்
(04) இந்திரன்
(05) சிவன்
(06) பாரி
(07) பாண்டிய மன்னர் மரபில் முதல் மன்னன்
(08) பாண்டிய மன்னன் முதுகுடுமிப் பெருவழுதியின் பட்டப்பெயர்
(09) தொல்காப்பியம் அரங்கேறிய அவைக்குரிய பாண்டியன்
(10) நிலந்தரு திருவின் நெடியோன் என்று அழைக்கப்பட்ட பாண்டிய மன்னன் வடிவலம்ப நின்ற பாண்டியன்

4229. **நெடிலன்**
(01) உயரமானவன்
(02) நீண்ட கை, கால்களுடையவன்

4230. **நெடினி**
(01) பனைமரம் போன்று உயரமும், பயனும் உடைத்தவன் (ள்)

4231. **நெடுக்கன்**
(01) உயரமானவன்

4232. **நெடுங்கடல்**
(01) கரையடுத்த கடல் போன்ற பெண்
(02) பெரிய கடல் போன்ற பெண்

4233. **நெடுங்கண்**
(01) தொலை நோக்குடையவள்
(02) நீள்விழியுடையவள்

4234. **நெடுங்கல்வியான்**
(01) மிகுந்த கல்வி கற்றவன்
(02) அடை நெடுங்கல்வியான் எனப்பட்ட புலவர்

4235. **நெடுங்களத்துப் பரணன்**
(01) கழகக் காலப் புறநானூற்றுப் புலவர்
(02) திருச்சி மாவட்டம் நெடுங்களம் என்ற ஊரைச் சேர்ந்த பரணர் என்னும் புலவர்

4236. **நெடுங்கிள்ளி**
(01) கழகக் கால சோழ மன்னன்

4237. **நெடுங்கீரன்**
(01) புலவர்

4238. **நெடுங்கை**
(01) யானை போன்று நீண்ட கைகளையுடையவன்
(02) முழந்தாள் தொடும் தடக்கை உடையவன்

4239. **நெடுங்கையன்**
(01) யானை போன்று நீண்ட கைகளையுடையவன்
(02) முழந்தாள் தொடும் தடக்கை உடையவன்

4240. **நெடுங்கை வன்மான்**
(01) யானை போன்று நீண்ட கைகளையுடையவன்
(02) முழந்தாள் தொடும் தடக்கை உடையவன்

4241. **நெடுங்கைவேண்மான்**
(01) சோழநாட்டு மன்னன்
(02) பெருஞ்சாத்தன் என்பானின் பட்டப்பெயர்

4242. **நெடுங்கொடி**
(01) நீண்ட கொடி போன்ற பெண்

4243. **நெடுங்கொடிமுல்லை**
(01) நீண்ட கொடிமுல்லை போன்ற அழகுடையவள்

4244. **நெடுங்கோட்டன்**
(01) நெடிய கோடுகளை உடலிற் கொண்ட புலி போன்றவன்
(02) கோண்மா நெடுங்கோட்டன் என்ற புலவர்

4245. **நெடுஞ்சீர்வண்ணன்**
(01) நெட்டெழுத்துகள் செய்யுளில் ஏற்படுத்தும் நெட்டொலி போன்று இனிய குரலுடையவன்

4246. **நெடுஞ்சுடர்**
(01) நெடிய கொழுந்தினையுடைய நெருப்பு போன்ற ஒளியுடையவள்

4247. **நெடுஞ்செழியன்**
(01) நெடியவனாய் விளங்கும் பாண்டியன்
(02) தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்
(03) ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்

4248. **நெடுஞ்சேரலாதன்**
(01) இமையம் வரை செங்கோலேச்சிய சேர மன்னன்

4249. **நெடுந்தகை**
(01) பெரிய மேம்பாடுள்ளவன்
(02) பெரிய நிலையை (அந்தஸ்து) அடைபவன்
(03) அளந்தற்கரிய நற்குணங்களை உடையவன்

4250. **நெடுந்தத்தன்**
(01) கழகக் காலப் புலவர்

4251. **நெடுந்தெய்வம்**
(01) பெருமையும் புகழும் வாய்ந்த தெய்வம்

4252. **நெடுநீலி**
(01) செந்தாழை போன்ற பெண்

4253. **நெடும்பல் இயத்தன்**
(01) நெடிய பல இசைக் கருவிகளை உடைய இசைக் கலைஞரானதொரு கழகக் காலப் புலவர்

4254. **நெடும்பல் இயத்தை**
(01) கழகக் காலப் புலவர்

4255. **நெடும்பார தாயன்**
(01) நெடும்பாரம் என்னும் ஊரைச் சேர்ந்த தாயன் என்னும் புலவர்

4256. **நெடும்புகழ்**
(01) பெரும்புகழ் பெறுபவன்

4257. **நெடுமணி**
(01) நீண்ட மணி

4258. **நெடுமால்**
(01) உலகை மூவடியால் அளந்த திருமால்

4259. **நெடுமாயக்கள்வன்**
(01) திருமால்

4260. **நெடுமாறன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவனும் பாண்டிய அரசனுமான சிவனடியார்

4261. **நெடுமானஞ்சி**
(01) கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அஞ்சி (அதியமான்)

4262. **நெடுமான்**
(01) கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அஞ்சி (அதியமான்)

4263. **நெடுமி**
(01) நெடிய பெண்

4264. **நெடுமிசை**
(01) எத்துறையில் ஈடுபட்டாலும் அத்துறையில் உச்சியை அடைபவன்

4265. **நெடுமிடல்**
(01) வலிமை மிக்கவன்
(02) அதியமான் நெடுமானஞ்சியின் இயற்பெயர்

4266. **நெடுமொழி**
(01) அனைவராலும் புகழ் பாடப்படுபவன்

4267. **நெடுமொழிவஞ்சி**
(01) தமிழ்ப்பாத்துறைகளுள் ஒன்று
(02) வீரனொருவன்
(03) பகைவர் படையை நெருங்கி, தன் ஆண்மையை உயர்த்திக் கூறும் புறத்துறை

4268. **நெடுவல்**
(01) உயரமான ஆண்மகன்

4269. **நெடுவிழி**
(01) தொலை நோக்குடையவள்
(02) நீள்விழியுடையவள்

4270. **நெடுவெண்ணிலவன்**
(01) கழகக் காலப்புலவர்

4271. **நெடுவேட்டுவன்**
(01) கோடை மலைப்பகுதியை ஆண்ட கடைக்கழக மன்னன்

4272. **நெடுவேள்குன்றன்**
(01) சோழநாட்டிலுள்ள திருச்செங்குன்றைச் சேர்ந்தவன்

4273. **நெடுவேளாதன்**
(01) வேளிற்குடியினன்

4274. **நெடுவேளாவி**
(01) வேளிற்குடியினன்
(02) அவியர் குடியினன்

4275. **நெதி**
(01) செல்வமுடையவன்
(02) முத்து போன்ற பொலிவும் அழகும் உடையவன்

4276. **நெதியன்**
(01) செல்வமுடையவன்
(02) முத்து போன்ற பொலிவும் அழகும் உடையவன்

4277. **நெதியாளன்**
(01) செல்வமுடையவன்
(02) முத்து போன்ற பொலிவும் அழகும் உடையவன்

4278. **நெய்க்கடல்**
(01) ஏழு கடல்களுள் ஒன்றாகக் கூறப்படும் நெய்யாலான கடல்

4279. **நெய்தல்**
(01) வெள்ளாம்பல்
(02) கருங்குவளை மலர்
(03) கடல் சார்ந்த இடத்தில் பிறந்தவள்

4280. **நெய்தல்தத்தன்**
(01) கடைக்கழகக் காலப் புலவர்

4281. **நெய்தல் தெய்வம்**
(01) வாரணன், மழைக் கடவுள்

4282. **நெய்தல் பூண்டோன்**
(01) நெய்தல் மாலையணிந்த ஐயனார்

4283. **நெய்தல்யாழ்**
(01) நெய்தல் நிலப் பெரும்பண்களில் ஒன்று

4284. **நெய்தலாம்பல்**
(01) நெய்தல் நிலத்து வளரும் ஆம்பல்

4285. **நெய்தற்கார்க்கியன்**
(01) கழகக் காலப் புலவர்

4286. **நெய்தை**
(01) பெருமை மிக்க பெண்

4287. **நெய்ம்மீன்**
(01) பதினான்காம் விண்மீன் (சித்திரை) நெய்ம்மீன் நாண்மீனன்று பிறந்த பெண்

4288. **நெய்வான்மீன்**
(01) பதினான்காம் விண்மீன் (சித்திரை) நெய்ம்மீன் நாண்மீனன்று பிறந்த பெண்

4289. **நெரிசன்**
(01) ஈட்டி எறிவதில் வல்லவன்

4290. **நெருப்பு மேனியன்**
(01) நெருப்பைப் போன்ற சிவந்த நிறமுடையவன்

4291. **நெருப்பு வண்ணன்**
(01) நெருப்பைப் போன்ற சிவந்த நிறமுடையவன்

4292. **நெல்லி**
(01) நெல்லி மரம் போன்ற பெண்

4293. **நெல்லிப்பூ**
(01) நெல்லிப் பூ போன்ற அழகுடைய பெண்

4294. **நெல்லைநாதன்**
(01) தமிழ்ப்புலவர்
(02) சிவன்

4295. **நெல்லையப்பன்**
(01) சிவன்

4296. **நெற்குன்றன்**
(01) நெற்குன்றம் ஊரில் பிறந்தவன்

4297. **நெற்குன்றவாணன்**
(01) ஒட்டக்கூத்தர் காலத்துத் தமிழ்ப் புலவர்
(02) நெற்குன்றம் ஊரில் வாழ்பவன்

4298. **நெற்றிக்கண்ணன்**
(01) சிவன்

4299. **நெறிகாட்டுநாதன்**
(01) வெள்ளாறும் மணிமுத்தாறும் கூடும் திருக்கூடலையாற்றூர் வாழ் சிவன்
(02) நல்வழி காட்டும் சிவன்

4300. **நெறிமான்**
(01) அறங்கூறுவோன் (நீதிமான்)

4301. **நெறியோன்**
(01) பெரியோன்

# நே

4302. **நேகன்**
(01) நுண்மையானவன்

4303. **நேசகன்**
(01) வண்ணார் குடிமகன்

4304. **நேசநாயன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்

4305. **நேசன்**
(01) அன்பானவன்
(02) ஆர்வமுடையவன்
(03) தகுதி வாய்த்தவன்
(04) விரும்பத்தக்கவன்
(05) நண்பன்
(06) கடவுளடியான்

4306. **நேசி**
(01) அன்புடையவள்

4307. **நேத்தி**
(01) நேர்த்தியானவள்
(02) அழகானவள்
(03) அழகிய நெற்றியுடையவள்

4308. **நேமன்**
(01) அன்பானவன்
(02) ஆர்வமுடையவன்
(03) தகுதி வாய்த்தவன்
(04) விரும்பத்தக்கவன்
(05) நண்பன்
(06) கடவுளடியான்

4309. **நேமி**
(01) அன்புடையவள்
(02) வட்டமான முகமுடையவள்
(03) புவி போன்றவள்
(04) கடல் போன்றவள்

4310. **நேமி**
(01) திருமால்
(02) சமணத் தலைவர் இருபத்து நால்வருள் ஒருவர்

4311. **நேமி சந்தனா**
(01) வேங்கை மரம் போன்றவள்

4312. **நேமிநாதன்**
(01) அருகன்

4313. **நேமியஞ்செல்வன்**
(01) மன்னர் மன்னன்

4314. **நேமியான்**
(01) சக்கரப் படையுடைய திருமால்
(02) செங்கோலாழியுடைய அரசன்

4315. **நேமியோன்**
(01) சக்கரப் படையுடைய திருமால்
(02) செங்கோலாழியுடைய அரசன்

4316. **நேயன்**
(01) அன்புடையவன்
(02) இறைப் பற்றுடையவன்
(03) நன்மை செய்பவன்

4317. **நேர்சோழகன்**
(01) நேராக வீசும் தென்றல் காற்று போன்றவன்

4318. **நேர்த்தன்**
(01) நட்பானவன்
(02) உடன்பாடானவன்

4319. **நேர்ந்தான்**
(01) அனைவருக்கும் நண்பராக விளங்குபவன்

4320. **நேர்ப்பன்**
(01) திறமையாளன்

4321. **நேர்பன்**
(01) எழுச்சியானவன்

4322. **நேர்வான்**
(01) நெய்ம்மீன் (சித்திரை) நாளில் பிறந்தவன்

4323. **நேரசை**
(01) தமிழின் அசை வகை

4324. **நேரலன்**
(01) நேர்மையானவன்
(02) கொண்ட கொள்கையில் உறுதியானவன்

4325. **நேராளன்**
(01) நேர்மையுள்ளவன்

4326. **நேராளி**
(01) நேர்மையுள்ளவன்

4327. **நேரிசை**
(01) பண்வகை

4328. **நேரிசை ஆசிரியப்பா**
(01) தமிழ்ப்பா வகை

4329. **நேரிசை வெண்பா**
(01) தமிழ்ப்பா வகை

4330. **நேரியன்**
(01) நேரி வெற்பனான சோழ மன்னன்
(02) நுண்ணறிவாளன்
(03) சிறந்தவன்
(04) நேர்மையாளன்

4331. **நேரிவெற்பன்**
(01) நேரி மலைக்குரிய சோழ மன்னன்

4332. **நேரிழை**
(01) அழகிய, நேர்த்தியான அணிகலன் அணிந்த பெண்

4333. **நேரிறை**
(01) நேரி மலைக்குரிய சோழ மன்னன்

4334. **நேளி**
(01) தாமரை போன்றவள்
(02) பெருமைமிக்க மலர்மயில் போன்றவன்

# நை

4335. **நைதிகை**
(01) ஊசி மல்லிகை
(02) முல்லைக் கொடி

4336. **நைந்திகை**
(01) முல்லைமலர்

4337. **நைவனன்**
(01) நடனத்தில் வல்லவன்
(02) வீரம் மிகுந்தவன்

# நொ

4338. **நொச்சி நியமங்கிழான்**
(01) கழகக் காலத் தமிழ்ப் புலவர்

4339. **நொச்சிமலர்**
(01) நொச்சி மலர் போன்ற அழகுடையவள்
(02) கோட்டையைக் காக்கும் வீரர் அணியும் மலர்

4340. **நொச்சியங்கிழான்**
(01) கழகக் காலத் தமிழ்ப் புலவர்

4341. **நொச்சுலன்**
(01) முல்லை மலர் போன்றவன்

4342. **நொசியன்**
(01) நுண்மையானவன்

4343. **நொசிவன்**
(01) நுண்மையானவன்

4344. **நொப்பன்**
(01) திறமையாளன்

4345. **நொய்ப்பன்**
(01) திறமையாளன்

4346. **நொற்பன்**
(01) நுட்பமானவன்
(02) எளிமையானவன்

4347. **நொன்றி**
(01) மான் போன்றவள்
(02) கொங்கு நாட்டு மன்னன்

# நோ

4348. **நோக்கன்**
(01) தொலை நோக்குப் பார்வை உடையவன்
(02) உயர்வானவன்
(03) அழகுடையவன்
(04) இலக்குடன் வாழ்பவன்
(05) அறிவுடையவன்
(06) கவனமாயிருப்பவன்

4349. **நோண்மன்**
(01) பொறுமையானவன்
(02) வலிமையானவன்
(03) பெருமையானவன்
(04) தவ வலிமை கொண்டவன்

4350. **நோய்ப்பாடியாள்**
(01) கழகக் காலப் புலவர்

4351. **நோய்முகன்**
(01) காரி (சனி)

4352. **நோற்பன்**
(01) பொறுமையானவன்

# ப

4353. **ப றியன்**
(01) நெய்தனிலத்தவன்
(02) மீனவன்

4354. **ப றொடை வெண்பா**
(01) தமிழ்ப்பாவாகிய வெண்பாவின் ஒரு வகை

4355. **பக்குடுக்கை நன்கணியன்**
(01) கடைக் கழகக் காலத்துப் புலவர்

4356. **பக்குவன்**
(01) தகுதியுடையவன்

4357. **பக்குவி**
(01) தகுதியுடையவன்

4358. **பகடவன்**
(01) பெருமை மிகுந்தவன்
(02) வலிமை மிகுந்தவன்
(03) ஆண் யானை போன்றவன்

4359. **பகடன்**
(01) பெருமை மிகுந்தவன்
(02) வலிமை மிகுந்தவன்
(03) ஆண் யானை போன்றவன்

4360. **பகடை**
(01) செருமான் (Cobbler) இனத்தவன்

4361. **பகரவன்**
(01) ஒளி பொருந்தியவன்
(02) அழகு மிகுந்தவன்

4362. **பகரன்**
(01) ஒளி பொருந்தியவன்
(02) அழகு மிகுந்தவன்

4363. **பகல்செய்வான்**
(01) பகற்பொழுதை ஏற்படுத்தும் கதிரவன்

4364. **பகல்வெய்யோன்**
(01) நடுவுநிலை விரும்புவோன்
(02) நடுவுநிலை தவறாத சேரன் செங்குட்டுவன்

4365. **பகலரசு**
(01) கதிரவன்

4366. **பகலவன்**
(01) கதிரவன்
(02) இரண்டாம் நாண்மீன் (பரணி)

4367. **பகலோன்**
(01) கதிரவன்
(02) இரண்டாம் நாண்மீன் (பரணி)

4368. **பகவன்**
(01) மனம், மெய், மொழி யாவுங்கடந்து விளங்கும் பரம்பொருள்
(02) வானவன்
(03) முனிவன்
(04) குரவன் (குரு)
(05) நன்மை புரிபவன்
(06) தெய்வத் தன்மை கொண்டவன்
(07) இயக்குபவன்
(08) செலுத்துபவன்

4369. **பகழிக்கூத்தன்**
(01) தமிழ்ப் புலவர்

4370. **பகற்கதிர்**
(01) கதிரவனின் ஒளிக்கதிர்

4371. **பகற்பலி**
(01) பனைமரம் போன்றவன்

4372. **பகன்**
(01) கதிர்க்கடவுளருள் ஒருவன்

4373. **பகாரன்**
(01) அழகன்

4374. **பகாலி**
(01) சிவதுளசி
(02) சிவன்

4375. **பகுத்தறிவன்**
(01) பகுத்தறியும் திறன் உடையவன்

4376. **பகுத்தறிவாளன்**
(01) பகுத்தறியும் திறன் உடையவன்

4377. **பகுத்தறிவு**
(01) பகுத்தறியும் திறன் உடையவன்

4378. **பகுத்தன்**
(01) செம்படவர் குடியில் பிறந்தவன்

4379. **பகுவொளி**
(01) பேரொளி வீசுபவன்

4380. **பங்கன்**
(01) சிவன்

4381. **பச்சைப்புறா**
(01) புறா வகையொன்று

4382. **பச்சைப்பெருமாள்**
(01) திருமால்

4383. **பச்சையப்பன்**
(01) 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரும் செல்வரும் வள்ளலும் ஆனவர்

4384. **பச்சையம்மன்**
(01) சிற்றூர்ப்புறப் பெண் தெய்வம்

4385. **பச்சையம்மாள்**
(01) சிற்றூர்ப்புறப் பெண் தெய்வம்

4386. **பச்சையலரி**
(01) திருவாச்சி மலர் போன்ற பெண்

4387. **பச்சையன்**
(01) திருமால்

4388. **பச்சைவில்**
(01) வானவில்
(02) காமன்வில்

4389. **பசிப்பகைஞன்**
(01) இரப்போர் பசி தீர்க்கும் வள்ளல்

4390. **பசிப்பிணி மருத்துவன்**
(01) இரப்போர் பசி தீர்க்கும் வள்ளல்

4391. **பசிமான்**
(01) அரிமா (சிங்கம்) போன்றவன்

4392. **பசுங்கண் கடவுள்**
(01) சிவன் (உருத்திரன்)

4393. **பசுங்கதிர்**
(01) திங்கள்

4394. **பசுங்கதிர்க் கடவுள்**
(01) திங்கள்

4395. **பசுங்கிளி**
(01) பச்சைக்கிளி

4396. **பசுங்குடி**
(01) பசுங்குடிமகன்
(02) தகுதியான குடியைச் சேர்ந்தவன்
(03) உழவர் குடியினன்

4397. **பசுந்தமிழ்**
(01) செந்தமிழ்

4398. **பசுநிலா**
(01) தண்ணிய ஒளி தரும் நிலா

4399. **பசும்பூ**
(01) பச்சைப் பூ

4400. **பசும்பூண் சோழன்**
(01) புதிய பொன்னாலான அணிகலன்களணிந்த சோழன்

4401. **பசும்பூண் பாண்டியன்**
(01) ஒரு பாண்டிய அரசன்

4402. **பசும்பூண் பொறையன்**
(01) புதிய பொன்னாலான அணிகலன்களணிந்த மலை நாட்டரசன்
(02) அகநானூற்றில் குறிப்பிடப்படும் ஒரு சேர அரசன்

4403. **பசும்பூண் வழுதி**
(01) புதிய பொன் அணிகலனணிந்த பாண்டிய மன்னன்
(02) நற்றிணையில் குறிப்பிடப்பெறும் ஒரு பாண்டிய அரசன்

4404. **பசும்பூண் வேந்தன்**
(01) புதிய பொன் அணிகலனணிந்த மன்னன்

4405. **பசும்பூணவை**
(01) பொன்னிறமுடைய திருமால்

4406. **பசும்பொன்**
(01) மாற்றுயர்ந்த பொன்

4407. **பசுமயில்**
(01) பசுமை கலந்த பொன்னிறமான மயில்

4408. **பசுமலர்**
(01) அப்போது பறித்த புத்தம் புது மலர்

4409. **பசுமுல்லை**
(01) ஒருவகை முல்லைக்கொடி

4410. **பசுவெயில்**
(01) மாலை வெயில் போன்றவன்

4411. **பஞ்சவன்**
(01) அறிவுடையவன்
(02) பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன்
(03) உழவன்
(04) வேளாண் தொழிலை முதன்முதலாக உண்டாக்கிய மன்னர் மரபினன்
(05) பாண்டிய நாட்டரசன்

4412. **பஞ்சதா**
(01) குயில் போன்ற பெண்

4413. **பஞ்சிகன்**
(01) கணக்கில் வல்லவன்
(02) கூற்றுவன்

4414. **பஞ்சிதன்**
(01) விண்மீன் போன்றவன்

4415. **பஞ்சூகன்**
(01) பெருமையானவன்

4416. **பட்டணவன்**
(01) நெசவுக்குடிப் பிறந்தவன்

4417. **பட்டத்து இளவரசி**
(01) அரசனுடைய மூத்த மகள்

4418. **பட்டத்துக் குமரி**
(01) அரசனுடைய மூத்த மகள்

4419. **பட்டத்துத் தேவி**
(01) அரசனுடைய மூத்த மகள்

4420. **பட்டர்பிரான்**
(01) பெரியாழ்வார்

4421. **பட்டன்**
(01) புலவன்
(02) தெய்வம்
(03) பெரியாழ்வார்
(04) உண்மையாளன்

4422. **பட்டனவன்**
(01) நெய்தல் நிலமகன்

4423. **பட்டாரகன்**
(01) கடவுள்
(02) அறிவாசிரியன்
(03) கதிரவன்

4424. **பட்டாலியன்**
(01) பட்டாடை நெய்யும் தமிழச் சாலியக்குடிப் பிறந்தவன்

4425. **பட்டினவன்**
(01) பரவகுலத்தான் (மீனவன்)

4426. **பட்டுப்பருத்தி**
(01) பருத்தி போன்று மென்மையான பெண்

4427. **பட்டுமந்தாரை**
(01) இளஞ்சிவப்பும் மஞ்சளும் கலந்த மந்தாரை

4428. **பட்பன்**
(01) நற்குணமுடையவன்

4429. **படமஞ்சரி**
(01) ஒரு வகைப் பண்

4430. **படர்செண்பகம்**
(01) கொடிச் செண்பகம் போன்ற அழகிய பெண்

4431. **படர்மல்லிகை**
(01) மல்லி வகை

4432. **படலி**
(01) துளசி போன்ற பெண்

4433. **படவன்**
(01) படகோட்டும் நெய்தனிலக் குடியில் பிறந்தவன்

4434. **படன்**
(01) கெட்டிக்காரன்
(02) பேரறிவுடையவன்
(03) நன்மை செய்பவன்

4435. **படாரன்**
(01) கடவுள்
(02) சமண முனிவர்
(03) பாம்பாட்டி

4436. **படாரி**
(01) சிற்றூர்க் காவல் தெய்வம்

4437. **படிகன்**
(01) பளிங்கு போல் பொலிபவன்
(02) வாயிற்காவலன்

4438. **படிப்பாளி**
(01) கல்வி கேள்வியில் வல்லவன்
(02) நூல்களை படித்து அறிவை வளர்ப்பவன்

4439. **படிமகன்**
(01) செவ்வாய்க் கோள்
(02) செவ்வாயன்று பிறந்தவன்

4440. **படிமன்**
(01) சிலை போன்ற அழகிய வடிவுடையவன்
(02) தூய்மையானவன்

4441. **படிமுழுதிடந்தோன்**
(01) முழுப் புவியையும் பெயரத்தூக்கிய திருமால்

4442. **படியளந்தோன்**
(01) உலகை அளந்த திருமால்

4443. **படியிடந்தோன்**
(01) முழுப் புவியையும் பெயரத்தூக்கிய திருமால்

4444. **படிரன்**
(01) சந்தனம் போல் மணப்பவன்
(02) செந்நிறமானவன்

4445. **படிலன்**
(01) வீரன்

4446. **படிவன்**
(01) வடிவழகான தோற்றமுடையவன்
(02) முனிவர்

4447. **படினன்**
(01) மேன்மையானவன்
(02) பக்குவமடைந்தவன்
(03) வெற்றியாளன்
(04) கல்வி கற்பதில் சிறந்தவன்

4448. **படீரன்**
(01) சந்தனம் போல் மணப்பவன்
(02) செந்நிறமானவன்

4449. **படுகன்**
(01) மருத நிலக் குடிமகன்
(02) படுகர் இனத்தைச் சேர்ந்தவன்

4450. **படுசுட்டி**
(01) மிகுந்த அறிவுக் கூர்மையும் சுறுசுறுப்பும் உடையவன்

4451. **படைஞன்**
(01) படைவீரன்

4452. **படையாளன்**
(01) படைவீரன்

4453. **படைநாயகன்**
(01) படைத்தலைவன்

4454. **படையன்**
(01) போர்ப் படைகளையுடையவன்

4455. **படைவீட்டான்**
(01) குமரனின் அறுபடை வீடுகளொன்றில் பிறந்தவன்

4456. **படோலிகை**
(01) நிலவு போன்ற அழகுடையவள்

4457. **பண்ணவன்**
(01) கடவுள்
(02) தேவன்
(03) அருகன்
(04) முனிவன்
(05) திண்ணியன்
(06) பாணன்
(07) பொன் போல் பொலியும் தேவர் போன்ற உயர்வுமுடையவன்

4458. **பண்ணவி**
(01) தேவி

4459. **பண்ணன்**
(01) இசை போல் இனியவன்

4460. **பண்ணாடி**
(01) தலைவன்

4461. **பண்ணி**
(01) வள்ளல்
(02) படைத் தலைவன்

4462. **பண்பாளன்**
(01) சிறந்த குணநலன்களைப் பெற்றிருப்பவன்
(02) நல்ல பண்புகளையுடையவன்

4463. **பண்மகன்**
(01) சிறந்த பாடகன்

4464. **பணிமொழி**
(01) மென்மொழி பேசும் பெண்

4465. **பணியன்**
(01) பணியன்
(02) சங்கு போன்றவன்

4466. **பணியிறை**
(01) பாம்பரசனான ஆதிசேடன்

4467. **பணிலன்**
(01) பணியன்
(02) சங்கு போன்றவன்

4468. **பத்தராவி**
(01) திருமால்

4469. **பத்திசாரன்**
(01) திருமழிசையாழ்வார்

4470. **பதகன்**
(01) பறவை போன்றவன்

4471. **பதங்கன்**
(01) பறவை போன்றவன்
(02) கதிரவன்

4472. **பதசன்**
(01) பறவை போன்றவன்
(02) நிலவு போன்றவன்

4473. **பதமன்**
(01) திங்கள் போன்றவன்
(02) பறவை போன்றவன்

4474. **பதமை**
(01) மென்மையான பெண்

4475. **பதலன்**
(01) மிகுந்த விழிப்புணர்வுடையவன்

4476. **பதவியன்**
(01) அமைதியானவன்

4477. **பதன்**
(01) பக்குவமானவன்
(02) பிறருக்கு உணவளிப்பவன்
(03) அழகானவன்
(04) தகுதி வாய்ந்தவன்
(05) கூர்மையானவன்
(06) காவலாயிருப்பவன்
(07) ஒளி மிகுந்தவன்

4478. **பதனன்**
(01) மிகுந்த விழிப்புடையவன்
(02) பாதுகாப்புணர்வுடையவன்

4479. **பதினெண்கண்ணன்**
(01) முருகன்

4480. **பதுமன்**
(01) சிலை போன்ற அழகுடையவன்
(02) பதுமனார் என்னும் புலவர்

4481. **பதுமை**
(01) பாவை
(02) சிலை

4482. **பய்யமிழிப்பான்**
(01) பழம் பெரும் சிற்பி ஒருவர்

4483. **பயசன்**
(01) பால் போன்று தூயவன்
(02) நீர் போன்று அனைவருக்கும் உயிராய் விளங்குபவன்

4484. **பயப்பன்**
(01) அனைவருக்கும் பயனாய் விளங்குபவன்
(02) கருணை மிக்கவன்

4485. **பயனன்**
(01) பொருள் நிறைந்த சொற்களைப் பேசுபவன்
(02) செல்வம் மிக்கவன்

4486. **பயிலவன்**
(01) சிறந்த முறையில் கல்வி கற்பவன்
(02) கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெறுபவன்
(03) நல்ல முறையில் பழகுபவன்
(04) நன்னடத்தையுடன் வாழ்பவன்

4487. **பயிலன்**
(01) சிறந்த முறையில் கல்வி கற்பவன்
(02) கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெறுபவன்
(03) நல்ல முறையில் பழகுபவன்
(04) நன்னடத்தையுடன் வாழ்பவன்

4488. **பயினன்**
(01) அரவரசனான ஆதிசேடன்

4489. **பரகுரவன்**
(01) அறிவாசிரியன்

4490. **பரங்குன்றன்**
(01) திருப்பரங்குன்றத்தில் பிறந்தவன்

4491. **பரங்கொற்றன்**
(01) பேரரசன்
(02) இறைவன்
(03) தலைவன்
(04) பெரும் நிலப்பரப்பையாளும் அரசன்
(05) கடைக் கழகக் காலப் புலவர்

4492. **பரசிவன்**
(01) மேனிலை இறைவனாம் சிவன்

4493. **பரஞ்சுடர்**
(01) மேனிலை பொருந்திய இறையொளி

4494. **பரணதேவன்**
(01) சிவபெருமான் திருவந்தாதி இயற்றிய ஆசிரியர்

4495. **பரணன்**
(01) கடைக் கழகக் காலப் புலவர்

4496. **பரணி**
(01) போர் முகத்தில் ஆயிரம் யானைகளை அழித்து வென்ற வீரனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட தமிழ்ச் சிற்றிலக்கிய வகை
(02) வெற்றி முழக்கத்திற்கான குறியீடு

4497. **பரதவன்**
(01) நெய்தனில ஆண்

4498. **பரதன்**
(01) நெய்தனில ஆண்

4499. **பரதெய்வம்**
(01) முழுமுதற்கடவுள்

4500. **பரதேவதை**
(01) முழுமுதற்கடவுள்

4501. **பரந்தெய்வம்**
(01) முழுமுதற்கடவுள்

4502. **பரபதன்**
(01) மேலான பொருளாக விளங்குபவன்
(02) வீடு பேறுடையவன்

4503. **பரபரன்**
(01) முழுமுதற் கடவுள்

4504. **பரம்பன்**
(01) உழவர்க்குடி மகன்

4505. **பரம்பொருள்**
(01) இறைவன்

4506. **பரமகலை**
(01) மலைமகள்

4507. **பரமன்**
(01) மேலானவன்
(02) முதற்கடவுள்
(03) கடவுள் சிவன்
(04) மேன்மையானவன்
(05) தகுதியானவன்
(06) நிறைவானவன்
(07) ஆதன்

4508. **பரமா**
(01) மலைமகள்
(02) ஆட்டுக்குட்டி போன்ற துள்ளலும் சுறுசுறுப்பும் நிறைந்த பெண்
(03) விலங்கினத்தில் பெண்

4509. **பரமேட்டி**
(01) சிவன்
(02) பரம்பொருள்
(03) நான்முகன்
(04) திருமால்
(05) அருகன்

4510. **பரமைகாந்தி**
(01) கடவுளிடமே உள்ளத்தை நிறுவும் பெரியோன்

4511. **பரவன்**
(01) நெய்தனில ஆண்

4512. **பரவா**
(01) மீன் குஞ்சு போன்றவள்

4513. **பரவை நாச்சியார்**
(01) சுந்தரநாயனாரின் தேவியர் இருவருள் ஒருவர்

4514. **பரவையாழ்**
(01) நால்வகை யாழ்களுள் ஒன்றான பேரியாழ்

4515. **பரன்**
(01) கடவுள்
(02) ஆதன்
(03) சிவன்

4516. **பரனந்தி**
(01) முழுமுதற்கடவுள்

4517. **பராகன்**
(01) சந்தனம் போன்ற நறுமணங்கொண்டவன்

4518. **பராங்கவன்**
(01) பெருங்கடல் போன்றவன்

4519. **பராபரன்**
(01) பரம்பொருளாய் விளங்குபவன்

4520. **பராயன்**
(01) கடைக்கழகக் காலப் புலவர்

4521. **பரி**
(01) வேகமானவன்
(02) குதிரை போன்றவன்
(03) உயர்வானவன்
(04) பெருமை நிறைந்தவன்
(05) காப்பாளன்
(06) அன்பானவன்

4522. **பரிச்சிமிழ்**
(01) பொன்னாலான சிமிழ் போன்ற பெண்

4523. **பரிசன்**
(01) நற்குணத்தான்
(02) தன்மையானவன்
(03) கொடையாளன்

4524. **பரிசில்**
(01) கொடையாளன்

4525. **பரிதி**
(01) ஒளிவட்டம்
(02) கதிரவன்
(03) திருக்குறள் உரையாசிரியருள் ஒருவர்
(04) பொன் போல் ஒளிர்பவன்

4526. **பரிதிமாற்கலைஞன்**
(01) தமிழறிஞர்
(02) நூலாசிரியர்

4527. **பரிப்பெருமாள்**
(01) திருக்குறள் உரையாசிரியருள் ஒருவர்

4528. **பரிபாகி**
(01) தகுந்தவன்
(02) அறிவு முதிர்ச்சியுள்ளவன்

4529. **பரிபாடி**
(01) ஒழுங்கு நிறைந்தவன்

4530. **பரிமா**
(01) குதிரை

4531. **பரிமாணன்**
(01) இலக்கண நூலாசிரியர்

4532. **பரிமேலழகன்**
(01) திருக்குறள், பரிபாடல் போன்றவற்றின் உரையாசிரியர்

4533. **பரியன்**
(01) பெரியவன்

4534. **பரிவயன்**
(01) இளமையானவன்

4535. **பரிவலன்**
(01) வெள்ளி போல் பொலிபவன்

4536. **பரிவன்**
(01) அன்புள்ளவன்
(02) ஈரநெஞ்சுடையவன்
(03) முதிர்ச்சியானவன்

4537. **பரிவேடன்**
(01) கதிரவன், திங்கள் இவற்றைச் சுற்றிக் காணப்படும் ஒளி வட்டம் போன்றவன்

4538. **பருங்கை**
(01) வள்ளன்மையுடையவன்
(02) பெருஞ்செல்வன்

4539. **பருணன்**
(01) செயற்பாட்டாளன்

4540. **பருத்தி**
(01) பருத்தி போன்று மென்மையான பெண்
(02) பருத்தி வகைகள்:
(03) செம்பருத்தி
(04) பூம்பருத்தி
(05) தீப்பருத்தி
(06) வெண்பருத்தி
(07) பட்டுப்பருத்தி
(08) தாய்ப்பருத்தி
(09) ஐம்பருத்தி

4541. **பருவதி**
(01) திங்கள் போன்ற பெண்

4542. **பருவநிலா**
(01) முழு நிலா போன்ற பெண்

4543. **பரேரன்**
(01) மிக்க அழகுடையவன்

4544. **பரைச்சி**
(01) மலைமகள்

4545. **பல்கண்ணன்**
(01) கூடலூர் ஊரைச் சேர்ந்த பல்கண்ணன் என்னும் புலவர்
(02) தாமம் என்ற ஊரைச் சேர்ந்த தாமப் பல்கண்ணனார் என்றழைக்கப்பட்ட புலவர்

4546. **பல்காப்பியன்**
(01) யாப்பிலக்கண நூலாசிரியர் ஒருவர் பெயர்

4547. **பல்காயன்**
(01) யாப்பிலக்கண நூலாசிரியர் ஒருவர் பெயர்

4548. **பல்யானைச் செல்கெழு குட்டுவன்**
(01) மேகக் கூட்டங்கள் போன்ற யானைகளைக் கொண்ட சேரன்

4549. **பல்லவி**
(01) இசைப்பாடலில் பாடப்படும் முதலுறுப்பு

4550. **பல்லிதழ்**
(01) பல இதழ்களைக் கொண்ட மலர்

4551. **பலா**
(01) பலாப்பழம் போன்ற இனிமையுடையவள்
(02) பலா வகைகள்:
(03) கானற்பலா
(04) காட்டுப்பலா
(05) தேன்பலா
(06) செம்பலா
(07) சிறுபலா

4552. **பலிகன்**
(01) மலை போன்றவன்
(02) பவளம் போன்றவன்

4553. **பவணந்தி**
(01) நன்னூல் இயற்றிய புலவர் பெயர்

4554. **பவழம்**
(01) பவழம் போன்ற அழகு நிறைந்த பெண்

4555. **பவழமல்லி**
(01) மணம் மகுந்த மலர் போன்ற பெண்

4556. **பவளக்கொடி**
(01) கடலில் வளரும் ஒரு கொடி வகை
(02) ஓர் அரசியின் பெயர்

4557. **பவளக்கொம்பன்**
(01) பவள நிறக் கொம்புடைய யானை போன்றவன்

4558. **பவளம்**
(01) ஒன்பது மணிகளுள் ஒன்று

4559. **பவளமல்லிகை**
(01) பவளமல்லிகை போன்ற அழகுடைய பெண்

4560. **பவளமுத்து**
(01) சிவப்பு முத்து போன்ற அழகுடையவன்

4561. **பவளவடிவன்**
(01) முருகன்

4562. **பவளவல்லி**
(01) செவ்வல்லி போன்ற அழகுடைய பெண்

4563. **பவளவறுகு**
(01) அறுகம்புல் வகை

4564. **பவன்**
(01) சிவன்
(02) கடவுள்
(03) புதிதாய்த் தோன்றுபவன்

4565. **பவானி**
(01) உமாதேவி
(02) காவிரியில் கலப்பதோர் இளையாறு
(03) கொற்றவை

4566. **பவிகன்**
(01) சிறப்பு வாய்ந்தவன்

4567. **பவினி**
(01) நாணல் போன்ற பெண்

4568. **பழகாடி**
(01) பட்டறிவுடையவன்

4569. **பழங்குடி**
(01) பழமையான குடியிற் பிறந்தவன்
(02) தொன்று தொட்டு மேம்பாடான குடியிற் பிறந்தவன்

4570. **பழந்தேன்**
(01) நாட்பட்ட தேன் போன்ற பெண்

4571. **பழநி**
(01) முருகக் கடவுள் குடி கொண்டுள்ள திருவாவினன்குடி
(02) பழநியிற் பிறந்தவன்

4572. **பழம்பொருள்**
(01) கடவுள்
(02) புதையல் போன்றவன்

4573. **பழமா**
(01) தேமா (இனிய சுவையுடைய மாம்பழம்)

4574. **பழனன்**
(01) மருதநிலக் குடிமகன்

4575. **பழனி**
(01) முருகக் கடவுள் குடி கொண்டுள்ள திருவாவினன்குடி
(02) பழநியிற் பிறந்தவன்

4576. **பழனியாண்டவன்**
(01) முருகன்

4577. **பழனியாண்டி**
(01) முருகன்

4578. **பழனிவேலன்**
(01) முருகன்

4579. **பழுதில் புகழ் மாறன்**
(01) அறிவுடையவன்
(02) பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன்
(03) உழவன்
(04) வேளாண் தொழிலை முதன்முதலாக உண்டாக்கிய மன்னர் மரபினன்
(05) பாண்டிய நாட்டரசன்

4580. **பழுதுடைநாயகன்**
(01) தாமரை போன்றவன்

4581. **பழுமணி**
(01) மாணிக்கம்

4582. **பழையன்**
(01) பாண்டியன் படைத்தலைவனான ஒரு சிற்றரசன்
(02) தொன் முதுகுடியினன்
(03) பாண்டியன் மரபைச் சேர்ந்த கிளைக்குடியினன்

4583. **பழையன் மாறன்**
(01) பாண்டிய மன்னன்

4584. **பழையோள்**
(01) கொற்றவை

4585. **பள்ளத்தி**
(01) பள்ளர் குலப்பெண்

4586. **பள்ளன்**
(01) பள்ளர் குலத்தான்

4587. **பள்ளாடி**
(01) தலைவன்

4588. **பள்ளி கொண்ட பெருமாள்**
(01) திருமால்

4589. **பள்ளி கொண்டான்**
(01) திருமால்

4590. **பளிதன்**
(01) கருப்பூரம் போன்றவன்

4591. **பற்றிலான்**
(01) பற்றற்றவனாகிய இறைவன்

4592. **பற்றுநன்**
(01) நண்பன்

4593. **பறம்பன்**
(01) பாரியின் பறம்பு மலையிற் பிறந்தவன்
(02) பறம்பு மலையில் வாழ்பவன்
(03) மேடான நிலத்தில் வாழ்பவன்
(04) குன்றின் மேல் வாழ்பவன்

4594. **பறவைவேந்தன்**
(01) பறவைகளின் வேந்தனாகக் கருதப்படும் கலுழன் (கருடன்)
(02) கருடாழ்வார்

4595. **பறைச்சி**
(01) பறைக்குடிப் பெண்

4596. **பறையன்**
(01) நால்வகை இசைக்குடிமக்களுள் ஒருவன்

4597. **பன்னகந்துயில்வோன்**
(01) திருமால்

4598. **பன்னகமுயர்த்தோன்**
(01) பாம்புக் கொடி கொண்ட துரியோதனன்

4599. **பன்னகவல்லி**
(01) வெற்றிலைக் கொடி போன்ற பெண்

4600. **பன்னகன்**
(01) பாம்பு இனமான நாகரினத்தவன்
(02) ஆதிசேடன்

4601. **பன்னாகன்**
(01) துளசி போன்றவன்

4602. **பன்னாசன்**
(01) துளசி போன்றவன்

4603. **பன்னாடி**
(01) தலைவன்

4604. **பன்னாடு தந்த மாறன் வழுதி**
(01) நற்றினையைத் தொகுப்பித்த பல்நாடு என்ற நிலப்பகுதியை வென்ற பாண்டிய மன்னன்

4605. **பன்னாடு தந்தான்**
(01) பாண்டிய மன்னன் மாறன் வழுதியின் அடைமொழி
(02) நற்றிணையைத் தொகுப்பித்தவன்

4606. **பன்னிகா**
(01) கற்புடைய பெண்
(02) பனித் துளி போன்ற தூயவள்
(03) பனிநீர்ப்பூ போன்றவள்

4607. **பன்னிருகைப்பெருமான்**
(01) முருகன்

4608. **பன்னிருகையோன்**
(01) முருகன்

4609. **பன்னீர்**
(01) பனிநீர்ப்பூ போன்ற பூக்களினின்று இறக்கப்படும் நறுமண நீர் போன்றவன்

4610. **பன்னீர்ப்பூ**
(01) பனிமலர் (ரோஜா)
(02) முளரிப்பூ

4611. **பனங்கதிர்**
(01) பனம் பூ போன்ற அழகுடையவன்

4612. **பனங்கிளி**
(01) பனைமரத்தில் வாழும் அன்றில் பறவையைப் போன்றவள்
(02) ஒரு வகைக் கிளி

4613. **பனங்குருகு**
(01) பனங்குருத்து போன்ற தூய்மையும் அழகும் உடையவன்

4614. **பனங்குரும்பை**
(01) பனங்குருத்து போன்ற தூய்மையும் அழகும் உடையவன்

4615. **பனங்கோவை**
(01) அப்பைக்கோவை (குங்குமப்பூ) போன்ற அழகும் மணமும் பயனும் உள்ள பெண்

4616. **பனசயித்தன்**
(01) அரசமரம்

4617. **பனசன்**
(01) பலா

4618. **பனஞ்சுளை**
(01) நுங்கு போன்றவள்

4619. **பனம்பாரன்**
(01) அகத்தியரின் மாணாக்கருள் இலக்கண நூலொன்றும், தொல்காப்பியச் சிறப்புப் பாயிரமும் செய்த ஆசிரியர்
(02) பனைமரத்தின் பார் போல் தாங்குபவன்

4620. **பனம்பூ**
(01) ஆண் பனைப் பாளை

4621. **பனம்பூவல்லி**
(01) ஒரு வகைக் காட்டுக் கொடிப் பூ

4622. **பனவன்**
(01) பார்ப்பன ஆண்

4623. **பனி**
(01) நீராவி குளிர்ந்து விழும் துளி போன்ற தூயவள்
(02) குளிர்ச்சியானவள்
(03) மழை போன்றவள்
(04) இனிமையானவள்

4624. **பனிக்கதிர்**
(01) குளிர்ச்சி பொருந்திய ஒளி தரும் திங்கள் போன்றவன்

4625. **பனிச்சுடர்**
(01) குளிர்ச்சி பொருந்திய ஒளி தரும் திங்கள் போன்றவன்

4626. **பனித்துளி**
(01) நீராவி குளிர்ந்து விழும் துளி போன்ற தூயவள்
(02) குளிர்ச்சியானவள்
(03) மழை போன்றவள்
(04) இனிமையானவள்

4627. **பனிநீர்**
(01) நீராவி குளிர்ந்து விழும் துளி போன்ற தூயவள்
(02) குளிர்ச்சியானவள்
(03) மழை போன்றவள்
(04) இனிமையானவள்

4628. **பனிப்பகைவன்**
(01) கதிரவன்

4629. **பனிமலை**
(01) இமய மலை போன்றவன்

4630. **பனிமுகில்**
(01) குளிர்ந்த வெண்மேகம் போன்றவன்

4631. **பனிமொழி**
(01) இனிய மொழியுடைய பெண்

4632. **பனுவல்**
(01) சிறந்த பாடல் போன்றவன்
(02) சிறந்த நூல் போன்றவன்

4633. **பனுவலாட்டி**
(01) கலைத் தெய்வமான கலைமகள்

4634. **பனைக்கொடியோன்**
(01) பலராமன்
(02) வீடுமன் (பீஷ்மன்)

4635. **பனைதி**
(01) அரச மரம் போன்ற பெண்

4636. **பனைவடலி**
(01) இளம்பனை

# பா

4637. **பாக்கன்**
(01) நீர் நிலைக்கரையிலுள்ள ஊரைச் சேர்ந்தவன்

4638. **பாக்கியத் திருமகள்**
(01) திருமகள்

4639. **பாக்கியம்**
(01) நல்லூழ் பெற்றவன்
(02) நல்வினை புரிபவன்
(03) செல்வமுடையவன்

4640. **பாக்கியவாளன்**
(01) நிறைந்த செல்வமுடையவன்

4641. **பாக்கியவான்**
(01) நிறைந்த செல்வமுடையவன்

4642. **பாக்குணன்**
(01) துன்பம் தீர்க்கும் மருந்து போன்றவன்

4643. **பாகன்**
(01) வழி நடத்திச் செல்பவன்
(02) அறிவன் (புதன்) கோள்
(03) அறிவன் நாளன்று (புதன்கிழமை) பிறந்தவன்
(04) பக்குவம் பெற்றவன்

4644. **பாகி**
(01) தகுதியானவன்

4645. **பாகு**
(01) இனியவன்
(02) வழி நடத்துபவன்
(03) ஆள்வினைத்திறன் (நிர்வாகத்திறன்) உடையவன்
(04) அழகு நிறைந்தவன்

4646. **பாகுளி**
(01) கன்னி (புரட்டாசி) மாதத்து நிறை நிலா நாளில் பிறந்தவன்

4647. **பாங்கயன்**
(01) விண்ணில் உயரப் பறக்கும் கலுழன் (கருடன்)

4648. **பாங்கன்**
(01) தோழன்
(02) மதிப்புரவுள்ளவன்
(03) பக்கத்திலிருப்பவன்
(04) நன்மையாயிருப்பவன்
(05) அழகு நிறைந்தவன்
(06) தகுதியானவன்
(07) உடல் நலமுடையவன்
(08) நல்லியல்புடையவன்
(09) ஒழுக்கமானவன்
(10) துணையாயிருப்பவன்
(11) இணக்கமானவன்
(12) செயலெதையும் சிறப்பாகச் செய்பவன்
(13) நயம் நிறைந்தவன்
(14) உரிமையுடையவன்
(15) நல்லுறவு பேணுபவன்
(16) நற்குணமுடையவன்

4649. **பாங்கோன்**
(01) தோழன்
(02) மதிப்புரவுள்ளவன்
(03) பக்கத்திலிருப்பவன்
(04) நன்மையாயிருப்பவன்
(05) அழகு நிறைந்தவன்
(06) தகுதியானவன்
(07) உடல் நலமுடையவன்
(08) நல்லியல்புடையவன்
(09) ஒழுக்கமானவன்
(10) துணையாயிருப்பவன்
(11) இணக்கமானவன்
(12) செயலெதையும் சிறப்பாகச் செய்பவன்
(13) நயம் நிறைந்தவன்
(14) உரிமையுடையவன்
(15) நல்லுறவு பேணுபவன்
(16) நற்குணமுடையவன்

4650. **பாச்சில் வேள் நம்பன்**
(01) திருப்பாச்சிலாச்சிரமமென்ற ஊரைச் சேர்ந்த நம்பன் என்ற, எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்

4651. **பாசத்தன்**
(01) பாசக்கயிற்றைக் கையிற் கொண்ட கூற்றுவன்

4652. **பாசபாணி**
(01) சிவன்
(02) வருணன்
(03) கூற்றுவன்
(04) பிள்ளையார்

4653. **பாசருகன்**
(01) அகில் போன்றவன்

4654. **பாசலன்**
(01) தீ போன்றவன்
(02) காற்று போன்றவன்

4655. **பாசன்**
(01) ஆதன்
(02) கூற்றுவன்
(03) வருணன்
(04) சிவன்

4656. **பாசிழை**
(01) ஒப்பனை செய்யப்பட்ட பெண்

4657. **பாசு**
(01) பசுமையானவன்
(02) வீரமானவன்

4658. **பாட்டகன்**
(01) பாடல் பாடுவதில் வல்லவன்

4659. **பாட்டுடைத் தலைமகன்**
(01) இலக்கியத் தலைமகன்

4660. **பாட்டுடைத் தலைவன்**
(01) இலக்கியத் தலைமகன்

4661. **பாட்டு நாயகன்**
(01) இலக்கியத் தலைமகன்

4662. **பாடகன்**
(01) பாடல் வல்லான்
(02) சொல் வல்லான்

4663. **பாடலன்**
(01) பாடலம் என்ற இலக்கண நூலின் ஆசிரியர்
(02) செந்நிறமுடையவன்

4664. **பாடவன்**
(01) வல்லமையுடையவன்
(02) நலமுடன் வாழ்பவன்
(03) பெருமையானவன்
(04) பாடுபவன்
(05) ஆடவை (ஜெமினி ராசி)யிற் பிறந்தவன்

4665. **பாடறிவன்**
(01) கடற்றொழில் அறிவுடையவன்

4666. **பாடினி**
(01) பாடல் வல்லாள்
(02) பாண்குலமகள்

4667. **பாடினன்**
(01) பாடல் வல்லான்
(02) பாண்குலமகன்

4668. **பாடீரன்**
(01) சந்தனம் போல மணப்பவன்
(02) முகில் போன்றவன்

4669. **பாடுநன்**
(01) இசை பாடுபவன்
(02) புலவன்

4670. **பாடுவன்**
(01) பாடகன்
(02) பாணன்

4671. **பாடுவான்**
(01) பாடகன்
(02) பாணன்

4672. **பாண்டரன்**
(01) மல்லிகை போன்றவன்
(02) வெண்மையானவன்

4673. **பாண்டரங்கன்**
(01) கடைக் கழகப் புலவர்

4674. **பாண்டரி**
(01) பாண்டரன்
(02) மல்லிகை போன்றவள்
(03) வெண்மையானவள்

4675. **பாண்டி**
(01) பாண்டி நாட்டைச் சேர்ந்தவன்

4676. **பாண்டிநாயகம்**
(01) தில்லைத் திருக்கோயிலில் உள்ள முருகன்

4677. **பாண்டிநாயகன்**
(01) தில்லைத் திருக்கோயிலில் உள்ள முருகன்

4678. **பாண்டியன்**
(01) அறிவுடையவன்
(02) பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன்
(03) உழவன்
(04) வேளாண் தொழிலை முதன்முதலாக உண்டாக்கிய மன்னர் மரபினன்
(05) பாண்டிய நாட்டரசன்

4679. **பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன்**
(01) கடைக் கழகப் புலவர் ஒருவர்

4680. **பாண்டியன் கீரஞ்சாத்தன்**
(01) பாண்டிய மன்னர்களின் கீழிருந்த குறுநிலத் தலைவன்

4681. **பாண்டி வேளாளன்**
(01) மதுரை மாவட்ட வேளாளர் பிரிவினன் திருவாங்கூரில் வாழும் தென்பாண்டி நாட்டு வேளாளர் பிரிவினன்

4682. **பாண்டீரன்**
(01) ஆலமரம் போன்றவன்
(02) வெண்மை நிறத்தவன்

4683. **பாண்டுரன்**
(01) வெண்ணிறத்தான்

4684. **பாண்மகன்**
(01) பாணற்குடியிற் பிறந்த ஆண்

4685. **பாண்யாழ்**
(01) பாணர் கையில் உள்ள யாழ் போன்றவன்

4686. **பாணர்மாலை**
(01) பாண்குல மகள்

4687. **பாணன்**
(01) பாடல் வல்லான்
(02) சிவனடியாரான ஓர் அசுரன்
(03) தமிழ்நாட்டுப் பழங்குடிகளுள் ஒரு பிரிவினர்
(04) கழகக்காலத்தைச் சேர்ந்த ஒரு குறுநில மன்னன்
(05) புலவன்
(06) பாணர் குடியினன்

4688. **பாணிகா**
(01) பாணிரா
(02) தாமரை மலர் போன்றவள்

4689. **பாணிதன்**
(01) இனிமையானவன்

4690. **பாணிரன்**
(01) தாமரை மலர் போன்றவன்

4691. **பாணினி**
(01) பாடல் வல்லாள்
(02) பாண்குலமகள்

4692. **பாத்தியன்**
(01) சுற்றத்தான்
(02) உரிமையாளன்

4693. **பாதமூலம்**
(01) இறைவன் திருவடி

4694. **பாதிமதி**
(01) வளர்மதி
(02) பிறைத் திங்கள்

4695. **பாதிரன்**
(01) சந்தனம் போன்றவன்

4696. **பாது**
(01) ஞாயிறு
(02) காவலாய் விளங்குபவன்

4697. **பாந்தன்**
(01) இணக்கமானவன்
(02) ஒழுங்கு நிறைந்தவன்
(03) பொருத்தமாகச் செயல் புரிபவன்

4698. **பாமகள்**
(01) பாமடந்தை
(02) கலைமகள்

4699. **பாமன்**
(01) சினம் மிகுந்தவன்
(02) ஒளி மிகுந்தவன்
(03) கதிரவன்

4700. **பாமாலை**
(01) பாக்களின் தொகுப்பு போன்ற இனிமையுடையவள்

4701. **பாமினி**
(01) சிறு சண்பகம்

4702. **பாய்கலைப்பாவை**
(01) கொற்றவை

4703. **பாய்மா**
(01) குதிரை போன்ற விரைவும் உறுதியான உடலும் உடையவன்

4704. **பார்**
(01) மறையோன்
(02) புத்தன்

4705. **பார்க்கி**
(01) குவளை மலர் போன்ற பெண்

4706. **பார் காப்பான்**
(01) புலவர்
(02) உலகைக் காப்பவன்

4707. **பார்சவன்**
(01) பரிசாகக் கிடைத்தவன்
(02) பரிசுகளை வாங்கிக் குவிப்பவன்

4708. **பார்மகள்**
(01) உலகத்தாய்

4709. **பார்மிசையோன்**
(01) பார்மிசை நடந்தோன்
(02) புத்தன்

4710. **பார்வணன்**
(01) மான் போன்றவன்

4711. **பாரகன்**
(01) உலக நாயகன்
(02) கல்வியிற் கரை கண்டவன்
(03) உலக அறிவுடையவன்

4712. **பாரணன்**
(01) மேகம் போன்றவன்

4713. **பாரமன்**
(01) மாமரம் போன்றவன்

4714. **பாராணியன்**
(01) குடும்பத்திற்கும் குழுகாயத்திற்கும் அச்சாணியாக விளங்குபவன்

4715. **பாராயணன்**
(01) ஒன்றன் மேல் ஆழ்ந்த குறிக்கோள் மற்றும் கவனம் கொண்டு கற்பவன் மற்றும் செயல்படுபவன்

4716. **பாராயணி**
(01) கலைமகள்

4717. **பாராயணிகன்**
(01) தன்னாயுள் முழுவதும் கற்றுக் கொண்டேயிருப்பவன்

4718. **பாரி**
(01) நிலம் போல் பொறுமை உடையவன்
(02) கடையெழு வள்ளல்களுள் ஒருவனான வேள்பாரி
(03) பெரியோரைப் போற்றி வணங்குபவன்
(04) அனைவரையும் விரும்புபவன்
(05) இன்றியமையாதவனாய் இருப்பவன்
(06) காப்பாளன்

4719. **பாரிவேள்**
(01) பாரி மன்னன்

4720. **பால்மேனியாள்**
(01) கலைமகள்

4721. **பால்வண்ணன்**
(01) சிவன்
(02) பலராமன்

4722. **பாலத்தன்**
(01) புலவர் நப்பாலத்தன்

4723. **பாலநாவாயன்**
(01) திருஞான சம்பந்த நாயனாரின் மறுபெயர்
(02) சேக்கிழாரின் இளவல் பெயர்

4724. **பாலவன்**
(01) பால்வண்ணமான சிவன்

4725. **பாலை கௌதமன்**
(01) கடைக் கழகப் புலவர்

4726. **பாவகன்**
(01) தீ போன்றவன்
(02) தூய்மையானவன்
(03) தீக்கடவுள்

4727. **பாவகி**
(01) முருகன்

4728. **பாவலன்**
(01) செய்யுளியற்றுபதில் வல்லவன்

4729. **பாவனி**
(01) துளசி போன்ற பெண்
(02) பசு
(03) நீர்

4730. **பாவாடைவீரன்**
(01) ஒரு சிற்றூர்த் தெய்வம்

4731. **பாவாணன்**
(01) தேவநேயப் பாவாணர் பெயர்
(02) பாவியற்றுவதில் வல்லவனாக வாழ்பவன்

4732. **பாவினன்**
(01) பாடல் போன்றவன்
(02) செய்யுள் போன்றவன்
(03) காப்பாய் இருப்பவன்
(04) அழகானவன்

4733. **பாவை**
(01) பதுமை
(02) அழகி
(03) கருமையான விழிகளையுடையவள்
(04) பெண்

4734. **பாவைக் கொட்டிலான்**
(01) கடைக் கழகப் புலவர்

4735. **பாழி**
(01) விண் போன்றவன்
(02) கடல் போன்றவன்
(03) பெருமை நிறைந்தவன்
(04) வலிமையானவன்
(05) மருதநிலத்தவன்

4736. **பாளிதா**
(01) பட்டு போன்ற மென்மையான பெண்
(02) நறுமணமுடையவள்

4737. **பாளிந்தி**
(01) செழுமலர்க் கொன்றை போன்ற பெண்

4738. **பாற்கடற்பிறந்தாள்**
(01) திருமகள்

4739. **பாற்கதிர்**
(01) நிலா

4740. **பாற்கரியோன்**
(01) இந்திரன்

4741. **பானலன்**
(01) மருத நிலத்தவன்
(02) கடல் போன்றவன்
(03) குதிரை போன்ற வேகமுடையவன்

4742. **பானிதன்**
(01) இனிமையானவன்

4743. **பானிறவண்ணன்**

(01) பலதேவன்
(02) கரிய நிறத்தவன்
(03) காப்பவன்
(04) தாய் மாமன்
(05) மதிக்கத் தக்கவன்

# பி

4744. **பிகன்**
(01) இனிய ஓசையையுடைய குயில் போன்றவன்

4745. **பிகுவன்**
(01) வலிமையானவன்

4746. **பிங்கலன்**
(01) பொன்னிறமானவன்
(02) பொன் போல் பொலிபவன்
(03) செல்வக் கடவுள்
(04) தீ போன்றவன்
(05) ஞாயிறு
(06) சிவன்

4747. **பிங்கன்**
(01) பிசங்கன்
(02) பொன்மை கலந்த சிவப்பு நிறத்தவன்
(03) இளங்கன்று போன்றவன்

4748. **பிச்சத்தேவன்**
(01) சிவன்

4749. **பிச்சைத்தேவன்**
(01) சிவன்

4750. **பிச்சிகா**
(01) குருவி போன்றவள்

4751. **பிச்சி மலர்**
(01) மல்லிப்பூ வகையுளொன்று
(02) முல்லைப்பூ
(03) சிறு செண்பகம்

4752. **பிசனன்**
(01) செஞ்சந்தனம் போன்றவன்

4753. **பிசிதன்**
(01) திருநீறு போன்று தூயவன்(ள்)
(02) பொன் போல் பொலிபவன்
(03) அழகானவன்

4754. **பிசிரன்**
(01) ஊற்று நீர் போன்றவன்
(02) நீர்த்துளி போன்றவன்
(03) நீரூற்று போன்றவன்
(04) நீரூற்று உள்ள ஊரில் பிறந்தவன்
(05) குமரி மாவட்டத்திலுள்ள பிசிர் என்னும் ஊரில் பிறந்தவன்

4755. **பிசிராந்தை**
(01) குமரி முனைக்கு அருகிலுள்ள பிசிரென்னும் ஊரில் வாழ்ந்த பெருஞ்செல்வர்
(02) பிசிர் என்னும் பாண்டிய நாட்டு ஊரைச் சேர்ந்த ஆந்தை என்னும் பெயருடைய புலவர்

4756. **பிஞ்சுகா**
(01) இறகு போன்று மென்மையானவள்
(02) இளமையானவள்

4757. **பிஞ்சுப்பிறை**
(01) இளம்பிறை

4758. **பிஞ்சுமலர்**
(01) இளம்பூ

4759. **பிஞ்ஞகன்**
(01) சிவன்

4760. **பிட்டன்**
(01) வள்ளல்

4761. **பிட்டன் கொற்றன்**
(01) கடைக் கழகக் குறுநிலத் தலைவன்

4762. **பிட்டிகா**
(01) இருவாட்சி மலர் போன்றவள்

4763. **பிடதி**
(01) மல்லிகையின் ஒரு வகை

4764. **பிடயூதி**
(01) மல்லிகையின் ஒரு வகை

4765. **பிடவன்**
(01) மலர் போன்றவன்

4766. **பிடாரன்**
(01) மருத்துவன்
(02) இசைக் கலைஞன்
(03) ஆசிரியன்
(04) மகுடியிசைப்பவன்
(05) குறவர் இனத்தவன்

4767. **பிடாரி**
(01) குறத்தியினப் பெண்

4768. **பிடியா**
(01) பெண் யானை போன்றவள்

4769. **பிடுகு**
(01) இடி போன்றவன்

4770. **பிண்டன்**
(01) ஆண்பாற் பெயர்
(02) குழுத் தலைவன்
(03) குறுநில மன்னன்

4771. **பிண்டியான்**
(01) அருகன்

4772. **பிணிமுகம்**
(01) மயில்
(02) அன்னம்
(03) பறவை
(04) முருகக் கடவுளின் யானை

4773. **பித்தலன்**
(01) அரசமரம் போன்றவன்

4774. **பித்தன்**
(01) சிவன்

4775. **பித்திரா**
(01) வன்னிமரம்

4776. **பிதகன்**
(01) இடி போன்றவன்

4777. **பிதிரன்**
(01) இடி போன்றவன்

4778. **பிதுவன்**
(01) பெருமையானவன்

4779. **பிராட்டி**
(01) தலைவி
(02) தேவி

4780. **பிரான் சாத்தன்**
(01) வணிகர் தலைவன்
(02) ஐயனார் தெய்வம்

4781. **பிரியாவுடையாள்**
(01) சிவனைப் பிரியாத மலைமகள்

4782. **பிலகரி**
(01) பண் வகைகளுளொன்று

4783. **பிழையாநன்மொழி**
(01) நிறைவேற்றத் தவறலாகா நல்ல சொல் கூறுபவன்

4784. **பிள்ளுவன்**
(01) யானை போன்றவன்

4785. **பிள்ளையார்**
(01) மகன்
(02) யானைமுகக் கடவுள்
(03) முருகன்

4786. **பிளவுப்பிறை**
(01) இளம்பிறை

4787. **பிற்கு**
(01) மழை

4788. **பிறக்கன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) உயர்ந்தவன்
(03) நல்வாழ்வு வாழ்பவன்

4789. **பிறங்கலன்**
(01) பெருமையானவன்
(02) உயர்ந்தவன்
(03) நிறைவானவன்
(04) ஒளிமிகுந்தவன்
(05) அரசன்
(06) சிறந்தவன்

4790. **பிறங்கன்**
(01) பெருமையானவன்
(02) உயர்ந்தவன்
(03) நிறைவானவன்
(04) ஒளிமிகுந்தவன்
(05) அரசன்
(06) சிறந்தவன்

4791. **பிறவிச் செல்வன்**
(01) செல்வனாகவே பிறந்தவன்

4792. **பிறை**
(01) இளந்திங்கள்

4793. **பிறைசூடி**
(01) சிவன்

4794. **பிறைநிலா**
(01) மூன்றாம் பிறை

4795. **பிறைமலர்**
(01) அகத்தி

4796. **பின்னைக்கேள்வன்**
(01) திருமால்

# பீ

4797. **பீடன்**
(01) பெருமையுடையவன்

4798. **பீலகன்**
(01) எறும்பு போல் சுறுசுறுப்பானவன்

4799. **பீலி**
(01) மயில் போன்ற அழகுடைய பெண்
(02) மயிற்றோகை போன்ற மெல்லியவள்
(03) பொன் போல் பொலிபவள்

4800. **பீலியான்**
(01) அருகன்

# பு

4801. **புக்கன்**
(01) அனைவரின் வாழ்விலும் விடியலாக விளங்குபவன்

4802. **புகர்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) அழகு நிறைந்தவன்
(03) வெள்ளிக்கோள்
(04) வெள்ளிக்கிழமை பிறந்தவன்
(05) உயிராய் விளங்குபவன்
(06) அனைவராலும் பாராட்டி, புகழப்படுபவன்

4803. **புகர்வன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) அழகு நிறைந்தவன்
(03) வெள்ளிக்கோள்
(04) வெள்ளிக்கிழமை பிறந்தவன்
(05) உயிராய் விளங்குபவன்
(06) அனைவராலும் பாராட்டி, புகழப்படுபவன்

4804. **புகர்முகம்**
(01) யானை போன்றவன்

4805. **புகர்முகன்**
6317. **யானை முகவன்**
(01) பிள்ளையார்

6318. **யானையுரித்தோன்**
(01) சிவன்

# வ

**6319.** **வக்கணன்**
(01) பண்பாடுடையவன்
(02) ஒழுங்குடையவன்
(03) செம்மையானவன்

**6320.** **வகதி**
(01) எருது போன்றவன்
(02) காற்று போன்றவன்
(03) நண்பன்

**6321.** **வகந்தன்**
(01) காற்று போன்றவன்
(02) குழந்தை

**6322.** **வகன்**
(01) காற்று போன்றவன்
(02) வழியாயிருப்பவன்
(03) குதிரை போன்றவன்
(04) குபேரன்

**6323.** **வகுளன்**
(01) மகிழம்பூ போன்றவன்

**6324.** **வகுளி**
(01) மகிழம்பூ போன்றவள்

**6325.** **வகுளிநாதன்**
(01) ஒரு சித்தர்

**6326.** **வங்கன்**
(01) அலைகடல் போன்றவன்
(02) மரக்கலம் (ship) போன்றவன்
(03) நெய்தல் நிலத்தவன்
(04) நீரூர்தி செலுத்துவோன்

**6327.** **வங்காரன்**
(01) பொன் போல் பொலிபவன்

**6328.** **வங்காளத்தேவி**
(01) நெய்தனிலக் கடவுள்
(02) திருமகள்

**6329.** **வங்கிசன்**
(01) வழித் தோன்றல்
(02) உறவினன்

**6330.** **வங்கினி**
(01) கண்ணுக்கு மையெழுதியவள்
(02) பொட்டு வைத்த முகத்தாள்
(03) கருமை நிறத்தவள்

6331. **வச்சகன்**
(01) காட்டுமல்லி

6332. **வச்சனி**
(01) மஞ்சள் நிறத்தவள்

6333. **வச்சிரவல்லி**
(01) சூரியகாந்திப் பூ

6334. **வசலிகா**
(01) மல்லிகை போன்றவள்

6335. **வஞ்சனி**
(01) மலைமகள்

6336. **வஞ்சி**
(01) பெண்
(02) அறத்தேவி
(03) சேர நாட்டினள்
(04) வஞ்சிப்பா போன்ற இனிமை நிறைந்தவள்

6337. **வஞ்சிப்பா**
(01) நால்வகைப் பாக்களுள் ஒன்றான வஞ்சிப்பா போன்றவள்

6338. **வஞ்சியன்**
(01) சேர மன்னன்
(02) சேர நாட்டவன்

6339. **வஞ்சியான்**
(01) சேர மன்னன்
(02) சேர நாட்டவன்

6340. **வஞ்சிவேந்தன்**
(01) சேர மன்னன்
(02) சேர நாட்டவன்

6341. **வட்டிற்பூ**
(01) தாமரைப் பூ போன்ற பெண்

6342. **வட்புலி**
(01) அரிமா போன்றவன்

6343. **வடக்குத் திருவீதிப் பிள்ளை**
(01) திருவாய்மொழி உரையாசிரியர்

6344. **வடக்கு வாசற்செல்வி**
(01) ஊரின் வடபுறத்து எல்லைத் தெய்வமாகிய காளி

6345. **வடவாயிற்செல்வி**
(01) ஊரின் வடபுறத்து எல்லைத் தெய்வமாகிய காளி

6346. **வடதிசைத் தலைவன்**
(01) குபேரன்

6347. **வடமலை**
(01) மேருமலை போன்றவன்
(02) இமயமலை
(03) திருப்பதி

6348. **வடமலையப்பன்**
(01) மேருமலை போன்றவன்
(02) இமயமலை
(03) திருப்பதி

6349. **வடமலையன்**
(01) மேருமலை போன்றவன்
(02) இமயமலை
(03) திருப்பதி

6350. **வடமலையான்**
(01) மேருமலை போன்றவன்
(02) இமயமலை
(03) திருப்பதி

6351. **வடமலைவாண்டன்**
(01) மேருமலை போன்றவன்
(02) இமயமலை
(03) திருப்பதி

6352. **வடமலைவாணன்**
(01) மேருமலை போன்றவன்
(02) இமயமலை
(03) திருப்பதி

6353. **வடமுகில்**
(01) பாண்டியன்

6354. **வடவேங்கடன்**
(01) திருப்பதியில் பிறந்தவன், வாழ்பவன்

6355. **வடிதங்கம்**
(01) தூய்மையாக்கிய தங்கம் போன்ற பெண்

6356. **வடிதமிழ்**
(01) தெளி தமிழ்

6357. **வடிவம்பலம் நின்ற பாண்டியன்**
(01) பண்டைய பாண்டிய மன்னருள் ஒருவன்

6358. **வடிமணி**
(01) தெளிந்த ஓசையுள்ள மணி

6359. **வடிவணங்கு**
(01) அழகிய பெண்

6360. **வடிவு**
(01) அழகிய வடிவான உடலுடையவள்
(02) அழகானவள்
(03) நன்னிறமுடையவள்
(04) பளபளப்பானவள்
(05) ஒளிர்வானவள்
(06) உண்மையானவள்
(07) செம்மையானவள்

6361. **வடிவழகி**
(01) அழகிய வடிவான உடலுடையவள்
(02) அழகானவள்
(03) நன்னிறமுடையவள்
(04) பளபளப்பானவள்
(05) ஒளிர்வானவள்
(06) உண்மையானவள்
(07) செம்மையானவள்

6362. **வடிவா**
(01) அழகிய வடிவான உடலுடையவள்
(02) அழகானவள்
(03) நன்னிறமுடையவள்
(04) பளபளப்பானவள்
(05) ஒளிர்வானவள்
(06) உண்மையானவள்
(07) செம்மையானவள்

6363. **வடிவாளன்**
(01) அழகிய வடிவான உடலுடையவன்

6364. **வடிவேல்**
(01) அழகிய வேல்
(02) கூரிய வேல்
(03) முருகக் கடவுள்
(04) 19ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்

6365. **வண்களமன்**
(01) வேளாளன்

6366. **வண்டிமலைச்சி**
(01) சிற்றூர்ப் பெண் தெய்வம்

6367. **வண்டிமலையன்**
(01) தென்னார்க்காடு மாவட்டத்தில் வணங்கப்படும் தெய்வம்

6368. **வண்டுணாமலர்**
(01) செண்பகப்பூ

6369. **வண்டுணி**
(01) தாமரை மலர்

6370. **வண்டுநாணான்**
(01) காமன்

6371. **வண்டுருவன்**
(01) திருமால்

6372. **வண்டேறாமலர்**
(01) அப்பொழுது மலர்ந்த மலர்

6373. **வண்ணக்களஞ்சாத்தன்**
(01) கழகக் காலப் புலவர்

6374. **வண்ணக் களஞ்சியன்**
(01) 18ஆம் நூற்றாண்டுப் புலவர்

6375. **வண்ணக்கன்**
(01) வண்ணார்குடிப் பிறந்தவன்
(02) ஓவியன்
(03) பொன்னாலான காசின் தரம் நோட்டமிடுபவன்
(04) மேலாளன்
(05) செயலாளன்

6376. **வண்ணக்கன் சொருமருங்குமரன்**
(01) கழகக் காலப் புலவர்

6377. **வண்ணக்கன் தத்தன்**
(01) கழகக் காலப் புலவர்

6378. **வண்ணகன்**
(01) சந்தனம் போல் மணப்பவன்
(02) நறுமணமுடையவன்

6379. **வண்ணப்புறக் கந்தரத்தன்**
(01) கழகப் புலவர்

6380. **வண்ணப்புறக் கல்லாடன்**
(01) கழகப் புலவர்

6381. **வண்ணன்**
(01) நன்னிறமுடையவன்
(02) ஓவியன்
(03) அழகானவன்
(04) இயற்கையழகு நிரம்பியவன்
(05) குணவாளன்
(06) நன்மை பயப்பவன்
(07) சிறப்பு மிகுந்தவன்
(08) ஒழுங்குடையவன்
(09) வடிவானவன்

6382. **வண்ணமாதிருகை**
(01) கலைமகள்

6383. **வண்ணான்**
(01) தூய்மைப்படுத்துபவன்
(02) ஆடை வெளுக்கும் குடிப் பிறந்தவன்

6384. **வண்ணிகன்**
(01) எழுத்தாளன்

6385. **வண்மன்**
(01) ஈகைக் குணமுடையவன்
(02) தன்மையானவன்
(03) இயல்பானவன்
(04) சிறப்புடையவன்
(05) அழகானவன்
(06) வாய்மைச் சொல்லுடையவன்
(07) வளப்பமானவன்
(08) வலிமையுடையவன்
(09) புகழ் வாய்ந்தவன்

6386. **வணங்கா முடி**
(01) யாருக்கும் தலை வணங்காதவன்

6387. **வணங்காமுடி மன்னன்**
(01) யாருக்கும் தலை வணங்காத மன்னன்

6388. **வணங்கா முடியோன்**
(01) யாருக்கும் தலை வணங்காத மன்னன்

6389. **வணிகன்**
(01) வணிகரினத்தவன்
(02) துலா வோரையிற் பிறந்தவன்

6390. **வத்தன்**
(01) கதாசிரியன்
(02) நூலாசிரியன்
(03) கதை சொல்லி
(04) பேச்சாளன்

6391. **வந்திகா**
(01) அணிகலன் அணிந்தவள்

6392. **வந்திகை**
(01) அணிகலன் அணிந்தவள்

6393. **வந்தியா**
(01) அணிகலன் அணிந்தவள்

6394. **வந்தியை**
(01) அணிகலன் அணிந்தவள்

6395. **வந்தை**
(01) பெருமையானவள்
(02) அணிகலன் அணிந்தவள்

6396. **வமைச்சன்**
(01) இளமையானவன்

6397. **வயன்**
(01) ஆற்றல் மிகுந்தவன்
(02) வலிமையானவன்
(03) வெற்றியாளன்

6398. **வயக்கன்**
(01) ஒளி மிகுந்தவன்

6399. **வயணன்**
(01) வழிகாட்டுபவன்
(02) தெளிவானவன்
(03) சீர்மை மிகுந்தவன்

6400. **வயப்புலி**
(01) வலிமை மிகுந்த அரிமா

6401. **வயமா**
(01) அரிமா
(02) மடங்கல் (ஆவணி) மாதம் பிறந்தவன்
(03) புலி
(04) யானை
(05) குதிரை

6402. **வயமான்**
(01) அரிமா
(02) மடங்கல் (ஆவணி) மாதம் பிறந்தவன்
(03) புலி
(04) யானை
(05) குதிரை

6403. **வயவரி**
(01) புலி

6404. **வயவன்**
(01) வீரன்
(02) வலிமை மிகுந்தவன்
(03) திண்ணியன்
(04) படைத்தலைவன்
(05) கணவன்

6405. **வயனன்**
(01) சொல்வல்லான்
(02) மறை நூல் கற்றவன்
(03) வழி காட்டுபவன்
(04) தன்மையானவன்

6406. **வயிரப்படையோன்**
(01) இந்திரன்

6407. **வயிரம்**
(01) தொன்மணிகளுளொன்று
(02) திண்மையானவள்
(03) வலிமையானவள்
(04) கூர்மையானவள்
(05) முக்கோல் (திருவோணம்) நாண்மீனில் பிறந்தவள்

6408. **வயிரமணி**
(01) தொன்மணிகளுளொன்று
(02) திண்மையானவள்
(03) வலிமையானவள்
(04) கூர்மையானவள்
(05) முக்கோல் (திருவோணம்) நாண்மீனில் பிறந்தவள்

6409. **வயிரமுடி**
(01) வயிரம் இழைத்த முடி

6410. **வயிரமுத்து**
(01) குற்றமற்ற, வன்மையான, திண்ணிய, விலையுயர்ந்த முத்து

6411. **வயிரவன்**
(01) வயிரவக் கடவுள்

6412. **வயிரவி**
(01) கொற்றவை

6413. **வயிரியன்**
(01) கூத்தன்
(02) பாடகன்
(03) இசைஞன்

6414. **வயினன்**
(01) பக்குவமானவன்
(02) பறவை போன்றவன்
(03) கலுழன் (கருடன்)

6415. **வரகுணன்**
(01) பாண்டிய மன்னன்
(02) உயர்ந்த குணமுடையவன்

6416. **வரச்சந்தனன்**
(01) வரச்சந்தனம் போன்றவன்

6417. **வரடன்**
(01) எகினம் (அன்னம்) போன்றவன்
(02) முல்லை போன்றவன்

6418. **வரணகன்**
(01) சந்தனம் போன்றவன்

6419. **வரணதேவன்**
(01) குன்று (சதயம்) நாண்மீனில் பிறந்தவன்

6420. **வரணன்**
(01) நிறமுடையவன்
(02) அழகுடையவன்
(03) ஒளி மிகுந்தவன்
(04) பொன் போல் பொலிபவன்
(05) புகழ் மிக்கவன்
(06) நறுமணமுடையவன்
(07) குணவான்
(08) தன்மை மிகுந்தவன்
(09) யானை போன்றவன்
(10) உயர்தரமானவன்
(11) குன்று (சதயம்) நாண்மீனில் பிறந்தவன்

6421. **வரந்தருவான்**
(01) வில்லிப்புத்தூராழ்வாரின் புதல்வர் பெயர்

6422. **வரம்பிலறிவன்**
(01) கடவுள்
(02) **பிற பெயர்:**
(03) **முற்றறிவன்**

6423. **வரன்**
(01) சிறந்தவன்
(02) தமையன்
(03) மேலானவன்
(04) நாண்முகன்
(05) வானவன்
(06) கடவுள்

6424. **வரவண்ணினி**
(01) திருமகள்
(02) மலைமகள்
(03) கலைமகள்
(04) கற்புடையாள்
(05) பெண்

6425. **வராகன்**
(01) திருமால்

6426. **வராங்கன்**
(01) தலைவன்
(02) அழகன்
(03) யானை போன்றவன்
(04) சிறந்தவன்

6427. **வராளி**
(01) நிலவன்

6428. **வராளிகை**
(01) கொற்றவை

6429. **வரியன்**
(01) அழகன்
(02) வடிவானவன்

6430. **வரிக்குயில்**
(01) அழகிய குயில் போன்ற பெண்

6431. **வரிக்கொன்றை**
(01) சிவப்புக் கொன்றை மலர் போன்றவள்

6432. **வரிட்டன்**
(01) மேலானவன்

6433. **வரிப்புலி**
(01) வேங்கைப் புலி போன்றவன்

6434. **வரிப்புறா**
(01) புறா போன்றவள்

6435. **வரிவயன்**
(01) புலி போன்றவன்

6436. **வருகன்**
(01) மயிற்றோகை போன்றவன்

6437. **வருணகன்**
(01) சந்தனம் போல் மணப்பவன்

6438. **வருணன்**
(01) குன்று (சதயம்) நாண்மீனில் பிறந்தவன்
(02) கடல் தெய்வம்
(03) மழைத் தெய்வம்

6439. **வருணி**
(01) பொன் போல் பொலிபவள்

6440. **வரைமா**
(01) மலைமா

6441. **வரையரமகள்**
(01) மலைவாழ் தெய்வப் பெண்

6442. **வரையரையன்**
(01) மலையரசன்

6443. **வல்லன்**
(01) வலிமையானவன்
(02) திறமையானவன்
(03) விரைவாகச் செயலாற்றுபவன்
(04) ஆற்றல் கொண்டவன்

6444. **வல்கன்**
(01) யாழ் இசைக் கலைஞன்

6445. **வல்லகை**
(01) வாழை போன்றவள்

6446. **வல்லகன்**
(01) வாழை போன்றவன்

6447. **வல்லணங்கு**
(01) காளி

6448. **வல்லம்பன்**
(01) வேளாண் தொழில் செய்பவன்

6449. **வல்லரசன்**
(01) வலிமையான அரசன்

6450. **வல்லரசு**
(01) வலிமையான அரசன்

6451. **வல்லரட்டன்**
(01) பெரும் வலிமையாளன்
(02) இறுமாப்புடையவன்

6452. **வல்லரி**
(01) வல்லரன்
(02) தளிர் போன்ற மெல்லியள் (ன்)
(03) பூங்கொத்து போன்ற அழகி
(04) கொடி போன்றவள்

6453. **வல்லரன்**
(01) தளிர் போன்ற மெல்லியன்

6454. **வல்லவர்கோன்**
(01) வலியவர்களின் அரசனாக விளங்குபவன்

6455. **வல்லவரையன்**
(01) வலியவர்களின் அரசனாக விளங்குபவன்

6456. **வல்லவரையன் வந்தியத் தேவன்**
(01) குந்தவையின் கணவன்

6457. **வல்லவன்**
(01) வலிமையானவன்
(02) திறமையானவன்
(03) விரைவாகச் செயலாற்றுபவன்
(04) ஆற்றல் கொண்டவன்

6458. **வல்லவி**
(01) வலிமையுள்ளவள்
(02) மலைமகள்
(03) திறமையுள்ளவள்
(04) பிள்ளையாரின் துணைவி

6459. **வல்லவை**
(01) வலிமையுள்ளவள்
(02) மலைமகள்
(03) திறமையுள்ளவள்
(04) பிள்ளையாரின் துணைவி

6460. **வல்லவைமன்**
(01) பிள்ளையார்

6461. **வல்லான்**
(01) திறமையானவன்
(02) வலிமையானவன்

6462. **வல்லாள கண்டன்**
(01) பேராற்றலுள்ளவன்
(02) மிக்க துணிவுடையவன்

6463. **வல்லாள கண்டி**
(01) பேராற்றலுள்ளவன்
(02) மிக்க துணிவுடையவன்

6464. **வல்லாளர் கண்டன்**
(01) பேராற்றலுள்ளவன்
(02) மிக்க துணிவுடையவன்

6465. **வல்லாளன்**
(01) பேராற்றலுள்ளவன்
(02) மிக்க துணிவுடையவன்

6466. **வல்லி**
(01) கொடி போன்ற பெண்
(02) இளம்பெண்
(03) முருகனின் மனைவியான வள்ளி

6467. **வல்லிகா**
(01) கொடி போன்ற பெண்
(02) இளம்பெண்
(03) முருகனின் மனைவியான வள்ளி

6468. **வல்லியன்**
(01) புலி போன்றவன்

6469. **வல்லியா**
(01) கொடி போன்ற பெண்

6470. **வல்லுநன்**
(01) தகுதி வாய்ந்தவன்
(02) வல்லவன்
(03) அறிவிற் சிறந்தவன்

6471. **வல்லோன்**
(01) திறமையானவன்
(02) வல்லவன்
(03) வலிமையானவன்

6472. **வல்வன்**
(01) வலிமையானவன்
(02) திறமையானவன்
(03) விரைவாகச் செயலாற்றுபவன்
(04) ஆற்றல் கொண்டவன்

6473. **வல்வாயன்**
(01) வாக்கு வன்மையுள்ளவன்

6474. **வல்வில்**
(01) மிகுந்த வலிமையுடன் வில்லெய்தி ஒரே காலத்தில் பல பொருட்களைத் துளைத்தெடுக்க வல்லவன்

6475. **வல்வில் ஓரி**
(01) கடையெழு வள்ளல்களுள் ஒருவன்

6476. **வல்வில்லி**
(01) மிகுந்த வலிமையுடன் வில்லெய்தி ஒரே காலத்தில் பல பொருட்களைத் துளைத்தெடுக்க வல்லவன்

6477. **வலங்கமத்தான்**
(01) பறையர் குலத்தவன்

6478. **வலங்கமன்**
(01) பறையர் குலத்தவன்

6479. **வலங்கன்**
(01) பெரிய குடும்பத்தில் பிறந்தவன்

6480. **வலங்குலன்**
(01) வலங்கை இனத்தவன்

6481. **வலங்குலத்தான்**
(01) வலங்கை இனத்தவன்

6482. **வலங்கையான்**
(01) வலங்கை இனத்தவன்

6483. **வலங்கையுற்றான்**
(01) வலங்கை இனத்தவன்

6484. **வலஞ்சியன்**
(01) வணிகன்

6485. **வலந்தன்**
(01) சொல் வல்லான்

6486. **வலன்**
(01) நேர்த்தியானவன்

6487. **வலவன்**
(01) திறமையாளன்
(02) தகுதியாளன்
(03) வெற்றியாளன்
(04) திருமால்

6488. **வலவை**
(01) ஆனைமுகத்தோன் மனைவி
(02) காளி

6489. **வலாட்டிகன்**
(01) திண்ணியவன்
(02) வலுமிக்கவன்

6490. **வலாட்டியன்**
(01) திண்ணியவன்
(02) வலுமிக்கவன்

6491. **வலாரி**
(01) இந்திரன்

6492. **வலி**
(01) வலியவன்
(02) ஆற்றலுடையவன்

6493. **வலியவன்**
(01) வலிமையுள்ளவன்
(02) திறமையாளன்
(03) நல்ல நிலைமையிலுள்ளோன்
(04) கட்டுடலோன்

6494. **வலியன்**
(01) வலிமையுள்ளவன்
(02) திறமையாளன்
(03) நல்ல நிலைமையிலுள்ளோன்
(04) கட்டுடலோன்

6495. **வலியான்**
(01) வலிமையுள்ளவன்
(02) திறமையாளன்
(03) நல்ல நிலைமையிலுள்ளோன்
(04) கட்டுடலோன்

6496. **வலுவன்**
(01) வலிமையுள்ளவன்
(02) திறமையாளன்
(03) நல்ல நிலைமையிலுள்ளோன்
(04) கட்டுடலோன்

6497. **வலுவாயன்**
(01) நாவன்மையுள்ளவன்

6498. **வலைஞன்**
(01) நெய்தனில ஆண்

6499. **வலைச்சி**
(01) நெய்தனிலப் பெண்

6500. **வலைப்பரதவன்**
(01) நெய்தனில ஆண்

6501. **வலையன்**
(01) நெய்தனில ஆண்

6502. **வலைவன்**
(01) நெய்தனில ஆண்

6503. **வலைவாணன்**
(01) நெய்தனில ஆண்

6504. **வலைவாழ்நன்**
(01) நெய்தனில ஆண்

6505. **வழகன்**
(01) பவளம் போன்றவன்

6506. **வழிப்பெருந்தேவி**
(01) அரசிளங்குமரி

6507. **வழிபடு கடவுள்**
(01) குலக்கடவுள்

6508. **வழிபடு தெய்வம்**
(01) குலக்கடவுள்

6509. **வழிமுதல்வன்**
(01) குல முதல்வன்
(02) குலக் கடவுள்

6510. **வழியடியான்**
(01) வாழையடி வாழையாக இறைத் தொண்டு செய்பவன்

6511. **வழுதி**
(01) பாண்டிய மன்னர் புனைப் பெயர்
(02) பாண்டிய மன்னன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி

6512. **வழுதியன்**
(01) பாண்டியன்

6513. **வழுவாதான்**
(01) நேர்மையாளன்
(02) முழுமையானவன்
(03) வாய்மையாளன்
(04) நடுநிலை பிறழாதான்
(05) பிழைபடாதவன்
(06) குற்றமில்லாதவன்

6514. **வழுவிலான்**
(01) குற்றமில்லான்

6515. **வள்ளல்**
(01) வரையாது வாரி வழங்குபவன்
(02) ஈசன்
(03) திறமையாளன்
(04) ஆற்றல் மிகுந்தவன்

6516. **வள்ளி**
(01) கொடி போன்ற பெண்
(02) வளையணிந்த பெண்
(03) குறிஞ்சி நிலப்பெண்
(04) முருகக் கடவுளின் துணைவி

6517. **வள்ளிகேள்வன்**
(01) முருகன்

6518. **வள்ளி கொழுநன்**
(01) முருகன்

6519. **வள்ளி நாய்ச்சியார்**
(01) கொடி போன்ற பெண்
(02) வளையணிந்த பெண்
(03) குறிஞ்சி நிலப்பெண்
(04) முருகக் கடவுளின் துணைவி

6520. **வள்ளி நாச்சி**
(01) கொடி போன்ற பெண்
(02) வளையணிந்த பெண்
(03) குறிஞ்சி நிலப்பெண்
(04) முருகக் கடவுளின் துணைவி

6521. **வள்ளிநாயகம்**
(01) தமிழ்ப் புலவர் பெயர்

6522. **வள்ளி நாயகி**
(01) கொடி போன்ற பெண்
(02) வளையணிந்த பெண்
(03) குறிஞ்சி நிலப்பெண்
(04) முருகக் கடவுளின் துணைவி

6523. **வள்ளி பங்கன்**
(01) முருகன்

6524. **வள்ளி மணவாளன்**
(01) முருகன்

6525. **வள்ளி மணாளன்**
(01) முருகன்

6526. **வள்ளியம்மை**
(01) கொடி போன்ற பெண்
(02) வளையணிந்த பெண்
(03) குறிஞ்சி நிலப்பெண்
(04) முருகக் கடவுளின் துணைவி

6527. **வள்ளியன்**
(01) வண்மையுடையோன்
(02) ஈகைக் குணமுடையோன்

6528. **வள்ளியோன்**
(01) வண்மையுடையோன்
(02) ஈகைக் குணமுடையோன்

6529. **வள்ளுவன்**
(01) திருக்குறளாசிரியர் திருவள்ளுவர்
(02) கூர்மையான அறிவுடையவன்
(03) வல்லவன்
(04) வண்மையாளன்

6530. **வளகன்**
(01) பவளம் போன்றவன்

6531. **வளஞ்சியன்**
(01) வணிகத்தால் நாட்டின் வளம் பெருக்குபவன்

6532. **வளன்**
(01) வலிமையானவன்
(02) அழகன்
(03) செழுமையானவன்
(04) வெற்றியாளன்
(05) பயனாயிருப்பவன்
(06) செல்வமுடையவன்
(07) நன்மை புரிபவன்
(08) தகுதியுடையவன்
(09) மாட்சிமை பொருந்தியவன்

6533. **வளமலை நாடன்**
(01) குறிஞ்சி நிலத் தலைவன்

6534. **வளமையன்**
(01) வேளாளன்
(02) பொருள்வளமுள்ளவன்
(03) மாட்சிமையுள்ளவன்

6535. **வளர்பிறை**
(01) வளரும் நிலா

6536. **வளவன்**
(01) சோழர் பட்டப்பெயர்
(02) சோழன்
(03) வேளாளன்

6537. **வளவன் மாதேவி**
(01) பராந்தகச் சோழனின் மனைவி

6538. **வளிச்செல்வன்**
(01) காற்றுக் கடவுள்

6539. **வளி தரும் செல்வன்**
(01) காற்றுக் கடவுள்

6540. **வளிமகன்**
(01) அனுமான்
(02) வீமன்

6541. **வளுவன்**
(01) இளமையானவன்

6542. **வளையகன்**
(01) சங்கு போன்றவன்

6543. **வளைவாணன்**
(01) நாக நாட்டு மன்னன்
(02) பலராமன்

6544. **வற்பன்**
(01) உறுதிப்பாடுடையவன்
(02) வலிமையானவன்

6545. **வன்பரணன்**
(01) கழகக் காலப் புலவர்

6546. **வன்பன்**
(01) வலிமையானவன்

6547. **வன்மா**
(01) வன்மான்
(02) அரிமா
(03) பரி (குதிரை)

6548. **வன்றொண்டன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்

6549. **வன்னப்புறா**
(01) புறா போன்ற பெண்

6550. **வன்னி**
(01) தீ
(02) பரி
(03) கிளி
(04) கரகாட்டம் ஆடுபவன்

6551. **வன்னியரையன்**
(01) ஊரகத் தெய்வம்

6552. **வன்னியவலையன்**
(01) வலையன் இனத்தவன்

6553. **வன்னியன்**

(01) வன்னிய குலத்தவன்

# வா

6554. **வாகன்**
(01) அழகன்
(02) ஒளி மிகுந்தவன்
(03) ஒழுங்கானவன்
(04) வலிய தோள்களையுடையவன்

6555. **வாகைவில்லான்**
(01) காமன்

6556. **வாங்கன்**
(01) கடல் போன்றவன்

6557. **வாசந்தி**
(01) செண்பக மலர்

6558. **வாசுரை**
(01) நிலம் போன்றவள்
(02) பெண்
(03) பெண் யானை போன்றவள்

6559. **வாஞ்சிக்கொடி**
(01) முல்லை

6560. **வாட்சி**
(01) மல்லிகை
(02) இருவாட்சி

6561. **வாட்டி**
(01) சிறு பெண் குழந்தை

6562. **வாட்படையாள்**
(01) கொற்றவை

6563. **வாடாக்குறிஞ்சி**
(01) உலரும் நிலையிலும் தன்னியற்கை வண்ணம் மாறாத பூ

6564. **வாடாப்பூ**
(01) வாடா மல்லிகை மலர் போன்ற பெண்

6565. **வாடாமல்லி**
(01) வாடா மல்லிகை மலர் போன்ற பெண்

6566. **வாடாமல்லிகை**
(01) வாடா மல்லிகை மலர் போன்ற பெண்

6567. **வாண்டையான்**
(01) கள்ளர் இனத்தைச் சேர்ந்தவன்

6568. **வாணகந்தி**
(01) அரசமரம்

6569. **வாணகன்**
(01) திருமால்

6570. **வாணகன்**
(01) திருமால்

6571. **வாணவரையன்**
(01) கொங்கு வேளாளர் குடியினன்

6572. **வாணாளளப்போன்**
(01) ஞாயிறு

6573. **வாணி**
(01) சொல்வன்மையுடைய பெண்
(02) கல்வியிற் சிறந்தவள்
(03) கலைமகள்

6574. **வாணி கேள்வன்**
(01) நான்முகன்

6575. **வாணிமலர்**
(01) வெண் தாமரை மலர்

6576. **வாணிமன்**
(01) நான்முகன்

6577. **வாணுதலி**
(01) ஒளி பொருந்திய நெற்றியுடையவள்

6578. **வாதவூரான்**
(01) மாணிக்கவாசகர்

6579. **வாய்ப்பியன்**
(01) வாய்ப்பியம் என்னும் தமிழிலக்கண நூலின் ஆசிரியர்

6580. **வாய்மலர்**
(01) இனிய சொல்லாட்சியுடையவள்

6581. **வாய்மலராள்**
(01) இனிய சொல்லாட்சியுடையவள்

6582. **வாய்மன்**
(01) சொல்வல்லான்
(02) உண்மை பேசுபவன்
(03) வலிமையானவன்

6583. **வாய்மையான்**
(01) சொல்வல்லான்
(02) உண்மை பேசுபவன்
(03) வலிமையானவன்

6584. **வாய்வலன்**
(01) சொல் வன்மையுள்ளவன்

6585. **வாயிலார்நாயன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்

6586. **வார்மன்**
(01) ஒழுக்கமானவன்
(02) நேர்மையானவன்
(03) மதிப்புரவுடையவன்

6587. **வாரகன்**
(01) குதிரை போன்றவன்
(02) கடல் போன்றவன்

6588. **வாரங்கன்**
(01) பறவை போன்றவன்

6589. **வாரணன்**
(01) சங்கு போன்றவன்
(02) யானை போன்றவன்
(03) காப்பாளன்
(04) பிள்ளையார்
(05) தமிழரின் கடல் தெய்வம்

6590. **வாரன்**
(01) உரிமையுடையவன்
(02) அன்பு கொண்டவன்
(03) தூண் போன்று தாங்குபவன்
(04) யானை போன்றவன்

6591. **வாரி**
(01) கடல்
(02) நீர்
(03) நூல்
(04) கலைமகள்
(05) வீணை
(06) குழல்

6592. **வாரிகன்**
(01) தாமரை போன்றவன்

6593. **வாரிதன்**
(01) மழை முகில் போன்றவன்
(02) கடல் போன்றவன்

6594. **வாரியாதன்**
(01) மழைக் கடவுள் வருணன்

6595. **வாரிருகன்**
(01) தாமரை மலர் போன்றவன்

6596. **வாருணி**
(01) அகத்தியன்
(02) வருணன் மகள்
(03) குன்று (சதயம்) நாண்மீனில் பிறந்தவன்(ள்)

6597. **வாரூணி**
(01) முற்கொழுங்கால் (பூரட்டாதி) நாண்மீனில் பிறந்தவன்(ள்)

6598. **வாலன்**
(01) இளமையானவன்
(02) தூய்மையானவன்
(03) வெண்மையானவன்
(04) நன்மை புரிபவன்
(05) பெருமையுடையவன்

6599. **வாலறிவன்**
(01) சிறந்த அறிவுடையவன்
(02) பேரறிவாளனாகிய கடவுள்
(03) மனம், மெய், மொழி யாவுங்கடந்து விளங்கும் பரம்பொருள்
(04) வானவன்
(05) முனிவன்
(06) குரவன் (குரு)
(07) நன்மை புரிபவன்
(08) தெய்வத் தன்மை கொண்டவன்
(09) இயக்குபவன்
(10) செலுத்துபவன்

6600. **வாலி**
(01) இளமையானவன்
(02) தூய்மையானவன்
(03) வெண்மையானவன்
(04) நன்மை புரிபவன்
(05) பெருமையுடையவன்

6601. **வாலிசை**
(01) இளம்பெண்

6602. **வாலிதன்**
(01) இளமையானவன்
(02) தூய்மையானவன்
(03) வெண்மையானவன்
(04) நன்மை புரிபவன்
(05) பெருமையுடையவன்

6603. **வாலிமன்**
(01) வலிமையானவன்
(02) பெருமை பொருந்தியவன்

6604. **வாலியன்**
(01) இளமையானவன்
(02) தூய்மையானவன்
(03) வெண்மையானவன்
(04) நன்மை புரிபவன்
(05) பெருமையுடையவன்

6605. **வாலை**
(01) இளம்பெண்
(02) தூய்மையானவள்
(03) பார்வதி (சக்தி)

6606. **வாலைக்குமரி**
(01) இளம்பெண்
(02) தூய்மையானவள்
(03) பார்வதி (சக்தி)

6607. **வாவரசி**
(01) சிறந்த வாழ்க்கை வாழப் போகும் பெண்

6608. **வாழ்வரசி**
(01) சிறந்த வாழ்க்கை வாழப் போகும் பெண்

6609. **வாழ்வாட்டி**
(01) சிறந்த வாழ்க்கை வாழப் போகும் பெண்

6610. **வாழியாதன்**
(01) குறிப்பிட்ட நிலப் பகுதியை ஆளும் அதிகாரம் பெற்ற தலைவன்

6611. **வாள்மாது**
(01) கொற்றவை

6612. **வாள்வரி**
(01) புலி

6613. **வாளரி**
(01) அரிமா

6614. **வாளாகன்**
(01) முல்லை மலர் போன்றவன்

6615. **வாளாளன்**
(01) வாள் வீரன்

6616. **வாளி**
(01) வாள் வீரன்

6617. **வாளுழவன்**
(01) வாள் வீரன்

6618. **வாளேந்தி**
(01) வாள் வீரன்

6619. **வாறன்**
(01) வலிமையானவன்

6620. **வான் கண்**
(01) கதிரவன்

6621. **வான்கொடி**
(01) மின்னற்கொடி

6622. **வான் தேர்ப்பாகன்**
(01) காமன்

6623. **வான்புலன்**
(01) உண்மையறிவுடையவன்

6624. **வான்புலமன்**
(01) உண்மையறிவுடையவன்

6625. **வான்மகள்**
(01) இந்திராணி

6626. **வான்மணி**
(01) ஞாயிறு

6627. **வான்மன்**
(01) தூய்மையானவன்
(02) வெண்மையானவன்

6628. **வான்மைந்தன்**
(01) காற்றுக் கடவுள்

6629. **வான்மையான்**
(01) தூய்மையானவன்
(02) வெண்மையானவன்

6630. **வான்மீன்**
(01) விண்மீன்

6631. **வானகன்**
(01) விண்ணுலகைச் சேர்ந்தவன்

6632. **வானநாடன்**
(01) விண்ணுலகைச் சேர்ந்தவன்

6633. **வானம்பாடி**
(01) பறவை

6634. **வானமாமலை**
(01) நாங்குநேரியில் கோயில் கொண்டுள்ள திருமால்

6635. **வானரக்கொடியோன்**
(01) அருச்சுனன்

6636. **வானரமகள்**
(01) வானுலகப்பெண்

6637. **வானரமங்கை**
(01) வானுலகப்பெண்

6638. **வானரேந்திரன்**
(01) அனுமன்
(02) சுக்கிரீவன்

6639. **வானவர்கோன்**
(01) இந்திரன்

6640. **வானவர்நாடி**
(01) வானுலகப்பெண்

6641. **வானவர் முதல்வன்**
(01) நான்முகன்

6642. **வானவர் முதுவன்**
(01) நான்முகன்

6643. **வானவரம்பன்**
(01) சேரன்

6644. **வானவல்லி**
(01) மின்னற்கொடி

6645. **வானவன்**
(01) தேவன்
(02) நான்முகன்
(03) இந்திரன்
(04) ஞாயிறு
(05) சேரவரசன்

6646. **வானவில்**
(01) வானவில் போன்ற அழகுடைய பெண்

6647. **வானன்**
(01) வானம் போன்றவன்
(02) வானில் வாழ்பவன்
(03) முகில் போன்றவன்
(04) மழை போன்றவன்
(05) அமுதம் போன்றவன்
(06) நன்மை புரிபவன்
(07) பெருமையானவன்
(08) அழகானவன்
(09) வலிமையானவன்
(10) நேர்மையானவன்

6648. **வானி**
(01) ஆன்பொருநை (அமராவதி ஆறு)
(02) பவானி ஆறு

6649. **வானேறு**
(01) இடி

6650. **வானோர்க்கிறை**
(01) இந்திரன்

6651. **வானோர் கிழவன்**
(01) இந்திரன்

6652. **வானோர் கோமான்**
(01) இந்திரன்

6653. **வானோர் முதல்வன்**
(01) நான்முகன்
(02) இந்திரன்

6654. **வானோர் முதுவன்**
(01) நான்முகன்
(02) இந்திரன்

6655. **வானோன்**
(01) இறைவன்

# வி

6656. **விச்சிக்கோன்**
(01) கடைக்கழகக் காலச் சிற்றரசருள் ஒருவன்

6657. **விச்சை**
(01) கல்வியிற் சிறந்தவன்
(02) அறிவு மிக்கவன்

6658. **விச்சையன்**
(01) கல்வியிற் சிறந்தவன்
(02) அறிவு மிக்கவன்

6659. **விசகலி**
(01) மல்லிகை போன்ற பெண்

6660. **விசரி**
(01) தும்பை மலர் போன்ற பெண்

6661. **விசலம்**
(01) தளிர் போன்ற மெல்லிய இளம்பெண்

6662. **விசலா**
(01) தளிர் போன்ற மெல்லிய இளம்பெண்

6663. **விசலி**
(01) தளிர் போன்ற மெல்லிய இளம்பெண்

6664. **விசலிகா**
(01) கொடி மல்லிகை

6665. **விசலிகை**
(01) கொடி மல்லிகை

6666. **விசாலம்**
(01) வெண்கடம்பு போன்ற உறுதியுடைய பெண்
(02) பறவை போன்றவள்
(03) மான் போன்றவள்
(04) விரிந்துபட்ட அறிவுடைய பெண்

6667. **விசி**
(01) அலை போன்றவள்

6668. **விசியன்**
(01) அலை போன்றவன்

6669. **விசிகன்**
(01) அம்பு போன்றவன்

6670. **விசிகிலம்**
(01) மல்லிகை போன்றவள்

6671. **விசிகிலா**
(01) மல்லிகை போன்றவள்

6672. **விசும்பன்**
(01) வானவன்
(02) முகில் போன்றவன்
(03) வானம் போன்றவன்

6673. **விசும்பாளன்**
(01) வானவன்
(02) முகில் போன்றவன்
(03) வானம் போன்றவன்

6674. **விசும்பேறு**
(01) இடி போன்ற வலிமையுடையவன்

6675. **விசைஞன்**
(01) வெற்றி பெறுபவன்

6676. **விஞ்சையன்**
(01) கலைஞன்
(02) கல்வியாளன்
(03) மெய்யுணர்வு கொண்டவன்
(04) வியத்தகு கலை (magic) வல்லான்
(05) வானவன்
(06) புலவன்

6677. **விட்டகுதிரையாள்**
(01) கடைக் கழகப் புலவர்

6678. **விட்டன்**
(01) திருமால்
(02) வானவன்

6679. **விட்டு**
(01) திருமால்
(02) வானவன்

6680. **விட்டு சித்தன்**
(01) பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான பெரியாழ்வார்

6681. **விட்டுவன்**
(01) திருமால்
(02) வானவன்

6682. **விட்புலன்**
(01) விண்ணுலகினன்

6683. **விட்புலனன்**
(01) விண்ணுலகினன்

6684. **விடங்கன்**
(01) அழகுடையவன்
(02) ஆண்மை நிறைந்தவன்
(03) இளமையானவன்
(04) நல்லுருவமுடையவன்
(05) காமுகன்
(06) வம்பளப்பவன்

6685. **விடதன்**
(01) முகில் போன்றவன்

6686. **விடலை**
(01) 16 முதல் 30 வரையுள்ள பருவ ஆண்
(02) திண்ணியன்
(03) மணவாளன்
(04) ஆண்மகன்
(05) பெருமையிற்சிறந்தோன்
(06) இளங்காளை
(07) வீரன்
(08) மருத நிலத் தலைவன்
(09) பாலை நிலத்தலைவன்

6687. **விடளி**
(01) 12 அகவையுடைய பெண்

6688. **விடாலம்**
(01) கண்மணி போன்றவள்

6689. **விடாலன்**
(01) கண்மணி போன்றவன்

6690. **விடாலகா**
(01) கண்மணி போன்றவள்

6691. **விடாலகி**
(01) கண்மணி போன்றவள்

6692. **விடாலா**
(01) கண்மணி போன்றவள்

6693. **விடாலி**
(01) கண்மணி போன்றவள்

6694. **விடிநிலா**
(01) இளங்காலை நேர நிலா போன்ற பெண்

6695. **விடிமீன்**
(01) விடிவெள்ளி
(02) விடியற்காலை தோன்றும் விண்மீன்

6696. **விடுமலர்**
(01) மலர்ந்த பூ

6697. **விடைப்பாகன்**
(01) சிவன்

6698. **விடைமுகன்**
(01) நந்தி

6699. **விடையவன்**
(01) சிவன்
(02) வருணன்

6700. **விடையான்**
(01) சிவன்
(02) வருணன்

6701. **விடையுச்சன்**
(01) திங்கள்

6702. **விடையூர்தி**
(01) சிவன்

6703. **விடையோன்**
(01) சிவன்
(02) வருணன்

6704. **விண்கோ**
(01) வானவர் தலைவன்

6705. **விண்டலன்**
(01) வானவன்

6706. **விண்டு**
(01) திருமால்
(02) வானவன்
(03) முகில்
(04) காற்று
(05) மலை

6707. **விண்டுகன்**
(01) தாமரை போன்றவன்

6708. **விண்ணந்தாயன்**
(01) கடைக்கழகப் புலவர்

6709. **விண்ணவன்**
(01) தேவன்
(02) அருகன்

6710. **விண்ணு**
(01) திருமால்

6711. **விண்ணோன்**
(01) தேவன்
(02) அருகன்

6712. **விண்ணேறு**
(01) இடி

6713. **விண்மணி**
(01) ஞாயிறு

6714. **வித்தகன்**
(01) அறிவுடையவன்
(02) கல்வியாளன்
(03) திறமையாளன்
(04) புதுமையானவன்
(05) நன்மை புரிபவன்
(06) வல்லவன்
(07) வயிரவன்
(08) கம்மாளன்
(09) இடையன்

6715. **வித்தன்**
(01) அறிவுடையவன்
(02) பொருளுடையவன்
(03) பொன் போன்றவன்
(04) நல்வினையாளன்
(05) புலவன்
(06) புரவலர்
(07) ஈடுபாடுடையவன்
(08) துறவி

6716. **வித்தி**
(01) அறவாளன்
(02) ஆய்வாளன்

6717. **வித்துருமன்**
(01) பவளம் போன்றவன்
(02) இளந்தளிர் போன்றவன்

6718. **விந்தன்**
(01) தாமரை மலர் போன்றவன்

6719. **வியக்கன்**
(01) பெருமை மிக்கவன்

6720. **வியப்பன்**
(01) புதுமையானவன்
(02) பாராட்டுக்குரியவன்
(03) மேம்பாடுடையவன்

6721. **வியமன்**
(01) பாராட்டத்தக்கவன்

6722. **வியலன்**
(01) பெருமையுடையவன்
(02) பொன் போன்றவன்

6723. **வியவன்**
(01) தலைவன்
(02) திண்ணியன்

6724. **வியன்**
(01) வானம் போன்றவன்
(02) பெருமைக்குரியவன்
(03) சிறப்பு மிகுந்தவன்
(04) வியப்புக்குரியவன்

6725. **வியனுலகன்**
(01) வானவன்

6726. **விரகறிஞன்**
(01) அறிவுடையோன்

6727. **விரகறிவன்**
(01) அறிவுடையோன்

6728. **விரகறிவாளன்**
(01) அறிவுடையோன்

6729. **விரகன்**
(01) திறமையுள்ளவன்
(02) வல்லவன்
(03) சுற்றத்தான்
(04) வழிவகை செய்பவன்
(05) நுண்ணறிவாளன்

6730. **விராகன்**
(01) கடவுள்
(02) அருகன்

6731. **விரிச்சியூரான்**
(01) கடைக்கழகக் காலப் புலவர்

6732. **விரிஞ்சன்**
(01) நாண்முகன்

6733. **விரிஞ்சனன்**
(01) நாண்முகன்

6734. **விரிஞ்சி**
(01) நாண்முகன்

6735. **விரிபூ**
(01) விரிமலர்
(02) மலர்ந்த பூ

6736. **விரியலன்**
(01) ஒளி மிகுந்தவன்
(02) மலர்ச்சியானவன்
(03) பூமாலை போன்றவன்

6737. **விரியூர்நக்கன்**
(01) கடைக்கழகக் காலப் புலவர்

6738. **விருந்தன்**
(01) உறவினன்
(02) புதியவன்

6739. **விருந்தாரன்**
(01) அழகன்

6740. **விருந்தோன்**
(01) உறவினன்
(02) புதியவன்

6741. **விருப்பன்**
(01) விருப்பமுள்ளவன்
(02) அன்புள்ளவன்

6742. **விரும்பன்**
(01) விருப்பமுள்ளவன்
(02) அன்புள்ளவன்

6743. **விரைவினன்**
(01) செயல் முனைப்புடையவன்

6744. **வில்லக விரலினான்**
(01) கடைக்கழகக் காலப் புலவர்

6745. **வில்லவன்**
(01) சேரன்
(02) காமன்

6746. **வில்லன்**
(01) வில்லாளன்

6747. **வில்லாளி**
(01) வில்லாளன்

6748. **வில்லான்**
(01) வில்லாளன்

6749. **வில்லிப்புத்தூரன்**
(01) பெரியாழ்வார்

6750. **வில்லிமன்**
(01) வில் திறமையாளன்

6751. **வில்லியன்**
(01) வில்லாளன்
(02) இருளரினத்தவன்

6752. **வில்லியாதன்**
(01) மாவிலங்கை நகரத்தில் வாழ்ந்த தலைவன்
(02) வில் திறமை மிகுந்த தலைவன்

6753. **வில்லேருழவன்**
(01) வீரன்
(02) வேடன்
(03) பாலை நிலத்தவன்
(04) விற்போர் வீரன்

6754. **வில்லோன்**
(01) வில்லாளன்

6755. **வில்வலன்**
(01) வில் திறமையில் வல்லவன்

6756. **விலக்கணன்**
(01) சிறப்பியல்புடையவன்

6757. **விலங்கரசு**
(01) அரிமா

6758. **விலாளன்**
(01) பூனை போன்றவன்

6759. **விலைஞன்**
(01) வணிகன்

6760. **விழுச்செல்வன்**
(01) பெருஞ்செல்வன்

6761. **விழுப்பன்**
(01) நன்மையானவன்

6762. **விழுப்பரையன்**
(01) நன்மையாயிருக்கும் தலைவன்
(02) தமிழ்ச் சிற்றரசரின் பட்டப்பெயர்

6763. **விழுப்பேரரையன்**
(01) தமிழ்த் தலைவரின் பட்டப்பெயர்

6764. **விழுமன்**
(01) சிறப்பானவன்
(02) சொல் வல்லான்
(03) சீர்மை மிகுந்தவன்
(04) தூய்மையானவன்

6765. **விழுமலை**
(01) கதிரவன் மறையும் மலை

6766. **விழைநன்**
(01) நண்பன்

6767. **விளங்கிழை**
(01) ஒளி மிகுந்த கலண்களை அணிந்த பெண்

6768. **விளங்கொளி**
(01) அருகன்

6769. **விளம்பிநாகன்**
(01) நான்மணிக்கடிகை இயற்றிய ஆசிரியர்

6770. **விளரி**
(01) இளமையானவன்
(02) இசைக் கலைஞன்

6771. **விளவன்**
(01) இளமையானவன்

6772. **விளைஞன்**
(01) மருத நில மாந்தன்

6773. **விற்கையன்**
(01) கையில் வில்லை ஏந்திய (சாரங்கபாணி) திருமால்

6774. **விற்பிடி மாணிக்கம்**
(01) சிறந்த மாணிக்கம்

6775. **விற்றூற்று மூதெயினன்**
(01) கடைக் கழகப் புலவர்

6776. **விற்றூற்று வண்ணக்கன் தத்தன்**
(01) கடைக் கழகக் காலப் புலவர்

6777. **விறப்பன்**
(01) செறிவானவன்
(02) வலிமையானவன்
(03) வெற்றியாளன்

6778. **விறலன்**
(01) வெற்றியாளன்
(02) வீரன்
(03) சிறப்பானவன்
(04) வலிமையானவன்
(05) பெருமையானவன்

6779. **விறல்வென்றி**
(01) வீரத்தால் வெற்றி பெற்றவன்

6780. **விறலி**
(01) பாணர் குலப் பெண்
(02) பதினாறு அகவைப் பருவப் பெண்

6781. **விறலோன்**
(01) திண்ணியன்
(02) வீரன்
(03) அருகன்

6782. **விறன்மிண்ட நாயன்**
(01) அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்

6783. **விறுமன்**
(01) விறுமா
(02) சிற்றூர்ப் பெண் தெய்வம்

6784. **விறுமாண்டி**
(01) சிற்றூர்த் தெய்வம்

6785. **வினயன்**
(01) நன்னயம் கொண்டவன்
(02) பணிவு கொண்டவன்
(03) அடக்க குணம் உடையவன்

6786. **வினாவினன்**
(01) தெளிமதியுள்ளவன்

6787. **வினைஞன்**
(01) தொழில் வல்லான்
(02) மருத நிலத்தவன்
(03) கம்மாளன்
(04) கூத்தன்
(05) கடைமகள்
(06) வணிகன்
(07) வேளாளன்

6788. **வினைத் தொழிற் சோகீரன்**
(01) கடைக் கழகப் புலவர்

6789. **வினைதீர்த்தான்**
(01) வேழ முகத்தோன்
(02) சிவன்

6790. **வினைநன்**
(01) தொழில் வல்லான்
(02) மருத நிலத்தவன்
(03) கம்மாளன்
(04) கூத்தன்
(05) கடைமகள்
(06) வணிகன்
(07) வேளாளன்

6791. **வினையிலி**
(01) கடவுள்

6792. **வினைவன்**
(01) தொழில் செய்பவன்
(02) அமைச்சன்

6793. **வினைவலன்**
(01) தொழில் வல்லான்

# வீ

6794. **வீகன்**
(01) விரைவானவன்
(02) காற்று போன்றவன்
(03) காப்பாளன்

6795. **வீசிமாலி**
(01) கடல் போன்றவன்

6796. **வீணன்**
(01) இருளர் இன இளைஞன்

6797. **வீணி**
(01) இருளர் இன இளம்பெண்

6798. **வீணையன்**
(01) வீணையிசைப்பதில் வல்லான்

6799. **வீதிவிடங்கன்**
(01) சிவன்

6800. **வீபத்தன்**
(01) திங்கள் போன்றவன்

6801. **வீரச்செல்வி**
(01) கொற்றவை

6802. **வீரசூரன்**
(01) அதி வீரன்

6803. **வீரசூலி**
(01) சிற்றூர்ப் பெண் தெய்வம்

6804. **வீரசோழன்**
(01) சோழ அரசன் பட்டப் பெயர்

6805. **வீரணன்**
(01) வீரமுள்ளவன்

6806. **வீரணுக்கன்**
(01) வீரணுக்க இனத்தவன்

6807. **வீரதீரன்**
(01) துணிவுமிக்க வீரன்

6808. **வீரந்தரன்**
(01) மயில் போன்றவன்

6809. **வீரபாண்டியன்**
(01) பாண்டியவரசன்

6810. **வீரமகள்**
(01) மலைமகள்

6811. **வீரமங்கை**
(01) மலைமகள்

6812. **வீரமணி**
(01) விராடக்குரு  என்னும் குருமருந்தினால் வீரத்தைக் கட்டிச் செய்யப்பட்ட மணி

6813. **வீரமாகாளி**
(01) காளி தேவி

6814. **வீரமாமுனிவன்**
(01) சதுரகராதி, தேம்பாவணி போன்ற நூல்களின் ஆசிரியர்

6815. **வீரமுரசு**
(01) வீரத்தின் அறிகுறியாக முழக்கப்படும் முரசம் போன்றவன்

6816. **வீரவான்**
(01) மாவீரன்

6817. **வீரன்**
(01) ஆண்மையுள்ளவன்
(02) அருகன்
(03) மதுரை வீரன்
(04) படைத்தலைவன்
(05) வீடுமன் (பீஷ்மன்)

6818. **வீராதிவீரன்**
(01) வீரர்களுட் சிறந்த வீரன்

6819. **வீரி**
(01) வீரமுள்ளவள்
(02) காளி
(03) கொற்றவை
(04) சிற்றூர் பெண் தெய்வம்

6820. **வீரிடன்**
(01) நாவல் பழம் போன்றவன்

6821. **வீரை**
(01) கடல் போன்றவள்
(02) நெல்லி போன்றவள்
(03) தாய் போன்றவள்
(04) வாழை போன்றவள்

6822. **வீரோத்துங்கன்**
(01) வீரத்திற் சிறந்தவன்

6823. **வீழ்கதிர்**
(01) மாலையில் மறையும் கதிரவன்

6824. **வீழியன்**
(01) பார்ப்பன குலத்தினன்

# வெ

6825. **வெங்கண்ணன்**
(01) கழகக் காலப் புலவர்

6826. **வெங்கதிர்**
(01) கதிரவன்

6827. **வெங்கதிர்ச் செல்வன்**
(01) கதிரவன்

6828. **வெங்கதிர்மதலை**
(01) கன்னன் (கர்ணன்)

6829. **வெங்கதிரோன்**
(01) கதிரவன்

6830. **வெங்குரு**
(01) கூற்றுவன்

6831. **வெங்குரு வேந்தன்**
(01) திருஞான சம்பந்தர்

6832. **வெஞ்சமன்**
(01) கூற்றுவன்

6833. **வெஞ்சுடர்**
(01) ஞாயிறு

6834. **வெஞ்செல்வன்**
(01) இளஞாயிறு

6835. **வெட்டிவீரன்**
(01) சிறந்த வீரன்

6836. **வெண்கண்ணன்**
(01) பொதும்பில் கிழான்
(02) வெண்கண்ணனானர் என்ற கழகக் காலப் புலவர்

6837. **வெண்கதிர்**
(01) கதிரவன்

6838. **வெண்கதிர்ச் செல்வன்**
(01) கதிரவன்

6839. **வெண்கதிரோன்**
(01) கதிரவன்

6840. **வெண்களமன்**
(01) மருத நிலத்தவன்
(02) வேளாளர்

6841. **வெண்களிற்றரசு**
(01) இந்திரனின் வெள்ளை யானை

6842. **வெண்காட்டு நங்கை**
(01) திருத்தொண்டரின் மனைவி

6843. **வெண்காந்தள்**
(01) வெள்ளைப் பூவுடைய காந்தள் போன்றவள்

6844. **வெண்கிளி**
(01) வெள்ளைக் கிளி போன்ற பெண்

6845. **வெண்குவளை**
(01) வெள்ளையல்லி மலர்

6846. **வெண்குன்றன்**
(01) முருகனின் படைவீடுகளுள் ஒன்றான சுவாமி மலையில் பிறந்தவன்

6847. **வெண்கொடி**
(01) வெற்றிக்கொடி
(02) கலைமகள்

6848. **வெண்கொற்றன்**
(01) கழகக் காலப் புலவர்

6849. **வெண்சுடர்**
(01) கதிரவன்

6850. **வெண்செவ்வந்தி**
(01) வெள்ளை சாமந்திப் பூ

6851. **வெண்ணகை**
(01) வெண்பற்கள் தெரிய இனிமையாகப் புன்னகைக்கும் பெண்

6852. **வெண்ணல்லி**
(01) வெண்மையான நீர் அல்லி

6853. **வெண்ணாகன்**
(01) கழகக் காலப் புலவர்

6854. **வெண்ணிக்குயத்தி**
(01) கழகக் காலப் புலவர்

6855. **வெண்ணிலா**
(01) மதியொளி போன்ற பெண்

6856. **வெண்ணெய்தல்**
(01) ஆம்பல் வகை

6857. **வெண்தாமரை**
(01) வெண்ணிறமான தாமரை மலர் போன்ற பெண்

6858. **வெண்தாமரை மகள்**
(01) நாமகள்

6859. **வெண்தாமரையாள்**
(01) நாமகள்

6860. **வெண்திரை**
(01) வெண்ணிற அலைகளாடும் கடல் போன்றவள்

6861. **வெண்துளசி**
(01) துளசி வகை

6862. **வெண்தேர்ச் செழியன்**
(01) இடைக் கழகக் காலப் பாண்டியவரசன்

6863. **வெண்பா**
(01) நால்வகைப் பாக்களுள் ஒன்று

6864. **வெண்பாப்புலி**
(01) வெண்பா பாடுவதில் வல்லமை பொருந்தியவன்

6865. **வெண்பாவை**
(01) நாமகள்

6866. **வெண்பிறை**
(01) வெள்ளிய பிறைத்திங்கள்

6867. **வெண்புறா**
(01) வெள்ளைப் புறா

6868. **வெண்பூகன்**
(01) கழகக் காலப் புலவர்

6869. **வெண்பூதன்**
(01) கழகக் காலப் புலவர்

6870. **வெண்பூதியாள்**
(01) கழகக் காலப் புலவர்

6871. **வெண்பூமான்**
(01) நாமகள்

6872. **வெண்மணி**
(01) முத்து
(02) அழகிய கண்களையுடையவள்

6873. **வெண்மணிப்பூதியாள்**
(01) கழகக் காலப் புலவர்

6874. **வெண்மதி**
(01) வெண்ணிற நிலவு

6875. **வெண்மீன்**
(01) விடிவெள்ளி

6876. **வெண்முகில்**
(01) வெண்ணிற முகில் போன்ற அழகுடைய பெண்

6877. **வெண்மெய்யாள்**
(01) வெள்ளை நிறத்தவள்

6878. **வெண்மேகம்**
(01) வெண்ணிற முகில் போன்ற அழகுடைய பெண்

6879. **வெந்திறலன்**
(01) பெருவலிமையுடையவன்

6880. **வெய்யிலோன்**
(01) ஞாயிறு

6881. **வெய்யோன்**
(01) ஞாயிறு

6882. **வெயிலோன்**
(01) ஞாயிறு

6883. **வெல்லி**
(01) திறமையான பெண்

6884. **வெல்வி**
(01) வெற்றி

6885. **வெள்வளை**
(01) சங்கு வளையணிந்த பெண்

6886. **வெள்வளையாள்**
(01) சங்கு வளையணிந்த பெண்

6887. **வெள்விழி**
(01) வெண்ணிற விழியாள்

6888. **வெள்வேல்**
(01) ஒள்ளிய வேல் தாங்கிய வீரன்

6889. **வெள்வேலன்**
(01) ஒள்ளிய வேல் தாங்கிய வீரன்

6890. **வெள்வேலோன்**
(01) ஒள்ளிய வேல் தாங்கிய வீரன்

6891. **வெள்ளரசு**
(01) அரசமரம்

6892. **வெள்ளலரி**
(01) அலரி மலர் போன்ற பெண்

6893. **வெள்ளன்**
(01) வெண்ணிறமுடையவன்
(02) நேர்மையாளன்
(03) கலப்பற்றவன்
(04) ஒளி பொருந்தியவன்
(05) கூர்மையானவன்

6894. **வெள்ளாடியன்**
(01) கழகக் காலப் புலவர்

6895. **வெள்ளாயன்**
(01) ஆட்டிடையர் குடியினன்

6896. **வெள்ளாண் பிள்ளை**
(01) வேளாளர் குடியில் பிறந்த ஆண்மகன்

6897. **வெள்ளாம்பல்**
(01) ஆம்பல் வகை

6898. **வெள்ளாளன்**
(01) வேளாள மரபினன்

6899. **வெள்ளாழன்**
(01) வேளாள மரபினன்

6900. **வெள்ளான்**
(01) வேளாள மரபினன்

6901. **வெள்ளிமலை**
(01) கயிலை மலை

6902. **வெள்ளியங்குன்றன்**
(01) கயிலை மலை
(02) கயிலை மலை வாழ் சிவன்

6903. **வெள்ளியான்**
(01) வெண்ணிறமுடையவன்
(02) பெருமகன்
(03) சிவன்

6904. **வெள்ளுவா**
(01) வெள்ளை யானை

6905. **வெள்ளூர்க்காப்பியன்**
(01) இடைக் கழகப் புலவர்

6906. **வெள்ளெருக்கிலையான்**
(01) கழகக் காலப் புலவர்

6907. **வெள்ளைக்கிளி**
(01) கிளி வகை

6908. **வெள்ளைக்குடி நாகன்**
(01) கழகக் காலப் புலவர்

6909. **வெள்ளைத் தாமரை**
(01) வெள்ளை நிறத் தாமரை போன்ற பெண்

6910. **வெள்ளைத் துளசி**
(01) வெண்துளசி போன்ற பெண்

6911. **வெள்ளை நிறத்தாள்**
(01) கலைமகள்

6912. **வெள்ளைப்பிள்ளை**
(01) கவடமற்றவன்

6913. **வெள்ளைமாளன்**
(01) கழகக் காலப் புலவர்

6914. **வெள்ளைமெய்யாள்**
(01) வெள்ளை நிறத்தவள்

6915. **வெள்ளையல்லி**
(01) அல்லி மலர் போன்றவள்

6916. **வெள்ளையலரி**
(01) அலரி போன்றவள்

6917. **வெள்ளையப்பன்**
(01) வெண்மை நிறமுள்ளவன்

6918. **வெள்ளையன்**
(01) வெண்மை நிறமுள்ளவன்

6919. **வெள்ளையானையூர்தி**
(01) இந்திரன்
(02) ஐயனார்

6920. **வெள்ளைவாரணன்**
(01) இந்திரன்

6921. **வெளியன்**
(01) தூயவன்
(02) வெண்பா போன்றவன்

6922. **வெளிமான்**
(01) மான்வகை
(02) கழகக் காலத் தலைவன் ஒருவன்

6923. **வெற்பன்**
(01) குறிஞ்சி நிலத்தலைவன்
(02) முல்லை நிலத் தலைவன்

6924. **வெற்றி**
(01) வெல்பவன்

6925. **வெற்றி கொண்ட சோழன்**
(01) முதலாம் இராசராசனின் சிறப்புப் பெயரான ஜெயங்கொண்ட சோழன்

6926. **வெற்றிப்புகழ்**
(01) வெற்றியினால் புகழ் பெறுபவன்

6927. **வெற்றிமகள்**
(01) வெற்றித்திருமகள்

6928. **வெற்றி மடந்தை**
(01) வெற்றித்திருமகள்

6929. **வெற்றிமுரசு**
(01) வெற்றி பெற்றதைக் குறிக்கும் முரசு

6930. **வெற்றிவேற் செழியன்**
(01) பாண்டிய அரசன்

6931. **வெறிபாடிய காமக்கண்ணி**
(01) கழகக் காலப் பெண் புலவர்

6932. **வெறிமலர்**
(01) நறுமணமுள்ள மலர்
(02) தெய்வத்துக்குரிய மலர்

6933. **வெறுக்கைக் கிழவன்**
(01) செல்வத்துக்குரியவனான குபேரன்

6934. **வென்**
(01) வெற்றியாளன்

6935. **வென்வன்**
(01) வெற்றியாளன்

6936. **வென்றான்**
(01) வெற்றியாளன்

6937. **வென்றி**
(01) வெற்றியாளன்

6938. **வென்றோன்**
(01) வெற்றியாளன்

# வே

6939. **வேகடன்**
(01) மாசற்றவன்
(02) புதுமையானவன்
(03) இளமையானவன்

6940. **வேகன்**
(01) தூதுவன்

6941. **வேகவதி**
(01) வைகையாறு
(02) காஞ்சிபுரத்தில் ஓடும் கம்பா ஆறு
(03) ஓர் இளவரசி

6942. **வேகிதன்**
(01) விரைந்து செயல்படுபவன்

6943. **வேசகன்**
(01) தனக்கென வீடு வைத்திருப்பவன்

6944. **வேசனன்**
(01) மருத நிலத்து ஊரில் பிறந்தவன்

6945. **வேட்கோ**
(01) குயவர் குடியிற் பிறந்தவன்

6946. **வேட்கோபன்**
(01) குயவர் குடியிற் பிறந்தவன்

6947. **வேட்கோவன்**
(01) குயவர் குடியிற் பிறந்தவன்

6948. **வேட்டகண்ணன்**
(01) கழகக் காலப் புலவர்

6949. **வேட்டன்**
(01) வேடன் (வேடச்சி)
(02) குறிஞ்சி நிலத்தவன்
(03) கொடுநுகம் (மகம்) நாண்மீனில் பிறந்தவன்

6950. **வேட்டாரன்**
(01) வேடன் (வேடச்சி)
(02) குறிஞ்சி நிலத்தவன்
(03) கொடுநுகம் (மகம்) நாண்மீனில் பிறந்தவன்

6951. **வேட்டுவன்**
(01) வேடன் (வேடச்சி)
(02) குறிஞ்சி நிலத்தவன்
(03) கொடுநுகம் (மகம்) நாண்மீனில் பிறந்தவன்

6952. **வேட்டுவாளியன்**
(01) வேடன் (வேடச்சி)
(02) குறிஞ்சி நிலத்தவன்
(03) கொடுநுகம் (மகம்) நாண்மீனில் பிறந்தவன்

6953. **வேடுவன்**
(01) வேடன் (வேடச்சி)
(02) குறிஞ்சி நிலத்தவன்
(03) கொடுநுகம் (மகம்) நாண்மீனில் பிறந்தவன்

6954. **வேண்டவன்**
(01) அன்பிற்குரியவன்
(02) நன்மை நாடுபவன்
(03) நலன் விரும்பி

6955. **வேண்மாள்**
(01) வேளிர் குலப் பெண்
(02) செங்குட்டுவன் மனைவி

6956. **வேண்மான்**
(01) வேளிர்குல ஆண்

6957. **வேணாடன்**
(01) வேணாட்டு அரசன்
(02) திருவிசைப்பா நூலின் ஆசிரியருள் ஒருவர்

6958. **வேணி**
(01) வானம் போன்றவள்
(02) விண்வெளி போன்றவள்
(03) அழகிய முடியை உடையவள்
(04) ஆறு போன்றவள்

6959. **வேணிகா**
(01) வானம் போன்றவள்
(02) விண்வெளி போன்றவள்
(03) அழகிய முடியை உடையவள்
(04) ஆறு போன்றவள்

6960. **வேணிகை**
(01) வானம் போன்றவள்
(02) விண்வெளி போன்றவள்
(03) அழகிய முடியை உடையவள்
(04) ஆறு போன்றவள்

6961. **வேணு**
(01) மூங்கில் போன்றவன்
(02) குழல் போன்ற இசை தருபவன்
(03) வில்
(04) தனுராசியிற் பிறந்தவன்

6962. **வேத்தன்**
(01) அறிந்திருப்பவன்

6963. **வேத்தியன்**
(01) அறிந்திருப்பவன்

6964. **வேந்தன்**
(01) இந்திரன்
(02) அரசன்
(03) கதிரவன்
(04) திங்கள்
(05) வியாழன்கோள்
(06) அரசமரம்
(07) புதன்கோள்

6965. **வேம்பற்றூர் கண்ணன் கூத்தன்**
(01) கழகக் காலப் புலவர்

6966. **வேம்பற்றூர்க்குமரன்**
(01) கழகக் காலப் புலவர்

6967. **வேம்பன்**
(01) பாண்டியன்

6968. **வேம்பின் கண்டியன்**
(01) பாண்டிய நாட்டரசன்

6969. **வேம்பின் கன்னிக்கோ**
(01) பாண்டிய நாட்டரசன்

6970. **வேம்பின்றாரோன்**
(01) பாண்டிய நாட்டரசன்

6971. **வேர்க்கொழுந்து**
(01) வேலங்கொழுந்து

6972. **வேரன்**
(01) அடிப்படையாய் இருப்பவன்
(02) கரணியனாய் இருப்பவன்
(03) மூங்கில் போன்றவன்
(04) குழலிசை போன்றவன்
(05) சினங்கொண்டவன்
(06) கோபுரம் போல் உயாந்து நிற்பவன்
(07) முகில் கூட்டம் போன்றவன்
(08) நலமான உடல் கொண்டவன்

6973. **வேர்பன்**
(01) அடிப்படையாய் இருப்பவன்
(02) கரணியனாய் இருப்பவன்
(03) மூங்கில் போன்றவன்
(04) குழலிசை போன்றவன்
(05) சினங்கொண்டவன்
(06) கோபுரம் போல் உயாந்து நிற்பவன்
(07) முகில் கூட்டம் போன்றவன்
(08) நலமான உடல் கொண்டவன்

6974. **வேர்வன்**
(01) அடிப்படையாய் இருப்பவன்
(02) கரணியனாய் இருப்பவன்
(03) மூங்கில் போன்றவன்
(04) குழலிசை போன்றவன்
(05) சினங்கொண்டவன்
(06) கோபுரம் போல் உயாந்து நிற்பவன்
(07) முகில் கூட்டம் போன்றவன்
(08) நலமான உடல் கொண்டவன்

6975. **வேரலன்**
(01) மூங்கில் போன்றவன்
(02) புல்லாங்குழல் போன்றவன்

6976. **வேரி**
(01) தேன் போன்றவன்
(02) இனிமையானவன்
(03) நறுமணமுடையவன்
(04) பழச்சாறு போன்றவன்

6977. **வேரி சாத்தன்**
(01) கழகக் காலப் புலவர்

6978. **வேல்**
(01) வேல் போன்றவன்
(02) தீயோரை அழித்து நல்லோனாகக் காப்பவன்
(03) வெல்பவன்

6979. **வேல்விழி**
(01) கூர்மையான விழிகளை உடையவள்

6980. **வேலப்பன்**
(01) முருகன்
(02) தமிழ் நூலாசிரியர்

6981. **வேலன்**
(01) முருகன்
(02) வேல் வீரன்

6982. **வேலாயுதம்**
(01) முருகனின் ஆயுதமான வேல்

6983. **வேலாயுதமான்**
(01) அரிமா

6984. **வேலாயுதன்**
(01) வேலை ஆயுதமாகக் கொண்ட முருகன்

6985. **வேலான்**
(01) வேற்படை தாங்கியவன்

6986. **வேலிகன்**
(01) கற்றாழை போன்றவன்

6987. **வேலிறை**
(01) முருகன்

6988. **வேலுத்தம்பி**
(01) விடுதலைப் போராளி

6989. **வேலூர்க்கிழான்**
(01) ஒரு வள்ளல்

6990. **வேலையில் துயின்றோன்**
(01) பாற்கடலில் பள்ளி கொண்ட திருமால்

6991. **வேழன்**
(01) கரும்பு போல் இனிப்பவன்
(02) நாணல் போன்றவன்
(03) மூங்கில் போன்றவன்
(04) இசைஞன்
(05) யானை போன்றவன்
(06) தாழி (பரணி) நாண்மீனில் பிறந்தவன்

6992. **வேள்**
(01) முருகன்
(02) வேந்தன்
(03) சிறந்த ஆண்மகன்
(04) வேளிர்குடியிற் பிறந்தவன்
(05) வேளாளர் குடியிற் பிறந்தவன்
(06) காமன்
(07) சாளுக்கிய குலவரசன்

6993. **வேள்மான்**
(01) ஒரு குறுநில மன்னன்

6994. **வேள்விக்கு வேந்தன்**
(01) இந்திரன்

6995. **வேள்வி நாயகன்**
(01) இந்திரன்

6996. **வேள்வி முதல்வன்**
(01) இந்திரன்

6997. **வேள்வியாளன்**
(01) கொடையாளன்
(02) வேள்வி செய்யும் பிராமணன்

6998. **வேள்வியிறை**
(01) திருமால்

6999. **வேளன்**
(01) முருகன்
(02) வேந்தன்
(03) சிறந்த ஆண்மகன்
(04) வேளிர்குடியிற் பிறந்தவன்
(05) வேளாளர் குடியிற் பிறந்தவன்
(06) காமன்
(07) சாளுக்கிய குலவரசன்

7000. **வேளாளன்**
(01) ஈகையுள்ளம் கொண்டவன்
(02) இரப்போர்க்கு ஈபவன்
(03) வேளாளர் குடிப் பிறந்தவன்

7001. **வேளாண்கோ**
(01) தலைமைக் குடியானவன்
(02) வேளாண் மக்கட் தலைவன்

7002. **வேற்காரன்**
(01) வேற்கருவியுடைய மறவன்

7003. **வேனிகா**
(01) கத்தூரி போன்றவள்

7004. **வேனில்**
(01) வேனிற் பருவத்தில் பிறந்தவன்
(02) அழகு மிகுந்தவன்
(03) பொலிவானவன்

7005. **வேனிலவன்**
(01) காமன்

7006. **வேனிலான்**
(01) காமன்

# வை

7007. **வைகை**
(01) வைகையாறு

7008. **வைகைக்குமரன்**
(01) பாண்டியன்

7009. **வைகைத்துறைவன்**
(01) பாண்டியன்

7010. **வைகையந்துறைவன்**
(01) பாண்டியன்

7011. **வையமகள்**
(01) நிலமகள்

7012. **வையாவிக் கோப்பெரும்பேகன்**
(01) கடையெழு வள்ளல்களுள் ஒருவன்

7013. **வையை**
(01) வைகையாறு

7014. **வையைத்துறைவன்**
(01) பாண்டியன்